அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2020 - 2021

**மானியக் கோரிக்கை எண். 42**

**திரு. எஸ்.பி. வேலுமணி**
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும்
சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2020

# பொருளடக்கம்


| வ.எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | ஊராட்சி நிர்வாகம் | 13 |
| 3. | மாநில அரசுத் திட்டங்கள் | |
| 3.1 | முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் | 76 |
| 3.2 | ஊரக உட்கட்டமைப்பு – சாலைகள் | 83 |
| 3.3 | தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 89 |
| 3.4 | நபார்டு சாலைகள் | 91 |
| 3.5 | சிறிய இணைப்புச் சாலைகள் | 92 |
| 3.6. | அம்மா – ஆதி திராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம் | 103 |
| 3.7 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 105 |
| 3.8 | தன்னிறைவுத் திட்டம் | 117 |
| 3.9 | மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் (RCSIDS) | 120 |
| 3.10 | சுகாதாரம் – முழு சுகாதார தமிழகம் | 122 |

| வ.எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 3.11 | ஊரகப் பகுதிகளில் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டம் | 137 |
| 3.12 | பள்ளிக் கழிப்பறைகள் பராமரித்தல், வகுப்பறை மற்றும் பள்ளி வளாகம் தூய்மை படுத்துதல் | 139 |
| 3.13 | தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம் – குடிமராமத்து | 141 |
| 3.14 | சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் | 145 |
| **4** | **மத்திய அரசுத் திட்டங்கள்** | |
| 4.1 | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் | 148 |
| 4.2 | பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) | 180 |
| 4.3 | நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 183 |
| 4.4 | பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் | 185 |
| 4.5 | தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) | 190 |
| 4.6 | தேசிய ரூர்பன் இயக்கம் | 193 |
| 4.7 | தேசிய கிராம சுயராஜ்ய திட்டம் (RGSA) | 197 |
| 4.8 | நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் (SAGY) | 199 |

| வ.எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 4.9 | தேசிய கரிமவாயு மற்றும் உர மேலாண்மைத் திட்டம் | 202 |
| **5** | **பணியமைப்பு** | |
| 5.1 | அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு | 206 |
| 5.2 | பொறியியல் பணியமைப்பு | 208 |
| 5.3 | முதுநிலை அலுவலர்களை பிற துறைக்கு மாற்றுப் பணியில் அனுப்புதல் | 211 |
| 5.4 | அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் பணியமைப்பு | 212 |
| **6** | **திறன் மேம்பாடு** | 219 |
| **7** | **தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்** | 243 |
| 7.1 | மகளிர் திட்டம் | 246 |
| 7.2 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் | 248 |
| 7.3 | திட்ட செயல்பாடுகள் | 253 |
| 7.4 | திறன் மேம்பாடு | 262 |
| 7.5 | தீன் தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி | 268 |
| 7.6 | நிதி உள்ளாக்கம் மற்றும் நுண்கடன் | 277 |
| 7.7 | வாழ்வாதார மேம்பாடு | 286 |

| வ.எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 7.8 | சமூக உள்ளாக்கம் மற்றும் சமுதாய வளர்ச்சி | 310 |
| 7.9 | மேலாண்மை தகவல் அமைப்பு (MIS) | 317 |
| 7.10 | தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டம் | 318 |
| 7.11 | தீன் தயாள்அந்தியோதய யோஜனா– தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (DAY – NULM) | 322 |
| 7.12 | சிறந்த சமுதாயம் சார்ந்த அமைப்புகள் (சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்) மற்றும் வங்கிகளுக்கான விருதுகள் | 329 |
| 7.13 | தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்-களின் ஆதார மையம் (TNVRC) | 330 |
| 7.14 | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் மாத இதழ் | 332 |
| 7.15 | உழைக்கும் மகளிருக்கானஅம்மா இருசக்கர வாகனத் திட்டம் | 334 |
| 7.16 | இணையவழிக் கற்றல் மற்றும் சமுதாய மின் வானொலி | 336 |
| **8** | **தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்** | **339** |

| வ.எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 9 | பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் | 357 |
| 10 | வரவு செலவுத் திட்டம் 2020–21 | 392 |
| 11 | முடிவுரை | 393 |

# 1. முன்னுரை

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2020-21

**முன்னுரை**

*“தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடச் செய்ய வேண்டும் என்பதும், இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்பதும் தான் இந்த அரசினுடைய குறிக்கோள்”*

***- மாண்புமிகு முன்னாள்தமிழ்நாடு முதலமைச்சர்***
***புரட்சித்தலைவி அம்மா அவர்கள்***

ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், வாழ்வாதார வாய்ப்புகளை அதிகரித்தல், ஊரக இணைப்பு சாலைகளை மேம்படுத்துதல், ஊரக வீட்டுவசதியினை அளித்தல் மற்றும் தூய்மையான சுற்றுப்புறம் மற்றும் சுகாதாரத்தைப் பேணுதல் ஆகியவற்றின் மூலம் ஊரகப் பகுதிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது அரசின் தலையாய நோக்கங்களாகும்.

மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு, ஊரகப் பகுதிகளின் வளர்ச்சி இன்றியமையாததாகையால், இந்த அரசின் தலையாய முன்னுரிமைகளில் ஒன்றாக ஊரக வளர்ச்சி இடம் பெற்றுள்ளது. ஊரகப் பகுதிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு, கடந்த ஒன்பது ஆண்டுகளில் செலவிடப்பட்ட பெருமளவிலான நிதி மற்றும்

அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு முன்னோடித் திட்டங்களைப் போன்று, இதற்கு முன் எப்போதும் தமிழகம் கண்டதில்லை.

முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் தமிழக அரசின் முன்னோடி திட்டங்களில் ஒன்றாகும். கிராமப் புறங்களில் வீட்டு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு, பசுமை எரிசக்தியை ஊக்குவிக்கும் வகையிலும் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவிலேயே இந்த வகையில் செயல்படுத்தப்படும் முதல் திட்டமாகும். 2011-12 ஆம் ஆண்டு முதல் 2019-20 ஆம் ஆண்டு வரை, மொத்தம் 3.80 இலட்சம் பசுமை வீடுகள் ரூ.7,620 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன. மாநிலத்திலுள்ள வீடற்ற பழங்குடியினர் குடும்பங்கள் அனைவருக்கும் வீடு கட்டப்படுவதை உறுதி செய்யும் நோக்கில் 2020-21 ஆம் ஆண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் தொடர்ச்சியான விதிமுறைகள் மூலம் ஊரக திறன்சாரா தொழிலாளர்களுக்கு சட்ட பூர்வ உரிமைகளை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் வழங்குகிறது. இத்திட்டம் திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள அனைத்து கிராமப்புற குடும்பங்களுக்கும் அதிகபட்சமாக ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை வாய்ப்பு அளிக்கிறது.

தமிழ் நாட்டில் இத்திட்டத்தின் கீழ் 65 சதவிகிதத்திற்கும் மேலாக இயற்கை வள மேலாண்மை பணிகளுக்கான செலவினத்திற்கும், 60 சதவிகிதத்திற்கும்

மேலாக வேளாண்மை மற்றும் அதனை சார்ந்த பணிகளுக்கும் செலவிடப்படுகிறது. தமிழ் நாட்டில், இயற்கை வள மேலாண்மை பணிகளின் கீழ் தடுப்பணை அமைத்தல், பண்ணைக் குட்டை அமைத்தல், மண்வரப்பு மற்றும் கல் வரப்பு ஏற்படுத்துதல், கிணறு வெட்டுதல், மீள் நிரப்பு தண்டு மற்றும் மீள் நிரப்பு குழி அமைத்தல், தனி நபர் மற்றும் சமுதாய உறிஞ்சுக்குழி அமைத்தல், தொடர்ச்சியாக மற்றும் சீரான அகழிகள் அமைத்தல் போன்ற பணிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டு நிலத்தடி நீர் மீள் நிரப்பப்பட்டு அதன் மூலம் மண்ணின் ஈரப்பதம் மற்றும் நீர் வளம் பாதுகாக்கப்படுகிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை தமிழ்நாடு சிறப்பாக செயற்படுத்தியன் மூலம், ஐக்கிய நாடுகளின் நீடித்த நிலையான வளர்ச்சியின் உன்னதமான வழிமுறைகள் மற்றும் நோக்கங்கள் திறம்பட அடையப்பெறுகின்றன. ஊரகப் பகுதிகளில் திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வருடத்திற்கு அதிகபட்சமாக 100 நாட்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுவதன் மூலம் ‘பசியின்மை’ மற்றும் ‘வறுமையின்மை’, போன்ற நோக்கங்கள் எய்தப்படுவதுடன், ஊரக ஏழை மக்களின் வாழ்வாதாரம் அளிப்பதில் முக்கிய பங்கினை வகிக்கிறது. ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சம ஊதியம் வழங்குவது மற்றும் ஊதியம் வழங்குவதில் எந்த வித பாகுபாடும் இல்லாதது ‘ஆண், பெண் சமத்துவத்தினை உறுதி செய்கிறது. மண் மற்றும் ஈரப்பதத்தினை பாதுகாக்கும் பணிகளான, மண்வரப்பு

கட்டுதல், தடுப்பணைகள் கட்டுதல், பாரம்பரிய நீராதார அமைப்புகளை புனரமைத்தல் மற்றும் புத்துயிர் அளித்தல், பொது மற்றும் தனியார் நிலங்களில் வறட்சி காப்பு பணிகள் மற்றும் மரங்கள் நடும் பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற மழைநீர் சேகரிப்பு பணிகளின் மூலம் பருவநிலை மாற்றம் மற்றும் அதன் விளைவுகள் கட்டுப்படுத்தப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளில் ஒன்றான, ஊரக பகுதிகளில் வறுமை ஒழிப்பதற்கு, ஊரகச் சாலைகள் இணைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த நோக்கத்திற்காக, இந்த அரசு, "மக்கள் தொகை 500-க்கு அதிகமாக உள்ள அனைத்து கிராமங்களுக்கும் தார்ச்சாலைகள் அமைக்கப்படும் எனவும்", பிற குடியிருப்புகளுக்கு எல்லா பருவகாலத்திலும் பயன்படக்கூடிய வகையில் சாலைகள் அமைக்கப்படும் எனவும் அறிவித்துள்ளது. இதை உறுதிபடுத்தும் வகையில், ஊரகச் சாலைகள் பட்டியல் புதுப்பிக்கப்பட்டு அதன் புள்ளிவிவரங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. ஊரகச் சாலைத் தொகுப்பு, இணையதளத்தில் சேர்க்கப்பட்டு அதன் மூலம் சாலை மேம்பாட்டிற்கு முறையாக திட்டமிடல், பல்வேறு நிதி ஆதாரங்களை ஒருங்கிணைத்து நிதி ஒதுக்கீட்டை அதிகரித்தல், தமிழ்நாடு ஊரகச் சாலை மேம்பாட்டுத் திட்டம் போன்ற விரிவான திட்டத்தை அறிமுகப்படுத்தியது, சாலைகள் முறையாக பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக தமிழ்நாடு ஊரகச் சாலை பராமரிப்பு கொள்கையை வகுத்தது போன்ற பல்வேறு முயற்சிகளை இத்துறை எடுத்துள்ளது.

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு முழுமையான முறையில் உட்கட்டமைப்பு தேவைகளை வழங்குவாற்காக அம்மா - ஆதி திராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம் என்ற சிறப்பு திட்டத்தையும் இந்த அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்திற்காக அரசு ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ.100 கோடியை ஒதுக்கியுள்ளது.

ஊரக பகுதிகளில் மேம்பட்ட சுகாதார வசதிகளை ஏற்படுத்த அரசு எண்ணற்ற முன்முயற்சிகளை எடுத்துள்ளது. முழுமையான சுகாதார நிலையை அடைவதில் காணப்படும் இடைவெளிகளை களைந்திட பல்வேறு உறுதியான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நிலையை அடைவதற்கும், அதனை தக்கவைப்பதற்கும், சுகாதார ஊக்குநர்கள், பங்கேற்பாளர் துறைகளின் கள பணியாளர்களுடன் இணைந்து மனமாற்றத்தினை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டுவருகின்றனர். நேரடி தகவல் பரிமாற்றத்திற்கான வள ஆதாரங்கள் தயாரிக்கப்பட்டு, திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. தன் சுத்தம் மற்றும் பாதுகாப்பான சுகாதார பழக்கவழக்கங்களை குழந்தைகளின் மனதில் பதியவைப்பதுடன், அவர்களுக்கு ஆரோக்கியமான கல்வி கற்கும் சூழலை உறுதி செய்யும் நோக்கில், சுகாதார பணியாளர்களை கொண்டு பள்ளி கழிப்பறைகள் சுத்தம் செய்யப்பட்டு முறையாக பராமரிக்கப்படுகிறது. நிலையான திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை உறுதிபடுத்தும் நோக்கில் குப்பைகளை சேகரித்தல், தரம் பிரித்தல் மற்றும் அதனை பாதுகாப்பான முறையில்

அப்புறப்படுத்த "தூய்மை காவலர்கள்" ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த முன்முயற்சிகள் தமிழகத்திற்கு தேசிய அளவில் பல்வேறு பாராட்டுதல்களை பெற்றுத்தந்துள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மகளிரின் சமூக பொருளாதார ஆற்றல் மேம்பாட்டிற்காக 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ம் நாள் நிறுவப்பட்டது. இந்தியாவிலேயே முதன்முதலாக மகளிர் நல மேம்பாட்டிற்காக மட்டுமே துவங்கப்பட்ட இந்நிறுவனம் 35 ஆண்டுகளைக் கடந்து பல மாநில, மத்திய மற்றும் வெளியிலிருந்து உதவி பெறப்பட்ட திட்டங்களை சுய உதவிக் குழுக்களை மையப்படுத்தி சமுதாயம் சார்ந்த முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு ஒருமித்த நோக்குடன் செயல்படுத்தி வருகிறது.

வறுமை என்பது பல பரிமாணங்களைக் கொண்ட பிரச்சனை ஆகும். எனவே தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு உத்திகளின் மூலம் ஊரக மற்றும் நகர்ப்புற குடும்பங்களின் வறுமையினை நீக்கி, மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்கு பார்வையான அமைதி, வளம் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை தமிழ் நாட்டில் ஏற்படுத்த செயல்பட்டு வருகிறது.

இன்று, இந்நிறுவனம் அரசின் இரண்டு முதன்மையான வறுமை ஒழிப்புத் திட்டங்களான தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தினை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மாநிலத்தில் உள்ள

388 வட்டாரங்களில் உள்ள 12,525 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் அதன் துணைத் திட்டங்களான தீன் தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டம், கிராமிய தொழில் முனைவோர் திட்டம், பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம் போன்றவற்றின் மூலம் சமுதாயம் சார்ந்த பல்வேறு முன்னேற்ற அணுகுமுறையைக் கொண்டு ஊரகப் பகுதிகளில் மகளிரை ஆற்றல் படுத்தி வறுமையை குறைக்கும் இலக்கினைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. உலக வங்கியின் நிதி உதவி பெற்று, முன்னர் நடைமுறையில் இருந்த புதுவாழ்வுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஏழை மக்களைக் கண்டறியும் மக்கள் நிலை ஆய்வே சமுதாய சார்ந்த முன்னேற்ற அணுகுமுறைக்கு அடித்தளமாக இருந்தது. இதன் மூலம் ஏழை, மிகவும் ஏழை, நலிவுற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என இலக்கு மக்கள் கண்டறியப்பட்டு பயன்பெற்று வருகின்றனர். சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், வட்டார அளவிலான கூட்டமைப்புகள், உற்பத்தியாளர் குழுக்கள், உற்பத்தியாளர் பொருள்களின் சேகரிப்பு மற்றும் உற்பத்தியாளர் அமைப்பு போன்ற சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, பாதுகாத்து, வளர்த்து அதன் மூலம் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதே முக்கிய யுக்தியாகும்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் 2014-15ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம்

மத்திய அரசினால் துவங்கப்பட்டு மத்திய, மாநில அரசுகள் மூலம் 60:40 என்ற நிதி விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டம் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு அடித்தட்டு அளவில் வலுவான நிறுவன அமைப்புகளை உருவாக்கி அதன் மூலம் இலாபம் தரக்கூடிய சுய வேலைவாய்ப்பு மற்றும் திறன் வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தர வழிவகை செய்து, அதன் பயனாக தொடர் வாழ்வாதார மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை உறுதி செய்து அவர்களின் ஏழ்மை மற்றும் நலிவுற்ற தன்மையினைக் குறைப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

ஏற்கனவே நடைமுறையில் இருந்த தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் முடிவுற்றதைத் தொடர்ந்து தேசிய ஊரக பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம் என்ற புதிய திட்டம் நடப்பு நிதி ஆண்டில் (2019 - 20) அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென ரூ.40.60 கோடி நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. ஊரக ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் உயர்நிலை செயல்பாடுகளை இலக்காகக் கொண்ட இத்திட்டமானது கடலூர், ஈரோடு, சேலம், தஞ்சாவூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் தலா 4 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் வேலைக்கு செல்லும் மகளிர் தாங்கள் பணியாற்றும் நிறுவனங்கள், பணியிடங்கள் மற்றும் வங்கிகள் போன்றவற்றிற்கு எளிதில் செல்வதற்காக பெண்களுக்கு வசதியான மொபட் / ஸ்கூட்டர் போன்ற இரு சக்கர வாகனங்கள் வாங்குவதற்கு உதவும் வண்ணம் மாநில அரசு மானியத்துடன் கூடிய சிறப்புத்

திட்டமான அம்மா இரு சக்கர வாகனத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின் மூலம் ஊரகம் மற்றும் நகர்ப்புறங்களைச் சார்ந்த 18 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட ஒரு இலட்சம் உழைக்கும் மகளிர் பயன்பெறுவர். தொலை தூரங்களில் மற்றும் மலைப்பகுதிகளில் வசிக்கும் மகளிர், மகளிரை குடும்பத் தலைவியாகக் கொண்ட குடும்பங்கள், கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளி பெண்கள், 35 வயதிற்கு மேற்பட்ட மணமாகாத பெண்கள், ஆதி திராவிடர் / பழங்குடியினப் பெண்கள் மற்றும் திருநங்கைகள் ஆகியோருக்கு இத்திட்டத்தின் கீழ் முன்னுரிமை வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தில் பயனடைய தேவையான கல்வித் தகுதி முழுமையாக தளர்வு செய்யப்பட்டுள்ளது. இரு சக்கர வாகனத்தின் மதிப்பில் அதிகபட்சம் 50% தொகை அல்லது 25 ஆயிரம் ரூபாய் இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கான வாகனம் வாங்கிட கூடுதல் மானியமாக ரூ.6,250 வழங்கப்படுகிறது.

தீன் தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டத்தின் கீழ், ஊரக ஏழைக் குடும்பங்களிலுள்ள இளைஞர்களின் திறனை மேம்படுத்தி, அவர்களுக்கு பல்வேறு நிறுவனங்களின் மூலம் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம் மற்றும் கிராமிய தொழில் முனைவோர் திட்டங்களின் மூலம் விவசாயம் மற்றும் விவசாயம் சாரா பிரிவுகளில் தனிநபர் மற்றும் கூட்டுத் தொழில்களின் வாயிலாக பெண்களுக்கு

உதவும் பொருளாதார நடவடிக்கைகள் வளர்ச்சி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. வறுமையை ஒழிக்கும் தமிழ்நாடு அரசின் முயற்சியில் இத் திட்டங்கள் ஒன்றிணைந்தும் அரசின் பிறதிட்டங்களுடன் இணைந்தும் தலையாய பணியாற்றி வருகின்றன.

புதுவாழ்வு திட்டத்தின் தொடர்ச்சியாக உலக வங்கியின் உதவியுடன் தொடங்கப்பட்ட மற்றுமொரு திட்டம் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (TNRTP). இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் தமிழ்நாட்டின் 120 வட்டாரங்களில் உள்ள ஊரகப் பகுதிகளில் தொழில் நிறுவனங்களை உருவாக்குதல், நிதி சேவைகள் அளித்தல் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகும். இத்திட்டத்திற்கான பங்கீட்டுத் தொகை உலக வங்கிக்கும் தமிழக அரசிற்கும் இடையே 70:30 என்ற விகிதாச்சார அடிப்படையில் ரூ.918.20 கோடி மதிப்பீட்டில் அமையும்.

தமிழ்நாடு தொடர்ந்து முதல் மாநிலமாகத் திகழ மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் சீரிய தலைமையின் கீழ் இயங்கும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அர்ப்பணிப்புடனும் உறுதியுடனும் தனது கடமைகளை தொடர்ந்து ஆற்றும்.

# 2. ஊராட்சி நிர்வாகம்

## 2. **ஊராட்சி நிர்வாகம்**

தன்னாட்சி அதிகாரம் பெற்ற சமுதாய அடிப்படையிலான கிராம குழுக்கள் என்கிற அமைப்பு நமது மாநிலத்தில் ஆதிகாலந்தொட்டே தொடர்ந்து இன்றளவும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இதன் வரலாறு தமிழர்களின் வரலாறு போலவே பழமையானதும், பாரம்பரியம் மற்றும் நாகரீகத்துடன் தொன்றுதொட்டு தொடர்ந்து வருகிறது. சோழ சாம்ராஜ்யத்தின் போது கிராம சபைகள் இருந்ததற்கான வரலாற்றுச் சான்றுகளை காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஸ்ரீ வைகுண்டவாச பெருமாள் கோயிலின் உத்திரமேரூர் கல்வெட்டுகள் கொண்டுள்ளன. அப்போது ஊர் மற்றும் சபா அல்லது மகாசபா என்ற இரண்டு அவைகள் இருந்தன. ஊர் கிராமத்தின் பொது அவையாக இருந்தது. கிராமங்கள் சுயாட்சி பெற்றிருந்தன. இக்கிராமங்களின் விவகாரங்களைக் கையாள நிர்வாகக் குழு ஒன்று செயல்பட்டது. இந்நிர்வாகக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்று வருட காலம் ஆகும். இந்நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள் அக்கிராமத்தில் சொத்து வைத்திருப்பவராக இருத்தல் வேண்டும். மேற்குறிப்பிட்ட இந்த அவைகளுக்கு போட்டியிடுவதற்கான தகுதிகள் மற்றும் தகுதியின்மைகள் குறித்த விதிமுறைகளுடன் கூடிய இரகசிய குடவோலை முறை மூலம் தேர்தல்கள் நடத்தப்பெற்றன.

இந்திய அரசியலமைப்பின் பகுதி 4ல் உள்ள சரத்து 40-ல் அரசுக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி அரசானது கிராம ஊராட்சிகளை அமைத்திட அனைத்து விதமான நடவடிக்கைகளையும் எடுக்க

வலியுறுத்தியுள்ளது. அரசானது அவ்வாறு அமைக்கப்பெறும் கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரத்தை வழங்கி அவைகள் சுயாட்சி பெற்ற அமைப்புகளாக செயல்பட ஆவண செய்ய வேண்டும். மத்திய அரசால் அமைக்கப்பெற்ற பல்வந்த்ராய் மேத்தா குழு அதன் அறிக்கையை ஜனவரி 1957 ஆம் ஆண்டு சமர்ப்பித்தது. அதில் ஜனநாயக அதிகாரப் பரவலாக்கத்தை அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தர சிபாரிசு செய்தது. அதனை தொடர்ந்து 1960களில் இருந்து மாநிலம் முழுவதும் கிராம ஊராட்சிகள் உருவாக்கப்பட்டு நிர்வாகத்தின் அடிப்படை அலகாக அமைந்து முக்கியத்துவம் பெற்றன.

மிகப் பழங்காலத்திலிருந்தே ஊராட்சி அமைப்புகள் நடைமுறையில் இருந்த போதிலும், இந்த அமைப்புகளில் சமுதாயத்தின் அடித்தட்டு மக்களான ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களின் பங்களிப்பு ஏதும் இல்லாமல் இருந்தது போன்ற பல்வேறு காரணங்களினால், இவ்வகையான அமைப்புகள் மக்களின் பங்களிப்போடு கூடிய பலம் வாய்ந்த அமைப்புகளாக திகழவில்லை. 1960ம் ஆண்டிலிருந்து ஊராட்சி அமைப்புகளின் செயல்பாடுகளையும், அவற்றின் குறைபாடுகளையும், பலவீனங்களையும் கவனித்து அதன் மூலம் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில், ஊராட்சி அமைப்புகளை பலம் வாய்ந்த அமைப்புகளாக மாற்றும் வகையில் ஒரு சில அடிப்படையான முக்கிய சரத்துகளை அரசியலமைப்பு சட்டத்தில் சேர்ப்பது அவசியமானது. இதன் காரணமாகவே, 73வது அரசியல் சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டு, 1993 ஏப்ரலில் இருந்து

அமுலுக்கு வந்தது. அதில் பகுதிIX சேர்க்கப்பட்டு ஊராட்சி அமைப்புகளுக்கு அரசியலமைப்பு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 (தமிழ்நாடு சட்டம் 21/1994) தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டு 22.4.1994 முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டம் தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி அமைப்புகளில், பின்வரும் முக்கிய மாற்றங்களை கொண்டு வந்தது. அவையாவன ;

- தமிழ்நாட்டில் மூன்றடுக்கு ஊராட்சி முறை நடைமுறைக்கு வந்தது.
- 'ஊராட்சி' என்பது மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புக்களைக் குறிக்கும் பொதுவான சொல்லாகும்.
- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கான உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சியின் தலைவர் வாக்காளர்களால் நேரடியாகத் தேர்வு செய்யப்படுகின்றனர். ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர்கள் மறைமுகத் தேர்தல்களின் மூலம் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் ஒவ்வொன்றும் சுதந்திரமாக இயங்கக் கூடியவை.
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப, பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தது. தற்போது, அரசாணை எண். 60, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.1) துறை நாள்: 23.05.2016ன் மூலம்

பெண்களுக்கான இட ஒதுக்கீடு 50 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

- ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பதவியிடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒதுக்கீடு, 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் மாற்றம் செய்யப்படும்.
- தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் ஏற்படுத்தப்பட்டது.
- மாநில அரசிடமிருந்து நிதியினை ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கும் விகிதத்தை பரிந்துரை செய்வதற்காக மாநில நிதி ஆணையம் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை அமைக்கப்பட்டு வருகிறது.
- ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து மாவட்ட வளர்ச்சித் திட்டத்தினை உருவாக்கும் வகையில் மாவட்ட திட்டக் குழு அமைக்கப்பட்டது.

ஊராட்சி நிறுவனங்களுக்கு அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்தளிப்பதற்கு இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 243-G வழி வகை செய்கிறது. இதனடிப்படையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்11வது அட்டவணையில் 29 இனங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 2.1. **உள்ளாட்சித் தேர்தல்கள்**

### 2.1.1. **மாநிலத் தேர்தல் ஆணையம்**

அதிகாரப் பரவலாக்கம் மற்றும் மக்களாட்சியை வலுப்படுத்தும் வகையில் சுதந்திரமான மற்றும் தன்னாட்சி அதிகாரம் பெற்ற அரசியலமைப்பு நிறுவனமாக 1994 ஆம் ஆண்டு, மாநில தேர்தல் ஆணையம் உருவாக்கப்பட்டது.

வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் ஆகிய அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் முறையாக தேர்தல் நடத்துதல் மற்றும் அதன் தொடர்புடைய பணிகளைக் கண்காணித்தல், இயக்குதல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகிய பணிகள் ஆணையரைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தைச் சார்ந்ததாகும்.

### 2.1.2. மாநில மறுவரையறை ஆணையம்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 28ன் படி ஒவ்வொரு மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிவுற்ற பின்பும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் வார்டுகளை மறுவரையறை செய்ய வேண்டும். தமிழ்நாடு மறுவரையறை சட்டம், 2017 (தமிழ்நாடு சட்டம் 23, 2017) பிரிவு 12ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் தமிழ்நாடு மறுவரையறை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

மறுவரையறை ஆணையம் கீழ்க்காணும் அலுவல் சார்ந்த உறுப்பினர்களை கொண்ட ஒரு அமைப்பாகும்.

(அ) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் இதன் தலைவர் ஆவார்.

(ஆ) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்

(இ) நகராட்சி நிர்வாக ஆணையர்

(ஈ) பேரூராட்சிகள் இயக்குநர்

(உ) பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்

(ஊ) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் செயலர் இதன் உறுப்பினர் செயலர் ஆவார்.

மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டு மறுவரையறை வரைவுக் கருத்துருக்கள் மாவட்ட மறுவரையறை அலுவலர்கள் / மாவட்ட ஆட்சியர்களால் தயாரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலகங்களில் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகளை பெறும் வகையில் பார்வைக்கு வைக்கப்பட்டன.

இவ்வாறு பொது மக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து மறுவரையறை அலுவலர்களால் பெறப்பட்ட ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களின் கருத்துக்களை கேட்கும் வகையில் வேலூர், காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, மதுரை, தூத்துக்குடி, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய ஏழு இடங்களில் மண்டல அளவிலான கூட்ட அமர்வுகள் மறுவரையறை ஆணையத்தால் நடத்தப்பட்டன.அரசியல் கட்சிகள் மற்றும் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபனைகள், ஆலோசனைகள் மற்றும் கருத்துக்கள் முறையாகப் பரிசீலிக்கப்பட்டு அதன் பின் வார்டு மறுவரையறை கருத்துக்கள் இறுதி செய்யப்பட்டன. டிசம்பர் 2018ல் வார்டு மறுவரையறை தொடர்பான விவரங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன. மறுவரையறை செய்யப்பட்ட வார்டுகளின் அடிப்படையில் 27 மாவட்டங்களுக்கான ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு சாதாரண தேர்தல்கள் மாநில தேர்தல் ஆணையத்தால் நடத்தப்பட்டுள்ளன.

## 2.1.3.**ஊரகஉள்ளாட்சிஅமைப்புகளுக்கானபதவியிடங்கள்மற்றும்தலைமைப்பதவியிடங்களுக்குஇடஒதுக்கீடுமற்றும்சுழற்சிமுறை**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஊராட்சி அமைப்புகளின் பல்வேறு பதவியிடங்களுக்கு மக்கள் தொகை விகிதத்தின் அடிப்படையில் உரிய இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 243D-ன்படி ஊராட்சி அமைப்புகளில் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கான பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை செய்யப்பட வேண்டும்.

## 2.1.4. **ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு உயர்த்தி வழங்கப்பட்ட இட ஒதுக்கீடும் பதவிகளும்** (50 **விழுக்காடு ஒதுக்கீடு**)

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (தமிழ்நாடு சட்டம் 21/1994)-ல் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியக் குழு மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் உள்ள பதவியிடங்கள் மற்றும் தலைமை பதவியிடங்களில், மூன்றில் ஒரு பங்கு மகளிருக்கு ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.ஆனால், அப்போதைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள், உள்ளாட்சி நிர்வாகத்தில் மகளிர் பங்கேற்பினை அதிகப்படுத்தவும் மகளிரை அதிகாரப்படுத்தவும் மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீட்டினை 50 விழுக்காடாக உயர்த்துவது அவசியம் என கருதினார். ஆகவே, மகளிருக்கான இடஒதுக்கீடு மூன்றில் ஒரு பங்கு என்பதை உயர்த்தி 50 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யும் வகையில், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள்

(இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை இட ஒதுக்கீடு) விதிகள் 1995-ல் திருத்தம் செய்து, அதன் அடிப்படையில் அரசாணை எண். 60 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா1) துறை, நாள்.23.05.2016ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாணையின்படி, உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பதவி இடங்களில் மகளிருக்கான 50% இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டு 27 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

### 2.1.5. **உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்துதல்**-2019

தமிழ்நாட்டில், ஏப்ரல் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்ட பின் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்கள் அக்டோபர் 1996-ம் ஆண்டு நடத்தப்பட்டன. உள்ளாட்சி அமைப்புகளுக்கான இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது சாதாரண தேர்தல்கள் முறையே அக்டோபர் 2001, அக்டோபர் 2006 மற்றும் அக்டோபர் 2011 ல் நடத்தப்பட்டன.

மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் கட்சி அடிப்படையில் நடத்தப்படுகின்றது. ஆனால், கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான பதவியிடங்களுக்கு கட்சி சாரா அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன.

கடந்த 2019ம் ஆண்டில் மாநில அரசானது எல்லைப் பரப்புகளில் பெரிய மாவட்டமான வேலூர் மாவட்டத்தை

வேலூர், திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை என மூன்று மாவட்டங்களாகவும், விழுப்புரம் மாவட்டத்தினை விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி என இரு மாவட்டங்களாகவும், அதனை போன்றே காஞ்சிபுரம் மாவட்டத்தினை காஞ்சிபுரம், செங்கல்பட்டு என இரண்டு மாவட்டங்களாகவும், திருநெல்வேலி மாவட்டத்தினை திருநெல்வேலி மற்றும் தென்காசி என இரண்டு மாவட்டங்களாகவும் பிரித்து உத்தரவிட்டது. இதன்படி நான்கு பெரிய மாவட்டங்கள் ஒன்பது மாவட்டங்களாக பிரிக்கப்பட்டன. இதனால், மொத்த ஊரக மாவட்டங்களின் எண்ணிக்கை 31-லிருந்து 36-ஆக உயர்ந்துள்ளது.

மாண்பமை உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின்படி தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையமானது 07.12.2019 அன்று 27 மாவட்டங்களுக்கு தேர்தல் அறிவிக்கை வெளியிட்டு ஊரக உள்ளாட்சி தேர்தல்களை நடத்தி முடித்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள் மற்றும் தலைவர்கள் விவரம் பின்வருமாறு.

**அட்டவணை 2.1**

**மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு டிசம்பர் 2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்தல்கள் விவரம்**

| வ. எண். | பதவியிடம் குறித்த விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 76746 |
| 2 | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் | 5090 |
| 3 | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 515 |
| 4 | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 9624 |
| 5 | ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் | 314 |
| 6 | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 26 |
| **மொத்தம்** | | **92315** |

## அட்டவணை 2.2

### ஊரக உள்ளாட்சி தேர்தல்கள் 2019 –ல் பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கான பெண்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு விவரம்

| வ.எண். | பதவி இடங்கள் | மொத்த பதவியிடங்கள் | மகளிருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் | சதவீதம் | ஆதிதிராவிடருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் | சதவீதம் | பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 27 | 14 | 51.85 | 7 | 25.99% | 1 | 3.70 |
| 2. | ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் | 314 | 157 | 50 | 76 | 24.20% | 5 | 1.59 |
| 3. | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 9,624 | 4,813 | 50.01 | 2,352 | 24.44% | 144 | 1.50 |
| 4. | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 615 | 264 | 51.26 | 121 | 23.50% | 7 | 1.36 |
| 5. | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் | 5,090 | 2,626 | 51.59 | 1,155 | 22.69% | 51 | 1 |
| 6. | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 76,744 | 40,734 | 53.08 | 19,770 | 25.26% | 861 | 1.12 |

மீதமுள்ள 9 மாவட்டங்களை பொருத்தவரையில் மாண்பமை உச்சநீதிமன்ற உத்தரவின்படி புதியதாக வார்டு மறு வரையறை பணிகள் மாநில மறுவரையறை ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு, அதனடிப்படையில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு சாதாரண தேர்தல்கள் நடத்தப்படும்.

### ஊரக உள்ளாட்சி அமைப்புகள்

### 2.2. கிராம ஊராட்சிகள்

தமிழ்நாட்டில் உள்ள 36 ஊரக மாவட்டங்களில் 79,394 குக்கிராமங்களை உள்ளடக்கிய 12,525 கிராம ஊராட்சிகள்

உள்ளன. கிராம ஊராட்சியின் தலைவர், கிராம ஊராட்சியின் செயல் அலுவலர் ஆவார். ஒவ்வொரு கிராம ஊராட்சியும் உரிய காரணங்களால் கலைக்கப்படாத வரை ஒவ்வொரு சாதாரணத் தேர்தலுக்குப் பின்னர் 5 ஆண்டு காலம் செயல்பாட்டில் இருக்கும். தற்போது 2020 ஆம் ஆண்டில் விழுப்புரம் மாவட்டத்திற்குட்பட்ட திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் கருவேப்பிலைபாளையம் என்கிற ஒரு புதிய கிராம ஊராட்சி புதியதாக உருவாக்கப்பட்டது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்துடன் ஒருங்கிணைந்து கிராம ஊராட்சி வாரியாக 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் ஊரக மக்கள் தொகை விபரம் ஆகஸ்ட் 2014ல் வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறு கிராம ஊராட்சி வாரியாக வெளியிடப்பட்ட மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்ட/ பழங்குடி இனத்தவர் மற்றும் பெண்கள் குறித்த விவரங்களும் அடங்கும். மேலும், மேற்கண்ட விவரங்கள் tnrd.gov.inஎன்ற இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை** 2.3

2011 **ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகள் விவரம்**

| வ. எண். | மக்கள் தொகை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 500 மற்றும் அதற்குக் கீழ் | 46 |
| 2 | 501 - 1000 | 833 |
| 3 | 1001 - 3000 | 6,822 |
| 4 | 3001 - 5000 | 2,781 |
| 5 | 5001 - 10000 | 1,753 |
| 6 | 10,000க்கு மேல் | 290 |
| **மொத்தம்** | | **12,525** |

மாவட்ட வாரியாக ஊரக மக்கள் தொகை விவரம் பின்வருமாறு:

## அட்டவணை 2.4.

### மாவட்ட வாரியான ஊரக மக்கள் தொகை விவரம்

| வ. எண். | மாவட்டம் | ஊரக மக்கள் தொகை | ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியினர் |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 734580 | 253798 |
| 2 | செங்கல்பட்டு | 1127209 | 400366 |
| 3 | திருவள்ளூர் | 1585280 | 541823 |
| 4 | கடலூர் | 1800133 | 635870 |
| 5 | விழுப்புரம் | 1722903 | 555125 |
| 6 | கள்ளக்குறிச்சி | 1190057 | 435472 |
| 7 | வேலூர் | 862476 | 247498 |
| 8 | இராணிப்பேட்டை | 808534 | 218568 |
| 9 | திருப்பத்தூர் | 811546 | 204412 |
| 10 | திருவண்ணாமலை | 2039049 | 589140 |
| 11 | சேலம் | 1957105 | 466879 |
| 12 | நாமக்கல் | 1087895 | 303517 |
| 13 | தர்மபுரி | 1290530 | 274147 |
| 14 | கிருஷ்ணகிரி | 1465743 | 241925 |
| 15 | ஈரோடு | 1130722 | 235773 |
| 16 | திருப்பூர் | 1139466 | 265486 |
| 17 | கோயம்புத்தூர் | 1021359 | 233057 |
| 18 | நீலகிரி | 310591 | 114213 |
| 19 | தஞ்சாவூர் | 1667809 | 385756 |
| 20 | நாகப்பட்டினம் | 1261288 | 463090 |
| 21 | திருவாரூர் | 1006482 | 389679 |
| 22 | திருச்சிராப்பள்ளி | 1471945 | 319628 |
| 23 | கரூர் | 668360 | 159919 |
| 24 | பெரம்பலூர் | 468017 | 152640 |
| 25 | அரியலூர் | 671100 | 173716 |
| 26 | புதுக்கோட்டை | 1341111 | 252397 |
| 27 | மதுரை | 1300481 | 277390 |
| 28 | தேனி | 575394 | 144966 |
| 29 | திண்டுக்கல் | 1457412 | 338644 |
| 30 | இராமநாதபுரம் | 1009270 | 214109 |
| 31 | விருதுநகர் | 1286543 | 316993 |
| 32 | சிவகங்கை | 952610 | 188972 |

| வ. எண். | மாவட்டம் | ஊரக மக்கள் தொகை | ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியினர் |
|---|---|---|---|
| 33 | திருநெல்வேலி | 770260 | 157927 |
| 34 | தென்காசி | 875249 | 204659 |
| 35 | தூத்துக்குடி | 971273 | 250673 |
| 36 | கன்னியாகுமரி | 646441 | 30439 |
| மொத்தம் | | **40486223** | **10638666** |

## 2.2.1. மாவட்ட வாரியான பரப்பளவு விவரம்

மாநிலத்தில் ஊரகப் பகுதிகளின் மொத்தப் பரப்பளவு 1,04,149.92 சதுர கி.மீ. ஆகும். மாவட்ட வாரியான ஊரக பரப்பளவு விவரம் பின்வருமாறு:

### அட்டவணை 2.5.
### மாவட்ட வாரியாக கிராம ஊராட்சிகளின் சராசரி பரப்பளவு விவரம்

| வ. எண் | மாவட்டம் | ஊராட்சிகளின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் சராசரி எண்ணிக்கை | பரப்பளவு (சதுர கி.மீ) | ஊராட்சியின் சராசரி பரப்பளவு (சதுர கி.மீ) |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 274 | 1440 | 5 | 1539.19 | 5.62 |
| 2 | செங்கல்பட்டு | 359 | 2072 | 6 | 2312.56 | 6.44 |
| 3 | திருவள்ளூர் | 526 | 3862 | 7 | 2859.84 | 5.44 |
| 4 | கடலூர் | 683 | 2403 | 4 | 2942.24 | 4.31 |
| 5 | விழுப்புரம் | 688 | 2371 | 3 | 3606.96 | 5.24 |
| 6 | கள்ளக்குறிச்சி | 412 | 1116 | 3 | 2902.47 | 7.04 |
| 7 | வேலூர் | 247 | 1894 | 8 | 1207.13 | 4.89 |
| 8 | இராணிப்பேட்டை | 288 | 2260 | 8 | 1620.58 | 5.63 |
| 9 | திருப்பத்தூர் | 208 | 1955 | 9 | 1194.59 | 5.74 |
| 10 | திருவண்ணாமலை | 860 | 4267 | 5 | 4826.27 | 5.61 |
| 11 | சேலம் | 385 | 5109 | 13 | 4561.41 | 11.85 |
| 12 | நாமக்கல் | 322 | 2520 | 8 | 3119.43 | 9.69 |
| 13 | தர்மபுரி | 251 | 2835 | 11 | 4407.43 | 17.56 |
| 14 | கிருஷ்ணகிரி | 333 | 3983 | 12 | 4965.73 | 14.91 |
| 15 | ஈரோடு | 225 | 3199 | 14 | 2626.99 | 11.68 |
| 16 | திருப்பூர் | 265 | 2455 | 9 | 4545.50 | 17.15 |
| 17 | கோயம்புத்தூர் | 228 | 1200 | 5 | 2534.24 | 11.12 |

| வ. எண் | மாவட்டம் | ஊராட்சிகளின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் சராசரி எண்ணிக்கை | பரப்பளவு (சதுர கி.மீ) | ஊராட்சியின் சராசரி பரப்பளவு (சதுர கி.மீ) |
|---|---|---|---|---|---|---|
| 18 | நீலகிரி | 35 | 1282 | 37 | 1170.39 | 33.44 |
| 19 | தஞ்சாவூர் | 589 | 2260 | 4 | 3657.67 | 6.21 |
| 20 | நாகப்பட்டினம் | 434 | 2054 | 5 | 2400.31 | 5.53 |
| 21 | திருவாரூர் | 430 | 1704 | 4 | 2322.69 | 5.40 |
| 22 | திருச்சிராப்பள்ளி | 404 | 2210 | 5 | 4028.00 | 9.97 |
| 23 | கரூர் | 157 | 2179 | 14 | 2656.25 | 16.92 |
| 24 | பெரம்பலூர் | 121 | 314 | 3 | 1609.54 | 13.30 |
| 25 | அரியலூர் | 201 | 710 | 4 | 1710.17 | 8.51 |
| 26 | புதுக்கோட்டை | 497 | 4062 | 8 | 4433.78 | 8.92 |
| 27 | மதுரை | 420 | 1946 | 5 | 3183.18 | 7.58 |
| 28 | தேனி | 130 | 607 | 5 | 1159.89 | 8.92 |
| 29 | திண்டுக்கல் | 306 | 3083 | 10 | 4401.34 | 14.38 |
| 30 | இராமநாதபுரம் | 429 | 2306 | 5 | 4116.19 | 9.59 |
| 31 | விருதுநகர் | 450 | 1760 | 4 | 3282.08 | 7.29 |
| 32 | சிவகங்கை | 445 | 2723 | 6 | 3075.90 | 6.91 |
| 33 | திருநெல்வேலி | 204 | 1075 | 5 | 2277.48 | 11.16 |
| 34 | தென்காசி | 221 | 1028 | 5 | 2005.58 | 9.08 |
| 35 | தூத்துக்குடி | 403 | 1761 | 4 | 4260.78 | 10.57 |
| 36 | கன்னியாகுமரி | 95 | 1155 | 12 | 626.14 | 6.59 |
| **மொத்தம்** | | **12525** | **79160** | 6 | **104149.92** | **8.32** |

### 2.2.2. **கிராம ஊராட்சிகளின் வருமான வரம்பு**

மாநிலத்தில்மொத்தம் 12,525 கிராம ஊராட்சிகள் உள்ளன. 2019-20 ஆம் ஆண்டின் ஊராட்சிகளின் வருவாய் விவரங்கள் பின்வருமாறு:

## **அட்டவணை** 2.6
## **கிராம ஊராட்சிகளின் வருவாய் விவரங்கள்**

| **வருமான வரம்பு** | **கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| ரூ.10 - 20இலட்சம் | 6440 |
| ரூ.20 - 50இலட்சம் | 5371 |
| ரூ.50இலட்சம் – 1கோடி | 605 |
| ரூ. 1கோடிக்கும் மேல் | 109 |
| **மொத்தம்** | **12525** |

2.2.3. **கிராம சபை**

கிராம ஊராட்சியிலுள்ள அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய அமைப்பு கிராம சபை ஆகும். குறிப்பிட்ட அதிகாரங்களும், பொறுப்புகளும் கிராம சபைக்கு வழங்கப்பட்டுள்ளன. இரண்டு கிராமசபைக் கூட்டங்களுக்கு இடையே உள்ள காலம் ஆறு மாதங்களுக்கு மிகாமல் இருக்கும் வகையில் சட்ட ரீதியாக கிராம சபைக் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 3-ன் கீழ்,

அ) கிராம சபையானது,

(i) கிராம திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்

(ii) கிராம ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்

(ii-a) கிராம ஊராட்சியின் முந்தைய ஆண்டுக்கான தணிக்கை அறிக்கைக்கு ஒப்புதல் அளித்தல்

(iii) கிராம ஊராட்சியின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வு செய்தல்.

(ஆ) அரசானது அறிவிக்கையின் மூலம் குறிப்பிட்ட சில பணிகளை கிராம சபைக்கு வழங்கலாம்.

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒரு ஆண்டில் குறைந்தது நான்கு முறை, அதாவது ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபைக்கூட்டம் நடத்த தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.இது தவிர, தேவையின் அடிப்படையில் விதிமுறைகளுக்குட்பட்டு கிராம சபைக் கூட்டம்

நடத்தலாம்.கிராம ஊராட்சியில் உள்ள மக்கள் தொகை அடிப்படையில் கிராம சபைக்கான குறைவெண் வரம்பினை அரசு கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்துள்ளது.

**அட்டவணை 2.7**

**கிராம சபைக் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு**

| வ. எண். | கிராம ஊராட்சியின் மக்கள் தொகை | கிராம சபைக் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு |
|---|---|---|
| 1 | 500 வரை | 50 |
| 2 | 501 முதல் 3,000 வரை | 100 |
| 3 | 3,001 முதல் 10,000 வரை | 200 |
| 4 | 10,000க்கு மேல் | 300 |

கிராம சபை கூட்ட நடவடிக்கைகளை முறையாக பதிவேடுகளில் பதிவு செய்வது மற்றும் புகைப்பட ஆவணங்களை வைத்திருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

### 2.2.4. கிராம ஊராட்சிகளின் சட்டரீதியான கடமைகள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 110ன்படி கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளுதல் கிராம ஊராட்சிகளின் கட்டாய கடமைகளாகும்.

i) அனைத்து கிராமச் சாலைகள், பாலங்கள், சிறு பாலங்கள், தடுப்புச் சுவர்கள் மற்றும் தரைப் பாலங்களை அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல். (நெடுஞ்சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தவிர).

ii) குடியிருப்பு பகுதிகளில் தெரு விளக்குகள் அமைத்தல்.

iii) கழிவு நீர்க் கால்வாய் அமைத்துக் கழிவுநீரை வெளியேற்றுதல்.

iv) தெருக்களை சுத்தம் செய்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை செயல்பாடுகளின் மூலமாக சுகாதாரத்தை மேம்படுத்துதல்.

v) பொதுக் கழிப்பிட வசதி ஏற்படுத்துதல்.

vi) இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகளை ஏற்படுத்திப் பராமரித்தல்.

vii) குடிநீர் வழங்குதல்.

viii) சமுதாய சொத்துக்களை பராமரித்தல்.

ix) கிணறுகள் தோண்டுதல் மற்றும் பராமரித்தல், குளம் தோண்டுதல், பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல்.

x) அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாகப் பணிக்கக்கூடிய பிற கடமைகள்.

### 2.2.5. **விருப்புரிமைப் பணிகள்**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 111-ன்படி ஊராட்சியின் தேவைக்கேற்பவும், நிதி ஆதாரங்களைக் கணக்கில் கொண்டும் பின்வரும் கடமைகளை கிராம ஊராட்சிகள் நிறைவேற்றிட வேண்டும்.

i) மரங்களை நட்டு பாதுகாத்தல்.

ii) குடியிருப்பு இல்லாத பொது இடங்கள் மற்றும் சாலைகளில் தெரு விளக்குகள் அமைத்தல்.

iii) சந்தைகளை ஏற்படுத்தி பராமரித்தல்.

iv) விழாக்கள் மற்றும் பொருட்காட்சிகளை கட்டுப்படுத்துதல்.

v) வண்டிகள் நிறுத்துமிடங்கள், கால்நடைத் தொழுவங்கள், இறைச்சிக் கூடங்கள் மற்றும் படிப்பகங்களை ஏற்படுத்தி பராமரித்தல்.

vi) விளையாட்டுத் திடல்கள், பூங்காக்கள் மற்றும் உடற் பயிற்சி கூடங்கள் ஏற்படுத்தி பராமரித்தல்.

## 2.2.6. **குடிநீர் வழங்கல்**

ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணி, கிராம ஊராட்சியின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும். கிராம ஊராட்சிகளில், கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் முதன்மைக் குடிநீர் ஆதாரமாகவும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் சிறிய நீர்த்தேக்கத் தொட்டிகள் முதன்மைக் குடிநீர் சேகரிப்பு அமைப்புகளாகவும் விளங்குகின்றன. ஊரகப் பகுதிகளில் உள்ள குடிநீர் திட்டங்கள் மற்றும் ஆதாரங்கள் குறித்த விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை** 2.8

**பயன்பாட்டில் உள்ள குடிநீர் திட்டங்கள் மற்றும் ஆதாரங்கள் குறித்த மாவட்ட வாரியான விவரம்**

| வ.எண் | மாவட்டம் | கைப்பம்புகளின் எண்ணிக்கை | மின்விசைப்பம்புகளின் எண்ணிக்கை | சிறு மின்விசைப்பம்புகளின் எண்ணிக்கை | கூட்டுக் குடிநீர் திட்டங்களின் எண்ணிக்கை | கூட்டுக் குடிநீர் வழங்கப்படும் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 2346 | 2012 | 2053 | 9 | 38 |
| 2 | செங்கல்பட்டு | 4123 | 2948 | 3628 | 11 | 28 |
| 3 | திருவள்ளூர் | 4299 | 3717 | 2427 | 9 | 36 |
| 4 | கடலூர் | 8621 | 4267 | 3359 | 12 | 60 |

| வ.எண் | மாவட்டம் | கைப்பம்புகளின் எண்ணிக்கை | பின்விசைப்பம்புகளின் எண்ணிக்கை | சிறு பின்விசைப்பம்புகளின் எண்ணிக்கை | கூட்டுக் குடிநீர் திட்டங்களின் எண்ணிக்கை | கூட்டுக் குடிநீர் வழங்கப்படும் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 5 | விழுப்புரம் | 8253 | 3953 | 7909 | 3 | 17 |
| 6 | கள்ளக்குறிச்சி | 6357 | 2192 | 4354 | 8 | 60 |
| 7 | வேலூர் | 1856 | 2870 | 4956 | 8 | 21 |
| 8 | இராணிப்பேட்டை | 2531 | 1884 | 3295 | 5 | 10 |
| 9 | திருப்பத்தூர் | 2627 | 2365 | 4275 | 7 | 15 |
| 10 | திருவண்ணாமலை | 11449 | 5115 | 8123 | 25 | 240 |
| 11 | சேலம் | 5215 | 5624 | 4543 | 9 | 262 |
| 12 | நாமக்கல் | 2643 | 4738 | 2342 | 12 | 298 |
| 13 | தர்மபுரி | 10869 | 4324 | 6125 | 8 | 66 |
| 14 | கிருஷ்ணகிரி | 9022 | 4603 | 4733 | 18 | 93 |
| 15 | ஈரோடு | 3970 | 4941 | 1670 | 41 | 197 |
| 16 | திருப்பூர் | 2308 | 4663 | 1088 | 17 | 265 |
| 17 | கோயம்புத்தூர் | 1160 | 2951 | 710 | 9 | 228 |
| 18 | நீலகிரி | 19 | 1112 | 132 | 1 | 4 |
| 19 | தஞ்சாவூர் | 6389 | 5368 | 3194 | 6 | 90 |
| 20 | நாகப்பட்டினம் | 20039 | 2072 | 2340 | 12 | 291 |
| 21 | திருவாரூர் | 12901 | 2752 | 1413 | 4 | 96 |
| 22 | திருச்சிராப்பள்ளி | 8797 | 4425 | 4965 | 25 | 327 |
| 23 | கரூர் | 3372 | 2938 | 2978 | 12 | 92 |
| 24 | பெரம்பலூர் | 3249 | 792 | 1160 | 4 | 96 |
| 25 | அரியலூர் | 1167 | 1585 | 1462 | 7 | 168 |
| 26 | புதுக்கோட்டை | 6233 | 4312 | 5712 | 46 | 208 |
| 27 | மதுரை | 2761 | 3893 | 3899 | 7 | 182 |
| 28 | தேனி | 561 | 913 | 1330 | 24 | 106 |
| 29 | திண்டுக்கல் | 967 | 4811 | 3685 | 32 | 116 |
| 30 | இராமநாதபுரம் | 788 | 1333 | 1248 | 52 | 429 |
| 31 | விருதுநகர் | 10839 | 4936 | 6046 | 12 | 153 |
| 32 | சிவகங்கை | 4229 | 3315 | 5963 | 34 | 138 |
| 33 | திருநெல்வேலி | 2162 | 1883 | 2026 | 12 | 186 |
| 34 | தென்காசி | 1735 | 1513 | 2375 | 14 | 202 |
| 35 | தூத்துக்குடி | 10958 | 2349 | 2535 | 22 | 354 |
| 36 | கன்னியாகுமரி | 221 | 1422 | 1760 | 13 | 44 |
| | **மொத்தம்** | **185036** | **114891** | **119813** | **550** | **5216** |

2.2.7. **ஊரகப் பகுதிகளில் தெரு விளக்குகளை எல்.இ.டி. விளக்குகளாக மாற்றியமைத்தல்**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 110-ன்படி ஊரகப் பகுதிகளில் தெருவிளக்குகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல் கிராம ஊராட்சிகளின் அடிப்படை கடமைகளில் ஒன்றாகும்.

கிராம ஊராட்சியின் வருவாயில் தோராயமாக 35 விழுக்காடு மின் உபயோகத்திற்காக செலவிடப்படுகிறது. மின்திறன் மேம்பாடு, நீடித்த தன்மை, மற்றும் திறம்பட்ட மேலாண்மை ஆகியவற்றை உறுதி செய்திட அப்போதையமாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள்3.9.2015 மற்றும் 29.8.2016 ஆகிய தேதிகளில் விதி 110-ன்படி தெரு குழல் விளக்குகள் எல்.இ.டி. விளக்குகளாக மாற்றம் செய்வதற்கான அறிவிப்பினை செய்துள்ளார்கள்.

குழல் விளக்குகளுக்கு மாற்றாக நிறுவப்படும் எல்.இ.டி. விளக்குகள் 5 ஆண்டு கால உத்திரவாதத்துடன் கூடியதாகும். ஊரக தெரு விளக்குகளின் செயல்பாட்டினை கண்காணித்திட, ஊராட்சியில் உள்ள அனைத்து கம்பங்களுக்கும் எண் இடப்பட்டுள்ளன. மாவட்ட குறியீடு, வட்டார குறியீடு, ஊராட்சி குறியீடு மற்றும் குக்கிராம குறியீடு ஆகியவை கம்பத்தில் இடப்பட்டுள்ளது. மாற்றம் செய்யப்பட்டுள்ள எல்.இ.டி. விளக்குகளின் பயன்பாட்டு நிலையும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இதுவரையில், ஊரக பகுதிகளில் சுமார் 20.79 இலட்சம் தெருவிளக்குகள் எல்.இ.டி தெருவிளக்குகளாக மாற்றப்பட்டுள்ளன.இத்திட்டம்

செயல்முறைப்படுத்தப்பட்டதில் இருந்து இதுவரை ரூ. 407.53 கோடி மின்கட்டணத்தில் சேமிப்பு ஏற்பட்டுள்ளது.

2.2.8. **சுகாதாரம் - கிராம ஊராட்சிகளில் தூய்மை மற்றும் சுகாதாரத்தினை பேணிக் காத்தல்.**

ஊரகப் பகுதிகளை சுத்தமான நிலையிலும் தூய்மையாகவும் வைத்திருப்பது கிராம ஊராட்சியின் கட்டாயக் கடமைகளில் ஒன்றாகும். இது தொடர்பாக கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட சுகாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

i) தெருக்கள் மற்றும் ஊராட்சி சாலைகளை சுத்தம் செய்தல்.

ii) கழிவு நீர்க் கால்வாய் கட்டுதல், சுத்தம் செய்தல் மற்றும் கழிவு நீரை முறையாக வெளியேற்றுதல்.

iii) குப்பை குவியல்கள் மற்றும் முட்புதர்களை அகற்றுதல்.

iv) பொதுக் கழிப்பிடங்களை பராமரித்தல்.

v) சுடுகாடு/இடுகாடு ஆகியவற்றை அமைத்தல் மற்றும் பராமரித்தல்.

vi) பயன்பாட்டில் இல்லாத கிணறுகள், சுகாதாரமற்ற குட்டைகள், குளங்கள், சாக்கடைகள், குழிகள் அல்லது பள்ளங்கள் ஆகியவற்றை மூடுதல்.

ஊரகப் பகுதிகளில் தூய்மையைப் பேணவும் சுகாதாரத்தைப் பராமரிக்கவும் மொத்தம் 26,622 துப்புரவு பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தற்போது, திடக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மூலமாக ஈடுபடுத்தப்பட்டுள்ள 66,130 தூய்மைக் காவலர்கள் மூலமாகமேற்கொள்ளப்படுகிறது. இந்த

தூய்மைக் காவலர்களுக்கான மதிப்பூதியமானது மாநில அரசு நிதியிலிருந்து கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மூலமாக வழங்கப்பட்டுவருகிறது.

### 2.2.9. **ஊரகப் பகுதிகளில் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகள்**

ஊரகப் பகுதிகளை சுத்தமாக பராமரித்து, தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்கும் வகையில் ஊராட்சி அமைப்புகள் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையுடன் இணைந்து செயல்படுகின்றன. ஊரகப் பகுதிகளில் தொற்று நோய்களைத் தடுக்கும் பொருட்டு கீழ்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

i) அனைத்து வகையான தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகள் மூலம் தகவல் கல்வி தொடர்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு பொது மக்களிடையே தொற்று நோய்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

ii) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் கைப்பம்புகளை ஒட்டியுள்ள பகுதிகளை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் சுத்தம் செய்து குளோரின் முறையாக கலந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

iii) அரசு மற்றும் தனியார் மருந்துவமனைகளில் காய்ச்சலுக்காக சிகிச்சை பெறும் நோயாளிகளின் பட்டியலை தினந்தோறும் சுகாதாரத் துறையிடமிருந்து

பெற்று, கள அளவில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

iv) தீவிர கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஊராட்சி ஒன்றியங்களின் தேவையின் அடிப்படையில் மஸ்தூர்கள் ஈடுபடுத்தப்பட்டு வட்டார மருத்துவ அலுவலர்களின் கட்டுப்பாட்டில் பணிபுரிய உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

## 2.3. **நிதி ஆதாரங்கள்**

மாநிலத்தில் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் வரி விதிப்பு செய்ய அதிகாரம் பெற்ற ஒரே அமைப்பு கிராம ஊராட்சியாகும்.

கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வருவாய் பெறுகின்றன.

அ) வரி வருவாய்,

ஆ) வரியில்லா வருவாய்

இ) மானியம்.

### 2.3.1. **வரி வருவாய்**

கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட வரி இனங்களிலிருந்து வரி வருவாய் பெற உரிமை பெற்றுள்ளன.

i) வீட்டு வரி / சொத்து வரி

ii) தொழில் வரி

iii) விளம்பர வரி

i) **வீடு / சொத்து வரி**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 172 மற்றும் அரசாணை எண். 255, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள்:13.12.1999-ன்படி ஊரகப் பகுதிகளில் கட்டப்படும் ஒவ்வொரு கட்டடத்திற்கும் வீட்டு வரி / சொத்து வரி, சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியால் விதிக்கப்படுகிறது. 2008-09 ஆம் ஆண்டு முதல், அரசு உதவி பெறாத சுயநிதிக் கல்வி நிறுவனங்களின் கட்டடங்களுக்கு சொத்து வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. மாவட்ட வாரியாக 2019-20 ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட வீட்டு வரி / சொத்து வரி விவரம் பின்வருமாறு:

**அட்டவணை** 2.9

2019-20 **ஆம் ஆண்டில் மாவட்ட வாரியாக வசூலிக்கப்பட்ட வீட்டு வரி / சொத்து வரி விவரம்**

| வ.எண். | மாவட்டம் | வீட்டுவரி | சுயநிதி கல்வி நிறுவனங்கள் மீதான சொத்துவரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ரூபாய் கோடியில் | | |
| 1 | காஞ்சிபுரம் | 10.92 | 1.30 | 12.22 |
| 2 | செங்கல்பட்டு | 21.33 | 1.86 | 23.19 |
| 3 | திருவள்ளூர் | 19.24 | 2.45 | 21.69 |
| 4 | கடலூர் | 8.85 | 0.58 | 9.43 |
| 5 | விழுப்புரம் | 3.94 | 0.26 | 4.20 |
| 6 | கள்ளக்குறிச்சி | 3.11 | 0.22 | 3.33 |
| 7 | வேலூர் | 2.89 | 0.36 | 3.25 |
| 8 | இராணிப்பேட்டை | 2.32 | 0.21 | 2.53 |
| 9 | திருப்பத்தூர் | 1.34 | 0.96 | 2.30 |
| 10 | திருவண்ணாமலை | 6.65 | 0.72 | 7.37 |
| 11 | சேலம் | 7.52 | 2.07 | 9.59 |
| 12 | நாமக்கல் | 3.36 | 2.11 | 5.47 |

| வ.எண். | மாவட்டம் | வீட்டுவரி | சுயநிதி கல்வி நிறுவனங்கள் மீதான சொத்துவரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 13 | தர்மபுரி | 3.25 | 0.39 | 3.64 |
| 14 | கிருஷ்ணகிரி | 7.19 | 0.45 | 7.64 |
| 15 | ஈரோடு | 6.97 | 1.57 | 8.54 |
| 16 | திருப்பூர் | 8.37 | 0.53 | 8.90 |
| 17 | கோயம்புத்தூர் | 16.57 | 1.97 | 18.54 |
| 18 | நீலகிரி | 2.89 | 0.13 | 3.02 |
| 19 | தஞ்சாவூர் | 11.37 | 0.81 | 12.18 |
| 20 | நாகப்பட்டினம் | 3.78 | 0.30 | 4.08 |
| 21 | திருவாரூர் | 2.79 | 0.18 | 2.97 |
| 22 | திருச்சிராப்பள்ளி | 6.98 | 1.01 | 7.99 |
| 23 | கரூர் | 4.31 | 0.64 | 4.95 |
| 24 | பெரம்பலூர் | 2.06 | 0.49 | 2.55 |
| 25 | அரியலூர் | 4.32 | 0.24 | 4.56 |
| 26 | புதுக்கோட்டை | 4.78 | 0.65 | 5.43 |
| 27 | மதுரை | 7.86 | 0.54 | 8.40 |
| 28 | தேனி | 2.56 | 0.21 | 2.77 |
| 29 | திண்டுக்கல் | 10.36 | 0.77 | 11.13 |
| 30 | இராமநாதபுரம் | 5.52 | 0.29 | 5.81 |
| 31 | விருதுநகர் | 8.38 | 0.62 | 9.00 |
| 32 | சிவகங்கை | 5.01 | 0.21 | 5.22 |
| 33 | திருநெல்வேலி | 3.84 | 1.04 | 4.88 |
| 34 | தென்காசி | 2.76 | 1.08 | 3.84 |
| 35 | தூத்துக்குடி | 6.22 | 0.23 | 6.45 |
| 36 | கன்னியாகுமரி | 4.12 | 0.59 | 4.71 |
| மொத்தம் | | **233.73** | **28.04** | **261.77** |

## ii) **தொழில் வரி**

கிராம ஊராட்சிகள், தொழில் வரி வசூலிக்கும் அதிகாரம் பெற்றவை. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 198 B-ல் தொழிலாளர்களின் ஊதியம் அல்லது கூலித் தொகையிலிருந்து தொழில் வரி விதிக்கவும், வசூலிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. சம்மந்தப்பட்ட நிறுவனங்கள்

தொழிலாளர்களின் ஊதியத்திலிருந்து தொழில் வரிக்காக பிடித்தம் செய்த தொகையினை தொடர்புடைய கிராம ஊராட்சிக்கு செலுத்திட வேண்டும். அதன்படி, 2019-20 ஆம் ஆண்டில் தொழில் வரியாக ரூ. 117.19 கோடி வசூலிக்கப்பட்டது.

**அட்டவணை** 2.10

**மாவட்ட வாரியான தொழில்வரி விவரம்** - 2019-20

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | தொழில்வரி (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 15.78 |
| 2 | செங்கல்பட்டு | 10.67 |
| 3 | திருவள்ளூர் | 4.52 |
| 4 | கடலூர் | 3.35 |
| 5 | விழுப்புரம் | 3.77 |
| 6 | கள்ளக்குறிச்சி | 2.68 |
| 7 | வேலூர் | 2.34 |
| 8 | இராணிப்பேட்டை | 2.69 |
| 9 | திருப்பத்தூர் | 1.12 |
| 10 | திருவண்ணாமலை | 4.42 |
| 11 | சேலம் | 4.53 |
| 12 | நாமக்கல் | 3.05 |
| 13 | தர்மபுரி | 2.05 |
| 14 | கிருஷ்ணகிரி | 3.13 |
| 15 | ஈரோடு | 3.25 |
| 16 | திருப்பூர் | 2.18 |
| 17 | கோயம்புத்தூர் | 6.54 |
| 18 | நீலகிரி | 0.52 |
| 19 | தஞ்சாவூர் | 2.67 |
| 20 | நாகப்பட்டினம் | 2.13 |
| 21 | திருவாரூர் | 1.73 |
| 22 | திருச்சிராப்பள்ளி | 4.12 |
| 23 | கரூர் | 1.93 |

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | தொழில்வரி (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 24 | பெரம்பலூர் | 0.43 |
| 25 | அரியலூர் | 2.35 |
| 26 | புதுக்கோட்டை | 2.54 |
| 27 | மதுரை | 3.18 |
| 28 | தேனி | 1.31 |
| 29 | திண்டுக்கல் | 2.88 |
| 30 | இராமநாதபுரம் | 3.26 |
| 31 | விருதுநகர் | 3.52 |
| 32 | சிவகங்கை | 2.63 |
| 33 | திருநெல்வேலி | 1.15 |
| 34 | தென்காசி | 1.08 |
| 35 | தூத்துக்குடி | 2.99 |
| 36 | கன்னியாகுமரி | 0.71 |
| **மொத்தம்** | | **117.19** |

iii) **விளம்பர வரி**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 172, 220 மற்றும் 242ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகள் விளம்பர வரி விதிக்கும் உரிமை பெற்றுள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் (உரிமம் வழங்குதல் மற்றும் விளம்பரங்களுக்கு வரி விதித்து வசூலித்தல்) விதிகள் 2009-ல் ஊரகப் பகுதிகளில் விளம்பர பலகைகள் நிறுவ அனுமதி பெற்றவர்களிடம் வசூலிக்கப்பட வேண்டிய ஓர் ஆண்டிற்கான குறைந்தபட்ச மற்றும் அதிக பட்ச தொகையினை அரசு நிர்ணயிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் நிர்வாக அலுவலர் ஆண்டு கட்டணத்தை வசூல் செய்து தொடர்புடைய

உள்ளாட்சி அமைப்பின் பொது நிதிக் கணக்கில் செலுத்த வேண்டும்.

### 2.3.2. **வரியல்லாத வருவாய்**

கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வரியல்லாத வருவாய் பெற கிராம ஊராட்சிகள் உரிமை பெற்றுள்ளன.

i) மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்

ii) அபாயகரமான மற்றும் கேடு விளைவிக்கக் கூடிய தொழில்களுக்கான கட்டணங்கள்

iii) சந்தைக் கட்டணம்

iv) குடிநீர் கட்டணம்

v) வண்டி நிலையங்களுக்கான கட்டணம்

vi) சமூகக் காடுகள் ஏலம்

vii) மீன்பாசி குத்தகை

viii) 2சி பட்டா கட்டணம்

ix) சந்தை மற்றும் பொருட்காட்சிகளிலிருந்து பெறப்படும் வருமானங்கள்

x) படகுக் குழாம் மூலம் பெறப்படும் கட்டணங்கள்

xi) அபராதங்கள் மற்றும் தண்டத் தீர்வை

xii) கனிமம் மற்றும் சுரங்க ஏலம் மற்றும் உரிமத் தொகை

**i)மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்**

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 ஆனது, தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழ் எண்:43, நாள்.04.02.2019-ன் மூலம் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

இவ்விதிகளின்படி உள்ளாட்சி அமைப்பின் செயல் தலைவர் அல்லது செயல்படுத்தும் அமைப்பின் மூலம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள முகமை/நபர் கட்டிட அனுமதி வழங்குவதற்கு தகுதி வாய்ந்த நபர் ஆவார்.

ii) **அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் மற்றும் மனைகள் ஒழுங்குபடுத்துதல் விதிகள்**, 2017

நகர்ப்புறம் மற்றும் கிராமப்புற பகுதிகளில் அதிக எண்ணிக்கையிலான அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் உருவாகி உள்ளன. இம்மனைப் பிரிவுகளில் அடிப்படை வசதிகள் மற்றும் போதுமான கட்டமைப்பு வசதிகள் இல்லாத நிலையில் பெரும்பாலான மனைகளை ஏழைகள் மற்றும் விவரம் அறியாத மக்கள் வாங்கியுள்ளனர். எனவே, அரசானது இவ்வாறு அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் மற்றும் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளிலுள்ள மனைகளை ஒழுங்குமுறைப்படுத்திட வாய்ப்பு வழங்கி உத்திரவிடப்பட்டது.

தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971 (தமிழ்நாடு சட்டம் 35, 1972) பிரிவு 113ன்படி 20.10.2016க்கு முன்னர் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் விற்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட வீட்டு மனைகளை தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971க்கு விலக்களித்து மேற்படி, அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் மற்றும் வீட்டு மனைகளை வரைமுறை செய்வதற்கு, மேற்கண்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு 122ன் கீழ் விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

1. அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவு அல்லது உட்பிரிவிலுள்ள தனி வீட்டு மனைகளை வரன்முறை செய்தல்.
2. அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைகளை வரன்முறை செய்தல்.

இவ்வாறு, அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு அல்லது உட்பிரிவில் உள்ள தனி மனைகளை நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் ஒப்புதல் பெற்று வரன்முறை செய்வதற்கு வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

iii) **குடிநீர் கட்டணங்கள்**

ஊரகப் பகுதிகளில் வீடுகளுக்கான குடிநீர் இணைப்பிற்கு கிராம ஊராட்சி குடிநீர் கட்டணம் விதிக்கின்றது. தனி நபர் வீட்டு குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு வைப்புத் தொகை ரூ.1,000 வசூலிக்கப்படுகிறது. ஒவ்வொரு வீட்டு குடிநீர் இணைப்பிற்கும் மாதக்கட்டணம் ரூ.50 செலுத்த வேண்டும். அதன்படி 2019 - 20 ஆம் ஆண்டில் குடிநீர் கட்டணமாக ரூ. 91.28 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

2.3.3. **ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குபகிர்ந்தளிக்கப்படும் முத்திரைத்தாள் வரியிலிருந்து பெறப்படும் வருவாய் மாநில அளவில் ஒருங்கிணைக்கப்பட்டு கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பிரித்து வழங்கப்படுகிறது.

அதன்படி, 2019-20 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் ரூ.1053 கோடியினை பின்வருமாறு அனுமதித்து அரசு ஆணையிட்டுள்ளது.

i) மூன்றில் ஒரு பங்கு தொகையான ரூ.351 கோடி நிதி கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 67:33 என்ற விகிதத்தில் 2011 மக்கள் தொகை அடிப்படையில் பிரித்தளிக்கப்பட்டது. அவ்வாறு, கிராம ஊராட்சிகளுக்கு ரூ.234 கோடியும், ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.117 கோடியும் வரையறுக்கப்படாத நிதியாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

ii) மீதமுள்ள மூன்றில் இரு பங்குதொகையான ரூ.702 கோடி ஊரகப் பகுதிகளில் குறிப்பிட்ட வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் முன்னுரிமைத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.3.4. ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதி

ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதி என்பது மாநில அளவில் ஒப்படைக்கப்பட்ட வருவாயின் ஒரு பகுதியாகும். இத்திட்டக்கூறு நிதிக்கான ஒப்படைக்கப்பட்ட வருவாயில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் மாநில அளவில் மேற்கொள்ளப்படும் உட்கட்டமைப்பு பணிக்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசுக் கூடுதல் தலைமைச் செயலரை தலைவராகக் கொண்ட குழுவிற்கு ‘ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்ட

கூறு நிதியிலிருந்து மேற்கொள்ளும் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், பெரிய பாலங்கள், தரைப் பாலங்கள், இணைப்புச் சாலைகள் மற்றும் பேருந்து நிலையங்கள் போன்ற பெரிய அளவிலான பணிகள் இத்திட்டத்தின் கீழ் ரூ.702 கோடி மதிப்பீட்டில் 2019-20 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டுள்ளன.

மாவட்ட அளவில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலகங்களுக்கு ஒருங்கிணைந்த கட்டடங்கள் கட்டுவதற்கு 2017-18 ஆம் ஆண்டு 5 கட்டடங்கள் ரூ.32.81 கோடி மதிப்பீட்டிலும்,2018-19 ஆம் ஆண்டு 6 கட்டடங்கள் ரூ.38.10 கோடி மதிப்பீட்டிலும் 2019-20 ஆம் ஆண்டு 3 கட்டடங்கள் சுமார் ரூ.21 கோடி மதிப்பீட்டிலும் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியிலிருந்து கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.11**

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டிடங்கள்**

| 2017 - 18 | 2018 - 19 | 2019 - 20 |
|---|---|---|
| 1. தேனி | 1.காஞ்சிபுரம் | திருச்சிராப்பள்ளி |
| 2. விழுப்புரம் | 2.திருவள்ளூர் | திருநெல்வேலி |
| 3. விருதுநகர் | 3.திருவண்ணாமலை | கிருஷ்ணகிரி |
| 4. நாகப்பட்டினம் | 4. சிவகங்கை | |
| 5. வேலூர் | 5. மதுரை | |
| | 6. திருவாரூர் | |

2.4. **ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள்**

i) **மாநில நிதிக் குழு மானியம்**

73-வது அரசியலமைப்பு சட்டத் திருத்தம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 198-ன்படி, தமிழ்நாட்டில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தொடர்ச்சியாக மாநில நிதி ஆணையம் அமைக்கப்பட்டு வருகிறது. மாநில நிதி ஆணையத்தின் முக்கிய பொறுப்புகள் பின்வருமாறு:-

1. அரசால் விதிக்கப்படும் வரி, தீர்வை, சுங்கம் மற்றும் கட்டணங்கள் மூலம் பெறப்படும் மொத்த வருவாயில் மாநிலத்திற்கும், ஊராட்சிகளுக்கும் பிரித்து வழங்கும் முறையினை உருவாக்குதல்.
2. ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வரிகள், தீர்வை, சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை நிர்ணயித்தல்.
3. மாநிலத்தின் மொத்தத் தொகுப்பு நிதியிலிருந்து ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்கள்.
4. ஊராட்சிகளின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்.

73-வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்திற்குட்பட்டு தமிழ்நாடு அரசு ஆணை எண். 350, நிதித்துறை நாள்: 23.04.1994-ன் மூலம் தமிழகத்தில் "முதல் மாநில நிதி ஆணையம்" ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவில் மாநில நிதி ஆணையம் அமைத்த முதன்மை மாநிலங்களுள் தமிழ்நாடும்

ஒன்றாகும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி பகிர்வு செய்திட இதுவரை ஐந்து மாநில நிதிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### 2.4.1. **ஐந்தாவது மாநில நிதி ஆணையம்**

மாநில அரசால் நியமிக்கப்பட்டிருந்த ஐந்தாவது மாநில நிதி ஆணையம், 2017 முதல் 2022 வரையிலான காலத்திற்கான தனது பரிந்துரையை டிசம்பர் 2016ல் அளித்தது. ஐந்தாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்று அதன்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கை சட்டமன்ற பேரவையில் 24.03.2017 அன்று வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. கீழ்க்காணும் முக்கிய பரிந்துரைகளின் மீது அரசு உரிய ஆணைகளை வெளியிட்டுள்ளது.

அ) மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் 10 விழுக்காடு ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படும்.

ஆ) பகிர்வு மானியம் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே 56:44 என்கிற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படும்.

இ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையேயான பகிர்வு முறையே மாவட்ட ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு 8:37:55 ஆகும்.

ஈ) 2017-18 ஆம் ஆண்டு முதல் கிராம ஊராட்சிகளுக்கான குறைந்தபட்ச மானியம் ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.7 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

உ) ஊராட்சி ஒன்றியங்களுக்கான குறைந்தபட்ச மானியம் ஆண்டுக்கு ரூ.40 இலட்சம் என உயர்த்தப்பட்டுள்ளது.

ஊ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மாநில நிதிக் குழு மானிய தொகை பகிர்வு கீழ்காணும் வழிமுறைகளை கொண்டிருக்கும்.

| | | |
|---|---|---|
| 1. 2011ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை | : | 60% |
| 2. பரப்பளவு | : | 15% |
| 3. ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மக்கள் தொகை | : | 15% |
| 4. தனிநபர் செலவு நுகர்வு இடைவெளி | : | 10% |

எ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய பங்குத் தொகையில் 20 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டு உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதிக்கு பதிலாக “மூலதன மானிய நிதி” ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஏ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மொத்த தொகையில் 10 விழுக்காடு தொகையினை பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2019–20 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு அரசு ரூ.6,573 கோடி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில நிதிக் குழு மானியமாக ஒதுக்கீடு செய்துள்ளது.

### 2.4.2. **மூலதன மானிய நிதி**

ஏற்கனவே நடைமுறையில் இருந்த உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதிக்கு பதிலாக ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் மூலதன மானிய நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும் பகிர்மான நிதி தொகுப்பில் 20 விழுக்காடு மூலதன மானிய நிதிக்கு வழங்கப்படும். மாநில அளவில் முக்கியமானதாக கருதப்படும் திட்டங்களை செயல்படுத்த இதில் 20 விழுக்காடு தனியே ஒதுக்கீடு செய்யப்பட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலர், ஊரக வளர்ச்சி இயக்குநர், நிதித் துறை பிரதிநிதி ஒருவர் மற்றும் மாநில திட்டக் குழு உறுப்பினர் செயலர் ஆகியோர் அடங்கிய குழுவால் இப்பணிகள் தேர்வு செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கப்படும். எஞ்சியுள்ள 80 விழுக்காடு நிதி மாவட்ட ஊராட்சிகளுக்கான பகிர்மான விகிதத்தின் அடிப்படையில் மாவட்ட வாரியாக பகிர்ந்து அளிக்கப்படும். நிதித் துறை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் ஆலோசனையின்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினால் வெளியிடப்பட்டுள்ள அரசாணையின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் திட்டங்களுக்கு மாவட்ட திட்டக் குழுவால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 2.4.3. **பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதி**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் ஒட்டு மொத்த பகிர்மான நிதியில் 10 விழுக்காட்டினை கொண்டு பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு

நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் 40 விழுக்காடு தொகை கடந்த ஐந்து ஆண்டுகளில் குறைந்தது மூன்று ஆண்டுகளில் நிதி பற்றாக்குறை உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு இடையே ஐந்தாவது நிதி ஆணைய காலத்தின் முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் பகிர்ந்து அளிக்கப்படும். இதில் 20 விழுக்காடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வசம் இருக்கும். 20 விழுக்காடு தொகை மாநில நிதி ஆணையத்தால் மாவட்ட ஊராட்சிகளுக்கு பரிந்துரைத்துள்ள விகிதாச்சார அடிப்படையில் மாவட்டங்களுக்கு பிரித்து வழங்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் இத்தொகையினை வேறு எந்த திட்டத்திலும் அல்லது வழிமுறையிலும் தீர்க்க முடியாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கு இத்தொகையினை மானியமாக வழங்க வேண்டும். மீதமுள்ள 20 விழுக்காடு தொகை கூட்டு குடிநீர் திட்டங்கள் பராமரிப்பில் ஏற்படும் பற்றாக்குறையினை போக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மானியமாக விடுவிக்கப்படும்.

### 2.4.4. **மத்திய நிதி ஆணைய மானியம்**

பதினான்காவது நிதி ஆணையம் கிராம ஊராட்சிகளுக்கு அடிப்படை மானியம் மற்றும் செயலாக்க மானியம் ஆகிய இரு மானியங்களை பரிந்துரை செய்துள்ளது. மொத்த மானிய தொகையில் 90 விழுக்காடு அடிப்படை மானியமாகும். 10 விழுக்காடு செயலாக்க மானியமாகும். 2015-16 முதல் 2019-20 ஆம் ஆண்டு வரையிலான

காலத்திற்கு தமிழ்நாட்டிற்கான உரிய பங்கு விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை** 2.12

**மத்திய நிதி ஆணைய மானிய விவரம்**

**(ரூபாய் கோடியில்)**

| மானியம் | 2015 - 16 | 2016 - 17 | 2017 - 18 | 2018 - 19 | 2019 - 20 | மொத்தம் (2015 - 20) |
|---|---|---|---|---|---|---|
| அடிப்படை மானியம் | 947.65 | 1312.19 | 1516.12 | 1753.87 | 2369.86 | 7899.69 |
| செயலாக்க மானியம் | - - | 172.12 | 194.78 | 221.20 | 289.64 | 877.74 |
| **மொத்தம்** | **947.65** | **1484.31** | **1710.90** | **1975.07** | **2659.50** | **8777.43** |

### i) 14-**வதுமத்திய நிதி ஆணைய அடிப்படை மானியம்**

2018 - 19 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது மத்திய நிதி ஆணைய அடிப்படை மானிய தொகையாக ரூ. 1753.87 கோடியை கிராம ஊராட்சிகளுக்கு மத்திய அரசு விடுவித்துள்ளது. இத்தொகை முழுவதும் மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. ஊராட்சிகளில் அடிப்படை பணிகளான குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள் பராமரிப்பு, சுகாதாரம் தொடர்பான பணிகளை மேற்கொள்ளவும், மின்கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவற்றை செலுத்தவும் இம்மானியம் பயன்படுத்தப்படுகிறது.

### ii) 14-**வது மத்திய நிதிக் குழுவின் செயலாக்க மானியம்**

14 - வது மத்திய நிதிக் குழு, கிராம ஊராட்சிகளுக்கு செயலாக்க மானியம் வழங்க தேவையான விரிவான நடைமுறைகள், செயல்பாட்டு அளவுகோல்கள் மற்றும் கிராம

ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட வேண்டிய ஊக்கத் தொகையின் அளவு ஆகியவற்றை பரிந்துரைத்துள்ளது.

2017-18 ஆம் ஆண்டிற்கான செயலாக்க மானியம் பெறுவதற்கு கிராம ஊராட்சிகள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை சமர்ப்பித்தல் மற்றும் சொந்த வருவாய் ஆதாரங்களை உயர்த்துதல். ஆனால் ஒரு ஊராட்சிக்கு வழங்கப்படும் செயலாக்க மானியமானது அவ்வூராட்சிக்கு விடுவிக்கப்படும் அடிப்படை மானியத்தில் 5 மடங்கு தொகைக்கு மேல் இருக்கக்கூடாது.

14-வது மத்திய நிதிக் குழு செயலாக்க மானிய தொகையை கிராம ஊராட்சிகள் பெறுவதற்குரிய வழிகாட்டி நெறிமுறை மற்றும் அளவுகோல் ஆகியன தமிழ்நாடு அரசு, அரசிதழ் (சிறப்பு) எண். 95, நாள்: 28.02.2019ல் அறிவிக்கையாக வெளியிட்டுள்ளது.

### 2.4.5. **கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்**

தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டம், 1994-ன் பிரிவு 240ன் படி ஒவ்வொரு கிராம ஊராட்சியும் ஒவ்வொரு ஆண்டும் கிராம ஊராட்சிக்கான வளர்ச்சித் திட்டத்தினை தயார் செய்திட வேண்டும். அதற்கிணங்க தமிழக அரசு, அரசாணை எண்.34, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.1) துறை, நாள், 02.03.2016ல் பதினான்காவது நிதி ஆணைய மானியத்தை கிராம ஊராட்சி திட்டமிடல் மூலம் பயன்படுத்த விரிவான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

அடுத்த நிதியாண்டிற்கான கிராம ஊராட்சிக்கான வளர்ச்சித் திட்டத்தை தயாரிப்பதற்காக இந்திய அரசு மாநில அரசுடன் இணைந்து 2019 அக்டோபர்2 முதல் டிசம்பர் 31 வரை மக்களிடம் திட்டமிடுதல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திட ஆவண செய்தது.

மத்திய அரசு மற்றும் தமிழக அரசால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின் படி கிராம ஊராட்சி திட்டமிடல் செயல்முறை விரிவானதாகவும் மக்கள் பங்கேற்பின் அடிப்படையிலும் இருக்கவேண்டும். மேலும், இதுஅரசிலயமைப்புச் சட்டத்தின்பதினொன்றாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்ட 29 இனங்கள் தொடர்பான அனைத்துத் துறைகளின் திட்டங்களுடன் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்டு திட்டமிட வேண்டும்.

மக்கள் திட்டமிடல் இயக்கத்தின் ஒரு பகுதியாக, மாநிலத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளின் சமூக மற்றும் பொருளாதார மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டன. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சமுதாய வள நபர்கள் மூலம் இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டு மிஷன் அந்தியோதயா செயலி மூலம் உள்ளீடு செய்யப்பட்டது. இவர்கள் தொடர்புடைய துறைகள் மற்றும் கள அளவில் ஆய்ந்து தகவல்களைச் சேகரித்ததுடன் ஊராட்சிகளுக்கான தேவைகளை மதிப்பிட்டனர்.

கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தை இறுதி செய்வதற்காக அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சிறப்பு கிராம சபையில், கிராம ஊராட்சியின் அனைத்து வளர்ச்சித்

தேவைகள் மற்றும் தற்போதைய பற்றாக்குறைகள் குறித்து விவாதிக்கப்பட்டன.

மேலும், தொடர்புடைய துறையின் கள அளவிலான அலுவலர்கள் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படும் நடவடிக்கைகளின் முன்னேற்றம் மற்றும் அதற்கான நிதி பயன்பாடு மற்றும் அடுத்த ஆண்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்ட பணிகள் மற்றும் அதற்கான நிதி ஒதுக்கீடு குறித்து கிராம சபையில் எடுத்துரைத்தனர். அவ்வாறு விவாதிக்கப்பட்டு கிராம சபையால் அங்கீகரிக்கப்பட்டு பொது ஆவணங்களின் அடிப்படையில் கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களாக கிராம ஊராட்சிக்கு வழங்கப்பட்டன.

## 2.5. **ஊராட்சி ஒன்றியம்**

தமிழ்நாட்டில் இடைநிலை அளவில் 388 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டார ஊராட்சிகள்) உள்ளன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், குறைந்தபட்சம் 5,000 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி ஒன்றிய வார்டுகளை உள்ளடக்கிய வளர்ச்சி வட்டாரங்களாகும். ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் தொடர்புடைய வார்டில் உள்ள மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களால், மறைமுகத் தேர்தலின் மூலம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

**அட்டவணை 2.13**
**கிராமஊராட்சிகளின்எண்ணிக்கைஅடிப்படையில்**
**ஊராட்சிஒன்றியங்களின்விவரம்**

| ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளின் வரம்பு விவரம் | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 10 - மற்றும் அதற்கு குறைவாக | 23 |
| 11 முதல் 20 வரை | 80 |
| 21 முதல் 30 வரை | 82 |
| 31 முதல் 40 வரை | 83 |
| 41 முதல் 50 வரை | 66 |
| 51 மற்றும் அதற்கு அதிகமாக | 54 |
| **மொத்தம்** | **388** |

மாவட்ட வாரியான ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பரப்பளவு விவரம் பின்வருமாறு :-

## அட்டவணை 2.14
## மாவட்ட வாரியாக ஊராட்சி ஒன்றியங்களின் விபரம்

| வ.எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | ஊராட்சிகளின் சராசரி எண்ணிக்கை | ஊரக பரப்பளவு (ச.கிமீ) | ஊராட்சி ஒன்றியத்தின் சராசரி பரப்பளவு (ச.கிமீ) |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 5 | 274 | 55 | 1539.19 | 121.47 |
| 2 | செங்கல்பட்டு | 8 | 359 | 45 | 2312.56 | 174.80 |
| 3 | திருவள்ளூர் | 14 | 526 | 38 | 2859.84 | 204.27 |
| 4 | கடலூர் | 14 | 683 | 49 | 2942.24 | 226.33 |
| 5 | விழுப்புரம் | 13 | 688 | 53 | 3606.96 | 201.20 |
| 6 | கள்ளக்குறிச்சி | 9 | 412 | 46 | 2902.47 | 94.68 |
| 7 | வேலூர் | 7 | 247 | 35 | 1207.13 | 62.35 |
| 8 | இராணிப்பேட்டை | 7 | 288 | 41 | 1620.58 | 74.41 |
| 9 | திருப்பத்தூர் | 6 | 208 | 35 | 1194.59 | 64.36 |
| 10 | திருவண்ணாமலை | 18 | 860 | 48 | 4826.27 | 268.13 |
| 11 | சேலம் | 20 | 385 | 19 | 4561.41 | 228.07 |
| 12 | நாமக்கல் | 15 | 322 | 21 | 3119.43 | 207.96 |
| 13 | தர்மபுரி | 10 | 251 | 25 | 4407.43 | 550.93 |
| 14 | கிருஷ்ணகிரி | 10 | 333 | 33 | 4965.73 | 496.57 |
| 15 | ஈரோடு | 14 | 225 | 16 | 2626.99 | 187.64 |
| 16 | திருப்பூர் | 13 | 265 | 20 | 4545.50 | 349.65 |
| 17 | கோயம்புத்தூர் | 12 | 228 | 19 | 2534.24 | 211.19 |

| வ.எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | ஊராட்சிகளின் சராசரி எண்ணிக்கை | ஊரக பரப்பளவு (ச.கிமீ) | ஊராட்சி ஒன்றியத்தின் சராசரி பரப்பளவு (ச.கிமீ) |
|---|---|---|---|---|---|---|
| 18 | நீலகிரி | 4 | 35 | 9 | 1170.39 | 292.60 |
| 19 | தஞ்சாவூர் | 14 | 589 | 42 | 3657.67 | 261.26 |
| 20 | நாகப்பட்டினம் | 11 | 434 | 39 | 2400.31 | 218.21 |
| 21 | திருவாரூர் | 10 | 430 | 43 | 2322.69 | 232.27 |
| 22 | திருச்சிராப்பள்ளி | 14 | 404 | 29 | 4028.00 | 287.71 |
| 23 | கரூர் | 8 | 157 | 20 | 2656.25 | 332.03 |
| 24 | பெரம்பலூர் | 4 | 121 | 30 | 1609.54 | 402.39 |
| 25 | அரியலூர் | 6 | 201 | 34 | 1710.17 | 285.03 |
| 26 | புதுக்கோட்டை | 13 | 497 | 38 | 4433.78 | 341.06 |
| 27 | மதுரை | 13 | 420 | 32 | 3183.18 | 244.86 |
| 28 | தேனி | 8 | 130 | 16 | 1159.89 | 144.99 |
| 29 | திண்டுக்கல் | 14 | 306 | 22 | 4401.34 | 314.38 |
| 30 | இராமநாதபுரம் | 11 | 429 | 39 | 4116.19 | 374.20 |
| 31 | விருதுநகர் | 11 | 450 | 41 | 3282.08 | 298.37 |
| 32 | சிவகங்கை | 12 | 445 | 37 | 3075.90 | 256.33 |
| 33 | திருநெல்வேலி | 9 | 204 | 23 | 2277.48 | 103.69 |
| 34 | தென்காசி | 10 | 221 | 22 | 2005.58 | 99.18 |
| 35 | தூத்துக்குடி | 12 | 403 | 34 | 4260.78 | 355.07 |
| 36 | கன்னியாகுமரி | 9 | 95 | 11 | 626.14 | 69.57 |
| | **மொத்தம்** | **388** | **12,525** | **33** | **1,04,149.92** | **270.52** |

வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), ஊராட்சி ஒன்றியத்தின் செயல் அலுவலர் ஆவார். அவருக்கு உதவியாக நிர்வாகப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகள் உள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 112-ன்படி ஊராட்சி ஒன்றியக் குழு மேற்கொள்ளும் பணிகளில் முக்கியமானவை பின்வருமாறு:

1. ஊராட்சி ஒன்றிய சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள், தடுப்புச் சுவர்கள், தரைப்பாலங்கள் அமைத்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.

2. ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல்.
3. ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளான சிறுபாசனக் குளங்கள், குட்டைகள், ஊரணிகள் ஆகியவற்றை பராமரித்தல் மற்றும் புதிதாக அமைத்தல்.
4. தொற்றுநோய் பரவாத வண்ணம் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
5. ஊராட்சி ஒன்றியக் குழுக்களால் வரையறுக்கப்பட்ட கண்காட்சி மற்றும் விழாக்கள் நடத்துதல்.
6. ஊராட்சி ஒன்றியச் சந்தைகளாக வகைப்படுத்தப்பட்டவற்றை பராமரித்தல்.

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 114ன்படி பொருளாதார வளர்ச்சி குறித்த திட்டங்கள் மற்றும் இதர செயல்பாடுகளை ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் செயல்படுத்தும்படி அரசு பணிக்கலாம்.

## 2.5.1. **நிதி**

1. ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு வரி விதித்திடும் அதிகாரம் இல்லை.
2. வரியில்லா வருவாய், ஒப்படைக்கப்பட்ட / பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாயில் ஒரு பகுதி, கட்டணங்கள், வாடகை, அபராதம் மற்றும் தண்டதீர்வை ஆகியவை ஊராட்சி ஒன்றியத்தின் வருவாய் இனங்களாகும்.
3. மாநில நிதி ஆணையத்தால் விடுவிக்கப்படும் மானியங்களான மக்கள் தொகை அடிப்படையிலான மானியம் மற்றும் குறைந்த பட்ச மானியம் ஆகியன

ஊராட்சி ஒன்றியத்திற்கு மானியங்களாக வழங்கப்படுகின்றன. ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் குறைந்தபட்சமான மானியம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டிற்கு ரூ.40 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

### 2.5.2. **ஊராட்சி ஒன்றியங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்**

தமிழ்நாட்டில் 385 ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிலையான அலுவலகக் கட்டடங்கள் உள்ளன. நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு பழுதடைந்த பழைய கட்டடங்களுக்குப் பதிலாக ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியினை கொண்டு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 2011-12 ஆம் ஆண்டு முதல் 2018-19 ஆம் ஆண்டு வரை ரூ.206.23 கோடி செலவில் 99 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

### 2.5.3. **நீராதார அமைப்புகள்**

ஊரகப் பகுதிகளில் உள்ள குளங்கள், குட்டைகள் மற்றும் சிறுபாசன ஏரிகள் ஆகியன ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியமான சொத்துக்களில் சிலவாகும். மாவட்ட வாரியாக சிறுபாசன ஏரிகள் மற்றும் குளங்கள்/குட்டைகள் எண்ணிக்கை பின்வருமாறு :

**அட்டவணை** 2.15

**மாவட்ட வாரியாக சிறுபாசன ஏரிகள், குட்டைகள் / ஊரணிகள் விவரம்**

| வ.எண் | மாவட்டம் | சிறுபாசன ஏரிகள் | ஊரணிகள்/ குளம் குட்டைகள் |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 379 | 2079 |
| 2 | செங்கல்பட்டு | 642 | 2488 |

| வ.எண் | மாவட்டம் | சிறுபாசன ஏரிகள் | ஊரணிகள்/ குளம் குட்டைகள் |
|---|---|---|---|
| 3 | திருவள்ளூர் | 657 | 3189 |
| 4 | கடலூர் | 219 | 2559 |
| 5 | விழுப்புரம் | 361 | 1814 |
| 6 | கள்ளக்குறிச்சி | 794 | 3299 |
| 7 | வேலூர் | 130 | 624 |
| 8 | இராணிப்பேட்டை | 202 | 1431 |
| 9 | திருப்பத்தூர் | 240 | 267 |
| 10 | திருவண்ணாமலை | 1277 | 4328 |
| 11 | சேலம் | 193 | 566 |
| 12 | நாமக்கல் | 128 | 596 |
| 13 | தர்மபுரி | 546 | 504 |
| 14 | கிருஷ்ணகிரி | 1071 | 1301 |
| 15 | ஈரோடு | 22 | 623 |
| 16 | திருப்பூர் | 0 | 1101 |
| 17 | கோயம்புத்தூர் | 9 | 620 |
| 18 | நீலகிரி | 0 | 0 |
| 19 | தஞ்சாவூர் | 52 | 3470 |
| 20 | நாகப்பட்டினம் | 0 | 4620 |
| 21 | திருவாரூர் | 0 | 4164 |
| 22 | திருச்சிராப்பள்ளி | 1118 | 1798 |
| 23 | கரூர் | 107 | 832 |
| 24 | பெரம்பலூர் | 132 | 1219 |
| 25 | அரியலூர் | 471 | 1780 |
| 26 | புதுக்கோட்டை | 3976 | 5356 |
| 27 | மதுரை | 903 | 2287 |
| 28 | தேனி | 26 | 465 |
| 29 | திண்டுக்கல் | 1060 | 1529 |
| 30 | இராமநாதபுரம் | 932 | 3519 |
| 31 | விருதுநகர் | 719 | 2962 |
| 32 | சிவகங்கை | 4224 | 4430 |
| 33 | திருநெல்வேலி | 333 | 177 |
| 34 | தென்காசி | 409 | 479 |
| 35 | தூத்துக்குடி | 402 | 1498 |
| 36 | கன்னியாகுமரி | 211 | 197 |
| **மொத்தம்** | | **21,945** | **68,171** |

## 2.6. **மாவட்ட ஊராட்சி**

தமிழ்நாட்டில் 36 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன. 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 24-ன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஊராட்சி அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், மக்களால் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் மூலம் மாவட்ட ஊராட்சித் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட 5 வருவாய் மாவட்டங்களைத் தொடர்ந்து, ஏற்கெனவே உள்ள ஊராட்சி ஒன்றியங்களை மறு சீரமைத்த பின், அவற்றை உள்ளடக்கி செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், ராணிப்பேட்டை மற்றும் தென்காசி ஆகிய 5 புதிய மாவட்ட ஊராட்சிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள மாவட்ட ஊராட்சிகள் எதிர்வரும் ஊரக உள்ளாட்சித் தேர்தலுக்குப் பின் செயல்பாட்டிற்கு வரும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், உதவி இயக்குநர் நிலையில் ஒரு அலுவலர் ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் செயலராக நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார். அவருக்கு உறுதுணையாகப் பணியாளர்கள் உள்ளனர். மாவட்ட ஊராட்சி, சம்மந்தப்பட்ட துறைகளோடு ஒருங்கிணைந்து செயல்பட பின்வரும் நிலைக் குழுக்களை அமைக்கலாம்.

1. உணவு மற்றும் வேளாண்மை
2. தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்கள்
3. பொதுப் பணிகள்
4. கல்வி
5. மது விலக்கு உள்ளிட்ட சுகாதாரம் மற்றும் மக்கள் நலவாழ்வு.

இக்குழுக்கள் தவிர, தேவையின் அடிப்படையில் மாவட்ட ஊராட்சி, கூடுதல் நிலைக் குழுக்களை அமைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு நிலைக் குழுவும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்வு செய்திட வேண்டும். மாவட்ட ஊராட்சித் தலைவர், மேற்படி நிலைக் குழுக்களின் பதவி வழி உறுப்பினர் ஆவார்.

### 2.6.1. **செயல்பாடுகள்**

1. மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்.
2. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் நிர்வாக அறிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மாவட்டத்தின் ஆண்டறிக்கையைத் தயாரித்தல்.
3. விவசாயம், நிலவள மேம்பாடு, கால்நடை பராமரிப்பு, பால்வளம், கோழிப் பண்ணை, மீன்வளம் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகியவற்றை முன்னேற்றுவதற்காக திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்.
4. ஊரக வீட்டு வசதி, குறிப்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு உரிய வீட்டு வசதி திட்டங்களை திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்
5. பெரிய அளவிலான குடிநீர் திட்டப் பணிகளைக் கண்டறிதல்.

### 2.6.2. **நிதி**

மாவட்ட ஊராட்சிகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம் ஏதும் இல்லை. மாநில நிதி ஆணைய மானியம் மட்டுமே முதன்மையான வருவாயாகும். குறிப்பிட்ட சில இனங்களில் மாவட்ட ஊராட்சிக்கு சொந்தமான நிலம் மற்றும் கட்டடம் மூலமாக கிடைக்கும் வருவாய் முக்கியமானவையாகும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் நிதியில் எட்டு விழுக்காடு மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த மானியம் ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது.

### 2.6.3. **மாவட்ட திட்டக் குழு**

மாவட்ட திட்டக் குழு என்ற அமைப்பினை ஏற்படுத்திட 74வது இந்திய அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், 1992ல் வழிவகுத்துள்ளது. அதன்படி மாவட்ட திட்டக் குழு 31 மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட திட்டக்குழுவின் தலைவராக மாவட்ட ஊராட்சித் தலைவரும், துணைத்தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவரும் உள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சாரத்திற்கேற்ப உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவர். மாவட்ட திட்டக் குழுவின் பணிகள் பின்வருமாறு:

1. மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான மாவட்ட அளவிலான வள ஆதாரங்கள்

விபரங்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் நாளது தேதி வரையிலான விபரங்களைப் பெறுதல்.

2. முன்னுரிமை தேவைகளைக் கண்டறிதல்.
3. மாவட்டத்தின் வளர்ச்சிக்குத் தேவையான கொள்கைகள், திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் முன்னுரிமை அளித்தல்.
4. மாவட்டத்தில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தயாரித்த திட்டங்களை ஒருங்கிணைத்து மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல். இவ்வாறு மாவட்டத் திட்டக்குழு தயாரிக்கும் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம், மாநிலத் திட்டக் குழு தயாரிக்கும் மாநில அளவிலான திட்டத்திற்கு உதவியாக இருக்கும்.
5. மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்தல்.
6. வளர்ச்சித் திட்டங்களில் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பை ஊக்குவித்தல்.
7. மாநில அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல் தொடர்பான ஆலோசனைகளை மாநில அரசுக்கு வழங்குதல்.
8. மாநில அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் இதர பணிகளை நிறைவேற்றுதல்.

மேலே விவரிக்கப்பட்ட பணிகளை தவிர 5 வது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும் பகிர்மான நிதித் தொகுப்பில் 20 விழுக்காடு, மூலதன மானிய நிதிக்கு வழங்கப்படும். அவற்றில் 80% மூலதன மானிய நிதி பணிகளுக்கு ஒதுக்கீடு

செய்வது மாவட்ட திட்டக் குழுவின் பொறுப்பாகும். மூலதன மானிய நிதியில் 80 விழுக்காடு நிதி, மாவட்ட ஊராட்சிகளுக்கான பகிர்மான விகிதத்தின் அடிப்படையில் மாவட்ட வாரியாக பகிர்ந்து அளிக்கப்படும். நிதித் துறை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் ஆலோசனையின்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினால் வெளியிடப்படும் விரிவான வழிகாட்டு நெறிமுறைகளின்படி தேர்வு செய்யப்படும் திட்டங்களுக்கு மாவட்ட திட்டக் குழுவால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 2.7. **பொது நிதி மேலாண்மை அமைப்பு** (PFMS)

ஊரக உள்ளாட்சி அமைப்புகள் சமூகத்தின் நலனுக்காக பல்வேறு அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளை ஊராட்சிகளின் சொந்த வருவாயிலிருந்தும் மத்திய மாநில அரசுகளிடம் இருந்து பெறப்படும் மானியங்களிலிருந்தும் மேற்கொண்டு வருகின்றன.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கென தமிழக அரசு திறம்பட்ட நிதி நிர்வாக அமைப்பு மற்றும் நடைமுறைகளை ஏற்படுத்தியுள்ளது. மேலும், வரவு செலவு கணக்கு, கணக்கியல், புத்தக பராமரிப்பு, பரிவர்த்தனைகள் மற்றும் தணிக்கை போன்றவற்றிற்கென விரிவான வழிமுறைகளையும் வெளியிட்டுள்ளது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளில் நடைபெறும் பரிவர்த்தனைகள் மற்றும் செலவினங்களை நிகழ்நேரத்தில் கண்காணித்து செயல்திறன் மிக்க நிதி பயன்பாட்டை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

எனவே, கிராம ஊராட்சியால் பராமரிக்கப்படும் அனைத்து வங்கிக் கணக்குகள், வட்டார மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் பராமரிக்கப்படும் அனைத்து மானிய மற்றும் சொந்த வருவாய் கணக்குகள், பொது நிதி மேலாண்மை அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. பொது நிதி மேலாண்மை அமைப்பு என்பது முழுமையான மின்னணு இயங்குதளத்தின் மூலம் நிதியானது அரசிடம் இருந்து பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அமைப்புகளின் மூலம் உரிய பயனாளிகள், விற்பனையாளர்கள் அல்லது ஒப்பந்ததாரர்கள் வரை சென்றடைவதை முழுமையாக கண்காணிக்கும் அமைப்பாகும்.

பொது நிதி நிர்வாக அமைப்பினைச் செம்மையாகச் செயல்படுத்திட அரசாணை எண்:104 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள்: 26.07.2018 மற்றும் அரசாணை எண்.133, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள்:18.09.2018 அரசால் வெளியிடப்பட்டுள்ளன.

36 மாவட்ட ஊராட்சிகள், 388 வட்டார ஊராட்சிகள் மற்றும் 12,525 கிராம ஊராட்சிகள் ஆகியவை தனித்தனி அலகுகளாக பொது நிதி மேலாண்மை அமைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 2.7.1.**பொது நிதி நிர்வாக அமைப்பின்** (PFMS) **அனுகூலங்கள்**

- நிதி பட்டுவாடா மற்றும் பயன்பாடு தொடர்பான நிகழ்நேர கண்காணிப்பினை மேற்கொள்ளவும், பல்வேறு துறைகள், நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களுக்கிடையே நிதி

பரிவர்த்தனை தொடர்பான முடிவுகளை மேற்கொள்வதற்கும் பொது நிதி நிர்வாக அமைப்பு உதவி புரிகிறது.

- திட்ட செயலாக்க அமைப்புகளில் நிதி தேவையில்லாமல் ஆங்காங்கே தேக்கமடைவதை கண்டறியவும் உதவிகரமாக உள்ளது.
- பணப்பட்டுவாடாவில் ஏற்படும் தாமதத்தினையும், தேக்க நிலையினையும் இது பெருமளவு குறைக்கிறது.
- ஒட்டு மொத்த நிதி நிர்வாக மேலாண்மையிலும், திட்ட செயலாக்கத்திலும் வெளிப்படைத் தன்மையினையும், உறுதியான முன்னேற்றத்தினையும் எட்டுவதற்கு உதவிகரமாக உள்ளது.
- தேவையற்ற பண விரயத்தினையும், போலியான பயனாளிகள் அகற்றப்படுவதையும் உறுதி செய்கிறது.

## 2.8. **ஒரு முறை பயன்படுத்தி தூக்கி வீசக்கூடிய நெகிழிகளைத் தடை செய்தல்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை விதி 110-ன் கீழ் 05.06.2018 அன்று ஒரு முறை பயன்படுத்தி தூக்கி வீசக்கூடிய நெகிழிகள் தயாரிப்பு, சேமித்தல், விநியோகம் மற்றும் பயன்பாடு ஆகியவை 01.01.2019 முதல் தடை செய்யப்படும் என்று ஒரு அறிவிப்பினை வெளியிட்டார்.

இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசானது சுற்றுப்புறம் (பாதுகாப்பு) திட்டம் 1986-ன்கீழ் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி வீசக்கூடிய (அனைத்து தடிமன்களும்) நெகிழிகள் 01.01.2019 முதல் தடை செய்யப்படும் என

உத்தரவிட்டுள்ளது. இவ்வுத்தரவு 27.06.2018 அன்று தமிழ்நாடு அரசின் சிறப்பு அரசிதழிலும் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டம் 13/2019 இயற்றப்பட்டு, அதன் மூலம் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 243 மற்றும் 244 ஆகியவை திருத்தம் செய்யப்பட்டு உப விதிகளை மீறுவோருக்கு அபராதம் விதிப்பதற்குரிய புதிய அட்டவணை உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 244 (2-A)ன்படி, ஊராட்சிகள் இப்பொருள் தொடர்பாக உப விதிகளை உருவாக்கி ஒருமுறை பயன்படுத்தி தூக்கி வீசக்கூடிய நெகிழிகள் உற்பத்தி, சேமிப்பு, விற்பனை மற்றும் விநியோகத்தினை தடை செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 244 (1) ன்படி, கிராம ஊராட்சியானது இப்பொருள் தொடர்பான உப விதிகளை உருவாக்கி அட்டவணை III-A ல் குறிப்பிட்டுள்ளபடி அபராதம் விதித்திட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை** 2.16

**பிரிவு 244 (2-A)-ன் கீழ் உப விதிகளை மீறினால் விதிக்கப்படும் அபராதத் தொகை அட்டவணை III-A**

| வ. எண். | குற்றங்கள் | முதல்முறை அபராதம் ரூ | இரண்டாம் முறை அபராதம் ரூ. | மூன்றாம் முறை அபராதம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ஒரு முறை பயன்படுத்தி தூக்கி வீசக்கூடிய நெகிழிகள் சேமிப்பு, எடுத்துச் செல்லுதல், விநியோகம் மற்றும் விற்பனை | 25,000 | 50,000 | 1,00,000 |

| வ. எண். | குற்றங்கள் | முதல்முறை அபராதம் ரூ | இரண்டாம் முறை அபராதம் ரூ. | மூன்றாம் முறை அபராதம் ரூ. |
|---|---|---|---|---|
| 2 | வணிக வளாகங்கள் துணிக்கடைகள் மற்றும் சூப்பர் மார்க்கெட் போன்ற பெரிய வணிக நிறுவனங்களில் பயன்பாடு மற்றும் விநியோகம். | 10,000 | 15,000 | 25,000 |
| 3 | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக் கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்பாடு மற்றும் விநியோகம். | 1,000 | 2,000 | 5,000 |
| 4 | சிறிய அளவிலான கடைகளில் பயன்பாடு விநியோகம் | 100 | 200 | 500 |

ஊரகப் பகுதிகளில் மொத்தம் 42 நெகிழி தூளாக்கும் இயந்திரங்கள் உள்ளன. இவ்வாறு தூளாக்கப்பட்ட நெகிழி துகள்கள் தாருடன் கலந்து சுற்றுச்சூழலைப் பாதிக்காத ஊரகச் சாலைகள் அமைப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது.

2011-12ஆம் ஆண்டிலிருந்து சுமார் 8312 மெட்ரிக் டன் நெகிழித் துகள்கள், 13,985 கிலோ மீட்டர் நீளமுள்ள 7,764 எண்ணிக்கையிலான சாலைகளில் பயன்படுத்தப்பட்டன.

ஒருமுறை பயன்படுத்தி தூக்கியெறியும் நெகிழி தடைக்குறித்து இதுவரையில் சுமார் 12120 விழிப்புணர்வு முகாம்கள் ஊரகப்பகுதிகளில் நடத்தப்பட்டுள்ளன. வணிக நிறுவனங்கள் மற்றும் கடைகளில் கள அலுவலர்கள் ஆய்வு செய்து சுமார் 88.21 மெட்ரிக் டன் அளவிலான தடைசெய்யப்பட்ட நெகிழி பொருட்களை கைப்பற்றி விதிமீறுபவர்களுக்கு 31.12.2019 வரையிலான காலத்தில் ரூ.16.81 லட்சம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

## 2.9. தொழிற்சாலை கட்டிடங்களுக்கான அனுமதி-குறு சிறு நடுத்தர நிறுவனங்கள் துறையின் ஒற்றைச்சாளர இணைய தளம் மூலம் வழங்குதல்

தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம் 2018 மற்றும் விதிகளின் கீழ் தொழிற்சாலை கட்டடங்களுக்கான அனுமதி வழங்குதல் தொடர்பான ஆய்வுக்குறிப்புகள் மற்றும் கேள்விகள் எழுப்புதல் ஆகியவற்றை குறிப்பிட்ட காலத்தில் ஒற்றைச் சாளர இணையத்தில் உள்ளீடு செய்ய வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கென, குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறையானது ஒற்றை சாளர இணைய வழி முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது. 2018-19 ஆம் ஆண்டு முதல் அனைத்து விண்ணப்பங்களும் இணைய வழி மூலம் மட்டுமே பெறப்படுகின்றன. இந்த இணையதளத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தங்களின் கள ஆய்வுக் குறிப்புகளை பதிவேற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வணிக எளிதாக்குதல் விதிகள் 2018 ன்கீழ் 7 நாட்களுக்குள் வட்டார வளர்ச்சி அலுவலர் தமது ஆய்வுக் குறிப்புகளை ஒற்றை சாளர இணையத்தில் பதிவேற்ற வேண்டும். விண்ணப்பதாரர் அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருந்தால் கட்டண விவரங்கள் இணையத்தில் குறிப்பிடப்படும். தொழில் முனைவோர் உரிய கட்டணங்களை இணைய வழியே செலுத்திய பின்பு, 14 நாட்களுக்குள் தொழிற்சாலை கட்டிட அனுமதி இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

## 2.10. **அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு திட்டம்**

ஊரகப் பகுதிகளில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் செயல்படும் நிலையில் உள்ள குடிநீர் குழாய் இணைப்பினை அடுத்த ஐந்து ஆண்டுகளில் தரும் பொருட்டு மத்திய அரசு, மாநில அரசுகளுடன் இணைந்துஅனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு திட்டம்(ஜல் ஜீவன் மிஷன்) என்கிற திட்டத்தை துவங்கியுள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு வீட்டிற்கும் குழாய் இணைப்புகளின் மூலம் குறிப்பிட்ட அளவிலான, குடிப்பதற்கு உகந்த குடிநீரினை சீராக வழங்குவதற்கு அரசு உறுதி பூண்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்த முறையே மாநில, மாவட்ட மற்றும் கிராம ஊராட்சி அளவில் குழுக்கள் ஏற்படுத்தப்பட உள்ளன. இத்திட்டம் ஊரக வளர்ச்சிமற்றும் ஊராட்சித் துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நிறைவேற்றப்படும்.

கிராம ஊராட்சி அளவில் ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம் ஊராட்சி அளவிலான குடிநீர் மற்றும் சுகாதாரக்குழு மூலம் கண்காணிக்கப்படும்.

## 2.11. **பல்லுயிர் பெருக்க மேலாண்மைக் குழு**

ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும் தங்களது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பல்லுயிர் பெருக்கத்தை பாதுகாக்கவும், நிலையான பயன்பாட்டிற்கு வித்திடும் வகையிலும் பல்லுயிர் பெருக்கச் சட்டம், 2002ன் பிரிவு 41(1)ன் படி பல்லுயிர் பெருக்க மேலாண்மைக் குழுவினை அமைத்திட வேண்டும். பல்லுயிர் பெருக்க விதி, 2004ன் சரத்து 22 மற்றும் பல்லுயிர் பெருக்க விதி, 2017ன் சரத்து 20ன் படி பல்லுயிர் பெருக்க மேலாண்மைக் குழு

அமைத்திடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த குழுவானது மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளிலும் அமைக்கப்பட வேண்டும்.

துணை விதி (1)ன் படி அமைக்கப்பட்ட, பல்லுயிர் பெருக்க மேலாண்மைக் குழுவானது தலைவர் மற்றும் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பால் நியமிக்கப்பட்ட ஆறு உறுப்பினர்களுக்கு மிகாமல் உள்ள அமைப்பாக செயல்படும். இக்குழுவில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் பெண் உறுப்பினர்களும், 18 சதவீதத்திற்கு குறையாமல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்களும் உறுப்பினர்களாக இடம் பெற்றிருக்க வேண்டும். இவர்கள் தவிர கிராம ஊராட்சித் தலைவர் இக்குழுவின் பதவி வழி உறுப்பினராக இருப்பார்.

## 2.12. **விருதுகள்**

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் சிறப்பான முயற்சிகள் மற்றும் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் மத்திய அரசு பல்வேறு விருதுகளை ஏற்படுத்தியுள்ளது

### 2.12.1. **மின் ஆளுமை ஊராட்சி விருது**, 2019

மின் ஆளுமையில் சிறந்து விளங்கும் மாநில அரசுகளுக்கு மத்திய அரசு மின் ஆளுமை விருதுகளை வழங்கி கௌரவப்படுத்துகிறது. மின் ஆளுமை ஊராட்சி என்பது ஊராட்சி அமைப்புகளின் செயல்பாடுகள், வெளிப்படைத் தன்மையுடனும், பொறுப்புடன் கூடியதாகவும் அமைந்திடும் பொருட்டும், மேலும் அதிகார பரவலாக்கப்பட்ட சுய சார்பு ஆளுமையின் ஒரு அங்கமாக ஊராட்சி அமைப்புகளை மாற்றி அமைத்திடும் வகையிலான

தேசிய மின் ஆளுமைக் கொள்கையின் தொலைநோக்குடன் கூடிய ஒரு திட்டமாகும். ஊராட்சி அமைப்புகளின் செயல்பாடுகளில் தகவல் தொடர்பின் ஓர் அங்கமான மின் ஆளுமையின் பங்களிப்பினை சிறப்புற நடைமுறை படுத்தியமைக்காக அகில இந்திய அளவில் மின் ஆளுமை விருது பிரிவு IIA-ன் கீழ் தமிழ் நாடு முதல் மாநிலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு மத்திய அரசால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

### 2.12.2. **ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருதுகள்**

ஊராட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள், கூடுதல் நிதி மற்றும் பணியாளர்களை அளிப்பதுடன் ஊராட்சிகளின் நிர்வாகத் திறனை மேம்படுத்த ஏதுவாக மாநில அரசுகளுக்கு உறுதுணையாக, ஊராட்சிகளுக்கு அதிகாரம் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்தளிப்பதை ஊக்கப்படுத்தும் வகையில் ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருதினை மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம் அறிவித்து வழங்கி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஊராட்சி நிர்வாகத்தினை சிறப்புற நடத்திட்ட 1 மாவட்ட ஊராட்சி, 2 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 6 கிராம ஊராட்சிகளுக்கு இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. 2011 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு இது வரை 69 விருதுகளை மத்திய அரசிடமிருந்து பெற்றுள்ளது.

### 2.12.3. **ராஷ்ட்ரிய கௌரவ கிராம சபை விருது**

வலுவான கிராம சபையின் மூலம் சிறப்பான சாதனைகள் புரியும் கிராம ஊராட்சிகளை அங்கீகரிக்கவும்,

ஊக்கமளிக்கவும் ஏதுவாக 2012 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம், ராஷ்ட்ரிய கௌரவ கிராம சபை விருதினை ஏற்படுத்தியுள்ளது. 2012ம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு இது வரை 7 கௌரவ கிராம சபை விருதுகளை பெற்றுள்ளது. 2019 ஆம் ஆண்டில்இவ்விருது திருப்பூர் மாவட்டத்தைச் சார்ந்த இராவணபுரம் கிராம ஊராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 2.12.4. **குழந்தை நேய கிராம ஊராட்சி விருது**

குழந்தைகள் நலனை மனதில் கொண்டு அவ்வகையான திட்டங்களை சிறப்புற செயல்படுத்திய கிராம ஊராட்சிகளை கண்டறிந்து அவற்றை ஊக்கப்படுத்தி கௌரவிக்கும் வகையில் மத்திய அரசு 2019 ஆம் ஆண்டு முதல் குழந்தை நேய கிராம ஊராட்சி விருதினை வழங்கி வருகிறது. 2019 ஆம் ஆண்டில் இவ்விருதிற்கென தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பட்டீஸ்வரம் கிராம ஊராட்சியை மத்திய அரசு தேர்வு செய்து விருது வழங்கியுள்ளது.

# 3. மாநில அரசு திட்டங்கள்

## 3.1. முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்

### திட்டத்தின் நோக்கம்

தமிழக அரசின் சிறப்புமிக்க முயற்சியான முதலமைச்சரின் சூரியமின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம், கிராமப்புறங்களில் வாழும் அனைத்து ஏழை மக்களுக்கும் அடிப்படை வசதிகள் மற்றும் சூரிய மின் சக்தியுடன் கூடிய நிலையான வீடுகள் வழங்குவதற்காக, 2011 ஆம் ஆண்டில் தமிழக அரசால் துவக்கப்பட்டது. விலையில்லா வீடு வழங்கும் இத்திட்டத்தின் கீழ் 2011-12 முதல் 2015-16 ஆம் ஆண்டு வரை ரூபாய் 5940 கோடி மதிப்பீட்டில் 3 இலட்சம் பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

இத்திட்டமானது பயனாளிகளின் நலன் கருதியே உள்ளதாலும் மற்றும் இதர குடியிருப்புத் திட்டங்களைக் காட்டிலும் அலகுத் தொகை கூடுதலாக உள்ளதாலும் தமிழக மக்களின் மத்தியில் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ளது. ஆகையால், இத்திட்டமானது கிராமப்புற ஏழை மக்கள் பயன் பெறும் வகையில், அடுத்த 5 ஆண்டுகளுக்கு ரூ.2.10 இலட்சம் அலகுத் தொகையில் (ரூ.1.80 இலட்சம் கட்டுமானத்திற்கும், ரூ.0.30 இலட்சம் சூரிய மின்சக்தி விளக்குகள் அமைப்பதற்கும்) மாநில அரசின் முழுமையான நிதி உதவியுடன் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2016-17 ஆம் ஆண்டு முதல் அடுத்த ஐந்தாண்டுகளில் வருடத்திற்கு 20,000 வீடுகள் வீதம் 1 இலட்சம் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டிட உத்தேசிக்கப்பட்டது. கட்டுமான பணிகளுடன் சூரிய

மின்சக்தி விளக்குகள் பொருத்தும் பணிகளும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையிலேயே மேற்கொள்ளப்படும்.

**இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்**

- ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி பரப்பளவில், ரூ.2.10 இலட்சம் அலகுத் தொகையில் மாநில அரசின் முழுமையான நிதி உதவியுடன் கட்டப்பட்டு வருகிறது. இதில் ரூ.1.80 இலட்சம் கட்டுமானத்திற்கும், ரூ.0.30 இலட்சம் சூரிய மின் சக்தி விளக்குகள் அமைப்பதற்கும் வழங்கப்படுகிறது.
- வீடு கட்டும் பணிகள் பயனாளிகளாலேயே மேற்கொள்ளப்படுகிறது.
- சூரிய மின்சக்தி விளக்குகள் பொருத்தும் பணி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையால் மேற்கொள்ளப்படும்.
- ஒவ்வொரு வீடும் வசிக்கும் அறை, படுக்கை அறை, சமையல் அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகியவற்றுடன் மழைநீர் சேகரிப்பு அமைப்பையும் கொண்டிருக்கும்.
- ஒவ்வொரு வீட்டிலும் சூரிய மின் சக்தியில் எரியும் 5 ஒளி உமிழும் இருமுனைய (LED) விளக்குகள் படுக்கை அறை, வசிக்கும் அறை, சமையல் அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகிய பகுதிகளில் தலா ஒரு விளக்கு வீதம் பொருத்தப்படும். ஒவ்வொரு பயனாளியும் தனது விருப்பத்திற்கு ஏற்ப, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்

பகிர்மான கழகம் மூலம் மீட்டர் அளவீடுடன் கூடிய மின் இணைப்பு பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- பயனாளிகளால் மேற்கொள்ளப்பட்ட கட்டுமான பணிகளுக்கான பட்டியல் தொகை கீழ்கண்டவாறு நான்கு நிலைகளில் பயனாளியின் வங்கி கணக்கில் நேரடியாக வழங்கப்படுகிறது.

    1. அடித்தள நிலை
    2. ஜன்னல் மட்ட நிலை
    3. கூரை வேயப்பட்ட நிலை
    4. முடிவுற்ற நிலை

- பசுமை வீடுகள், பயனாளியின் தற்போது குடியிருப்பு அமைந்துள்ள மனையில் (ஏற்கெனவே உள்ள குடியிருப்பு அமைப்பினை அகற்றிவிட்டு) அல்லது கிராம ஊராட்சியின் பிற பகுதிகளில் அமைந்துள்ள பயனாளிக்கு சொந்தமான மனையில் கட்டப்படுகிறது.

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைப்பு**

- ஒவ்வொரு பயனாளிக்கும், அலகுத் தொகையுடன் மற்ற திட்டங்களுடன் ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன் கூடுதலாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் வீடு கட்டுவதற்காக 90 மனித சக்தி நாட்களுக்கான ஊதியம் அளிக்கப்படுகிறது. (90 x Rs.229 = Rs.20,610)

- மேலும், பயனாளிக்கு தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டும் பணிக்கு ரூ.12,000 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து வழங்கப்படுகிறது.
- இவை தவிர, பயனாளிகளுக்கு மான்ய விலையில் சிமெண்ட் மூட்டைகள் வழங்கப்படுகிறது. மேலும், இரும்பு கம்பிகள், கதவுகள் மற்றும் ஜன்னல்கள் பயனாளிகளின் தேவைக்கேற்ப வழங்கப்படுகிறது. இப்பொருட்களுக்கான கிரையத் தொகை, பயனாளிகளுக்கு வழங்கப்படும் பட்டியல் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.

**பயனாளிகளின் தகுதிகள்**

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளி கீழ்க்கண்ட தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.

- சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியில் வசிப்பவராகவும், ஏழையாகவும் இருக்க வேண்டும்.
- தொடர்புடைய கிராம ஊராட்சியில் அல்லது வேறு எங்கும் கான்கிரீட் கூரை போடப்பட்ட சொந்த வீடு எதுவும் இருக்கக் கூடாது.
- அரசின் இதர வீடு கட்டும் திட்டங்களில் பயன் பெற்றவராக இருக்கக் கூடாது.
- 300 சதுர அடிக்கு குறையாத வீட்டு மனை சொந்தமாக இருக்க வேண்டும்.
- குடும்பத் தலைவரின் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர் எவரேனும் ஒருவர் பெயரிலோ வில்லங்கமற்ற வீட்டு மனைப் பட்டா இருக்க வேண்டும்.

**பயனாளிகளை தேர்வு செய்யும் முறை**

- ஒவ்வொரு கிராம ஊராட்சியில் வாழும் ஏழை மக்களிலிருந்து பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் அப்போதைய புது வாழ்வு திட்டம் மூலம் தேர்வு செய்யப்பட்ட நலிவுற்றவர்கள் பட்டியலில் (PIP) உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- தயார் செய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியல்களில் அவர்களின் நலிவுற்ற நிலைக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில், கிராம சபையின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- பயனாளிகளின் பட்டியல் தயாரிக்கப்படும் போது, மாற்றுத் திறனாளிகள், விதவைகள், ஆதரவற்ற மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் ஓய்வு பெற்ற முன்னாள் துணை இராணுவ படையினர், ஊட்டச் சத்து குறைவினால் பாதிக்கப்பட்ட (ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத் துறையால் (ICDS) அடையாளம் காணப்பட்ட) குழந்தைகளை கொண்ட குடும்பங்கள், திருநங்கைகள், துணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) அவர்களால் சான்றிதழ் வழங்கப்பட்ட எச்.ஐ.வி./எய்ட்ஸ்/காசநோய் ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டோர், தீ விபத்து, வெள்ளம் போன்ற இதர பிற இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கு முன்னுரிமை

அளிக்கப்படவேண்டும். மேலும், மனநலம் குன்றியோர் உள்ள குடும்பங்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

- ஓராண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தம் 20,000 பசுமை வீடுகளில், 29 விழுக்காடு அதாவது 5,800 வீடுகள் ஆதி திராவிடர்களுக்கும், 1 விழுக்காடு அதாவது 200 வீடுகள் பழங்குடியினர்களுக்கும், மீதமுள்ள 70 விழுக்காடு அதாவது 14,000 வீடுகள் இதர இனத்தவர்களுக்கும் (ஆதிதிராவிடர், பழங்குடியினர் அல்லாதோர்) ஒதுக்கீடு செய்யப்படும்.
- மாவட்ட வாரியான ஒதுக்கீட்டில் 4 விழுக்காடு மாற்று திறனாளிகளுக்கு பிரத்தியேகமாக அனைத்து பிரிவுகளிலிருந்தும் ஒதுக்கீடு செய்யப்படும்.

**முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் சாதனைகள்**

- 2011-12 முதல் 2017-18 ஆம் ஆண்டு வரை 3,40,000 பசுமை வீடுகள் ரூ.6780 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- 2018-19 மற்றும் 2019-20 ஆம் ஆண்டுகளில் ரூ.840 கோடி மதிப்பீட்டில் 40,000 பசுமை வீடுகள் எடுக்கப்பட்டு, இதுவரை 16,047 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன மற்றும் மீதமுள்ள வீடுகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.
- மேலும், 2020-21 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் அனைத்து பழங்குடியினர் குடும்பங்களுக்கும்

வீட்டுவசதியை வழங்கும் வகையில் அவர்களுக்கு 8803 வீடுகள் உட்பட 20,000 பசுமை வீடுகள் ரூ.420 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். சூரியமின் விளக்குகள் நிறுவுவதற்காக ஒதுக்கீடு செய்யப்படும் தொகை ரூ.30,000 கட்டுமானச் செலவிற்கான தொகையுடன் இணைக்கப்பட்டு, ஒட்டுமொத்த கட்டுமானச் செலவு வீடொன்றுக்கு ரூ.2.10 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளில், அனைத்து தரப்பு மக்களும் எளிதில் பெறத்தக்க, தூய்மையான சக்தியும் ஒரு இலக்காகும். சூரிய சக்தி நீடித்த நிலையான, புதுப்பிக்கத்தக்க, அனைத்து தரப்பு மக்களும் எளிதில் பெறத்தக்கது என்பதால், இது மரபு சார்ந்த மின்சார ஆதாரங்களின் பயன்பாட்டினை குறைக்க வழிவகை செய்கிறது. முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகள் தூய்மையான சக்தியின் ஆதாரமாக செயல்படுவது மட்டுமல்லாமல், ஊரகப் பகுதிகளில் சுற்றுச் சூழலுக்கு ஏற்றவாறும், பசுமை ஆற்றலை ஊக்குவிப்பதாகவும் உள்ளது. எனவே, ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளில் ஒன்றை அடைய, சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் தொடர்ந்த செயலாக்கம் உதவி புரிகிறது.

## 3.2. **ஊரக உட்கட்டமைப்பு – சாலைகள்**

ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சி சாலைகள் அடங்கிய ஊரகச் சாலைகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 110 மற்றும் 112-ன் படி, கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளைப் பராமரிப்பது, முறையே சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தின் கடமையாகும்.

ஊரகச் சாலைத் தொகுப்பு, கடந்த பத்து ஆண்டுகளில் வெகுவாக வளர்ச்சி அடைந்து கிட்டத்தட்ட 45% அதிகரித்துள்ளது. இந்த சாலைகள், ஊரக மக்களுக்கு சுகாதாரம், கல்வி மற்றும் சந்தைகள் போன்ற பல்வேறு சமூக-பொருளாதார சேவைகளை வழங்குவதன் காரணமாக, ஊரக மக்களின் நாடித்துடிப்பாக விளங்குவதன் முக்கியத்துவத்தை அரசு வெகு காலமாக நன்கு அறிந்துள்ளது. எனவே, கீழ்கண்ட பல்வேறு நடவடிக்கைகளின் மூலமாக ஊரகச் சாலைகளை மேம்படுத்துவதில் அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது.

i) கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் மேம்பாட்டிற்கான மாநில மற்றும் மத்திய திட்டங்களின்கீழ் நிதி ஒதுக்கீட்டை அதிகரித்தல்.

ii) ஊரகச் சாலைகளின் மேற்பரப்பின் அடிப்படையில் அவற்றினை மேம்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளுதல்.

iii) சாலை இணைப்பு வசதியில்லாத குக்கிராமங்களுக்கு

சாலை இணைப்பு வசதி, வணிகச் சந்தைகள், வாரச் சந்தைகள், பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் ஆகியவற்றை இணைக்கும் இணைப்புச் சாலைகள், பேருந்து செல்லும் சாலைகள் மற்றும் உள் இணைப்புச் சாலைகள் ஆகியவற்றினை முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்துதல்.

iv) ஊரகப் பகுதிகளில் விடுபட்ட ஊரகச் சாலைகள் மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட சாலைகளை ஊரகச் சாலைகள் தொகுப்பில் சேர்த்து ஊரகச் சாலைகளின் அடிப்படை விவரங்களை ஒருங்கிணைத்தல், மேலும் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளுக்கு எண்ணெழுத்து இன வாரியான தனிச் சாலைக் குறியீடு (Road code)வழங்குதல்.

v) கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை இதர மாவட்ட சாலைகளாக (ODR) தரம் உயர்த்துதல்.

vi) பல்வேறு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி சாலைகள் அமைத்தல்.

ஊரகச் சாலைகளின் தொடர் வளர்ச்சி மற்றும் மாற்றத்தை கருத்தில் கொண்டு, கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் விவரங்கள் தொடர்ந்து புதுப்பிக்கப்படுகின்றன. கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் தற்போதைய நிலை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை 3.1
## ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சி சாலைகள்

| வ. எண். | சாலையின் மேற்பரப்பின் வகை | ஊராட்சி ஒன்றிய சாலைகள் | ஊராட்சி சாலைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | நீளம் ( கி.மீ) | | |
| 1. | தார்ச்சாலை | 26,471 | 72,065 | 98,536 |
| 2. | சிமெண்ட் சாலை | 308 | 3,313 | 3,621 |
| 3. | ஈரடுக்கு கப்பிச்சாலை | 144 | 1,936 | 2,080 |
| 4. | ஓரடுக்கு கப்பிச்சாலை | 365 | 8,417 | 8,782 |
| 5. | சரளைக்கல் சாலை | 162 | 4,756 | 4,918 |
| 6. | மண் சாலை | 994 | 29,619 | 30,613 |
| | **மொத்தம்** | **28,444** | **1,20,106** | **1,48,550** |

பேருந்து செல்லும் ஊரகச் சாலைகளை இதர மாவட்ட சாலைகளாகத் தரம் உயர்த்தும் அரசின் ஆணைக்கிணங்க, 4,822 கி.மீ. நீளம் கொண்ட ஊரகச் சாலைகள் நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாளது தேதி வரை கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மொத்தம் 1.48 இலட்சம் கி.மீ. நீளம் உள்ளது. மேலும், கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் முழுமையான தகவல்கள் tnrd.gov.in இணையத் தளத்தில் உள்ளது.

2011-ம் ஆண்டு முதல் ஊரகச் சாலைத் தொகுப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பது பின்வருவனவற்றின் வாயிலாக புலப்படுகிறது.

அ) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 6,000 கி.மீ. நீளம் கொண்ட ஓரடுக்கு கப்பிச் சாலைகள் உட்பட ஏறக்குறைய 46,000 கி.மீ. நீளம் கொண்ட கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் புதியதாக ஊரகச் சாலைகள் தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஆ) 29,910 கி.மீ. நீளம் கொண்ட தார் இடப்படாத சாலைகள், தார்ச் சாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

இ) 42,254 கி.மீ பழுதடைந்த தார்ச் சாலைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

ஈ) 18,109 கி.மீ. நீளமுள்ள தார்ச் சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

உ) 1,885 கி.மீ நீளம் கொண்ட சாலைகள் பல்வேறு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அமைக்க உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும் நெகிழி கழிவுகளைப் பயன்படுத்தி 14,216 கி.மீ. நீளம் கொண்ட சாலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

ஊ) கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் 1,358 உயர்மட்ட பாலங்கள் மற்றும் தரைப்பாலங்கள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

எ) 90,273 கி.மீ. நீள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்படுத்த ரூ.20,153 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஊரகச் சாலைகள் மேம்பாட்டின் கூறுகள்**

ஊரகச் சாலைகளின் மேம்பாடு பின்வரும் கூறுகளைக் கொண்டது.

1. தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்துதல்.
2. பழுதடைந்த தார்ச் சாலைகளை வலுப்படுத்துதல்.
3. தார்ச் சாலைகளைப் பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல்.

**1.தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்துதல்.**

தார் இடப்படாத சாலைகள், இணைப்பின் தன்மை, இணைக்கப்படும் பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பல காரணிகளின் அடிப்படையில் தார்ச் சாலைகளாக மேம்படுத்த எடுத்துக் கொள்ளப்படுகின்றன. கடந்த 9 ஆண்டுகளில், 29,910 கி.மீ. நீளமுள்ள தார் இடப்படாத சாலைகள் ரூ.7,025.38 கோடி மதிப்பீட்டில் தார்ச் சாலைகளாக மேம்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**2.பழுதடைந்த தார்ச் சாலைகளை வலுப்படுத்துதல்**

வடிவமைப்பு காலம் முடிவுற்ற தார்ச் சாலைகளை தற்போதுள்ள போக்குவரத்து தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வலுப்படுத்திட வேண்டிய தார்ச்சாலைகள் இந்த வகையின் கீழ் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. கடந்த 9 ஆண்டுகளில், 42,254 கி.மீ. நீளமுள்ள சாலைகள்

ரூ.11,164.84 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

### 3.**தார்ச்சாலைகளைப் பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல்**

சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டு, 5 வருடங்கள் முடிவுற்றவுடன் அவற்றை காலமுறையில் புதுப்பிக்க எடுத்துக் கொள்ளப்படுகின்றன. கடந்த 9 ஆண்டுகளில், இத்துறையின் மூலம் 18,109 கி.மீ நீளமுள்ள தார்ச் சாலைகள் ரூ.1,962.52 கோடி மதிப்பீட்டில் இவ்வகையின் கீழ் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

ஊரகச் சாலைகள் மேம்பாட்டிற்காக தேவைப்படும் நிதி, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம், நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி, பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், மாநில நிதிக் குழு மானியம் மற்றும் மத்திய நிதிக் குழு மானியம் மற்றும் இதர மாநிலத் திட்டங்கள் மூலமாகவும் பெறப்படுகின்றன.

**பாலங்கள் மற்றும் தரைப்பாலங்கள்**

கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் உள்ள பாலங்கள் மாநில நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகவே கட்டப்பட்டு வந்தன. எனினும் கடந்த 9 ஆண்டுகளாக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலமாக பல்வேறு திட்டங்களின் கீழ் பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. கடந்த 9 ஆண்டுகளில், இத்துறையின் மூலம் பல்வேறு மத்திய மற்றும் மாநிலத் திட்டங்களின் கீழ், 658 உயர்மட்டப் பாலங்கள்

ரூ.955.60 கோடி மதிப்பீட்டிலும், மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி திட்டத்தின் கீழ் 700 சிறிய பாலங்கள் மற்றும் தரைப்பாலங்கள் ரூ.210.59 கோடி மதிப்பீட்டிலும் எடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 1,358 பாலங்கள் மற்றும் தரைப்பாலங்கள், ரூ. 1,166.19 கோடி மதிப்பீட்டில் பின்வருமாறு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.2**

**2011-12 -ஆம் ஆண்டு முதல் எடுத்துக் கொள்ளப்பட்ட பாலங்கள் மற்றும் தரைப்பாலங்களின் விவரங்கள்**

| வ. எண். | ஆண்டு | எடுக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | 2011 - 12 | 30 | 45.74 |
| 2 | 2012 - 13 | 27 | 31.22 |
| 3 | 2013 - 14 | 93 | 116.40 |
| 4 | 2014 - 15 | 113 | 155.85 |
| 5 | 2015 - 16 | 64 | 112.62 |
| 6 | 2016 - 17 | 79 | 137.48 |
| 7 | 2017 - 18 | 65 | 88.22 |
| 8 | 2018 - 19 | 422 | 221.65 |
| 9 | 2019 - 20 | 465 | 257.01 |
| **மொத்தம்** | | **1,358** | **1,166.19** |

## 3.3. தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாட்டின் பரந்த ஊரகச் சாலை தொகுப்பில் உள்ள சாலைகளைப் பராமரிப்பதற்கும் மற்றும் புதிய சாலைகள் அமைப்பதற்கும் இடையே சமநிலை இருக்கும் வகையில் உரிய அளவு நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டியுள்ளது.

இதற்காக இந்த அரசு, அனைத்து திட்டங்களையும் ஒன்றிணைத்து, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத்

திட்டம் என்ற ஒருங்கிணைந்த திட்டத்தினை 2015-16 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது.

இத்திட்டம் கடந்த 2015-16 ஆம் ஆண்டு முதல் 2017-18 ஆம் ஆண்டு வரை ரூ. 800 கோடி ஒதுக்கீட்டிலும், 2018-19 மற்றும் 2019-20 ஆம் ஆண்டுகளில் ரூ.1,200 கோடி ஒதுக்கீட்டிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்**

i) மாவட்டங்களில் உள்ள பல்வேறு வகையான சாலைகளை தேவையின் அடிப்படையில் தேர்வு செய்ய போதிய நெகிழ்வுத்தன்மையை தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் அளிக்கிறது.

ii) இத்திட்டம் மூன்று பிரிவுகளாக செயல்படுத்தப்படுகிறது. தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்பாடு செய்தல், ஏற்கனவே உள்ள பழுதடைந்த தார்ச் சாலைகளை வலுப்படுத்துதல் மற்றும் ஏற்கனவே உள்ள பழுதடைந்த தார்ச் சாலைகளைப் புதுப்பித்து பராமரித்தல் ஆகியவை தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

**அட்டவணை 3.3**

**தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் விவரம்**

| வ. எண். | ஆண்டு | எண்ணிக்கை | நீளம் (கி.மீ) | மதிப்பு(ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | 2015-16 | 2,385 | 4,225.10 | 800 |
| 2 | 2016-17 | 2,567 | 4,650.62 | 800 |
| 3 | 2017-18 | 2,201 | 3,913.83 | 800 |
| 4 | 2018-19 | 3,278 | 5,532.04 | 1,200 |
| 5 | 2019- | 3,018 | 5,030.31 | 1,200 |

| வ. எண். | ஆண்டு | எண்ணிக்கை | நீளம் (கி.மீ) | மதிப்பு(ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|
| | 20 | | | |
| மொத்தம் | | **13,449** | **23,351.90** | **4,800** |

2020-21 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.1,400 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

## 3.4. **நபார்டு - ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி** (NABARD – RIDF)

1995-96 ஆம் ஆண்டு நபார்டு வங்கி, கிராமப் பகுதிகளில் மாநில அரசு, அரசுத் துறை நிறுவனங்கள், கிராம ஊராட்சிகள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளுக்கு உட்கட்டமைப்புத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக நிதி உதவி வழங்கும் பொருட்டு, ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியை உருவாக்கியது. இந்த நிதியினை, பழுதடைந்த கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய தார்ச் சாலைகளை வலுப்படுத்தவும் மற்றும் தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளுக்காகவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பயன்படுத்துகிறது. பாலங்கள் அமைப்பது, நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் மற்றுமொரு முக்கிய கூறாக விளங்குகிறது. இத்திட்டம் 80% நபார்டு வங்கியின் கடன் உதவியுடன் மாநில அரசின் முழுமையான நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுகிறது.

கடந்த 9 ஆண்டுகளில், 7,985.26 கி.மீ. நீளமுள்ள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மற்றும்

317 பாலங்கள் என மொத்தம் ரூ.2,251.32 கோடி மதிப்பீட்டில் பணிகள் இத்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ளன.

நபார்டு - ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் கீழ், கடந்த 9 ஆண்டுகளில், ஆண்டு வாரியாக எடுக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்களின் விவரம் பின்வருமாறு :

**அட்டவணை 3.4**
**கடந்த 9 ஆண்டுகளில் நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் கீழ் எடுக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்கள்**
**(2011-12 முதல் 2019-20 ஆம் ஆண்டு வரை)**

| வ. எண். | ஆண்டு | எண்ணிக்கை | நீளம் (கி.மீ.) | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | 2011 - 12 | 958 | 2,598.65 | 451.77 |
| 2 | 2012 - 13 | 381 | 1,000.46 | 198.07 |
| 3 | 2013 - 14 | 185 | 367.63 | 100.00 |
| 4 | 2014 - 15 | 615 | 1,183.03 | 339.61 |
| 5 | 2015 - 16 | 232 | 369.92 | 160.20 |
| 6 | 2016 - 17 | 297 | 510.31 | 229.00 |
| 7 | 2017 - 18 | 549 | 993.17 | 316.32 |
| 8 | 2018 - 19 | 421 | 738.25 | 255.82 |
| 9 | 2019 - 20 | 262 | 223.84 | 200.53 |
| | மொத்தம் | **3,900** | **7,985.26** | **2,251.32** |

## 3.5. சிறிய இணைப்புச் சாலைகள்

**1 கி.மீ நீளத்திற்கும் குறைவான சாலைகளை மேம்படுத்துதல்**

கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் மேம்பாட்டிற்காக, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இருப்பினும் இத்திட்டங்களின் கீழ் 1 கி.மீ. - க்கும் குறைவான நீளம் கொண்ட சாலைகளை மேம்படுத்த வழிவகையில்லை. இச்சாலைகளும் முக்கிய இணைப்புச் சாலைகளாக விளங்குவதை கருத்திற் கொண்டு இந்த அரசு, இச்சாலைகளின் மேம்பாட்டிற்காக 2018-19 ஆம் ஆண்டில் ரூ.225 கோடி நிதியினை மாநில நிதிக் குழு மானியத்தின் 20% மூலதன மானிய நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துள்ளது.

இதனடிப்படையில், 2018-19 ஆம் ஆண்டில், 2,397 கி.மீ. நீளம் கொண்ட 1 கி.மீ.-க்கும் குறைவான நீளமுள்ள சிறிய இணைப்பு சாலைகள் மேம்பாட்டிற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதுபோன்று 2019 -20 ஆம் ஆண்டிற்கு, சிறிய இணைப்புச் சாலை மேம்பாட்டிற்காக மாநில நிதிக் குழு மானியத்தின் 20% மூலதன மானிய நிதி ரூ.262.94 கோடி மற்றும் மாவட்ட ஊராட்சிக்கான மாநில நிதிக் குழு மானிய நிதி ரூ.37.06 கோடி, ஆக மொத்தம் ரூ.300 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 2019-20ஆம்ஆண்டில் 1,167 கி.மீ. நீளமுள்ள சிறிய இணைப்புச் சாலைகள் மேம்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 9 ஆண்டுகளில், திட்ட வாரியாக எடுக்கப்பட்ட சாலைகளின் விவரம் கீழ்க்கண்டவாறு:

**அட்டவணை – 3.5**

**திட்ட வாரியாக கடந்த 9 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட சாலைகளின் விவரம்**

(2011-12 **ஆம் ஆண்டு முதல்** 2019-20 **ஆம் ஆண்டு வரை**)

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நீளம் (கி.மீ.) | மதிப்பு (ரூ.கோடி) |
|---|---|---|---|
| | **மாநிலத் திட்டங்கள்** | | |
| 1 | தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 23,351.89 | 4,800.00 |
| 2 | ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம் | 3,581.27 | 1,028.24 |
| 3 | தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம் | 9,723.97 | 1,487.54 |
| 4 | 20 % மாநில நிதிக்குழு மானிய நிதி (1 கி.மீ - க்கும் குறைவான சாலைகள்) | 1,911.35 | 487.66 |
| 5 | ஊரக உட்கட்டமைப்புத் திட்டம் | 4,318.92 | 616.67 |
| 6 | பேருந்து செல்லும் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 1,399.28 | 300.00 |
| 7 | மாநில நிதிக்குழு மானியம் | 4,846.69 | 1,095.65 |
| 8 | ஊரகச் சாலைகள் பராமரிப்புத் திட்டம் | 3,649.19 | 381.07 |
| 9 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 1,551.95 | 247.18 |
| 10 | நபார்டு - ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி | 7,985.26 | 2,103.35 |
| 11 | சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதி | 429.87 | 37.50 |
| 12 | இதர திட்டங்கள் | 9,492.79 | 2,330.89 |
| | குறுமொத்தம் | **72,242.43** | **14,915.75** |
| | **மத்திய திட்டங்கள்** | | |
| 13 | பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் | 7,849.79 | 3,883.81 |
| 14 | பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் | 1,032.00 | 168.21 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நீளம் (கி.மீ.) | மதிப்பு (ரூ.கோடி) |
|---|---|---|---|
| | தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | | |
| 15 | 13வது நிதிக் குழு மானியம் | 6,573.13 | 622.00 |
| 16 | 14வது மத்திய நிதிக் குழு மானியம் | 2,575.61 | 562.97 |
| | **குறுமொத்தம்** | **18,030.53** | **5,236.99** |
| | **பெரு மொத்தம்** | **90,272.96** | **20,152.74** |

## தரக்கட்டுப்பாடு

தரக்கட்டுப்பாடு என்பது செயல்படுத்தப்படும் பணிகளின் நோக்கம் மற்றும் செயல்பாடு ஆகியவற்றை உறுதிசெய்வதில் முக்கிய பங்காற்றுகிறது. ஊரக வளர்ச்சித் துறை, பல்வேறு மாநில மற்றும் மத்திய அரசு திட்டங்களின் கீழ் பல வகையான ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்தி வருகிறது. இப்பணிகளின் தரத்தினை உறுதிப்படுத்தும் வகையில், ஊரக வளர்ச்சித் துறை முறைப்படுத்தப்பட்ட தரக்கட்டுப்பாட்டு அமைப்பினை ஏற்படுத்தியுள்ளது,

1. ஊரக வளர்ச்சித்துறை, இரண்டடுக்கு தரக்கட்டுப்பாட்டு அமைப்பினை மாநில அளவில் பின்பற்றுகிறது.

2. தரக்கட்டுப்பாட்டு அமைப்பு, மாநில, மாவட்ட, உட்கோட்ட மற்றும் ஒன்றிய அளவிலான அலுவலர்களை உள்ளடக்கியதாகும். இவர்கள், துறையின் அனைத்து திட்டப் பணிகளிலும் தரத்தினை உறுதிசெய்கிறார்கள்.

3. மாவட்ட மற்றும் ஒன்றிய அளவிலான அலுவலர்களை உள்ளடக்கிய திட்ட செயலாக்க அலகு (PIU) தரக்கட்டுப்பாட்டின் முதல் அடுக்காக செயல்படுகிறது. இவர்கள், பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் பொருட்களின்

தரம் மற்றும் வேலைத் திறனை, பணி நடைபெறும்போது பல்வேறு தரக்கட்டுப்பாட்டு சோதனைகளின் மூலம் உறுதிப்படுத்துகிறார்கள்.

4. இத்துறை, போதிய அனுபவமுள்ள ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களை, மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்களாக (SQMs) (இரண்டாம் அடுக்கு) நியமித்துள்ளது. மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் பணிகளுக்கான மூன்றாந்தரப்பு ஆய்விற்காக, மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். இவர்கள், மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்களின் பணிகளை ஆய்வு செய்வார்கள். இரண்டாம் அடுக்கு தரக்கட்டுப்பாட்டு அமைப்பினை பலப்படுத்தும் வகையில் கூடுதலாக 28 மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் புதியதாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

5. இதனுடன், பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ், தேசிய தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள்(NQMs), இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகளை ஆய்வு செய்ய மத்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள், இத்திட்டத்தின் மூன்றாம் அடுக்கு தரக்கட்டுப்பாட்டு அமைப்பாக செயல்படுகிறார்கள்.

6. தேசிய தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள்(NQM) மற்றும் மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள்(SQM) ஆகிய இருவரும் மாதந்தோறும் பணிகளை அதன் பல்வேறு நிலைகளில் தரம் மற்றும் வேலைத்திறனை ஆய்வு செய்வதுடன், கள அலுவலர்களுக்கு தரக்கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டுதல்களையும் வழங்குவார்கள். தேசிய மற்றும் மாநில தரக்கட்டுப்பாடு ஆய்வாளர்களால் சமர்ப்பிக்கப்படும் ஆய்வறிக்கையின் மீது திட்ட செயலாக்க

அலகால் (PIU) உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை (ATRs) சமர்ப்பிக்கப்படுகிறது.

7. இத்துறை, அனைத்து முக்கிய தரக்கட்டுப்பாட்டு உபகரணங்களை உள்ளடக்கிய மாநில அளவிலான தரக்கட்டுப்பாட்டு ஆய்வகத்தை நிறுவியுள்ளது. இதனுடன், மண்டல மற்றும் மாவட்ட அளவிலும் அனைத்து அடிப்படை தரக்கட்டுப்பாட்டு சோதனைகளுக்குத் தேவையான உபகரணங்களை உள்ளடக்கிய தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

8. புதுமையான முயற்சியாக, 5 நடமாடும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களை, இத்துறை நிறுவியுள்ளது. இது, தொலைதூரப் பகுதிகளிலும், பணி தளத்தில் பணி நடைபெறும்பொழுதே தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகளை மேற்கொள்ள வழிவகுக்கிறது.

**பயிற்சி**

இத்துறை, கள அலுவலர்களின் திறனை மேம்படுத்தும் வகையிலும் மற்றும் நவீன தொழில் நுட்பங்கள் குறித்து தெரிந்து கொள்ளும் வகையிலும், அவர்களை பல்வேறு பயிற்சிகளுக்கு அனுப்புகிறது. இது மேலும், கள அளவில் பணியின் தரத்தினை உறுதிசெய்ய வழிவகை செய்கிறது.

2019-20 ஆம் ஆண்டில், 1067 பொறியாளர்களை மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் (SIRD), இந்திய நெடுஞ்சாலை பொறியாளர் கழகம் (IAHE), மத்திய சாலைகள் ஆராய்ச்சி நிறுவனம் (CRRI), இந்திய பொறியியல் பணியாளர்கள் கல்லூரி (ESCI) போன்ற மாநில மற்றும் தேசிய அளவிலான பயிற்சி நிறுவனங்களால் நடத்தப்பட்ட பயிற்சிகளில் பங்கேற்கச் செய்துள்ளது.

**தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி முயற்சிகள்** (R&D Initiatives)

இந்த அரசு, பசுமையான மற்றும் சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்த தொழில்நுட்பங்களை ஊக்குவிக்கும் வகையிலும், வழக்கமான கட்டுமானப் பொருட்களைச் சார்ந்திருக்கும் நிலையை குறைக்கும் வகையிலும், தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி முயற்சிகளை மேற்கொள்கிறது.

இதில், குளிர்கலவை, இரசாயனக் கலவைகள் மூலம் நிலைப்படுத்துதல், சிமெண்ட், எரியூட்டப்பட்ட நிலக்கரி சாம்பல், தொழிற்சாலைகளின் கழிவுகளைக் கொண்டு சாலையினை பலப்படுத்துதல் போன்ற தொழில்நுட்பங்கள் அடங்கும். இந்த தொழில்நுட்பங்கள், தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

இதுவரை, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை – 3.6**

**ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தொழில் நுட்பங்கள் – புதிய முயற்சிகளைப் பயன்படுத்தி எடுக்கப்பட்ட பணிகளின் விவரம்**

| வ. எண். | திட்டம் | புதிய தொழில்நுட்பத்தின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | வேலையின் மதிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | பிரதம | நெகிழி கழிவு (ஈர முறை) | 130.32 | 68.56 |

| வ. எண். | திட்டம் | புதிய தொழில்நுட்பத்தின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | வேலையின் மதிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|
| | மந்திரி கிராம சாலைத் திட்டம் | குளிர்கலவை / மேற்பரப்பு சீரமைத்தல் | 216.59 | 162.98 |
| | | உருளையை கொண்டு இறுக்கப்பட்ட கான்கிரீட் சாலை / சிமெண்ட் கான்கிரீட் பிளாக் | 5.45 | 2.73 |
| | | தென்னை நார்/ சணல் ஜியோ டெக்ஸ்டைல்ஸ் | 52.82 | 25.10 |
| | | **சாலையினைபலப்படுத்துதல்** (i)இரசாயனம் | 574.89 | 376.77 |
| | | (ii) தொழிற்சாலை கழிவு | 34.71 | 15.76 |
| | | (iii) சிமெண்ட் | 99.71 | 47.73 |
| | | (iv) மண் | 152.08 | 116.54 |
| | | **குறுமொத்தம்** | **1,266.57** | **816.17** |
| 2 | தமிழ் நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | குளிர்கலவை | 28.91 | 4.70 |
| | | நெகிழி கழிவு (ஈர முறை) | 307.19 | 57.40 |
| | | **சாலையினை பலப்படுத்துதல்** (i)இரசாயனம் | 198.50 | 59.26 |
| | | (ii) தொழிற்சாலை கழிவு | 2.30 | 0.80 |
| | | (iii) மண் | 37.75 | 10.65 |
| | | (iv) சிமெண்ட் | 44.11 | 12.64 |
| | **குறுமொத்தம்** | | **618.76** | **145.45** |
| | **மொத்த தொகை** | | **1,885.33** | **961.62** |

இந்த ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம், இயற்கை வளங்களை அதிகமாக சார்ந்திருக்கும் நிலை குறைக்கப்பட்டு, பருவநிலை மாற்றங்களை கட்டுப்படுத்தும் அரசின் உறுதிப்பாட்டினை வெளிப்படுத்துகிறது.

**நெகிழிச் சாலைகள்**

நெகிழி கழிவுகளைப் பயன்படுத்தி சாலைகள் அமைக்கும் திட்டம் 2004-05 ஆம் ஆண்டில் இந்த அரசின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. 2011-12 ஆம் ஆண்டு 35 நெகிழி கழிவு சேகரிப்பு மற்றும் செயலாக்க மையங்கள் அமைக்க மாநில அரசின் மூலம் நிதி ரூ.140 இலட்சம் வழங்கப்பட்டது. இவ்வாறு நெகிழி கழிவுகளைப் பயன்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சுய உதவிக்குழு மகளிருக்கான வாழ்வாதார வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகின்றது.

நெகிழி கழிவுகளைப் பயன்படுத்தி, இத்துறையில் தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், நபார்டு - ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி, பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், இதர மாநில மற்றும் மத்திய அரசு திட்டங்கள் போன்ற பல்வேறு திட்டங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் விளைவாக, கடந்த 2011-12 ஆம் ஆண்டு முதல், ஏறத்தாழ 14,216 கி.மீ நீளமுள்ள சாலைகள் நெகிழி கழிவு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி ரூ.2,384.40 கோடி

செலவில் பல்வேறு திட்டங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**சொத்து பராமரிப்பு மற்றும் மேலாண்மை**

ஊரகப் பகுதிகளில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் இத்துறையின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது சாலைகள், பாலங்கள், கட்டடங்கள் மற்றும் இதர சேவைகளை உள்ளடக்கியதாகும். இச்சொத்துக்களை நல்ல நிலையில் பராமரிப்பதைப் பொருத்தே இச்சொத்துக்களின் பயன்பாடு அமையும்.

மேற்குறிப்பிட்டவாறு, இத்துறையின் மூலம் ஊரகச் சாலைகள் மேம்பாட்டிற்காக அதிகப்படியான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படுகிறது. எனவே, இச்சாலைகளின் பராமரிப்பினை உறுதிப்படுத்துவதற்காக "தமிழ்நாடு ஊரகச் சாலைகள் பராமரிப்புக் கொள்கை" யினை, மாநிலத்தின் அனைத்து கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் பராமரிப்பிற்காக அரசு வரையறுத்துள்ளது. சாலைகளின் தொடர் பராமரிப்பு, காலமுறை பராமரிப்பு, அவசரகால சீரமைப்பு ஆகியவற்றை மேற்கொள்ள இக்கொள்கையின் மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்துறையினால் பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசின் திட்டங்களின் மூலம் மேற்கொள்ளப்படும் பள்ளிக்கட்டடங்கள், அலுவலக கட்டடங்கள், அங்கன்வாடி கட்டடங்கள், கழிவறைகள் போன்ற பணிகளுக்கு மாதிரி கட்டட வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதுவரை 32 மாதிரி கட்டட வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

பல்வேறு மாநில திட்டங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பொது நிதியின் மூலம் இந்த கட்டடங்கள் பராமரிக்கப்படுகின்றன.

சொத்து பராமரிப்பு மற்றும் மேலாண்மையில் புவிசார் தகவல் அமைப்பின் (GIS) பயன்பாடு நன்கு அறியப்பட்ட ஒன்றாகும். இத்துறையின் மூலம் பல்வேறு தகவல்களை புவிசார்ந்த தகவல்களாகவும் மற்றும் புவிசார் தகவல் அமைப்பின் மூலம் திட்டமிடுதல், பணிகளைத் தேர்வு செய்தல் மற்றும் சொத்துக்களைப் பராமரித்தல் பணிகளை இலக்க முறையில் (Digitization) மேற்கொள்ளவும் புவிசார் தகவல் அமைப்புப் பிரிவு இயக்குநரகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்துறை, இடஞ்சார்ந்த தகவல்களான கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய எல்லைகள், ஊரகச் சாலைகள், நீர்நிலைகள், குக்கிராமங்கள் போன்றவற்றினை இலக்கமுறைப்படுத்தியதுடன், ஊரகச் சாலைகளுக்கு புவிசார் குறியீடுகள் எடுக்கப்படும் பணியையும் முடித்துள்ளது. மேலும், நீர்நிலைகளான சிறுபாசன ஏரிகள், குளங்கள் மற்றும் ஊரணிகளுக்கு புவிசார்குறியீடுகள் எடுக்கப்படும்.

PMGSY III திட்டத்திற்காக, முக்கிய வசதிகளான கல்வி, சுகாதாரம், சந்தை மற்றும் போக்குவரத்து வசதிகளை புவிசார்குறியீடு செய்ய அலைபேசி செயலி, இத்துறையின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்கள் PMGSY III திட்டத்திற்கு மாவட்ட ஊரகச் சாலை திட்டம் (DRRP) தயாரிக்க பயன்படுத்தப்பட்டுள்ளது.

MGNREGS திட்டத்தின் கீழ், செயற்கை நீர் செறிவூட்டும் அமைப்புகள் அமைக்க, சரியான இடங்களைத் தேர்வு செய்ய புவிசார் தகவல் தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்படுகிறது. 2019-20 ஆம் நிதியாண்டில், ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு, இரண்டு கிராம ஊராட்சிகள் வீதம், புவிசார் தகவல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பணிகள் தேர்வு செய்யப்பட்டு வருகிறன.

மத்திய அரசு திட்டங்களான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தூய்மை பாரத இயக்கம் மூலம் கட்டப்படும் தனிநபர் இல்லக் கழிப்பறை மற்றும் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) மூலம் உருவாக்கப்படும் பணிகளுக்கு புவிசார்குறியீடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதே போன்று, மாநில அரசு திட்டங்கள் மூலம் செயல்படுத்தப்படும் பணிகளை புவிசார்குறியீடுகள் செய்யவும் மற்றும் நிகழ்நேர கண்காணிப்பிற்கும், **திட்டம்**என்கிற அலைபேசி செயலி இத்துறையின் மூலம் உருவாக்கப்பட்டது. இச்செயலியின் மூலம் மாதிரி அடிப்படையில், தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் அம்மா - ஆதிதிராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

## 3.6. அம்மா – ஆதி திராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளை வழங்கும் நோக்கில் ஆதி திராவிடர் குடியிருப்புகளின் உட்கட்டமைப்பு தேவைகளை முழுமையான

முறையில் பூர்த்தி செய்வதன் மூலம் சிறந்த வாழ்க்கைத் தரத்தை உறுதி செய்ய அம்மா – ஆதி திராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்தினை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் 2018-19 ஆம் ஆண்டிற்கான நிதி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியர்களிடம் 50:50 அடிப்படையில் வழங்கப்பட்ட பற்றாக்குறையுள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதியில் இருந்து ரூ.100 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. 2019-20 ஆம் ஆண்டில், ஆதி திராவிடர் நலத்துறையின் மாநில வரவு செலவுத் திட்டத்திலிருந்து ரூ.100 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

குடிநீர் வழங்குதல், தெரு விளக்குகள், ஆதி திராவிடர் குடியிருப்புகளை இணைக்கும் சாலைகளை அமைத்தல், தெருக்களை மேம்படுத்துதல், சமுதாயக் கழிவறைகள், ஆதி திராவிடர் மயானம், மயானத்தில் காத்திருப்போர் கூடம், அணுகுசாலை, சுற்றுச்சுவர், அடிகுழாய் வசதி, LED விளக்குகள் பொருத்துதல், நடைபாதை அமைத்தல், அதிகமாக ஆதி திராவிடர் இளைஞர்கள் விளையாடக்கூடிய விளையாட்டு மைதானங்கள் மற்றும் விளையாடும் இடங்களுக்கு விளையாட்டு உட்கட்டமைப்பு மற்றும் விளையாட்டுச் சாதனங்கள் வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ள இத்திட்டத்தின் கீழ் வழிவகை செய்யப்படுகிறது. ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அமைந்துள்ள உட்கட்டமைப்புகளைப் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல்

பணிகளையும் மேற்கொள்ள இத்திட்டத்தின் கீழ் வழிவகை செய்யப்படுகிறது.

அம்மா - ஆதி திராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2018 - 19 மற்றும் 2019 - 20 ஆம் ஆண்டுகளில், ஆண்டு வாரியாக எடுக்கப்பட்ட பணிகளின் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை-3.7**

**அம்மா- ஆதி திராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2018-19 மற்றும் 2019-20 ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட பணிகளின் விவரம்**

| வ.எண் | ஆண்டு | எண்ணிக்கை | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | 2018 - 19 | 1,952 | 100.00 |
| 2 | 2019 - 20 | 1,949 | 100.00 |
| **மொத்தம்** | | **3,901** | **200.00** |

## 3.7. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் தமது தொகுதியில் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளிகளைக் கண்டறிந்து அவற்றுக்கான பணிகளை தேர்வு செய்து செயல்படுத்துவதே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் ஊரகம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ்,

2019-20 ஆம் ஆண்டு முதல், ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு ரூ.2.50 கோடியிலிருந்து ரூ.3.00 கோடி ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படும் பணிகளுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்படுவதுடன், பணிகளை செயல்படுத்துவதற்கான செயலாக்கத் துறைகளும் நிர்ணயிக்கப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட கூறு நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1.50 கோடியில் நிர்ணயிக்கப்பட்ட முன்னுரிமைப் பணிகளை எடுத்துச் செய்திட வேண்டும். மீதமுள்ள வரையறுக்கப்படாத கூறு நிதியான ரூ.1.50 கோடியில் சட்டமன்ற உறுப்பினர்கள் அவர் தம் விருப்பத்தின் அடிப்படையிலும், தடைசெய்யப்பட்ட பணிகள் பட்டியலில் இல்லாத பணிகளை இத்திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி தேர்வு செய்யலாம்.

**வரையறுக்கப்பட்ட கூறு நிதியான ரூ. 1.50 கோடியில் எடுத்துச் செய்யக் கூடிய பணிகள்**

**1. பள்ளி உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.25 இலட்சம்**

2019-20 ஆம் நிதியாண்டில் பள்ளிகளுக்கு (மாநகராட்சி / நகராட்சி / ஊராட்சி ஒன்றியம் / அரசு பள்ளிகள் மட்டும்) தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுக்காக குறைந்தபட்சம் ரூ.25 இலட்சத்தினை ஒரு சட்டமன்ற உறுப்பினரின் வரையறுக்கப்பட்ட கூறு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். இதில் பள்ளிகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான கழிவறை வசதிகள் (குறிப்பாக மாணவிகள், மாணவர்கள் மற்றும்

பணியாளர்களுக்கு தனித்தனியாக கழிப்பறைகள்) குடிநீர் விநியோகம், பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர், பள்ளிகளில் வகுப்பறைகள், நூலகங்கள் மற்றும் ஆய்வுக் கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

**2. பள்ளிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கலன்கள் அமைத்திட ரூ.**20 **இலட்சம்**

பள்ளி மாணவ மாணவியர்க்கு சுத்தமான மற்றும் சுகாதாரத்துடன் கூடிய குடிநீர் வழங்கும் பொருட்டு, 2019 - 20 ஆம் ஆண்டில் பள்ளிகளுக்கு (மாநகராட்சி / நகராட்சி / ஊராட்சி ஒன்றியம் / அரசு பள்ளிகள் மட்டும்) சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கலன்கள் **(Rerverse Osmosis (RO) System**) ஏற்படுத்திட குறைந்தபட்சம் ரூ.20 இலட்சம் வரையறுக்கப்பட்ட கூறு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

**3. அங்கன்வாடி / சமையல் கூடம் / குழந்தை நேயக் கழிப்பறைகள் / அங்கன்வாடி மையங்களுக்கு குடிநீர் வசதி பணிகளுக்காக ரூ.**20 **இலட்சம்**

ஊரகம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில், அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், சத்துணவு சமையல் கூடங்கள் ஆகியவற்றுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையங்கள் மற்றும் சத்துணவு சமையல் கூடங்கள் மற்றும் குழந்தை நேயக் கழிப்பறை கட்டுதல், அங்கன்வாடி மையங்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்துதல் மற்றும் அங்கன்வாடி சமையல் அறைகளை எரிவாயு இணைப்பு

கொண்டு நவீனபடுத்தும் பணிகள் ஆகியவற்றை எடுத்துச் செய்திட ரூ. 20 இலட்சம் ஒதுக்கீடு செய்திடல் வேண்டும்.

**4. குடிநீர்ப் பணிகளுக்காக ரூ. 30 இலட்சம்**

குறிப்பாக கோடை காலத்தில் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறையைத் தணிப்பதற்காக தற்போதுள்ள குடிநீர் வழங்கும் நீராதாரத்தினைப் பெருக்குவதற்கான, மின் விசை இறைப்பான், சிறு மின் விசை இறைப்பான், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல், புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்தல், ஆழ்குழாய் கிணறு ஆழப்படுத்தும் பணிகள், புதிய கைப் பம்பு அமைத்தல், மோட்டார் திறன் உயர்த்துதல், திறந்த வெளி கிணறு அமைத்தல், ஏற்கனவே உள்ள திறந்த வெளி கிணறுகளை ஆழப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ள ஒவ்வொரு சட்டமன்ற தொகுதி உறுப்பினரும் ரூ.30 லட்சத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

**5. இதர வரையறுக்கப்பட்ட பணிகளுக்கு ரூ.55 இலட்சம்**

இதர வரையறுக்கப்பட்ட கூறு நிதியின் கீழ், சட்டமன்ற உறுப்பினர் அவர்தம் விருப்பத்தின் அடிப்படையில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பணிகளை மொத்த வரம்பான ரூ.55 இலட்சத்தில் கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்பட்ட பணிகளை தேர்வு செய்யலாம்.

**அ) ஊரகப் பகுதிகளில்**

1. ஊரகப் பகுதிகளில் சூரிய ஒளி சக்தி தெரு விளக்குகள் நிறுவுதல் / அரசு கட்டிடங்களின் கூரை மேல் சூரிய ஒளி சக்தி நிறுவுதல். (மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திலிருந்து,

வழங்கப்படும் மான்யத் தொகையினை பெற்று உரிய திட்டக் கணக்கில் தவறாமல் செலுத்திடல் வேண்டும்)

2. சரளை மற்றும் கப்பிச் சாலைகளை தார் சாலையாக மேம்படுத்துதல்

3. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் தார்சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார் இடுகின்ற பணிகளை மட்டும் மேற்கொள்ளல்).

4. தெருக்கள் மற்றும் பாதைகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் / பேவர் பிளாக் அமைக்கும் பணிகள்.

5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவைகளுக்கு அறைகள், கட்டடம் மற்றும் /அல்லது சுற்றுச்சுவர் கட்டுதல்.

6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுத்தல்.

7. பாலங்கள் கட்டுதல்,

8. கிராம ஊராட்சிகளில் தேவைப்படின் கூடுதல் இடுகாடு / சுடுகாடு அமைத்தல்,

9. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களுக்கு சொந்தமான இடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் / முள் கம்பி வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதனால் இப்பணிகளை தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைப்பு செய்யலாம்.

10. பெண்கள் மற்றும் ஆண்களுக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டுதல்.

11. பொது விநியோக கடை கட்டடங்கள் கட்டுதல்.

12. உடற்பயிற்சி / ஜிம்னாசியக் கூடம் கட்டுதல் மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல். இது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாகக் கருதப்படும்.

**ஆ). நகர்ப்புறப் பகுதிகளில்**

1. நகர்ப்புறப் பகுதிகளில் சூரிய ஒளி சக்தி தெரு விளக்குகள் நிறுவுதல் / அரசு கட்டிடங்களின் கூரை மேல் சூரிய ஒளி சக்தி நிறுவுதல் மற்றும் LED தெருவிளக்குகள் நிறுவுதல்,(மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திலிருந்து வழங்கப்படும் மான்யத் தொகையினைப் பெற்று உரிய திட்டக் கணக்கில் தவறாமல் செலுத்திடல் வேண்டும்).

2. சரளை மற்றும் கப்பிச் சாலைகளை தார் சாலையாக மேம்படுத்துதல்.

3. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் தார்சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார் இடப்படும் பணி மட்டும் மேற்கொள்ளல்).

4. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்.

5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவைகளுக்கு அறைகள், கட்டடம் மற்றும் /அல்லது சுற்றுச்சுவர் கட்டிக்கொடுத்தல்.

6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுத்தல்.

7. பாலங்கள் கட்டுதல்.

8. சுடுகாடு / இடுகாடுகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல்.

9. தேவையின் அடிப்படையில் மழைநீர் வடிகால் வசதிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் நடைபாதைகள் அமைத்தல்.

10. புதிய பொது பூங்காக்கள் அமைத்தல்.

11. பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல்.

12. பொது விநியோக கடை கட்டடங்கள் கட்டுதல்.

13. ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற கழிவு நீர் அகற்றும் இயந்திரங்கள் வாங்குதல்.

14. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களுக்கு சொந்தமான

இடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் / முள் கம்பி வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதனால் இப்பணிகளை தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைப்பு செய்யலாம்.

15. உடற்பயிற்சி / ஜிம்னாசியக் கூடம் கட்டுதல் மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல். இது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாகக் கருதப்படும்.

**வரையறுக்கப்படாத கூறு நிதியான ரூ.1.50 கோடியில் எடுத்து செய்யப்படக்கூடிய பணிகள்**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், “எதிர்மறையான பட்டியல் / தடை செய்யப்பட்ட கீழ்கண்ட பணிகளைத்"" தவிர பிற எந்தப் பணிகளையும் வரையறுக்கப்படாத கூறு நிதியின் கீழ் எடுத்துச் செய்யலாம். அதே போல் வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் எடுத்து செய்யப்படக் கூடிய பணிகளையும் வரையறுக்கப்படாத கூறு நிதியான ரூ.1.50 கோடியில் இருந்து மேற்கொள்ளலாம். பயணிகள் நிழற்குடை அமைப்பது இக்கூறில் எடுத்துச் செய்திட அனுமதிக்கப்படுகின்றது.

**எதிர்மறையான பட்டியல் / தடை செய்யப்பட்ட பணிகள்**

1. மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகள் (பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட) மற்றும் கூட்டுறவு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் ஆகியவற்றுக்கான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல்.

**விதிவிலக்கு**

(i) நேரடிக் கொள்முதல் நிலையங்கள் (Direct Procurement Centres), கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்த குளிர்பதன மைய (Bulk Chilling Centre) கட்டடங்கள் கட்டுதல்

(ii) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து பணிமனைகளுக்கான பேருந்து பராமரிப்புக் கூடம், சுற்றுச் சுவர், சிமிண்ட் கான்க்ரீட் தளம், தொழிலாளர் ஓய்வறை மற்றும் கழிவறை கட்டுதல்.

2.தனிநபர் / குடும்பப் பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல்

**விதிவிலக்கு**

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)-ன் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு பேரூராட்சிப் பகுதிகளில் புதிய வீடுகள் கட்டுதல்

3.அனைத்து வகையான புதுப்பித்தல், பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகள் மேற்கொள்ளுதல்

**விதிவிலக்கு**

அரசுத் திட்டங்களின் கீழ் 31.12.2009 வரை கட்டப்பட்ட இந்திரா நினைவு குடியிருப்பு / தாட்கோ மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகளை ஒரு வீட்டிற்கு ரூ.50,000/-க்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மிகாமல் பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளுதல். இருப்பினும், மேற்படி வீடுகளை பழுது நீக்கம் செய்ய எடுத்துக் கொள்ளும் முன்னர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் / தாட்கோ நிறுவனத்திடமிருந்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்

4. அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்.

**விதிவிலக்கு**

(i) 2016-17ம் ஆண்டில் 15வது சட்டமன்றப் பேரவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் 14-வது சட்டமன்றப் பேரவையில் பணியாற்றி தற்போது மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மடிக்கணினி (Laptop) அல்லது மேசைக் கணினி (Desktop), பிரிண்டர் (Laser / Inkjet) மற்றும் அகண்ட அலைவரிசை இணையதள இணைப்பு வசதி (Broadband / Internet Data card connection) ஆகியவற்றை ஒரு முறை மட்டும் தேவைக்கேற்ப கொள்முதல் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு வரையில் கணினி, பிரிண்டர் மற்றும் அகண்ட அலைவரிசை / இணைய இணைப்பு வசதிகள் வாங்கப்படாமல் விடுபட்டு இருப்பின், அவ்வினங்களில் மட்டும், 2019-20ம் ஆண்டின் வரையறுக்கப்படாத கூறு நிதியில் இருந்து அரசாணை (நிலை) எண். 95 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி-1) துறை நாள்: 18-8-2016ல் அனுமதி அளித்துள்ளவாறு வழிகாட்டி நெறிமுறைகளுக்குட்பட்டு கொள்முதல் செய்து கொள்ளுதல்.

(ii) அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு விடுதிகள், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவற்றிற்கு தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.

(iii) அரசு ஆணை (1டி) எண். 405, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி-1) துறை, நாள். 17.08.2010 மற்றும்

அரசு கடித (1டி) எண். 653, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள். 31.12.2012 - ல் குறிப்பிட்டுள்ளபடி மாற்றுத் திறனாளிகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.5 இலட்சம் அல்லது அதற்கு மேலான மதிப்பிற்கு வாங்குதல்.

(iv) போலியோ மற்றும் மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டோருக்காக CP Chair வாங்குதல் மற்றும் மனவளர்ச்சி குன்றிய அரசு சிறப்பு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அறிவுத்திறனை மேம்படுத்தும் பொருட்டு, மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு கற்பிக்கும் கருவி கலப் பெட்டிகள் வாங்குதல்.

(v) உடற்பயிற்சி / ஜிம்னாசியக் கூடத்தில் (physical fitness centre /Gymnasium) உடற்பயிற்சி செய்ய தேவையான கருவிகள் வாங்குதல். இவை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாகக் கருதப்படும்.

(vi) தற்போதுள்ள அரசு கட்டடங்களில் சூரியசக்தி மின்கலன்கள் (Solar Power Equipement) நிறுவுவதற்காக உபகரணங்கள் வாங்குதல்.

(vii) பொதுமக்களின் பாதுகாப்பிற்காக, மாவட்ட ஆட்சித் தலைவர் / காவல் கண்காணிப்பாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / பெருநகர சென்னை மாநகர காவல் ஆணையர் மூலம் உரிய கொள்முதல் விதிகளைப் பின்பற்றி கண்காணிப்பு (CCTV - Closed Circuit Television) கேமிராக்கள் மற்றும் அது தொடர்புடைய உபகரணங்களை வாங்குதல்.

5. அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள், அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிப் பள்ளிகள், சுயநிதிக் கல்லூரிகளில் எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல்

6. அனைத்து வணிக நிறுவனங்கள்/ அலகுகள் குறித்த பணிகள்
7. மானியம் மற்றும் கடன் வழங்குதல் மற்றும் மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்
8. நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்
9. முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகை மீளச் செலுத்துதல்
10. அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்
11. மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்
12. குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால்கள் போன்றவைகளைத் தூர் வாருதல்
13. சரளை / கப்பி சாலைகள் (தார்ச் சாலை வரை அமைக்கும் சாலைப் பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்)
14. உயர் கோபுர மின் விளக்குகள் பொருத்துதல்

## 2019-20 **ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கம்**

2019-20 ஆம் ஆண்டில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ. 705 கோடி மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் கீழ்க்காணும் அட்டவணையில் கண்டுள்ள விவரப்படி செயல்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை** – 3.8

**சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2019-20 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட பணிகள் விவரம்**

| வ.எண் | பணிகள் | பணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கட்டடங்கள் | 1338 |
| 2. | சாலைகள் | 1233 |
| 3. | குடிநீர் வழங்கல் | 2353 |
| 4. | வடிகால் மற்றும் பாசன கால்வாய் பணிகள் | 636 |
| 5. | இதர பணிகள் | 1523 |
| **மொத்தம்** | | 7,083 |

இத்திட்டம் 2020-21 ஆம் ஆண்டிற்கென வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டு, ரூ.705 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

## 3.8. தன்னிறைவுத் திட்டம்

ஊரகப் பகுதி மக்களிடையே பொது மக்கள் பங்கேற்பு மூலம் சுய-சார்பினை மேம்படுத்தும் வகையில் தன்னிறைவுத் திட்டம் 2011-12 ஆம் ஆண்டு முதல் அரசால் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. இது சுய-சார்பு மற்றும் சுய-உதவி மனப்பான்மையை ஊக்குவித்து மக்கள் தங்களது தேவையை தங்களின் பங்கேற்புடன் செயல்படுத்துவதற்கான திட்டமாகும். மக்களின் உணரப்பட்ட தேவைகள் இத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படுகிறது. ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**பொதுமக்கள் பங்களிப்பு**

கண்டறியப்படும் பணிக்கான மதிப்பீட்டு தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் பொதுமக்களின் பங்களிப்பு இருக்கவேண்டும்.

**பணிகளைத் தேர்வு செய்தல்**

1. ஒரு பணியினை எடுத்துச் செய்வதற்கான தேவை தனிநபர்களிடமிருந்தோ, குழுவினரிடமிருந்தோ, தனியார் அல்லது பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்தோ அல்லது சமூகத்திடமிருந்தோ எழலாம்.
2. முன்மொழியப்பட்ட பணிகளின் மொத்த தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் பொதுமக்களின் பங்களிப்பு தொகையை வழங்க இசைவு தெரிவித்து விண்ணப்ப படிவம் ஒன்று கோரிக்கை வடிவில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அளிக்கப்பட வேண்டும்.
3. மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்கொள்ளப்பட வேண்டிய பணியின் அத்தியாவசியத் தேவை மற்றும் அதனை நடைமுறைப்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் குறித்து திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி பரிசீலனை செய்வார். முன்மொழியப்பட்ட பணிகளின் தேவை நிறைவு அளிக்கும்பட்சத்தில், திட்டப் பணியினைமேற்கொள்ளவிருக்கும் முகமையிடம் விளக்கமான மதிப்பீட்டினை மாவட்ட ஆட்சித் தலைவர் கோருவார். அனுமதி வழங்க ஏதுவாக, விண்ணப்பதாரர் உரிய தொகைக்கான கேட்பு வரைவோலையை மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநரிடம் செலுத்த வேண்டும்.
4. உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் வழங்கும் பங்களிப்பு நிதி இத்திட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
5. பணிகளைச் செய்வதற்கு உள்ளாட்சி அமைப்பு அல்லது சம்மந்தப்பட்ட துறையின் அனுமதி தேவையெனில்

அதற்கான அனுமதியினை நிர்வாக அனுமதி வழங்குவதற்கு முன் மாவட்ட ஆட்சித் தலைவர் பெற வேண்டும்.

6. உருவாக்கப்படும் சொத்துக்கள், உள்ளாட்சி அமைப்பு அல்லது துறையின் பராமரிப்பின் கீழ் இருக்க வேண்டியிருப்பின், அச்சொத்துக்களை உருவாக்க சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு / துறையின் ஒப்புதலை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற வேண்டும்.
7. இத்திட்டத்தின் கீழ் குறைவாக நிதி இருக்கும் பட்சத்தில், பல்வேறு பணிகளை செய்ய கோரிக்கைகள் வரப்பெறின், அவற்றுள் மிக அதிக அளவில் சமுதாயத்திற்கு பயன்தரும் பணிகளை மாவட்ட ஆட்சியர் கண்டறிந்து அத்தகைய பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.
8. சிறப்பு திட்டங்களுக்கான பங்களிப்பை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் பொது அல்லது தனியார் துறை நிறுவனங்களிடமிருந்து பெறலாம்.

**பணிகளை நிறைவேற்றுதல்**

சம்மந்தப்பட்ட துறைகள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் அதன் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பணிகள் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தில் பெரிய அளவில் மக்கள் பங்கேற்க ஏதுவாக பொதுமக்களோ அல்லது பணிக்கான பங்களிப்பை அளித்தவரோ மேற்கண்ட பணியை தாமோ அல்லது வேறு முகவர்கள் மூலமாகவோ மேற்கொள்ள விரும்பினால் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்யும் போது

எழுத்து பூர்வமாக தெரிவிக்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் இக்கோரிக்கையினை ஆய்வு செய்து பணியின் மதிப்பீட்டில் பொது மக்களின் பங்களிப்பு 50 சதவீதம் அல்லது அதற்கு மேல் இருந்தால் பங்களித்தவரையோ, முகவரையோ அப்பணியை மேற்கொள்ள அனுமதி வழங்குவார். ஆனால் பொதுப்பணித்துறை மற்றும் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ள கண்மாய்களை தூர்வாரும் பணியைப் பொருத்தமட்டில் பொதுமக்கள் பங்களிப்பு 50சதவீதத்திற்கு அதிகமாக இருப்பினும் ஒப்பந்தப்புள்ளி முறையைப் பின்பற்றியே பணிகள் செய்யப்பட வேண்டும்.

2011–12 **முதல்** 2019-20 **வரையிலான திட்ட செயல்பாடு**

2011 - 12 முதல் 2019 - 20 வரை, மொத்தம் 13,181 சமுதாயத்திற்கு பயன்தரத்தக்க சொத்துக்கள் ரூ.887.10 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ளன.

**திட்ட செயலாக்கம்** 2020-21

தன்னிறைவுத் திட்டம்2020 - 21 - ம் ஆண்டிலும் ரூ.50 கோடி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 3.9. **மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம்**(RCSIDS)

ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டமானது ஊரக பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க ஆண்டுக்கு ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்த அரசால் 2011 - 12 முதல் 2016 - 17 வரை செயல்படுத்தப்பட்டது. இத்திட்டமானது

மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் என்ற பெயரில் ரூ.100 கோடி ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் அரசால் 2019-20-ம் ஆண்டு முதல் மீள அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஊரகப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் புதிய வகுப்பறைகள், சமையலறைகள், கழிப்பறைகள் மற்றும் குடிநீர் வழங்குதல் போன்ற புதிய பணிகள் மற்றும் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் போன்ற பணிகள் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப புதிய வகுப்பறைக் கட்டிடப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றது. இப்புதிய கட்டிடங்கள் தட்டோடு பதித்த கான்கிரீட் கூரைகளுடன் தண்ணீர் கசியாத வகையில் கட்டப்படுகிறது. புதிய பள்ளிக் கட்டடங்கள், பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள இடத்தில் அமைக்கப்படுகின்றன, அவ்வாறு பள்ளிக் கட்டடம் கட்டத் தேவையான இடம் இல்லாத நிலையில் ஏற்கனவே உள்ள கான்கிரீட் பள்ளிக் கட்டடத்தின் உறுதித்தன்மையை சரிபார்த்து அதன் மேல் தளத்தில் புதிய கட்டடம் அமைக்கப்படுகிறது.

சமையல் அறை இல்லாத ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் புதிய சமையல் அறைகளும் மற்றும் பழுதடைந்துள்ள சமையல் அறைகளை பழுதுபார்க்கும்/புதுப்பிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. உணவுப்பொருட்களை இருப்பு

வைத்துக் கொள்ள கூடுதல் அறைகள்/ இருப்பு அறைகளையும் இத்திட்டத்தின் கீழ் அமைத்துக் கொள்ளலாம்.

ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் ஏற்கனவே உள்ள குடிநீர் வசதி அமைப்புகள் பழுதடைந்து இருப்பின், அவை பழுது நீக்கி சீரமைக்கப்படுகின்றன. தேவைப்படும் இடங்களில் குடிநீர்க்குழாய் விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஊராட்சியின் குடிநீர் ஆதாரத்திலிருந்து தேவைக்கு ஏற்ப புதிய குடிநீர் விநியோக இணைப்பு அல்லது ஒரு புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்துக்கொடுக்கப்படுகின்றன.

ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் உணவருந்தும் கூடம் அமைக்கும் பணி முன்னோடியாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

அனைத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் மாணவ, மாணவியருக்கு போதுமான கழிப்பிட வசதிகள் செய்து தருவதை இந்த அரசு உறுதிசெய்கிறது. பள்ளிகளில் மாணவிகளின் பயன்பாட்டிற்காக எரியூட்டிகள் (Incinerator)அமைக்கப்படுகின்றன.

வட்டார வளர்ச்சி அலுவலர், உதவி செயற்பொறியாளர் மற்றும் சம்பந்தப்பட்ட பள்ளியின் தலைமையாசிரியர் ஆகியோர்களை உறுப்பினர்களாக உள்ளடக்கி வட்டார அளவில் அமைக்கப்படும் குழுவானது மேற்கொள்ளப்படவேண்டிய பணிகளை தேர்வு செய்து இறுதி செய்யும். பள்ளிகளுக்கு தேவைப்படும் சரியான உட்கட்டமைப்பு பணிகளின் விபரத்தை இக்குழுவானது ஒவ்வொரு பள்ளியையும் ஆய்வு செய்து அறிந்துகொள்ளும்.

## 3.10. **சுகாதாரம் – முழு சுகாதார தமிழகம்**

திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கமானது, அந்தப் பழக்கத்தை பின்பற்றும் தனிநபரின் உடல் நலத்தை பாதிப்பதோடு மட்டுமல்லாது, ஒட்டுமொத்த கிராம சமுதாயத்திற்கும்மாபெரும் தீங்கை விளைவிக்கக் கூடிய பழக்கமாகும்.இதனால் மக்களின் நல்வாழ்வும் பாதிப்படைகின்றது. சமூக மற்றும் பொருளாதார குறியீடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இதை கருத்தில் கொண்டு, தமிழக அரசு தொடர்ந்து சுகாதாரத்திற்கு அதிக முக்கியத்தும் கொடுத்து,தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின் கீழ் "முழு சுகாதார தமிழகம்" என்ற நிலையை எய்திட பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இதன் இறுதி நோக்கமானது, ஊரகப் பகுதிகளில் ஆரோக்கியமான மற்றும் வளமான சமுதாயத்தை உருவாக்குவதாகும்.

திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை அடையவும் மற்றும் அதனை தொடர்ந்து தக்கவைப்பதிலும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளிவிலான கூட்டமைப்பு / சுய உதவிக்குழு உறுப்பினர்கள் ஆகியோரின் தீவிர பங்கேற்பு மற்றும் அனைத்து பங்கேற்பாளர் துறைகளின் ஒருங்கிணைந்த மற்றும் கூட்டு முயற்சி ஆகியவற்றால், தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளது.

"முழு சுகாதார தமிழகம்" என்கிற நிலையை அடைவதன் மூலம், ஐக்கிய நாடுகள் சபையால்

அறிவிக்கப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளில் ஒன்றான "அனைவருக்கும் சுகாதாரம்" என்ற முக்கிய நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**மாநில அரசின் முன்முயற்சிகள்**

2001 ஆம் ஆண்டு முதல் மாநிலத்தில் சுகாதாரப் புரட்சி ஏற்படுத்தும் விதமாக, தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னோடி முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு அடிப்படை சுகாதார வசதிகள் ஏற்படுத்தும் பொருட்டு 2001-04 வரையிலான காலத்தில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கட்டப்பட்டது. 2011-12ம் ஆண்டில், பயன்படுத்தாமல், பழுதடைந்திருந்த 12,796 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் ரூ.170 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு, ஊரகப் பெண்கள் பயனடைய வழிவகை செய்யப்பட்டது. இந்த சுகாதார வளாகங்களின் மீது தங்களுக்குள்ள உரிமை மற்றும் பொறுப்பை அவர்கள் உணர்ந்து வளாகங்களை முறையாக பராமரிக்கும் பொருட்டு, பயன்படுத்துவோர் பராமரிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு, அக்குழுக்கள், இவ்வளாகங்களின் தினசரி பராமரிப்பை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சிகள் மூலம் காலமுறை பராமரிப்பும் மேற்கொள்ளப்படுகிறது. முழுமையான சுகாதார நிலையினை வேகமாக அடையும் பொருட்டு, 2003ம் ஆண்டு, தூய்மை கிராம இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. 2006 ஆம் ஆண்டு கைவிடப்பட்ட இத்திட்டம், 2011-12 ஆம் ஆண்டில்

மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலை மற்றும் தூய்மையான சுற்றுச்சூழல் உடைய கிராம ஊராட்சிகள், ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு கிராம ஊராட்சி வீதம் தேர்வு செய்யப்பட்டுதலா ரூ.5 இலட்சம் வீதம் ரொக்க பரிசு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஊரக மகளிருக்கு சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்பட்டதை போன்று, 2012-13 முதல் 2014-15 ஆம் ஆண்டு வரை 1,199 ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன. கிராம அளவில் சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான மகளிர் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பு ஆகியவற்றை, தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுதல் மற்றும் அதன் பயன்பாட்டைக் கண்காணித்தல் ஆகிய பணிகளில் பங்கேற்கச் செய்தது ஆகிய முன்முயற்சிகள், முழுமையான சுகாதார நிலையை விரைவாக அடைய வழிவகுத்தது. தமிழகத்திலுள்ள அனைத்து 12,525 கிராம ஊரட்சிகளிலும் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதில், “தூய்மைக் காவலர்கள்” ஈடுபடுத்தப்படுவதால், கிராமங்கள் தூய்மையாகபராமரிக்கப்படுவதை தெளிவாக உணர முடிவதுடன் அது வெளிப்படையான நல்லதொரு தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஊரக பகுதிகளில் உள்ள அரசு பள்ளிகளில் சுகாதார வசதிகளை தொடர்ந்து பராமரித்திட தேவையான அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பள்ளி கழிப்பறைகள் சுத்தமாக பராமரிக்கப்படுவதுடன் அவை பயன்பாட்டில் உள்ளதையும் உறுதி செய்யப்படுகிறது. மாநில

அரசின் இந்த அனைத்து முன்முயற்சிகளும் தேசிய அளவில் முன்னோடியாக திகழ்கின்றன.

**தமிழ்நாட்டில் ஊரக பகுதிகளில் சுகாதாரம் அடைந்த நிலை**

தமிழ்நாட்டில், 2013 ஆம் ஆண்டு சுகாதார அடிப்படை கணக்கெடுப்பின்படி, 51.06 இலட்சம் குடும்பங்களில் கழிப்பறை வசதி இல்லை என கண்டறியபட்டது. மேற்படி அடிப்படை கணக்கெடுப்பிற்குப்பின் 2013-14 முதல் 2019-20 ஆம் ஆண்டு வரை சாதனை அளவாக 50.17 இலட்சம் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளதாலும், 0.89 இலட்சம் குடும்பங்கள் சமுதாய கழிப்பறைகள் மற்றும் பகிர்வு கழிப்பறைகளை பயன்படுத்துவதின் அடிப்படையிலும், தமிழ்நாட்டின் சுகாதாரம் அடைந்த நிலை 45 விழுக்காட்டிலிருந்து 100 விழுக்காடாக உயர்ந்துள்ளது. சுகாதார அடிப்படை கணக்கெடுப்பின்படி, அனைத்து ஊரக மாவட்டங்களும் 100 விழுக்காடு சுகாதாரம் அடைந்த நிலையை எட்டியுள்ளது.

மத்திய அரசு, சுகாதாரம் அடைந்த நிலையை கணக்கிடும்போது, 2013 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட அடிப்படை கணக்கெடுப்பின்படி, மத்திய ஜல் சக்தி அமைச்சகத்தின் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் துறை இணையதள ஒருங்கிணைந்த தகவல் மேலாண்மை அமைப்பின்படி (IMIS) கழிப்பறை இல்லாத வீடுகளின் எண்ணிக்கை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி 2013 ஆம் ஆண்டு கணக்கெடுப்பிற்கு பின் புதியதாக கட்டப்பட்ட வீடுகள் சேர்க்கப்படவில்லை. மேலும், 2013 ஆம் ஆண்டு அடிப்படைக் கணக்கெடுப்பின்படி பழுதடைந்த கழிப்பறைகளும் (Defunct

toilets) கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. மேற்படி சுகாதார கணக்கெடுப்பின் போது கிராம ஊராட்சிகளில் 12.25 இலட்சம் கழிப்பறைகள் பழுதடைந்து உள்ளதாக கண்டறியப்பட்டது. இந்த பழுதடைந்த கழிப்பறைகள், முந்தைய சுகாதாரத் திட்டங்களில் கட்டப்பட்டவையாகும். மேற்படி குடும்பங்களுக்கு தற்போதுள்ள திட்டங்களின் கீழ் ஊக்கத் தொகை வழங்க வழிவகை இல்லை. எனவே, பயனாளியின் சொந்த நிதி, பெருநிறுவனங்களின் சமூக பொறுப்பு நிதி, வங்கிக்கடன் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உள் கடன் ஆகியவற்றின் மூலம் நிதியை திரட்டி, 11.80 இலட்சம் பழுதடைந்த கழிப்பறைகளை புதுப்பித்தல் / மீளவும் கழிப்பறைகள் கட்டுதல் ஆகியவை சம்மந்தப்பட்ட மாவட்ட நிர்வாகங்களின் நடவடிக்கைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டது. மேலும், இதைத் தவிர 'தூய்மை பாரத கோஷ்' நிதி மற்றும் உலக வங்கி உதவியுடன் வழங்கப்படும் செயல்திறன் அடிப்படையிலான ஊக்க மானியம் ஆகிய நிதிகளின் மூலம் சுமார் 45,000 பழுதடைந்த கழிப்பறைகள் புதிதாக கட்டப்பட்டுள்ளன.

மேலும், 2018-19 மற்றும் 2019-20 ஆம் ஆண்டுகளில் 2013 ஆம் ஆண்டு சுகாதார கணக்கெடுப்பில் விடுபட்டுபோன கழிப்பறை அற்ற 6.08 இலட்சம் குடும்பங்களுக்கு, தூய்மை பாரத திட்டம் (ஊரகம்) கீழ் கழிப்பறைகள் கட்ட மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. மேலும்,எவரும் கழிப்பறை வசதி இல்லாமல் விடுபட்டுப் போகவில்லை என்பதை உறுதி செய்ய கழிப்பறை கட்ட போதிய இட வசதி இல்லாத ஆதிதிராவிடர் / பழங்குடியினர் குடியிருப்புகள் மற்றும் இதர குடியிருப்புகளிலும்

சமூக சுகாதார வளாகங்கள் அமைக்க அரசு முழு கவனம் செலுத்தி வருகிறது.

**திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலை மற்றும் அதை சரிபார்த்தல்**

வழிகாட்டு நெறிமுறைகளின்படி, கிராம ஊராட்சிகள், திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை அடைந்தவுடன் கிராம சபைக் கூட்டத்தில் சுயமாக அறிவிப்பு செய்கின்றன. அதன்படி, தமிழகத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளும் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையை சுயமாக அறிவிப்பு செய்துள்ளன. இவை அனைத்து ஊரக மாவட்டங்களால் சரிபார்க்கப்பட்டு ஒருங்கிணைந்த தகவல் மேலாண்மை இணையதள அமைப்பில் (IMIS) உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்காணும் நிலையினை தொடரவும் மற்றும் கட்டப்பட்ட கழிப்பறைகள் தொடர் பயன்பாட்டில் உள்ளதை உறுதி செய்திடவும், இரண்டாம் கட்டமாக, திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை சரிபார்த்திட அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ஆய்வுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**தனிப்பட்ட மூன்றாம் தரப்பு முகமைகள் மூலம் ஊரக சுகாதார கணக்கெடுப்பு**

மத்திய அரசு, தேசிய வருடாந்திர ஊரக சுகாதார கணக்கெடுப்பு செய்ய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதன்படி, இந்த கணக்கெடுப்பு வருடத்திற்கு ஒருமுறை மூன்றாம் தரப்பு தனியார் முகமைகள் மூலம் கிராம ஊராட்சிகளின் (1) திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தை குறைத்தல், (2) கிராமங்களில் திறந்த வெளியில்

மலம் கழித்தலற்ற நிலையை தக்க வைத்தல் மற்றும் (3) திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டத்தில் பயன்பெறும் ஊரக மக்கள் தொகை விழுக்காடு ஆகிய செயல்திறன் குறியீடுகளை அளவீடு செய்கிறது. ஒவ்வொரு கணக்கெடுப்பின் சுற்றிலும், திறந்த வெளியில் மலம் கழிக்கும் நிலை, திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை தக்க வைத்தல் மற்றும் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டங்கள் ஆகிய கூறுகளில் தகவல்கள் சேகரிக்கப்படுகிறது. இது தனிப்பட்ட சரிபார்ப்பு நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படும் மூன்றாம் தரப்பு மாதிரி கணக்கெடுப்பு ஆகும். தேசிய வருடாந்திர ஊரக கணக்கெடுப்பின் முடிவுகளின்படி, மாநிலங்களுக்கு செயல்திறன் அடிப்படையிலான ஊக்கத்தொகை, 100 சதவீத மான்யமாக வழங்கப்படுகிறது.

தரமான சுகாதார உட்கட்டமைப்புகளை மதிப்பீடு செய்ய, மாநில அரசு மூன்றாம் நபர் சுகாதார ஆய்வை மாநில தர கண்காணிப்பாளர்கள் மூலமாகவும் அவ்வப்போது மேற்கொள்கிறது.

**சுகாதாரம் குறித்து எடுக்கப்பட்ட பல்வேறு முன்முயற்சிகள்**

**(அ) திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையை தக்க வைப்பதில் சமுதாய அமைப்புகளின் பங்கு**

தமிழ்நாட்டில் ஏற்கெனவே செயல்படும் “பெண்கள் சுய உதவிக் குழு அமைப்புகள்” மாபெரும் சமுதாய மூலதனமாகும். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகத்தின் கீழ் கிராம அளவில் செயல்படும் சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், நேர்முக தகவல் பரிமாற்றம் தொடர்பான

செயல்பாடுகளிலும், சுகாதாரத்தை ஊக்குவிக்கவும் மற்றும் தன்சுத்தம் பேணவும் முழு அளவில் ஈடுபடுத்தப்படுகின்றனர். திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற கிராமங்களை உருவாக்குதல் மற்றும் அதனை தொடர்ந்து தக்க வைத்தலில் மக்களிடையே பெரிய அளவில் செல்வாக்கு உடையதாக திகழும், இந்த சமூகம் சார்ந்த அமைப்புகள் சிறந்த முறையில் பயன்படுத்தப்படுகின்றன.

**(ஆ) சுகாதாரத்தோடு தொடர்புடைய பங்கேற்பாளர் துறைகளை ஒருங்கிணைத்தல்**

திறந்த வெளியில் மலம் கழிக்கும் தவறான பழக்கம், சிறார்களின் உடல் வளர்ச்சியிலும் மற்றும் மன வளர்ச்சியிலும் ஒரு எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாது, அவர்களுக்கு இரத்த சோகை மற்றும் குடற்புழு தொற்று ஏற்படுவதற்கும் மூல காரணமாக அமைந்துள்ளது. எனவே, திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கமுடைய மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்துவது என்பது மிக முக்கியமானதாகும். அதன் மூலம் மட்டுமே திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையை அடைவதுடன், அவர்கள் தொடர்ந்து கழிப்பறை பயன்படுத்தும் பழக்கத்தை தக்க வைக்க இயலும். எனவே, பல்வேறு இதர துறைகளின் பங்கேற்பாளர்கள் மூலமாகவும் சுகாதாரம் குறித்த தகவல்களை தொடர்ந்து வலியுறுத்துவதின் மூலமாகவே இந்த நோக்கம் சாத்தியமாகும். மேற்படி வழியில், மாநில மற்றும் மாவட்ட அளவில், சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், பள்ளிக் கல்வி மற்றும் சமூக நலம் ஆகிய அரசு துறைகளுடன் ஒருங்கிணைந்த கூட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர்கள் புறநோயாளிகளுக்கு வழங்கப்படும் மருந்துச் சீட்டில் கழிப்பறை பயன்படுத்த வேண்டும் என்ற பரிந்துரையை செய்தல், பாடப் புத்தகங்களின் அட்டைகளில் சுகாதாரம் குறித்த தகவல்களை அச்சிடுதல், அங்கன்வாடி நிலையங்களுக்கு வரும் வளரிளம் பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களிடையே நேரடி தகவல் தொடர்பு மூலம் சுகாதாரத்தை வலியுறுத்துதல், போன்ற மாநில அரசின் முன்னோடி முயற்சிகள், தேசிய அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது.

**(இ) ஊக்குவிப்பாளர்களின் பங்கு**

சுய உதவிக் குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஆகியவற்றிலிருந்து கண்டறியப்பட்ட சுமார் 13,800 ஊக்குவிப்பாளர்களுக்கு சமூக அணுகுமுறை பயிற்சி மற்றும் சமூக அடிப்படையிலான கண்காணிப்பு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களின் தொடர்விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலம், கிராம ஊராட்சிகள் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையை தக்க வைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.இந்த திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலை தக்க வைத்தலில் பயிற்சி அளிப்பதற்கு, ஊக்குவிப்பாளர்களிலிருந்து கண்டறியப்பட்ட முதன்மை பயிற்றுநர்களுக்கு ஒட்டுமொத்த தூய்மையினை உறுதி செய்யும் நடவடிக்கைகளில் (ODF Plus) மாநில அளவில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேற்காண் முதன்மைப் பயிற்றுநர்கள் மாவட்ட அளவில், திறந்த வெளியில் மலம்

கழித்தலற்ற நிலையினை தக்க வைப்பதற்கும், ஒட்டு மொத்த தூய்மையினை உறுதி செய்யும் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகளை செயல்படுத்திடவும்,சுகாதார ஊக்குநர்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் பிற துறைகளைச் சார்ந்த களப்பணியாளர்களான ஆசிரியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கிராம சுகாதார செவிலியர்கள் ஆகியோர்களுக்கு பயிற்சி அளிக்கின்றனர். மேற்காணும்பிறதுறை களப்பணியாளர்களுடன் ஊக்குவிப்பாளர்கள் இணைந்து கழிப்பறை பயன்பாடு, மாத விடாய் கால சுகாதார மேலாண்மை, தன் சுத்தம், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை போன்றவற்றின் முக்கியத்தும் குறித்து பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். ஊக்குவிப்பாளர்களுக்கு வழங்கப்படும் ஊக்க நிதி தவிர அவ்வப்போது மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் சிறப்பாக பணியாற்றும் ஊக்குவிப்பாளர்கள் கண்டறியப்பட்டு விருதுகள் வழங்கப்படுகிறது. ஊக்குநர்கள் செய்யும் களப்பணிகளை நிகழ்நேர அடிப்படையில் அளவிடும் வகையில் சென்னையில் உள்ள தேசிய தகவல் மையத்தின் உதவியுடன் கைப்பேசி செயலி உருவாக்கப்பட்டு களப்பணி நடவடிக்கைகள் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

**(ஈ) களப்பணியாளர்களின் திறனை வலுப்படுத்துதல்**

மனமாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய தகவல்கள் மற்றும் தங்களின் திறமைகளை வளர்த்து கொள்ள

களப்பணியாளர்களுக்கு தொடர்ந்து வழங்கப்படும் திறன் வளர்ப்பு பயிற்சி மிகவும் முக்கியமானதாகும். ஒட்டுமொத்த தூய்மையினை உறுதி செய்யும் பொருட்டு, தற்போதைய நிலையை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வதற்கு விரிவான திறன் வளர்ச்சி பயிற்சியினை வலுப்படுத்த வேண்டியது அவசியமாகும். இதற்கென மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில், சுகாதார பிரிவின் ஒரு பகுதியாக 'மாநில பயிற்சி மேலாண்மை அலகு' என்ற சுகாதாரத்திற்கென பிரத்தியேகமான ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டு, அங்கு நடத்தப்படும் அனைத்து பயிற்சிகளிலும், சுகாதாரம் குறித்த திறன் வளர்ப்பு பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றது. இதேபோன்ற அமைப்பு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களிலும் ஏற்படுத்தப்பட்டு, மண்டல அளவில் சுகாதாரத்திற்குத் தேவையான பயிற்சிகள் நடத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவ்வப்பொழுது மாநில / மாவட்ட / வட்டார அளவில், அனைத்து ஊக்குவிப்பாளர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கும் ஒட்டுமொத்த தூய்மைக்கான பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

### (உ) **கண்காணிப்பு**

சுகாதார திட்டத்தின் ஒட்டுமொத்த கண்காணிக்கும் அலுவலர், சம்மந்தபட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் ஆவார். தரமான முறையில் கழிப்பறை கட்டுவதையும், செயல்படும் கழிப்பறையின் தொடர் பயன்பாட்டினை உறுதி செய்யவும், வட்டார மற்றும் மாவட்ட அளவிலான உயர்நிலை

அலுவலர்களால் அவ்வப்போது ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது.

**(ஊ) சுகாதார கையேடு**

ஒட்டு மொத்த தூய்மையினை உறுதி செய்யும் (ODF Plus) நடவடிக்கைகள் சார்ந்த விரிவான தகவல்கள் மற்றும் பல்வேறு சுகாதார செய்திகளுடன் சுகாதார கையேடு தயார் செய்யப்பட்டுள்ளது. முதன்மை பயிற்றுநர்கள் மற்றும் ஊக்குநர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகளில் இந்த கையேடு வள ஆதார ஆவணமாக பயன்படுத்தப்படுகிறது. மேலும், உடல்நலம் மற்றும் சுகாதாரத்தோடு தொடர்புடைய பங்கேற்பாளர்களின் துறைகளில் பணியாற்றுபவர்களுக்கு இந்த கையேடு பயனுள்ளதாக அமைந்துள்ளது. திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை தக்க வைக்கவும் மற்றும் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மையின் முக்கியதுவத்தை வலியுறுத்தவும் பயன்படுத்தப்பட்டு வரும் “சுகாதாரக் கையேடு” நீர், சுகாதாரம், ஊட்டச்சத்து, பொது சுகாதாரம், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய இனங்களில் கூடுதல் விவரங்களுடன் மேலும் செறிவூட்டப்பட்டுள்ளது.

**(எ) ஒட்டு மொத்த தூய்மையை நோக்கி** (ODF Plus)

ஒட்டுமொத்த தூய்மையினை உறுதி செய்யும் நடவடிக்கைகளில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை தக்க வைத்தல், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை, மற்றும் மலக் கசடு மேலாண்மை ஆகியவை அடங்கும். கழிப்பறை பயன்பாட்டினை தொடர்ச்சியாக

கண்காணிப்பதன் மூலமாகவும் நேரடி தகவல் பரிமாற்றம் மூலம் சுகாதார தகவல்களை தொடர்ந்து வலியுறுத்துவதன் மூலமாகவும் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை தக்க வைப்பதற்கான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.திடக்கழிவை பயனுள்ள வகையில் மேலாண்மை செய்யும் பொருட்டு, பொது மக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகளிடையே கழிவுகளை பிரித்தல், திடக்கழிவு மேலாண்மையில் மறுத்தல், குறைத்தல், மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சி கோட்பாடுகளை கடைபிடித்தல், நெகிழிக்கு பதில் மாற்றுப் பொருளை பயன்படுத்துதல் மற்றும் அபாயகரமான கழிவுகளை பாதுகாப்பான முறையில் கையாளுதல் ஆகியவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது முக்கியமானதாகும். கழிவுநீரை மேலாண்மை செய்வதற்கு தனிநபர் இல்ல மற்றும் சமுதாய உறிஞ்சுக்குழிகள் கட்டப்பட்டுள்ளது.மலக் கசடு மேலாண்மைக்காக, மலக் கசடு சுத்திகரிப்பு நிலையம் அமைத்திடும் பொருட்டு, சிறந்த தொழில்நுட்ப திட்டம் தயாரித்திட தொழில்நுட்ப வல்லுநர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது.

**(ஏ) சுகாதார நிலையை உயர்த்துவதில் மாணவர்களின் பங்கு**

மாணவர்களிடையே தன் சுத்தம் மற்றும் பாதுகாப்பான சுகாதாரப் பழக்கத்தினை கற்பிக்கும் வகையில், பள்ளிகளில் ‘உடல் நலம் மற்றும் சுகாதாரக் குழுக்கள்’ உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், அனைத்து அரசு ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகளில், சுகாதாரம் தொடர்புடைய தலைப்புகளில் பேச்சுப்போட்டி, படம்

வரைதல், கட்டுரை எழுதுதல் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்கு, மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அல்லது மாவட்ட / வட்டார / அளவிலான அலுவலர்கள் மூலமாக பரிசுகள் வழங்கப்படுகிறது.

சமூகத்திடையே மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் சிறந்த மற்றும் தூய்மையான சுற்றுச் சூழலை உருவாக்கும் நோக்கில் கல்லூரி மாணவர்களுக்கு, சமூக ஈடுபாட்டுப் பயிற்சிகள் / ஊரக பயில்நிலை திட்டங்கள் (Rural Internship programme) நடத்தப்பட்டு வருகிறது. இதில், கல்லூரி மாணவர்கள் / தேசிய நாட்டு நலப் பணித்திட்ட தன்னார்வலர்கள், கிராம அளவில் சுகாதார ஊக்குவிப்பாளர்கள் மற்றும் இதர கள பணியாளர்கள் ஆகியோர்களுடன் இணைந்து, சுகாதாரத்தை ஊக்குவிக்கவும், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகளான குப்பைகள் உற்பத்தியாகும் இடத்திலேயே பிரித்தல், வீடுகளில் உரக்குழி அமைத்தல், கழிவு நீர் மேலாண்மைக்கு உறிஞ்சிக் குழிகள் அமைத்தல் போன்றவற்றில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(ஐ) ஊரக சுகாதார கொள்கை – ஒரு முன்னோக்கிய பாதை**

திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை தொடர்ந்து தக்க வைத்திட பின்பற்ற வேண்டிய வழிமுறைகளையும், திட மற்றும் திரவக் கழிவுகளை திறம்பட நிர்வகிக்க முறையான செயல்பாட்டு திட்டத்தையும் உள்ளடக்கிய மாநில அரசால் கொண்டு வரப்பெற்ற “ஊரக

சுகாதார கொள்கை"யின் மூலம் சுகாதாரத்தினை மேம்படுத்தி எழில்மிகு வகையில் ஊரக கிராமங்களை பராமரித்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் பாதுகாப்பான சுகாதார வசதிகள் ஏற்படுத்துவதன் மூலம் "முழு சுகாதார தமிழகம்" என்ற நிலையை அடைவதற்கு உதவுவதுடன், ஆரோக்கியமான, தூய்மையான மற்றும் பசுமையான சமுதாயத்தை உருவாக்கிட இந்த கொள்கை தெளிவான வழிகாட்டுதல்களை அளித்துள்ளது.

## 3.11. **ஊரகப் பகுதிகளில் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகள்**

**திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகள்**

இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் முதன்முதலாககுப்பைகளை சேகரித்தல், தரம் பிரித்தல் மற்றும் கழிவுகளை அப்புறப்படுத்தும் வசதிகளுடன் கூடிய திடக்கழிவு மேலாண்மைத் திட்ட அமைப்புகள் அனைத்து 12,525 கிராம ஊராட்சிகளிலும் முழுமையாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. திடக் கழிவு மேலாண்மைத் திட்ட செயல்பாடுகளில், தூய்மைக் காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டு, அவர்கள் வீடு வீடாக குப்பைகளை சேகரித்தல், தரம் பிரித்தல் மற்றும் கழிவுகளை பாதுகாப்பாக அப்புறப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்கின்றனர்.

இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்திட அனைத்து கிராம ஊராட்சிகளிலும் குப்பைகளை சேகரித்தல், பிரித்தல் மற்றும் பாதுகாப்பாக அப்புறப்படுத்துதலுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான குப்பைகளை பிரித்தல் மற்றும்

சேமித்து வைப்பதற்கான கொட்டகைகள், தெருவில் வைக்கும் குப்பைத்தொட்டிகள், குப்பைகளைக் கொண்டு செல்ல மூன்று சக்கர மிதி வண்டிகள் / தள்ளுவண்டிகள் முதலியன வழங்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திடக்கழிவுகள் மக்கும் / மக்காத குப்பைகளாக பிரிக்கப்பட்ட பின்னர் அகற்றப்படுகிறது. திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகளுக்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ.206.04 கோடி நிதி மாநில அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 66,130 தூய்மைக் காவலர்கள் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் வெளி ஆதார முறையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நகர்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகள் மற்றும் மலைப் பகுதிகளில் உள்ள கிராம ஊராட்சிகளின் சிறப்பு தேவையை பூர்த்தி செய்யும் விதமாக, கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளான மின்கலம் பொருத்தப்பட்ட தள்ளுவண்டிகள் மற்றும் மோட்டார் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்ட அளவிலான உயர் அலுவலர்கள் மற்றும் வட்டார அளவிலான அலுவலர்கள் தங்களது கள ஆய்வின் போது திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படுவதை குறிப்பிட்ட கால இடைவெளியில் கண்காணிக்கின்றனர். தினந்தோறும், ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படுவது மற்றும் தூய்மைக் காவலர்களின் அன்றாட வருகை ஆகியவை தேசிய தகவல் மையத்தின் உதவியுடன் இத்துறையின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.

**சிறிய அளவிலான உரம் தயாரிக்கும் மையங்கள்**

நகர்புறத்தை ஒட்டிய பெரிய கிராம ஊராட்சிகளில் உற்பத்தியாகும் திடக் கழிவுகளை சிறந்த முறையில் கையாள வேண்டி, சிறிய அளவிலான உரம் தயாரிக்கும் மையங்களை அமைக்க தமிழக அரசால் ஆணை வெளியிடப்பட்டு உரிய வழிகாட்டி நெறிமுறைகளும் வழங்கப்பட்டுள்ளது.

பெரிய கிராம ஊராட்சிகள் மற்றும் மாநகராட்சி / நகராட்சிகளுக்கு அருகாமையில் அமைந்துள்ள சுமார் 300 கிராம ஊராட்சிகளில் மேற்குறிப்பிட்ட சிறிய அளவிலான உரம் தயாரிக்கும் மையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**ஊரகப் பகுதிகளில் திரவக் கழிவு மேலாண்மை திட்டம்**

ஊரகப் பகுதிகளில், கழிவு நீரை திறம்பட மேலாண்மை செய்திடவும், வீடுகளில் உள்ள சமையலறை மற்றும் குளியலறைகளிலிருந்தும், மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி, கைப்பம்பு போன்ற பொது இடங்களிலிருந்தும் வெளியேறும் கழிவுநீரை கையாளவும், திரவக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளான தனிநபர் உறிஞ்சுக் குழிகள் மற்றும் சமுதாய உறிஞ்சிக் குழிகள் அமைக்கும் பணிகள் 2017-18 முதல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த மூன்று வருடங்களில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ், இதுவரை 5.25 இலட்சம் தனிநபர் உறிஞ்சிக் குழிகள் மற்றும் 75,000 சமுதாய உறிஞ்சிக் குழிகள் ரூ.496.32 கோடி மதிப்பீட்டில் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் சாலைகள் / தெருக்கள் மற்றும் பொது இடங்களில் கழிவு நீர் தேங்குவது தடுக்கப்படுவதுடன் நீர் வாயிலாக நோய்கள் பரவுவது குறைக்கப்பட்டுள்ளது.

**3.12. பள்ளிக் கழிப்பறைகள் பராமரித்தல், வகுப்பறை மற்றும் பள்ளி வளாகம் தூய்மை படுத்துதல்**

மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியிலும் அவர்களது உடல் நலம் மற்றும் ஆரோக்கியத்தை பேணுவதிலும் சுகாதார வசதிகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. ஊரக பகுதிகளிலுள்ள 28,031 ஊராட்சி ஒன்றிய ஆரம்ப / நடுநிலைப் பள்ளிகளிலும் மற்றும் 6,916 அரசு பள்ளிகளிலும் மாணவ மாணவியருக்கு தனித்தனியே கழிப்பிட வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதை உறுதி செய்ய அரசு போதுமான நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய மற்றும் அரசு பள்ளிகளிலுள்ள பள்ளிக் கழிப்பறைகளை சுத்தமாக பராமரிப்பதற்காக, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அல்லது இதர தனியார் நிறுவனங்கள் மூலமாக வெளி ஆதாரம் (outsourcing) முறையில் ஈடுபடுத்தப்படும் சுகாதார பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கும், தூய்மைப்படுத்த தேவையான பொருட்களை வாங்குவதற்கும், 2015-16 முதல் 2018-19 வரை மாநில அரசால் ரூ.202.88 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2019-20 ஆம் ஆண்டு, அரசு ரூ.64.26 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, ஊரக பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப / நடுநிலைப் பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் பள்ளிக் கழிப்பறைகளை சுத்தம் செய்வதற்கும், வகுப்பறைகள்

மற்றும் பள்ளி வளாகத்தினை தூய்மைபடுத்துவதற்கும் உத்தரவிட்டுள்ளது.

வெளி ஆதாரம் மூலம் ஈடுபடுத்தப்படும் துப்புரவு பணியாளர்கள் வழக்கமான சுத்தம் செய்யும் பணியோடு, கிராம ஊராட்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தூய்மைக் காவலர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் ஈடுபடுத்தப்பட்டுள்ள மஸ்தூர்களை கொண்டு, 2 மாதத்திற்கு ஒரு முறை (அல்லது) காலாண்டு / அரையாண்டு / வருடாந்திர தேர்வு விடுமுறைக்கு பின்னர் மற்றும் பள்ளி திறக்கப்படும் முன்னர், பள்ளி வளாகம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை ஒட்டு மொத்தமாக சுத்தம் செய்திட வேண்டும். ஒட்டு மொத்த சுத்தப்படுத்தும் பணியினை மேலே குறிப்பிடப்பட்ட முன்னரே தீர்மானிக்கப்பட்ட நாட்களைத் தவிர, தேவையின் அடிப்படையிலும் ஒட்டு மொத்த சுத்தப்படுத்தும் பணியை மேற்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2020-21 ஆம் ஆண்டும் இத்திட்டம் ரூ.64.26 கோடி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 3.13. **தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம் - குடிமராமத்து**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறுபாசன ஏரிகள், குளங்கள்/ ஊருணிகள் போன்றவற்றை புனரமைக்கும் பொருட்டும், நீர்நிலைகளின் கொள்ளளவினை அதிகரிக்கும் பொருட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 110 விதியின் கீழ் 20.7.2019 அன்று தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம் - குடிமராமத்து என்ற

மக்கள் இயக்கத்தை 2019-20ம் ஆண்டில் தொடங்கி வைத்துள்ளார்.

1. **திட்ட செயலாக்கம்**

மேற்படி இயக்கத்தின் கீழ் 2019-20ம் ஆண்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 5,000 ஊராட்சி ஒன்றிய சிறுபாசன ஏரிகளும், கிராம ஊராட்சிகளில் உள்ள 25,000 குளங்கள்/ குட்டைகள் மற்றும் ஊருணிகள் போன்ற நீர்நிலைகளின் கொள்ளளவினை அதிகரிக்கும் பொருட்டும் ரூ.1,250 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணை நிலை எண்.96, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ.தி-1) துறை, நாள்.26.7.2019 வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி நீர் நிலைகளை எந்திரங்கள் மூலம் தூர்வாரவும், கரைகளை பலப்படுத்தவும் மாநில அரசு நிதி ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்படி நீர் நிலைகளில் உள்ள மதகுகள், கலங்குகள், நீராடு துறை (Bathing ghat), சிறு குளம் (baby pond), கழிமுகம் (inlet), புறமதகு (outlet) ஆகிய கட்டுமான பணிகள் மேற்கொள்ள மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட நிதியில் ரூ.750 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. **திட்டக் கூறுகள்**

அ. ஊரக நீர் நிலைகளான சிறுபாசன ஏரிகள் மற்றும் குளங்கள் / குட்டைகள்ஊருணிகளை எந்திரங்கள் மூலம் தூர்வாருதல் மற்றும் கரைகளை பலப்படுத்துதல்

ஆ. மதகுகள், கலங்குகள், நீராடு துறை (Bathing ghat), சிறு குளம் (baby pond), கழிமுகம் (inlet), புறமதகு (outlet) போன்ற கட்டுமான பணிகள் மேற்கொள்ளுதல்

### 2.1 **சிறுபாசன ஏரிகள் மற்றும் குளங்கள் / குட்டைகள்**

ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள சிறுபாசன ஏரிகள் மற்றும் கிராம ஊராட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள குளங்கள் / குட்டைகள் மற்றும் ஊருணிகளை விரிவான முறையில் புனரமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன் மூலம் குக்கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாட்டினை களையவும், நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்திடவும், சிறுபாசன ஏரிகளின் முழு கொள்ளளவினை மீட்கவும், நீர்நிலைகளில் அதிகபடியாக வழிந்தோடும் நீரினை தடுத்திடவும், குடிநீர் மற்றும் விவசாயத் தேவைகளுக்கான நீரினை சேமித்து முறைப்படுத்தி தடையில்லா குடிநீர் விநியோகம் செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் கிராமப்புற விவசாயிகளின் நீண்டகால கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

## 3. 2019-20**ஆம் ஆண்டின் திட்ட செயலாக்கம்**

2019 ஆம் ஆண்டின் பொதுப்பணித்துறையின் விலைப்புள்ளி பட்டியல் விகிதங்களின் அடிப்படையில் சிறுபாசன ஏரிகள், குளங்கள் மற்றும் குட்டைகளில் தூர்வார/ஆழப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஊரக நீர் நிலைகளின் எண்ணிக்கை, இடம், பரப்பளவு மற்றும் தொழில்நுட்ப விபரங்கள் ஆகியவற்றை அறிந்துகொள்ளும்

நோக்குடன் ஊரக நீர் நிலைகளில் ஒரு விரிவான கணக்கெடுப்பு எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, ஒரு கைபேசி செயலி (RRWB version 1.6) கீழ்க்காணும் இனங்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது:-

- சிறுபாசன ஏரிகள், குளங்கள் / குட்டைகளை புனரமைக்க குடிமராமத்துதிட்டச் செயலாக்கம் முதல் பணி முடிவுறும் தருவாய் வரை சீரிய முறையில் கண்காணிக்கவும்,
- சிறுபாசன ஏரிகள், ஊருணிகள் மற்றும் குளங்கள்/குட்டைகள் போன்ற நீர் நிலைகளை தேர்வு செய்யவும்,
- விரிவான திட்ட அறிக்கை மற்றும் முன் அளவீடு ஆகியவற்றை கண்காணிக்கவும்
- நிர்வாக அனுமதி, தொழில் நுட்ப அனுமதி, பணிகளின் தொடக்க நிலை மற்றும் முடிவுற்ற பணிகளின் அளவீடுகளை கண்காணிக்கவும்
- ஒன்றிய, உட்கோட்ட மற்றும் மாவட்ட அளவிலான அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்ட விவரங்களை மதிப்பாய்வு செய்தல்.
- பணிகள் மற்றும் நிதி முன்னேற்றத்தை கண்காணிக்கும் பொருட்டும் உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் 2019-20 ஆம் ஆண்டில் ஊரக பகுதிகளிலுள்ள 208 சிறுபாசன ஏரிகள் மற்றும் 3,636 குளங்கள் / குட்டைகளையும் மேம்படுத்தவும் / புதுப்பிக்கவும் ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் மாநில நிதி குழு மானியம் (SFC) ரூ.300 கோடி ஒதுக்கீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இதனால் மழைக்காலங்களில் கிராமப்புறங்களிலுள்ள நீர் நிலைகளின் கொள்ளளவினை அதிகரிக்கவும், நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்தி, நீர் பாசன பகுதிகளை அதிகரித்து, கிராம பொருளாதாரத்தினை மேம்படுத்தப்பட்டுள்ளது. இது நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

## 3.14. **சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்**

நக்சலைட்டுகளின் நடவடிக்கைகளால் ஏற்படும் பிரச்னைகளை தடுத்திடும் வகையில், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில், 2003-04 ம் ஆண்டு, சமூக பொருளாதார மேம்பாட்டிற்கென சிறப்புத் திட்டமாக சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மாநிலத்தில் பின்தங்கிய மாவட்டங்களான தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் முறையே ரூ.700 இலட்சம் மற்றும் ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், 2017-18 ஆம் ஆண்டு முதல், மேற்படி மாவட்டங்களில் தேவை மற்றும் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் நிதியைப் பகிர்ந்தளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டுதல், ஆவின் பாலகம் கட்டுதல், விவசாயத் தொழிலாளர்களுக்கு பூச்சி மருந்து தெளிப்பான் வாங்குதல், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் வாங்குதல், அங்கன்வாடி மையங்களை

நவீனப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளும் பல்வேறு பயிற்சித் திட்டங்களும் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

2020-21 ஆம் நிதியாண்டில் ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

# 4. மத்திய அரசு திட்டங்கள்

## 4.1. **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்**

மத்திய அரசிடமிருந்து நிதி உதவி பெறும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டமானது ஊரக தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பினையும் மற்றும் வறுமை ஒழிப்புக்கு எதிராகவும், சட்டப்பூர்வ உரிமைகள் அளிக்கும் விதமாகவும் உள்ளது.இத்திட்டமானது, ஒவ்வொரு நிதியாண்டிலும், 36 ஊரக மாவட்டங்களில் உள்ள பகுதிகளில் திறன் சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு ஆண்டில் அதிகபட்சமாக 100 நாட்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்க உறுதி செய்கிறது. ஊரகப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு அவர்களுடைய அடிப்படை உரிமையான சமத்துவ உரிமை மற்றும் வேலை பெறும் உரிமையை அளிக்கும் விதமாக இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. மகாத்மா காந்திதேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இத்திட்டம் மட்டுமே ‘‘வேலை பெறும் உரிமையை’’ உறுதிப்படுத்தும் சட்டப்பூர்வ பாதுகாப்பு கொண்ட ஒரே வறுமை ஒழிப்பு திட்டமாகும்.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் கீழ்க் குறிப்பிட்டவாறு திருத்தியமையக்கப்பட்டுள்ளன.

அ) ஒவ்வொரு நிதியாண்டிலும், ஊரகப் பகுதிகளில் திறன்சாரா, உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலை

வாய்ப்பினை அளிப்பதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட தரமான மற்றும் நிலையான சொத்துக்களை உருவாக்குதல்.

ஆ) ஏழை மக்களின் வாழ்வாதாரத்திற்கான அடிப்படை வளத்தை வலுப்படுத்துதல்.

இ) சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்குவதை உறுதி செய்தல்.

ஈ) ஊராட்சி அமைப்பு முறைகளை வலுப்படுத்துதல்.

தமிழ்நாட்டில் முதலில் இத்திட்டம் 6 ஊரக மாவட்டங்களில் 2.2.2006ல் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் படிப்படியாக மீதமுள்ள 25 ஊரக மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

**திட்டத்தின் சிறப்பம்சங்கள்**

1) பத்து முக்கியச் சட்ட உரிமைகள் பின்வருமாறு:

(i). வேலை அட்டை பெறுவதற்கான (Job card) உரிமை

(ii). வேலை கோரிய பதினைந்து தினங்களுக்குள் வேலை பெறுதலுக்கான உரிமை

(iii). வேலையில்லாப்படி பெறுவதற்கான உரிமை

(iv). தேவையான பணிகளை தொகுத்து திட்டமிடும் உரிமை

(v). 5 கி.மீ. தொலைவிற்குள் வேலை பெறுதலுக்கான உரிமை

(vi). பணித்தளத்தில் அடிப்படை வசதிகள் பெறுவதற்கான உரிமை

(vii). அறிவிக்கப்பட்ட ஊதியம் பெறுவதற்கான உரிமை

(viii). பதினைந்து தினங்களுக்குள் ஊதியம் பெறுவதற்கான உரிமை

(ix). காலங்கடந்து ஊதியத் தொகை வழங்கினால் இழப்பீட்டு உரிமை

(x). குறித்த காலத்திற்குள் குறைகள் மீது தீர்வு காணல் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட அனைத்து செலவுகள் மீது தொடர் தணிக்கை மற்றும் சமூக தணிக்கை மேற்கொள்ளுதல்.

2) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பணி வாரம் என்பது ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை வேலை ஆரம்பித்து அடுத்த புதன்கிழமை வரை வேலை நடைபெறுகிறது.

3) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தொழிலாளர்களுக்கு கூடுதலாக பணி வாய்ப்புகள் வழங்கும் பொருட்டு, கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களை ஒரு தொகுப்பாக உருவாக்கி, அனைத்து தொகுப்புகளிலும் கூடுதலாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4) திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியம் ஊரக விலைப் பட்டியலின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் திருத்திய அட்டவணை–Iன்படி திறன்சாரா தொழிலாளர்களுக்கான விலைப் பட்டியலின்படியான ஊதியமானது ஓர் வயது வந்த நபர் 1 மணி நேர உணவு இடைவேளையுடன் கூடிய 8 மணி நேர பணிக்கு பெறக்கூடியதற்கு (அதாவது 7 மணி நேர

செயல் விளைவுடைய வேலை) சமமாக நிர்ணயிக்கப்படுகிறது.

5) மாற்றுத் திறனாளிகளுக்கென சிறப்பு ஊரக விலைப்புள்ளி பட்டியலைப் பின்பற்றி அரசாணை வெளியிடப்பட்டு பின்பற்றப்பட்டு வருகிறது. இவ்வரசாணையில் மாற்றுத் திறனாளிகளுக்கென மண் வேலை தொடர்பான மற்றும் இதர சிறப்பு பணிகள் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

6) ஒப்பந்ததாரர்கள் அல்லது உடல் உழைப்பை அப்புறப்படுத்தும் இயந்திரங்களுக்கு அனுமதி இல்லை. எனினும், கீழ்க்காணும் பணிகளுக்கு இயந்திரங்கள் பயன்படுத்தலாம்.

(அ) கிணறுகள் தோண்டுதல் மற்றும் ஆழப்படுத்துதல் பணிகள்

(ஆ) கிராம சாலைகள் அமைத்தலில் 15லிருந்து 23 செமீ வரை மண்கரை அமைக்க சரியான அளவில் அமைத்து நிலைப்படுத்துதல்

(இ) கிராம சாலைகள் அமைத்தலில் கிராவல் / முரம் 15 லிருந்து 20 செமீ வரை சரியான விகிதத்தில் நிலைப்படுத்துதல் பணிகள்

(ஈ) சாலைகள் அமைக்கும் பணிகளில் சிமெண்ட் கலவைகளை கலக்குதல் மற்றும் இணைப்புகள் உள்ள இடங்களில் சரியான அளவில் வெட்டி எடுத்தல்

(உ) சிமெண்ட் கான்கிரீட் மேற்கூரை, தூண்கள், பீம்கள் மற்றும் மேற்கூரை போன்ற கட்டிட கட்டுமான பணிகள்

(ஊ)உலர்சாம்பல் மற்றும் அழுத்தப்பட்டு நிலைப்படுத்தப்பட்ட செங்கற்கள் உற்பத்தி பணிகள்

(எ) காடு வளர்ப்பு பணிகளில் நிலத்தை துளைக்கும் இயந்திரங்களை ஈடுபடுத்துதல்

7) திறன்சாரா உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கான (unskilled labour) ஊதியச் செலவு 100 விழுக்காடு மத்திய அரசால் வழங்கப்படுகிறது. கட்டுமானப் பொருட்களின் செலவினம், திறன் சார்ந்த (skilled labour) மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களின் (semi-skilled labour) ஊதியம், மத்திய அரசு மற்றும் மாநில அரசால் 75:25 என்ற விகிதாச்சாரத்தில் பிரிக்கப்படுகிறது.

8) அனைத்து ஊராட்சிகள் மற்றும் முகமைகள் மூலம் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளுக்குண்டான ஊதியம் மற்றும் பொருட்கள் 60:40 எனும் விகிதாச்சார அடிப்படையில் மாவட்ட அளவில் கணக்கிடப்படும்.

9) அனைத்து கட்டுமான பணிகளிலும் தொழிலாளர் ஊதியக்கூறிற்கு ஊரக விலைப்புள்ளி பட்டியலையும், பொருள்செலவினக்கூறிற்கு பொதுப் பணித் துறை விலைப்புள்ளி பட்டியலையும் கட்டாயமாக பின்பற்ற வேண்டும்.

10) குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு பயனாளியும் வேலைக்கு விண்ணப்பித்து அவ்வேலையினை பெறும் பொருட்டு வேலை அட்டையினை பெற உரிமை பெற்றுள்ளனர். ஒவ்வொரு 5 ஆண்டிற்கும் வேலை அட்டை புதுப்பிக்கப்படுகிறது. 01.04.2017-ல் இருந்து

5வருடங்களுக்கு செல்லத்தக்க புதிய வேலை அட்டைகள் 100 சதவிகித சரிபார்ப்பிற்குப் பின் அனைத்து செயற்படும் (active) தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

11) 2017-18 ஆம் ஆண்டிலிருந்து 12,524 கிராம ஊராட்சிகளிலும் மின்னணு வருகைப்பதிவேடு (e-MR) பயன்படுத்தப்பட்டு வருகிறது.

12) அனைத்து ஊராட்சிகளிலும் மத்திய அரசால் பரிந்துரை செய்யப்பட்ட ஏழு சட்டப்பூர்வ பதிவேடுகளுடன் வேலை அடையாள அட்டைக்கான இருப்புப் பதிவேடும் கூடுதலாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

13) 2019-20 ஆம் ஆண்டிற்கான அறிவிக்கப்பட்ட ஊதியம் 1.4.2019 முதல் ஆண்கள் மற்றும் பெண்கள் என்ற வேறுபாடின்றி ஒரு நாளுக்கு ரூ.229 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

14) அரசாணை (நிலை) எண்.25, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி1) துறை நாள்.27.02.2014ன் படி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுத்திட்ட பணியாளர் முழு ஊதியம் பெற 37 கன அடி மண் வேலை செய்ய வேண்டும்.

15) பணித் தளம் 5 கி.மீ. தூரத்திற்கு மேல் இருக்கும் பட்சத்தில், போக்குவரத்து மற்றும் வாழ்வினத் தொகையாக ஊதியத்தில் 10 விழுக்காடு கூடுதலாக வழங்கப்படும். இருப்பினும் தமிழ்நாட்டில் வேலை நடைபெறும் இடம் 2 கி.மீ. சுற்றளவிற்குள் இருக்குமாறு பணிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

16) பணித்தளத்தில் குடிநீர், முதலுதவிப்பெட்டி, நிழற் கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்படுகிறது.

17) 07.11.2016 முதல் தேசிய மின்னணு நிதி மேலாண்மை முறை (Ne-FMS) மூலம் ஊதியம் நேரடியாக திட்ட தொழிலாளர்களின் வங்கிக் கணக்கில்செலுத்தப்படுகின்றது.

18) கிராம சபையில் "கிராம சமூகத் தணிக்கையாளர்கள்" அதாவது மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களிலிருந்து பயிற்சி பெற்ற கிராம வள நபர்கள் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப்பணிகள் சமூகத்தணிக்கை செய்யப்படுகின்றது.

19) கிராம சபை கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அந்தந்த கிராம ஊராட்சிகளில் எடுத்து செய்ய இருக்கும் பணிகளின் தொகுப்பு மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பணிகளை தேர்வு செய்வதற்கும் அனைத்து தொழிலாளர்களுக்கும் உரிமை உள்ளது.

20) வேலை நடைபெறும் அனைத்து பணித் தளங்களிலும் வேலையின் பெயர், அனுமதிக்கப்பட்ட தொகை, பணி நடைபெற்ற காலம் போன்ற விவரங்களுடன் கூடிய குடிமக்களுக்கான தகவல் பலகை (Citizen Information Board) வைக்கப்படுகிறது.

21) குறைகளை தீர்க்கும் வகையில் குறை தீர்க்கும் அமைப்பின் ஒரு பகுதியாக கட்டணம் இல்லாத் தொலைபேசி சேவை (Toll free Helpline) "1299" ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுகிறது.

## அட்டவணை4.1
## மத்திய அரசின் 2019-20 ஆம் ஆண்டு முக்கிய சுற்றறிக்கையின்படிஅனுமதிக்கப்பட்ட பணிகளின் விவரம்

| வகைப்பாடு - அ | வகைப்பாடு - ஆ | வகைப்பாடு - இ | வகைப்பாடு - ஈ |
|---|---|---|---|
| **இயற்கை வள மேலாண்மையுடன் தொடர்புடைய பொதுப்பணிகள்** | **நலிவுற்ற இனத்திற்கான பொதுச் சொத்துக்கள் / தனி நபர் சொத்துக்களை உருவாக்குதல்.** | **தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு இணக்கமான சுய உதவி குழுக்களுக்கான பொது உட்கட்டமைப்பு -களை அமைத்தல்** | **ஊரக உட்கட்டமைப்பு வசதிகள்** |
| ● நீராதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீர் சேகரிப்பு கட்டமைப்புகளான நீர் தடுப்புச் சுவர், மண்அணைக் -கட்டுகள், நிறுத்த அணைக்கட்டுகள் மற்றும் தடுப்பணைகள் கட்டுவதன் மூலம் நிலத்தடி நீரினை அதிகப்படுத்தலாம் மற்றும் மேம்படுத்தலாம். குடிநீர் ஆதார அமைப்பு உள்ளிட்ட நிலத்தடி நீரினை மேம்படுத்தும் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.<br>● நீர் வடிப்பகுதி மேலாண்மைப் பணிகளான சம உயர அகழி வெட்டுதல், படியடுக்குத் தளமேடை -யமைத்தல், சமமட்ட வரப்பு அமைத்தல், வலைப்பின்னல் தடுப்பணை, வலைகம்பி அமைப்புகள்/ நீர்ப்பாசன மேலாண்மை போன்ற சிறப்பான பணிகள். | ● கிணறுகள் தோண்டுதல், பண்ணைக் குட்டைகள் மற்றும் இதர நீராதாரப் பணிகள் மூலம் சிறந்த நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் பத்தி எண்.5ல் குறிப்பிடப்பட்டுள்ள பயனாளிகளின்நிலங்களை மேம்படுத்துதல்<br>● தோட்டக்கலை சார்ந்த பணிகள், பட்டு வளர்ப்பு, மரக் கன்றுகள் நடுதல் மற்றும் காடு வளர்ப்பு மூலம் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துதல்.<br>● வகைபாடு 1 பத்தி எண்.5ல் குறிப்பிட்டுள்ள பயனாளிகளின் தரிசு நிலம் அல்லது பயனற்ற நிலங்களை மேம்படுத்தி விவசாய நிலங்களாக மாற்றுதல்<br>● நீடித்து நிலைத்து வளர்கிற புல்களான ஸ்டைலோ மற்றும் வெட்டிவேர் போன்ற புல்களை வளர்த்து மேய்ச்சல் நிலத்தினை மேம்படுத்துதல்<br>● மூங்கில், இரப்பர் மற்றும் தென்னை மர வளர்ப்பு.<br>● மாட்டுக் கொட்டகை ஆட்டுக் கொட்டகை, கோழிக் கொட்டகை, பன்றிக் கொட்டகை, | ● வேளாண்மை உற்பத்தியினை பெருக்கும் வகையில் நாடப் மற்றும் மண்புழு போன்ற உயிர் உரங்கள் தயாரிக்கும் அலகுகள் அமைத்தல் மற்றும் வேளாண் உற்பத்தி பொருட்களை பாதுகாப்பாக வைப்பதற்கு சேமிப்பு கூடங்கள் அமைத்தல்.<br>● சுய உதவிக் குழுக்களுக்கான பொது பணிமனை தளங்களை அமைத்தல். | ● உணவு தானிய சேமிப்பு கிடங்கு அமைத்தல்<br>● சாலை வசதி இல்லாத ஊரகப் பகுதிகளில் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துதல்<br>● விளையாட்டு மைதானம் அமைத்தல்<br>● பேரழிவினை தடுக்கும் ஆயத்தப்பணிகள் மற்றும் சாலைகளை சீரமைத்தல்<br>● வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு பணிகள் உள்ளிட்ட பொது உட்கட்டமைப்பு பணிகள்<br>● கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கான அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல்<br>● மகளிர் சுய உதவிக் குழு மற்றும் கூட்டமைப்பிற் -கான கட்டிடங்கள் கட்டுதல்<br>● புயல் நிவாரணக் கூடங்கள்<br>● அங்கன்வாடி மையகட்டிடங்கள்<br>● கிராம சந்தை மற்றும் |

| வகைப்பாடு - அ | வகைப்பாடு - ஆ | வகைப்பாடு - இ | வகைப்பாடு - ஈ |
|---|---|---|---|
| **இயற்கை வள மேலாண்மையுடன் தொடர்புடைய பொதுப்பணிகள்** | **நலிவுற்ற இனத்திற்கான பொதுச் சொத்துக்கள் / தனி நபர் சொத்துக்களை உருவாக்குதல்.** | **தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு இணக்கமான சுய உதவி குழுக்களுக்கான பொது உட்கட்டமைப்பு - களை அமைத்தல்** | **ஊரக உட்கட்டமைப்பு வசதிகள்** |
| ● மிக நுண்ணிய மற்றும் சிறு நீர்ப்பாசனப் பணிகள் மற்றும் பாசனக் கால்வாய்கள் உருவாக்குதல் புனரமைத்தல் மற்றும் பராமரித்தல்.<br>● பாரம்பரிய நீராதாரங்களான பாசன குளங்கள், இதர நீர்நிலைகள் போன்றவற்றை தூர் வாருதல் மற்றும் படிக்கட்டு கிணறுகளை பாதுகாத்தல்<br>● காடு வளர்ப்பு, மரம் நடுதல் மற்றும் வனப்பகுதி, சாலையோரங்கள், கால்வாய் வரப்புகள், குளங்களின் ஓரங்கள் மற்றும் ஆற்றுப்படுகைகளில் பத்தி எண்.5ல் இடம் பெற்றுள்ள குடும்பங்களுக்கு பயன்படுத்துதல் உரிமையுடன் பழ மரக் கன்றுகள் நடுதல் போன்ற தோட்ட வளர்ப்பு.<br>● நீடித்து நிலைத்து வளர்கின்ற புல்களான ஸ்டைலோ மற்றும் வெட்டிவேர் போன்ற மேய்ச்சல் நிலத்தினை மேம்படுத்துதல்<br>● மூங்கில், இரப்பர், மற்றும் தென்னை | அமைத்தல், கால்நடைத் தீவனத் தொட்டிகளை அமைத்து கால்நடைகளை பாதுகாக்க உட்கட்டமைப்புகளை ஏற்படுத்துதல்.<br>● மீன் உலர் களம், சேமிப்பு வசதிகள், பொது இடங்களில் உள்ள நீர்நிலைகளில் மீன் வளர்த்தல் போன்ற மீன்வளர்ப்புகளை ஊக்குவித்தல் மற்றும் மீன்வளர்ப்புக்கான உட்கட்டமைப்புகளை ஏற்படுத்துதல்<br>● உயிர் உரங்கள் (நாடப், மண்புழு உரங்கள்) தயாரித்தல்<br>● மாநில மற்றும் மத்திய அரசு திட்டங்களின் கீழ் அனுமதிக்கப்பட்ட வீடுகள் கட்டு வதற்கான திறன்சாரா செலவினத்தினை மேற்கொள்ளல்<br>● மாநில மற்றும் மத்திய அரசு திட்டங்களின் கீழ் அனுமதிக்கப்பட்ட வீடுகளில் தனி நபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுதல் | | சுடுகாட்டு கொட்டகைகளை ஊராட்சி மற்றும் வட்டார அளவில் கட்டுதல்<br>● சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட கட்டட பணிகளுக்கு தேவையான கட்டுமானப் பொருட்களை அந்த கட்டிடத்தின் மதிப்பீட்டில் ஒரு அங்கமாக மேற்கொண்டு தயாரித்தல்..<br>● இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஊரக பொது சொத்துக்களை பராமரித்தல். |

| வகைப்பாடு - அ | வகைப்பாடு - ஆ | வகைப்பாடு - இ | வகைப்பாடு - ஈ |
|---|---|---|---|
| இயற்கை வள மேலாண்மையுடன் தொடர்புடைய பொதுப்பணிகள் | நலிவுற்ற இனத்திற்கான பொதுச் சொத்துக்கள் / தனி நபர் சொத்துக்களை உருவாக்குதல். | தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு இணக்கமான சுய உதவி குழுக்களுக்கான பொது உட்கட்டமைப்பு - களை அமைத்தல் | ஊரக உட்கட்டமைப்பு வசதிகள் |
| மர வளர்ப்பு.<br>● பொது இடங்களில் நில மேம்பாட்டு பணிகள் | | | |

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் நீடித்த நிலைத்த வளர்ச்சியினை ஏற்படுத்துதல்** (Sustainable Development Goals)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் உன்னதமான வழிமுறைகள் மற்றும் நோக்கங்களின் மூலம், 'ஐக்கிய நாடு சபையின் நிலைத்த வளர்ச்சி' - யின் நான்கு இலக்குகளான 'பசியின்மை', 'வறுமையின்மை', 'பருவநிலை மாற்றம்' மற்றும் 'ஆண், பெண் சமத்துவம்' போன்றவற்றை அடைய வழிவகை செய்கிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஆண் மற்றும் பெண் அவர்கள் செய்த பணி அளவீடுகளுக்கு ஏற்ப சம ஊதியம் வழங்கப்படுகிறது.

நீடித்த வளர்ச்சியின் முதல் மற்றும் முக்கிய இலக்கான வறுமை இன்மையை அடைய ஊரகப் பகுதிகளில் திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிகபட்சமாக 100 நாட்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கும் ஒரே வறுமை

ஒழிப்பு திட்டமாகும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் ஊரகப் பகுதிகளில் வாழும் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதன் மூலம் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தி பசியினை போக்க உதவுகிறது.

தனி நபர் மற்றும் பொது நிலங்களில் மரங்கள் நடுதல் மூலம் காலநிலை மாறுபாடு மற்றும் அதன் நிகழ்வுகளில் இருந்து நிலங்கள் பாதுகாக்கப்படுகிறது. 2019-20 ஆம் ஆண்டில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், பெருமளவு மரம் வளர்ப்புத் திட்டத்தின் மூலம் 71 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகிறது. அரசுப்பள்ளிகள், கல்லூரிகள், அரசு புறம்போக்கு நிலங்கள், பூங்காக்கள், பொது இடங்கள் மற்றும் சாலையின் இரு ஓரங்களிலும் மரங்கள் நடுவதன் மூலம் கார்பன் வரவு (carbon credit) அதிகரிக்கப்படுகிறது. மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மண் மற்றும் அதன் ஈரப்பதத்தினை பாதுகாக்கும் பணிகள், சிறுபாசன குளம், குட்டை, கால்வாய்கள், ஊரணிகள் மற்றும் பிற நீராதாரங்கள் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்வதன் மூலம் நிலத்தடி நீர் நிலையாக தக்கவைக்கப்பட்டு, காலநிலை மாறுபாட்டினை தடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இயற்கை வள மேலாண்மை பணிகளான தடுப்பணைகள் கட்டுதல், அகழிகள் அமைத்தல், நிலமேம்பாட்டு பணிகள், பாரம்பரிய நீராதாரங்களை பாதுகாத்தல் போன்ற வகைபாடு 'அ' பிரிவில் உள்ள

பணிகள் மொத்த செலவினத்தில் 65 சதவிகிதத்துக்கு குறையாமல், ஊரக பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது.

**திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ள சிறப்பு முயற்சிகள்**

**கால நிர்ணய வேலை அளவீடு**

- பலவகையான வேலைகளுக்கு உரிய கால நிர்ணய வேலை அளவீடு (Time & Motion Study) மேற்கொள்ளப்பட்டு, திருத்திய ஊரக விலைப் புள்ளி பட்டியலின்படி, பல்வேறு பணிகளுக்கு செய்ய வேண்டிய வேலையின் அளவு நிர்ணயிக்கப்படுகிறது.

**ஊரகப் பகுதிகள் இணைப்பு** (Rural Connectivity)

- தமிழகத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் பல்வேறு பகுதிகளில் உள்ள சுகாதாரம், கல்வி, வேலை, சந்தை மையங்கள் மற்றும் இதர சேவைகளை ஊரகப் பகுதியில் வசிக்கும் மக்கள் பெறத்தக்க வகையிலான இணைப்பினை ஏற்படுத்தும் பொருட்டு ஓரடுக்கு மெட்டல் சாலைகள் அமைக்கும் (WBMGR-II) பணிகள் ஊரக இணைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2019-20 ஆம் நிதியாண்டில், 2000 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் அமைக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேற்படி அமைக்கப்படும் ஓரடுக்கு சாலைகள் மத்திய, மாநில அரசுகளால் செயற்படுத்தப்படும் இதர திட்டங்களின் வாயிலாக தார்சாலைகளாக மாற்றப்படுகிறது.

**உறிஞ்சுக் குழி** (Soak Pit)

- ஊரக பகுதிகளில், கழிவு நீரை மிகச் சிறப்பாக மேலாண்மை செய்திடவும், குடியிருப்பு பகுதிகளில் திரவ கழிவுகள் புகுவதை தடுத்திடவும், கழிவு / சாக்கடை நீரை ஒவ்வொரு வீட்டிலும் மேலாண்மை செய்திடல் மிகவும் அவசியமானதாகும். ஒவ்வொரு வீட்டிலும் / தொகுப்புகளிலும் உறிஞ்சுக் குழி அமைப்பதினால், தெருக்களில் கழிவு நீர் ஓடுவது தடுக்கப்படுவதுடன் நீர் சேமிப்பு அமைப்பாகவும் செயல்படுகிறது. 2019-20 ஆம் ஆண்டில், 25,000 சமுதாய உறிஞ்சு குழிகள் மற்றும் 1,75,000 தனி நபர் உறிஞ்சுக் குழிகள் அமைக்கும் பணிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இது தவிர நீர் கழிவு மேலாண்மையின் கீழ், தொகுப்புகள் அளவில் 100 கிடைமட்ட வடிகட்டி அமைக்கும் பணிகளும் மற்றும் 400 செங்குத்து வடிகட்டி அமைக்கும் பணிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**பள்ளி கட்டிடங்களுக்கு சுற்றுச் சுவர் / வெள்ளத் தடுப்புச்சுவர் கட்டுதல்** (Compound Wall)

- பள்ளி மாணவர்களை வெளி நபர்களிடமிருந்தும், விலங்குகளிடமிருந்தும் பாதுகாத்திடவும், பள்ளி சொத்துக்களை அழிவிலிருந்தும், வெள்ள அபாயங்களிலிருந்தும் பாதுகாத்திடவும், மாணவர்கள் கல்வி கற்று வளர்ந்திட பாதுகாப்பான சுற்றுச்சூழலை ஏற்படுத்தும் பொருட்டும், ஊரகப் பகுதிகளில் ஆரம்ப மற்றும் நடு நிலைப்பள்ளிக் கட்டடங்களுக்கு சுற்றுசுவர் / வெள்ளத் தடுப்புச் சுவர் அமைத்து தர திட்டமிட்டு, 2019-20 ஆம் ஆண்டில் 250 கீ.மீ. நீளத்திற்கு ஊராட்சி

ஒன்றிய பள்ளிகளுக்கு சுற்றுசுவர் / வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**தடுப்பணைகள் கட்டுதல்** (Check Dam)

- நிலத்தடி நீரினை அதிகரிக்கும் விதமாக அரசு பண்ணைக் குட்டைகள் அமைத்தல், வரத்துக் கால்வாய்களை சீரமைத்தல் மற்றும் ஏற்கனவே உள்ள குளங்கள், ஊருணிகள் மற்றும் குட்டைகளை தூர் வாருதல் போன்ற பணிகளை செய்து வருகிறது. எனவே மழைநீரினை சேமிப்பதற்கும் மற்றும் நிலத்தடி நீர் அளவை மீள்நிரப்புவதற்கும் 2019-20 ஆம் ஆண்டில் இயற்கை வள மேலாண்மை பணிகளின் ஒரு பகுதியாக 10,000 தடுப்பணைகள் கட்டும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

- பாறை, சிமெண்ட் கான்கீரிட் மற்றும் கம்பிவலைத் தடுப்பணை கட்டும் பணிகளை மேற்கொண்டு வாய்க்கால் வழியாக ஓடும் நீரோடைகளில் தண்ணீர் சேமித்து வைக்கப்படுகின்றன. வாய்க்கால், கால்வாய் ஆகியவற்றின் குறுக்கே கட்டப்படும் இந்த சிறிய தடுப்பணைகளானது மழைக் காலங்களில் ஓடும் நீரினை தடுத்து நிலத்தடி நீரினை செறிவூட்டச் செய்யும்.

2019-20 **ஆம் ஆண்டின் சிறப்பு முயற்சிகள்**

**மாணவ மாணவியருக்கு பள்ளிக் கழிப்பறை கட்டுதல்**

- பள்ளி என்பது குழந்தைகளுக்கு அறிவாற்றல், சிந்திக்கும் திறன் மற்றும் சமூக எண்ணங்களை உருவாக்கும் இடமாகும். சிறந்த பள்ளிக்குழந்தைகளுக்கு சுகாதாரம்

மிக முக்கியமான காரணியாகும். சுகாதாரத்தினை நிலைநிறுத்துவதற்கு ஒவ்வொரு பள்ளிக்கூடங்களிலும் பள்ளிக்கழிப்பறை இருப்பது ஒரு அடிப்படை உட்கட்டமைப்பாகும். சில பள்ளிகளில் பயிலும் பள்ளிக்குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் தேவையான கழிப்பறைகளின் எண்ணிக்கைகள் இருப்பது இல்லை. எனவே ஊரகப்பகுதிகளில் அவசியம் மற்றும் தேவைப்படும் இடங்களில் கூடுதலாக பள்ளிக் கழிப்பறைகள் கட்டப்பட வேண்டும். ஊரகப்பகுதிகளில் ஊராட்சி ஒன்றிய மற்றும் அரசு ஆரம்ப பள்ளிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மற்றும் அரசு நடுநிலைப்பள்ளிகளில் 400 கழிப்பறைகள் மாணவர்களுக்கும் மற்றும் 600 கழிப்பறைகள் மாணவிகளுக்கும் தனித்தனியாக மொத்தம் 1000 பள்ளிக்கழிப்பறைகள் 2019-20ம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**ஊரகப்பகுதிகளில் அம்மா விளையாட்டு மையம் அமைத்தல்**

- மாநிலத்தில் உள்ள ஊரக இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவித்து அதன் வழியாக உடல் வலிமையுடன் மனதினை வலிமைப்படுத்தவும் மற்றும் நட்புடனான போட்டிகளை வளர்க்கவும் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை உருவாக்கியுள்ளளது. இதனால் இளைஞர்களின் ஆளுமை திறனில் நேர்மறையான ஒரு தாக்கம் ஏற்படுத்தப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை பிறத்துறையுடன் ஒருங்கிணைத்து கைப்பந்து திடல், கபடி திடல் மற்றும் மட்டைப்பந்து அல்லது பூப்பந்து திடல் ஆகிய மூன்று

திடல்களையும் கொண்ட 12524 அம்மா விளையாட்டு மையம் 2019-20ல் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**உலர்களம் அமைத்தல்**

- அரிசி, மக்கா சோளம், தானியங்கள் மற்றும் பிற சிறுதானியங்கள் போன்ற விவசாய உணவு பொருட்கள் அறுவடை செய்யும் பொழுது வைக்கோல் மற்றும் உமி போன்ற பொருட்கள் கலந்திருக்கும். அறுவடை செய்யப்பட்ட பிறகு உணவு தானியங்கள், வைக்கோல் போன்ற பொருட்களிலிருந்து கதிரடித்தல் மூலம் பிரிக்கப்படும். பொதுவாக, விவசாய நிலங்களுக்கு அருகில் உள்ள திறந்த வெளி தரைப் பகுதியில் இக்கதிரடித்தல் பணியினை விவசாயிகள் மேற்கொள்வர். இதன் மூலம் விவசாய நிலங்களில் உள்ள சிறிய கற்கள் உணவு பொருட்களுடன் கலப்பதற்கு வாய்ப்புள்ளது. மேலும் விவசாயிகள், விளை பொருட்களுக்கு அதிக விலை பெறும் பொருட்டு உலரவும் வைப்பர். ஆனால் விவசாய நிலத்தின் ஈரப் பதத்தினாலும், கற்களினாலும் விளை பொருட்களின் தரம் குறைவதோடு அதற்கான விலையும் குறைகிறது. எனவே, கதிரடிப்பதற்கும் மற்றும் விளை பொருட்களை உலர வைப்பதற்கும் உலர்களம் மிகவும் பயனுள்ளதாகும். ஊரகப் பகுதிகளில் விவசாய நிலங்களுக்கு அருகில் உள்ள ஊராட்சி புறம்போக்கு பகுதிகளில் கட்டப்படும் உயர்ந்த சிமெண்ட் காங்கிரீட் தளங்களே உலர்களங்களாகும். 2019-20 ஆம் ஆண்டில் 100 உலர் களங்கள் அமைக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**பேவர் பிளாக் சாலைகள்**

- பேவர் பிளாக் சாலைகள் என்பது அனைத்து பருவ நிலைகளுக்கும் ஏற்ற ஊரக இணைப்பு சாலைகளில் ஒன்றாகும். இச்சாலைகள் மழை காலங்களில் ஊரக பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு பாதுகாப்பாக செல்ல ஏற்றதாகும். 2019-20 ஆம் ஆண்டில் 300 கிமீ நீளத்திற்கு பேவர் பிளாக் பதிக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**குறு பாலங்கள், சிறு பாலங்கள் மற்றும் தரைப்பாலங்கள் (குறுக்கு வடிகால் கட்டமைப்புகள்)**

- ஊரகப் பகுதிகளில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படா வண்ணம், சாலையின் ஒருபுறமிருந்து மற்றொரு புறம் வெள்ள நீர் மற்றும் ஓடை நீரைக் கடத்திட குறு பாலங்கள், சிறு பாலங்கள் மற்றும் தரைப் பாலங்கள் போன்ற வடிகால் கட்டமைப்புகள், பெரும்பங்கு வகிக்கின்றன. 2019-20 ஆம் ஆண்டில் 700 குறு பாலங்கள், 250 சிறிய பாலங்கள் மற்றும் 100 தரைபாலங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**நீர்ப்பாதுகாப்பு மற்றும் பருவநிலையினை அதற்கேற்றவாறு பொருத்தமாக்கிக் கொள்ளுதல்** (WASCA)

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை ஒருங்கிணைத்து அறிவியல் திட்டமிடல் மற்றும் நீர் சார்ந்த பணிகளை புதிய தொழில்நுட்ப உதவியுடன் செயற்படுத்துதல் ஆகியவை மூலம் நீர் பாதுகாப்பு மேலாண்மை செய்யப்படுகிறது. மத்திய ஊரக

அமைச்சகம் மற்றும் GIZ நிறுவனம் இணைந்து ஊரகப்பகுதிகளில், நீர்ப்பாதுகாப்பு மற்றும் பருவநிலையினை அதற்கேற்றவாறு பொருத்தமாக்கிக் கொள்ளுதல் (WASCA) என்ற இருதரப்பு திட்டத்தினை, ஏப்ரல் 2019 முதல் மார்ச் 2022 வரை செயற்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் இந்திய அரசு மற்றும் ஜெர்மன் அரசு என்ற இரண்டு அரசாங்கத்தாலும் அனுமதிக்கப்பட்டு, இந்தியாவில்ராஜஸ்தான், மத்திய பிரதேசம், உத்திர பிரதேசம் மற்றும் தமிழ்நாடு போன்ற 4 மாநிலங்கள் மாதிரி மாநிலங்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளன.

- திட்டமிடல் மற்றும் நிதி வழிமுறை, ஒரு மாநிலத்திற்கு 2 மாவட்டங்களில் நீர் மேலாண்மை நடவடிக்கைகளை நிரூபித்தல் மற்றும் பலப்படுத்துதல் மற்றும் தனியார் துறை / CSR பங்கேற்பு போன்ற முக்கிய நோக்கத்துடன் செயற்படுத்தப்படும். தமிழ்நாட்டில், முழுமையான ஆய்வு அண்ணா பல்கலைகழகத்தின் காலநிலை மாற்றம் மற்றும் பேரழிவு மேலாண்மை மையம் (CCCDM) மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அறிவியல் சார்ந்த காரணிகள் மூலம் ஆய்வு மேற்கொண்டதன் அடிப்படையில், இராமநாதபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் இத்திட்டத்தினை செயற்படுத்த மாதிரி மாவட்டங்களாக தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்டுள்ளன. உப்பு நீர் ஊடுருவுதல், மற்றும் கடலோர மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் அதிக பருவநிலை ஆபத்துடையதும் மற்றும் மிகவும் பின்தங்கிய காரணிகளால்

திருவண்ணாமலை மாவட்டம் இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, சுற்றுப்புற சூழல் துறை, வனத்துறை, நீர் வளத்துறை, மாநில நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர் வளத்துறை மையம் மற்றும் நீர் ஆய்வு நிறுவனம் (தரமணி), தமிழ்நாடு நீர் வழங்கல் மற்றும் வடிகால் துறை, தமிழ்நாடு நீர் வடிப்பகுதி மேலாண்மை, தோட்டக்கலை பணி, மீன் வளத்துறை, நபார்டு, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், நீலகிரியில் அமைந்துள்ள மத்திய மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், அண்ணா பல்கலைகழகத்தின் காலநிலை மாற்றம் மற்றும் பேரழிவு மேலாண்மை மையம் (CCCDM), மாநில தொலை உணர்திறன் மையம் அண்ணா பல்கலைக் கழகம் மற்றும் மத்திய நிலத்தடி நீர் மையம் போன்றவற்றுடன் ஒருங்கிணைத்து நீர்ப்பாதுகாப்பு மற்றும் பருவநிலையினை அதற்கேற்றவாறு பொருத்தமாக்கிக் கொள்ளுதல் (WASCA) திட்டத்தினை செயற்படுத்தவிருக்கிறது.

**உன்னதி திட்டம்**

- உன்னதி திட்டம் என்பது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்களின் திறன்களை மேம்படுத்தி, அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தினையும் மற்றும் தற்பொழுது அவர்கள் பெற்று வரும் பகுதி நேர வேலையினை முழு நேர

வேலையாக மாற்றுவதற்கும் மற்றும் அவர்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை சார்ந்திருப்பதை குறைக்கவும் வழிவகை செய்கிறது.

- இத்திட்டம் தேவைப்படும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களுக்கு சுய வேலைவாய்ப்பு அல்லது ஊதிய வேலை வாய்ப்பிற்கான திறனை அளித்து அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துகிறது. சென்ற வருடத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 100 நாட்கள் வேலை செய்து முடிக்கப்பட்ட குடும்பங்களில் 18 வயது முதல் 45 வயது வரை உள்ள நபர்களுக்கு உன்னதி திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்கப்படும்.

- தீன் தயால் உபாத்யாயா, கிராமின் கௌசல்ய யோஜனா திட்டம் மற்றும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் ஊதிய வேலைவாய்ப்பிற்கான பயிற்சியையும் மற்றும் கிரிஷ்சி விஞ்ஞான் கேந்திராக்கள் மூலம் சுய வேலைவாய்ப்பு பயிற்சியினையும் அளிக்கிறது. ஒரு நபர் ஒரு பயிற்சியினை மட்டுமே பெற முடியும். ஒரு நாளுக்கு ரூ.199 என உதவித் தொகையும் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 100 நாட்கள் வேலை வாய்ப்பினையும் பெற முடியும். இத்திட்டம் 36 ஊரக மாவட்டங்களிலும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார மையம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் மூலம் மத்திய

அரசு, ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் 100 சதவிகிதம் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும்.

**தொகுப்புகளை மேம்படுத்தும் திட்டம்** (Cluster Facilitation Project)

- தொகுப்புகளை மேம்படுத்தும் திட்டம் என்பது முன்னேற விளையும் மாவட்டங்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட இடங்களில் மத்திய மற்றும் மாநில அரசுகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் மற்றும் மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், புவியியல் தகவல் அமைப்பு திட்டமிடல் மூலம் பல முனை உத்திகள் மற்றும் திறன்களைக் கொண்டு உயர்த்துவதாகும். தொகுப்பு மேம்படுத்தும் திட்டத்தினை சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் செயற்படுத்துதலுக்காக, குடிமை சமூக அமைப்புகள் (Civil Society Organisation) அல்லது குழுவிற்கான அலுவலர்கள் மனிதவள முகவர் நிறுவனங்கள் (HR Agencies) மூலம் நியமனம் செய்யப்படுவதன் மூலம் செயற்படுத்தப்படும். தமிழ்நாட்டில் 2 ஊராட்சி ஒன்றியங்கள் வீதம் 2 முன்னேற விளையும்மாவட்டங்கள் இராமநாதபுரம், விருதுநகர் ஆகியவற்றிலிருந்தும், பின்தங்கிய 1 ஊராட்சி ஒன்றியம் சிவகங்கை மாவட்டத்திலிருந்தும் என 5 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட வேண்டும். இத்திட்டம் 01.04.2020 முதல் 31.03.2023 வரை 3 வருடம் செயற்படுத்தப்படும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தினை

செயற்படுத்துவதில் மிகக்குறைவான அளவு செயல்திறன் (மனிதசக்தி நாட்கள் உருவாக்குதல், குறித்த நேரத்திற்குள் ஊதியம் அளித்தல் போன்ற பிற), அதிகளவில் ஆதிதிராவிடர் மக்கள் தொகையினை கொண்டிருத்தல், பழங்குடியினர் வாழும் பகுதியினை கொண்டிருத்தல், மிகக்குறைந்த அளவு இணைப்பு சாலைகளை பெற்றிருத்தல், நீர் பாதுகாப்பு மேலாண்மைக்கான ஊராட்சி ஒன்றியங்கள் (மிக குறைந்த அளவு நீர் மற்றும் குறைந்த நீர் அளவு உள்ள பகுதிகள்) போன்ற காரணிகள் மூலம் வட்டாரங்கள் தேர்வு செய்யப்படும். தொகுப்புகளை மேம்படுத்தும் திட்டம் செயற்படுத்துவதற்கான செலவினம், அலுவலர்கள் மற்றும் உட்கட்டமைப்பு செலவினம் ஊரக வளர்ச்சி அமைச்சகம், மத்திய அரசு மூலம் முழுமையாக விடுவிக்கப்படும்.

**சாதனைகள்**

- 2019-20 ஆம் ஆண்டில் 29.02.2020 வரை 22.80 கோடி மனித சக்தி நாட்கள், ரூ.5,242.55 கோடி மொத்த செலவினத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

**குறித்த காலத்திற்குள் ஊதியம் வழங்குதல்**

- 2019-20 ஆம் நிதியாண்டில் 99.64 சதவிகிதம் ஊதியத் தொகையினை பதினைந்து நாட்களுக்குள் வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசு குறித்த காலத்திற்குள் ஊதியம் வழங்குதலை T+8 னை நிலை I ஆகவும் மற்றும் T+9 - T+15 னை நிலை II ஆகவும் மாற்றியுள்ளது.

**சிறந்த ஆளுமை முயற்சிகள்**

மத்திய அரசின் அறிவுரைகளின்படி, மாவட்ட அளவில் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் செயற்பொறியாளர் (ஊ.வ), அனைத்து உதவி இயக்குநர்கள் / மண்டல அலுவலர்கள் கொண்ட கண்காணிப்புக் குழு ஏற்படுத்தப்பட்டு சிறந்த ஆளுமை முயற்சிகள், வேலை அடையாள அட்டையினை புதுப்பித்தல், ஊராட்சி அளவில் 7 கட்டாய பதிவேடுகள் பராமரித்தல், பணிக்கோப்பு மற்றும் குடிமக்கள் தகவல் பலகை அமைத்தல் போன்ற சிறந்த ஆளுமை முயற்சிகள் சிறப்பான முறையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

அதே நேரத்தில், மாநில அளவில் கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, மாவட்ட அளவில் சிறந்த ஆளுமை முயற்சிகள் செயற்படுத்தப்படுவதுகண்காணிக்கப்பட்டு மேற்பார்வையும் செய்யப்பட்டு வருகிறது.

**வங்கிகள் மூலம் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குதல் / மின்னணு நிதி மேலாண்மை மூலம் ஊதியம் வழங்குதல்**

மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பயனாளிகளுக்கு, 07.11.2016 முதல் தேசிய மின்னணு நிதி மேலாண்மை முறை (Ne-FMS) மூலம் நேரடியாக மத்திய அரசால் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் ஊதியத்தொகை வரவு வைக்கப்படுகிறது.

இதைப்போலவே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 01.04.2017 முதல் நிர்வாகச்

செலவினம் மற்றும் பொருட்கூறு செலவினமும் மின்னணு நிதி மேலாண்மை முறை (e-PFMS) மூலம்மேற்கொள்ளப்படுகிறது.

**மின்னணு வருகைப் பதிவேடு (e-MR) முறையை செயற்படுத்துதல்**

- மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, தமிழ் நாட்டில் மின்னணு வருகைப் பதிவேடு (e-MR) நவம்பர் 2017ஆம் ஆண்டிலிருந்து வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தொழிலாளர்களின் வங்கி கணக்குகளுடன் ஆதார் எண்களை இணைத்தல்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களது வங்கி கணக்கில் ஆதார் எண் அடிப்படையில் ஊதியம் வழங்கும் முறையில் (Aadhar Based Payment System) ஊதியத்தினை ஈடு செய்வதற்காக தேசிய ஊரக வேலை உறுதிச் சட்ட வலைதளத்தில் அனைத்து மகாத்மா தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களது ஆதார் எண்களும் இணைக்கப்பட்டு வருகிறது. ஆதார் எண்களை இணைப்பதன் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தகவல் தளம் சீராவதோடு தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் விரைவாகவும், வெளிப்படையாகவும் வங்கிக் கணக்கில் சேர்க்கப்படுகின்றது.

இதுவரை 2019-20 ஆம் ஆண்டில் மொத்தம் உள்ள 88.64 இலட்சம் செயற்பாட்டு தொழிலாளர்களில்,

87.10 இலட்சம் (98%) தொழிலாளர்களின் ஆதார் எண்கள் இணைக்கப்பட்டு, ஆதாருடன் இணைந்த ஊதியம் செலுத்தும் முறையில் (Aadhar Based Payment System) ஊதியம் 75.49 இலட்சம் (85.16%) பயனாளிகளுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**சொத்துக்களுக்கு புவிக் குறியிடுதல்** (Geo tagging)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், புவிக் குறியிடுதல் (**Geo tagging)**என்பது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்கள், புள்ளி விவரங்கள் மற்றும் தகவல்களை ஆய்வு செய்வதற்கு உதவுகின்றன. இதன் மூலம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் இந்தியா முழுவதும் உருவாக்கப்பட்ட சொத்துக்களை வரைபடத்தில் காணலாம். இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (Indian Space Research Organisation) ஒரு அமைப்பான தேசிய தொலை உணர்வு மையம் (National Remote Sensing Corporation) மூலம் புவன் என்ற மென்பொருள் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகத்தின் NREGASoftஎன்ற இணையதளத்திலிருந்து சொத்து குறித்த விவரங்களை புவன் மென்பொருள் மூலம் அறியலாம். NREGASoftமற்றும் புவன் மென்பொருளின் தனித்துவ சிறப்புகளை ஒருங்கிணைத்து, புவிசார் சொத்து மேலாண்மை கருவியாக உருவாக்கப்பட்டு அதற்கு ‘ஜியோ நரேகா’ (Geo MGNREGA) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

திட்டம் துவங்கப்பட்டது முதல் உருவாக்கப்பட்ட சொத்துக்களில் 26,17,993 சொத்துக்கள் 06.03.2020 வரை புவிக்குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட செயலாக்கத்தில் மாநிலம் மற்றும் மாவட்டங்கள் பெற்ற தேசிய அளவிலான விருதுகள்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை 2018-19 ஆம் நிதியாண்டில் சிறப்பாக செயல்படுத்தியமைக்காக மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் 19.12.2019 அன்று, சி.சுப்ரமணியன் ஹால், பூசா மையம், புதுடில்லியில் தேசிய அளவிலான விருது வழங்கும் விழா நடத்தப்பட்டது. அதில், தமிழ்நாட்டிற்கு தேசிய அளவிலான 2 மாநில விருதுகள், 4 மாவட்ட விருதுகள், 1 ஊராட்சி ஒன்றிய விருது மற்றும் 1 கிராம ஊராட்சி விருது ஆகியவை கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டன.

| மாநில விருது | மாவட்ட விருது | சிறந்த ஊராட்சி ஒன்றியத்திற்கான விருது | கிராம ஊராட்சிக்கான விருது |
|---|---|---|---|
| ❖ பணிகளை முடித்ததில் சிறந்த செயல்பாடு - **முதலிடம்**<br>❖ இயற்கை வள மேலாண்மை பணிகளை செயற்படுத்துவதில் சிறந்த செயல்பாடு – **முதலிடம்** | ❖ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியமை - **வேலூர்**<br>❖ குறித்த காலத்திற்குள் தொழிலாளர்-களுக்கு ஊதியம் வழங்குதலில் சிறப்பான செயற்பாடு - **திருச்சிராப்பள்ளி–முதலிடம்**<br>❖ பணிகள் | ❖ குறித்த காலத்திற்குள் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குதலில் சிறப்பான செயற்பாடு **- புனித தோமையர் மலை ஊராட்சி ஒன்றியம், காஞ்சிபுரம் மாவட்டம் - முதலாமிடம்** | ❖ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியது - **செலுகை கிராம ஊராட்சி, தேவகோட்டை ஊராட்சி ஒன்றியம், சிவகங்கை மாவட்டம்** |

| மாநில விருது | மாவட்ட விருது | சிறந்த ஊராட்சி ஒன்றியத்திற்கான விருது | கிராம ஊராட்சிக்கான விருது |
|---|---|---|---|
| | முடித்தலில் சிறப்பான செயற்பாடு - **கரூர்– இரண்டாமிடம்**<br>❖ சிறந்த நீர் தேக்கி வைக்கும் கட்டமைப்பினை உருவாக்கியமை - **வேலூர் - இரண்டாமிடம்** | | |

## 2020-21 **ஆம் ஆண்டின் மனித சக்தி நாட்கள் மதிப்பீடு செயலாக்க முயற்சிகள்**

மனித சக்தி நாட்கள் மதிப்பீடு ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் தயாரிக்கப்பட்டு கிராம சபையினால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது. 2020-21 ஆம் நிதியாண்டிற்கான மனித சக்தி நாட்கள் மதிப்பீடு தயாரிக்கும் பணியில் தொகுப்பு வாரியான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கிராம சபை மற்றும் சிறப்பு கிராம சபைக்கூட்டம் முறையே 02.10.2019 மற்றும் 25.10.2019 அன்று நடத்தப்பட்டு இறுதி செய்யப்பட்டுள்ளது.

2020-21 ஆம் ஆண்டுக்கான மத்திய அரசு, ஊரக வளர்ச்சி அமைச்சகம் தொழிலாளர் வரவு செலவு திட்டத்திற்கான கூட்டத்தினை 13.03.2020 அன்று நடத்தியுள்ளது.

**சமூக தணிக்கை**

**வரையறை**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தணிக்கை விதிகள் 2011 பிரிவு 3(1)-ன்படி ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் இச்சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளை மாநில அரசாங்கம் குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை சமூக தணிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யவேண்டும். சமூக தணிக்கை வள அலுவலர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில், மக்களால் சமூக தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நிதி செலவினம் மட்டுமல்லாது திட்டத்தின் செயல்முறை, சமூக ஏற்றத்தாழ்வு மற்றும் பணித்திறன் ஆகிய கோணங்களிலிருந்து ஆய்வு செய்வது சமூக தணிக்கையின் நோக்கமாகும். சமூக தணிக்கையானது, தகவல் பரிமாற்றம், கல்வி, தகவல் தொடர்பு ஆகியவற்றின் மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை அதிகப்படுத்தவும், வளர்ச்சித் திட்டங்களின் செயல்பாடுகளான திட்டமிடுதல், பணிகளை தேர்வு செய்தல், அமல்படுத்துதல், செயல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் பொது மக்களின் பங்கேற்பினை அதிகப்படுத்தவும் உதவுகிறது.

**நோக்கம்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தினை செம்மையாக செயல்படுத்துவதை உறுதி செய்யும் பொருட்டு, மத்திய மாநில அரசுகளின் வழிகாட்டுதலின்படி ஊராட்சிகளிலுள்ள கிராம சபைகளால் சமூக தணிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கம் வழிவகை செய்கிறது.

**பணியமைப்பு மற்றும் நிர்வாகம்**

அரசாணை (நிலை) எண் 125, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (CGS.1) துறை, நாள் 21.12.2012-ன்படி தமிழ்நாடு சமூக தணிக்கைச் சங்கம் உருவாக்கி துணை விதிகளுக்கு ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டதை தொடர்ந்து, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன் கீழ் ஜனவரி 9, 2013 ஆம் தேதியன்று தமிழ்நாடு சமூக தணிக்கைச் சங்கம் பதிவு செய்யப்பட்டது.

அரசாணை (நிலை) எண் 64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (CGS.1) துறை நாள்: 27.07.2012-ன்படி, தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கம் 2013 ஆம் வருடம்உருவாக்கப்பட்டது.மேற்குறிப்பிடப்பட்டுள்ளஅரசாணையின்படி, ஒரு இயக்குநர், இரண்டு இணை இயக்குநர்கள், ஒரு உதவி இயக்குநர், மாவட்டவள அலுவலர் மற்றும் வட்டார வள அலுவலர், பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

மேலும், மேற்குறிப்பிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண் 64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (CGS.1) துறை நாள்: 27.07.2012-ன்படி, 44 மாவட்ட வள அலுவலர்கள், 31 உதவிபுரியும் அலுவலர்கள் மற்றும் 770 வட்டார வள அலுவலர்கள் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டது. சமூக தணிக்கை நிகழ்வுகளை கண்காணித்தல் அதன் முடிவுகள் மற்றும் அவற்றின் மீதான சிறப்பு அறிக்கையை மாநில சமூக தணிக்கை சங்க இயக்குநருக்கு அனுப்புதல் ஆகியவை மாவட்ட வள அலுவலரின் பணிகளாகும்.

சமூக தணிக்கை வருடாந்திர நாட்காட்டியின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளில் சமூக தணிக்கை பணியினை கிராம ஊராட்சி வள அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து சமூக தணிக்கை மேற்கொள்வது, சமூக தணிக்கை அறிக்கையினை கிராம சபை முன்பாக சமர்ப்பித்து, உரியவாறு கிராம சபையின் ஒப்புதல் பெறுவது ஆகியவை வட்டார வள அலுவலர்களின் பணியாகும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பணிகளில் குறைந்தபட்சம் 25 நாட்கள் பணிபுரிந்த மற்றும் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களிலிருந்து 24,831 மகளிர்களை தேர்வு செய்து அவர்களுக்கு கிராம ஊராட்சி வள அலுவலர்களுக்கான 4 நாட்கள் பயிற்சி, மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் கையேட்டின் அடிப்படையில் வழங்கப்பட்டது.

**திட்ட செயலாக்கப்பகுதி**

தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கத்தின் திட்ட செயலாக்க பகுதியானது அனைத்து ஊரகப் பகுதிகளை உள்ளடக்கிய 36 மாவட்டங்கள், 388 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 12,525 கிராம ஊராட்சிகளை கொண்டதாகும்.கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள திருவட்டார்வட்டாரத்திற்கு உட்பட்ட “பாலமோர்” என்ற கிராம ஊராட்சியைத் தவிர ஏனைய அனைத்து கிராம ஊராட்சிகளிலும், சமூக தணிக்கைப் பணி செயல்படுத்தப்படுகிறது. பாலமோர் கிராம ஊராட்சியானது முழுவதும் இரப்பர் தோட்டங்களால்சூழப்பட்டுள்ளதால்,

இக்கிராம ஊராட்சியில் மகாத்மா காந்திதேசிய ஊரக வேலை உறுதி திட்டம்செயல்படுத்தப்படவில்லை.

**சமூக தணிக்கை நிகழ்வுகள்**

சமூக தணிக்கை நிகழ்வுகளானது பின்வருமாறு 5 நாட்கள் மேற்கொள்ளப்படுகிறது.

| | |
|---|---|
| நாள் – 1 | (அ) வட்டார அளவிலான திட்ட செயலாக்கத்தினர், கிராம ஊராட்சி அளவில் தேர்வுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், மகளிர் சுயஉதவி குழுக்கள் ஆகியோர்களுடன், கிராம ஊராட்சி அளவில் ஒருங்கிணைப்புகூட்டம் நடத்துதல். (காலையில்)<br>(ஆ)கிராம ஊராட்சி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை சரிபார்த்தல்.<br>(இ) சமூக தணிக்கை குறித்து, குடியிருப்பு வாரியாக மக்களிடையே விழிப்புணர்வு கூட்டம் நடத்துதல். (மாலையில்) |
| நாள் - 2 | தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்ட பயனாளிகளின் வசிப்பிடம் வாரியாக பயனாளிகளை தனித் தனியாக சந்தித்து கலந்துரையாடல் செய்தல், வேலை அட்டையினை தொடர்புடைய ஆவணங்களுடன் ஒப்பீடுசெய்து கையொப்பம் பெறுதல், பயனாளிகளிடம் கோரிக்கை மனுக்களைப் பெறுதல். |
| நாள் - 3 | கள ஆய்வு மற்றும் பணிகளை கள அளவீடு மேற்கொள்ளுதல். |
| நாள் - 4 | சமூகத் தணிக்கை அறிக்கை தயார் செய்தல். |
| நாள் - 5 | சிறப்பு கிராம சபை கூட்டம் நடத்துதல். |

## 2019-20 **ஆம் ஆண்டின் சமூக தணிக்கை செயல்பாடுகள்**

2019 - 20 ஆம் நிதியாண்டில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து 12,523 கிராம ஊராட்சிகளிலும் சமூக தணிக்கை நிறைவு பெற்றுள்ளது. மேலும், நிலுவையிலிருந்த 2,188 கிராம ஊராட்சிகளிலும் சமூக தணிக்கை பணி முடிக்கப்பட்டது.

2019 - 20 ஆம் ஆண்டில் 24 மாவட்ட வள அலுவலர்களும் 580 வட்டார வள அலுவலர்களும் சமூக தணிக்கை பணியில் ஈடுபடுத்தபட்டனர். 2019 - 20 ஆம் ஆண்டிற்கான சமூக தணிக்கை அறிக்கைகள் தொகுக்கப்பட்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. (www.nrega.nic.in)

**சமூக தணிக்கையின் தாக்கம்**

சமூக தணிக்கையினை, திட்டத்தின் பயனாளிகளேமேற்கொள்வதால், சமூக தணிக்கையானது திட்டப்பயனாளிகளிடையேயும், திட்டத்தினை செயல்படுத்துபவர்கள் மத்தியிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சமூக தணிக்கைக்காக ஏற்பாடு செய்யப்படும் சிறப்பு கிராம சபையில் நடைபெறும் விவாதமானது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட செயல்பாட்டின் பொது கருத்து கேட்பினை ஒத்து இருப்பதால், இத்திட்டத்தில் பணிபுரிபவர்கள் தங்களுடைய உரிமைகள் மற்றும் பலன்களை அறிந்துகொள்ளும்

விழிப்புணர்வு கூட்டமாகவும் சிறப்பு கிராம சபை அமைகிறது. மேலும், வட்டார அளவிலும் கிராம ஊராட்சி அளவிலும் பராமரிக்கப்படும் பதிவேடுகளின் பதிவுகள் மேம்படுத்தப்பட்டுள்ளதோடு அதன் முக்கியத்துவமும் அறியப்பட்டுள்ளது.

## 2020-21 **ஆம் ஆண்டிற்கான சமூக தணிக்கை நடவடிக்கைகள்**

2020-21 ஆம் நிதியாண்டில் 12,523 கிராம ஊராட்சிகளில் சமூக தணிக்கை மேற்கொள்ள விரிவான கால அட்டவணை தயார் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. சமூக தணிக்கை கால அட்டவணை அச்சடித்து தயார் செய்த பின்னர் அதன் நகல்கள் அனைத்து மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியர், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை), ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர், இந்திய அரசு, மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம், புதுடில்லி மற்றும் தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம் & பஞ்சாயத்து ராஜ் (ஹைதராபாத்) ஆகியோர்களுக்கு அனுப்பப்படும்.

மத்திய அரசு வழிகாட்டுதல்களின் அடிப்படையில், தேசிய சமூக பாதுகாப்பு உதவித் திட்டங்கள் (NSAP), பாரத பிரதமர் வீடு வழங்கும் திட்டம் (PMAY-G) மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் ஆகிய திட்டங்களை 2020-21-ம் வருடத்தில் சமூக தணிக்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

4.2. **பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம்(ஊரகம்)**

மத்திய அரசின் பங்களிப்பு திட்டமான இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், 2016-17 ஆம் ஆண்டு முதல் சீரமைக்கப்பட்டு பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளில் வாழும் வீடு இல்லாத, குடிசை வீடுகளில் மற்றும் மிகப்பழுதடைந்த வீடுகளில் வசிக்கும் ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய நிலையான வீடு கட்டிக் கொடுப்பதே இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும்.

சமூக பொருளாதார கணக்கெடுப்பு பட்டியல் 2011ன் அடிப்படையில் கிராம சபை மூலம் பயனாளிகள் கண்டறியப்படுகின்றனர்.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) கீழ் மொத்த ஒதுக்கீட்டில் 60 விழுக்காடு ஆதிதிராவிடர்கள் / பழங்குடியினர் வகுப்பினருக்கும், 40 விழுக்காடு இதர வகுப்பினருக்கும் (சிறுபான்மையின வகுப்பினர் உட்பட) ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேற்கண்ட இரு இனங்களில் 5 விழுக்காடானது, மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஒரு வீட்டின் கட்டடப் பரப்பளவு 269 சதுர அடி ஆகும்.

ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.1.20 இலட்சம் என மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசின் நிதி பங்கீடு 60:40 என்ற விகிதத்தில் உள்ளது (மத்திய அரசு ரூ.72,000 மற்றும் மாநில அரசு ரூ.48,000). தமிழக அரசு, கான்கிரீட் மேற்கூரை

அமைப்பதற்காக, அலகுத் தொகையை விட ரூ.50,000 கூடுதல் நிதியாக மாநில நிதியிலிருந்து வழங்குகிறது. எனவே தமிழ்நாட்டில் ஒரு வீட்டின் மொத்த அலகுத் தொகை ரூ.1.70 இலட்சம் ஆகும்.

அலகுத் தொகையுடன் கூடுதலாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பயனாளிக்கும் அறிவிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் வீடு கட்டுவதற்காக 90 மனித நாட்களுக்கான ஊதியம் அளிக்கப்படுகிறது. (90 x ரூ.229 = ரூ.20,610)

மேலும், பயனாளிக்கு தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டும் பணிக்கு ரூ.12,000 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து வழங்கப்படுகிறது.

இவை தவிர, பயனாளிகளுக்கு மானிய விலையில் சிமெண்ட் மூட்டைகள் வழங்கப்படுகிறது. மேலும் இரும்பு கம்பிகள், கதவுகள் மற்றும் ஜன்னல்கள் பயனாளிகளின் தேவைக்கேற்ப வழங்கப்படுகிறது, இப்பொருட்களுக்கான கிரையத் தொகை, பயனாளிகளுக்கு வழங்கப்படும் பட்டியல் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.

2015-16 ஆம் ஆண்டு முதல் பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தொகை பொது நிதி மேலாண்மை முறையின் (PFMS) மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வரவு வைக்கப்படுகிறது.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்ட (ஊரகம்) செயலாக்கம் மற்றும் கண்காணிப்பு ஆகியவை ஆவாஸ்சாப்ட்

மற்றும் ஆவாஸ்ஆப் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. இவ்விரண்டு தகவல் தொழில்நுட்ப பயன்பாடுகள்இத்திட்டத்தினை ஒவ்வொரு நிலையிலும்செயல்படுத்துவதற்கான பயனுள்ள கண்காணிப்பு தொழில் நுட்பத்தை வழங்குகிறது.

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ் சமூக பொருளாதார கணக்கெடுப்பு பட்டியல் 2011-ன் அடிப்படையில் கிராம சபை மூலம், பயனாளிகள் கண்டறியப்படுகின்றனர். ஆனால் பல தகுதி வாய்ந்த பயனாளிகள் சமூக பொருளாதார கணக்கெடுப்பு பட்டியல் 2011-ல் விடுபட்டுள்ளனர் என கண்டறியப்பட்டுள்ளது. தகுதியுள்ள விடுபட்ட பயனாளிகளை சமூக பொருளாதார கணக்கெடுப்பு பட்டியல் 2011-ல் சேர்த்திட மத்திய அரசின் அறிவுரைப்படி, மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு, 9.11 இலட்சம் தகுதியுள்ள பயனாளிகள் கண்டறியப்பட்டு, பயனாளிகளின் பெயர் மற்றும் விவரங்கள் "ஆவாஸ்ப்ளஸ்"மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) கீழ் பயனாளிகளிடமிருந்து பெறப்படும் புகார்களை பரிசீலனை செய்து, பயனாளிகளின் பெயர்களை பயனாளிகள் பட்டியலில் சேர்க்கவும் / நீக்கவும் மற்றும் தீர்வு செய்யவும் ஒரு குறை தீர்க்கும் அமைப்பாக மேல்முறையீட்டுக் குழு மாவட்ட அளவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) கீழ் 2016-17 முதல் 2019-20 வரை 5,27,552 வீடுகள், ரூ.5,170.01 கோடி மாநில அரசின் பங்குத் தொகையுடன் மொத்தம் ரூ.8,968.38 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

## 4.3. **நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம்**

1993 ஆம் ஆண்டு மத்திய அரசால் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டமானது தொடங்கப்பட்டு, ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதி ஏற்படுத்துவதில் உள்ள இடைவெளியினை நிரப்பிட இத்திட்டம் வழிவகை செய்கிறது. இத்திட்டத்திற்கான நிதியை 2011-12 ஆம் ஆண்டு முதல் ரூ.2 கோடியில் இருந்து ரூ.5 கோடியாக மத்திய அரசு உயர்த்தியுள்ளது. தமிழ்நாட்டில், இத்திட்ட செயலாக்கத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையே தொடர்பு துறை ஆகும். நாடாளுமன்ற உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்படும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாக அனுமதி வழங்குவார். இத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யக்கூடிய பணிகள் குறித்த விளக்கப் பட்டியலும், தடை செய்யப்பட்ட பணிகள் குறித்தும் வழிகாட்டு நெறிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், குளங்கள், குட்டைகள், ஆறுகள், வாய்க்கால் தூர் வாருதல் போன்ற அனைத்து வகையான பராமரிப்பு பணிகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

2019 - 20 ஆம் ஆண்டில், நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ. 290கோடி ஒதுக்கீட்டில் பல்வேறு பணிகள் கீழ்க்காணும் அட்டவணையில் கண்டுள்ள விவரப்படி செயல்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை - 4.2**
**நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில்**
**2019 - 20 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட பணிகள் விவரம்**

| வ. எண் | பணிகள் | பணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கட்டடங்கள் | 155 |
| 2. | சாலைகள் | 209 |
| 3. | குடிநீர் வழங்கல் | 143 |
| 4. | வடிகால் மற்றும் பாசன கால்வாய் பணிகள் | 276 |
| 5. | இதர பணிகள் | 732 |
| **மொத்தம்** | | **1515** |

## 4.4. **பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்**

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், 500 - க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட இணைப்புச் சாலை வசதி இல்லாத குக்கிராமங்களுக்கு அனைத்து பருவகாலங்களிலும் பயன்படுத்தத்தக்க வகையில் சாலை இணைப்பு வசதியினை ஏற்படுத்தித் தரும் நோக்குடன், மத்திய அரசால்

அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம், ஏற்கனவே உள்ள சாலைகளை மேம்பாடு செய்யவும் வழிவகுக்கிறது.

இத்திட்டம் மத்திய அரசால் 100% நிதி பங்களிப்புடன் அறிமுகப்படுத்தப்பட்டது. இருப்பினும் 2015-16 ஆம் ஆண்டு முதல் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் 60% மத்திய அரசு நிதி மற்றும் 40% மாநில அரசு நிதி என்ற நிதிப் பங்களிப்பின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது.

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்- I**

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் -I -ன் கீழ், மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால், 2000-01 லிருந்து 2018-19 வரை, 16,321 கி.மீ. நீளமுள்ள 7,678 கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய சாலைகள் மற்றும் இதர மாவட்டச் சாலைகளை மேம்படுத்தவும், 98 பாலங்கள் அமைக்கவும் மொத்தம் ரூ.4,846 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் பங்குத் தொகையான ரூ.723.64 கோடியும் அடங்கும்.

**அட்டவணை - 4.3**

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-I-ன் கீழ், எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் விவரம்**

| வ.எண் | பகுதி | வருடம் | | | |
|---|---|---|---|---|---|
| | | | எண்ணிக்கை | நீளம் (கி.மீ) | மதிப்பு (ரூ.கோடியில்) |
| 1 | I | 2000-01 | 862 | 1,442.12 | 152.91 |
| 2 | II | 2001-02 | 444 | 795.09 | 114.27 |

| வ.எண் | பகுதி | வருடம் | எண்ணிக்கை | நீளம் (கி.மீ) | மதிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 3 | III | 2003 - 04 | 491 | 1,096.40 | 159.07 |
| 4 | IV | 2004 - 05 | 393 | 778.31 | 111.35 |
| 5 | V | 2005 - 06 | 365 | 799.59 | 170.84 |
| 6 | VI | 2006 - 07 | 810 | 2,049.02 | 459.82 |
| 7 | VII | 2007 - 08 | 1,581 | 3,010.32 | 853.72 |
| 8 | VIII | 2012 - 13 | 1,338 | 3,089.06 | 1,125.85 |
| 9 | IX | 2014 - 15 | 401 | 940.47 | 352.97 |
| 10 | X | 2016 - 17 | 589 | 1,321.81 | 718.47 |
| 11 | XI | 2018 - 19 | 502 | 998.57 | 626.41 |
| | | **மொத்தம்** | **7,776** | **16,320.76** | **4,845.68** |

### பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் - II

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் -II-ன் கீழ், ஊரக சந்தை மற்றும் வளர்ச்சி மையங்களுக்குச் செல்லும் பிரதான சாலைகளை மேம்படுத்துவதன் மூலம், ஊரகச் சாலை தொகுப்பினை வலுப்படுத்தும் பொருட்டு மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டிற்கு 2,940 கி.மீ. நீளமுள்ள 860 சாலைப்பணிகள் மற்றும் 34 பாலங்கள் ஆகியவற்றிற்காக ரூ.1,434 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் பங்குத் தொகையான ரூ.620.33 கோடியும் அடங்கும்.

**அட்டவணை** 4.4

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-II-ன் கீழ், எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் விவரம்**

| வ. எண் | வருடம் | எண்ணிக்கை | நீளம் (கி.மீ) | மதிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | 2017 - 18 | 790 | 2,653.58 | 1,240.94 |
| 2 | 2018 - 19 | 104 | 286.84 | 192.80 |
| | மொத்தம் | **894** | **2,940.42** | **1,433.74** |

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் - III**

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் -I மற்றும் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் -II-ன் இலக்கினை அடைந்ததன் மூலம், பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் -III- ற்கு, தமிழ்நாடு தகுதி பெற்றுள்ளது.

பிரதம மந்திரி கிராம சாலை திட்டம் -III -ன் நோக்கமானது குக்கிராமங்களிலிருந்து சந்தை, உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகள் போன்றவற்றை இணைக்கும் பிரதான சாலை மற்றும் முக்கிய ஊரக இணைப்புச் சாலைகளை மேம்படுத்துவதே ஆகும்.பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் -III -ன் கீழ் தமிழ்நாட்டிற்கு, 7,375 கி.மீ நீளமுள்ள ஊரகச் சாலைகளை மேம்படுத்துவதற்கு மத்திய அரசால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் செயல் திறனுக்கான ஊக்கத் தொகை**

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் வருடாந்திர இலக்குகளை அடைவதன் அடிப்படையில்,

செயற்திறனுக்கான ஊக்கத் தொகையினை மத்திய அரசு 2016-17 ஆம் ஆண்டு, அறிமுகப்படுத்தியது.

தமிழ்நாட்டிற்கு, 2016-17, 2017-18 மற்றும் 2018-19 ஆம் ஆண்டிற்கு முறையே ரூ.55.58 கோடி, ரூ.45.32 கோடி மற்றும் ரூ.30.14 கோடி நிதி ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதியானது, 5 ஆண்டு கால தொடர் பராமரிப்பு முடிவுபெற்ற 2,168 கி.மீ நீளமுள்ள பிரதம மந்திரி கிராம சாலைகளின், கால முறை பராமரிப்புப் பணிக்காக பயன்படுத்தப்படுகிறது. இப்பணிகளுக்கு மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ. 87.35 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை - 4.5**

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் செயல்திறன் ஊக்கத் தொகை விவரம்**

| வ. எண் | வருடம் | ஊக்கத் தொகை மதிப்பு (ரூ.கோடியில்) | | | எடுக்கப்பட்ட பணிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | | மத்திய அரசு | மாநில அரசு | மொத்தம் | சாலைகள் எண்ணிக்கை | நீளம் (கி.மீ) |
| 1 | 2016-17 | 55.58 | 37.05 | 92.63 | 561 | 959 |
| 2 | 2017-18 | 45.32 | 30.21 | 75.53 | 442 | 730 |
| 3 | 2018-19 | 30.14 | 20.09 | 50.23 | 270 | 479 |
| | மொத்தம் | **131.04** | **87.35** | **218.39** | **1,273** | **2,168** |

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் ஊரகச் சாலைகளை மின்னணு முறையில் பராமரித்தல் (இமார்க்)**

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் பெருவாரியான முதலீட்டில் உருவாக்கப்பட்டுள்ள சாலைகளை

தகுந்த முறையில் பராமரிப்பது மிகவும் இன்றியமையாதது. இதன் பொருட்டு, சாலைகளின் பராமரிப்பினை கண்காணிக்க இமார்க்(eMARG) எனப்படும் வலைய இணைய முகப்பானது, ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. சாலைகளின் செயல்பாட்டின் அடிப்படையில் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்ட சாலைகளைப் பராமரிக்க இமார்க் வழிவகுக்கிறது.

**இணைப்புச் சாலை வசதி இல்லாதகுக்கிராமங்கள்**

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், 2000- ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட பொழுது, தமிழ்நாட்டில் 500-க்கும் மேல் மக்கள் தொகை கொண்ட இணைப்புச் சாலை வசதி இல்லாத 2,402 குக்கிராமங்கள் இருந்தன. இவற்றில் 2,386 குக்கிராமங்களுக்கு பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் மற்றும் இதர மாநில திட்டங்களின் மூலம் இணைப்புச் சாலை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில், வனத்துறை அனுமதி பெற வேண்டிய நிலம் மற்றும் பட்டா நிலப் பிரச்சனை உள்ள 16 இணைக்கப்படாத குக்கிராமங்கள் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் முன்மொழியப்படவில்லை.

அனைத்து குக்கிராமங்களுக்கும், 100% இணைப்பு வசதியினை உறுதி செய்யும் விதத்தில், 2018-19ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில், “அனைத்து ஊரக குடியிருப்புகளுக்கும் சாலை இணைப்பு மற்றும் இதர அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. அனைத்து பருவ காலங்களுக்கும் ஏற்ற சாலைகளுடன் இதுவரை

இணைக்கப்படாத 500-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 16 பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு 2018-19 ஆம் ஆண்டில் சாலை இணைப்புகள்ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்”, என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அறிவிப்பின் அடிப்படையில், இதுவரை 9 குக்கிராமங்களுக்கு இதர மாநில திட்டங்களின் மூலம் இணைப்புச் சாலை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 7 குக்கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி வழங்க வனத்துறையின் அனுமதியினை பெற தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 4.5. **தூய்மை பாரத இயக்கம் ( ஊரகம்)**

**தூய்மை பாரத இயக்கம் ( ஊரகம்)**

"தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)" பகுதி I, 2014 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2 ஆம் நாள் மத்திய அரசால் தொடங்கப்பட்டு, சுகாதார வசதிகள் அனைவருக்கும்முழுமையாக சென்றடைவதைஉறுதி செய்யும் வகையில்அனைத்து முயற்சிகளும் துரிதப்படுத்தப்பட்டது. இவ்வியக்கம் தற்போது பகுதி – II ஆக நீட்டிக்கப்பட்டு, ஒட்டு மொத்த தூய்மையினை (ODF Plus) உறுதி செய்யும் நடவடிக்கைகளான திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை தக்க வைத்தல், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை போன்றவை மேற்கொள்ளப்படும்.

**திட்டத்தின் நோக்கங்கள்**

**தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:**

அ) திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழித்து, தூய்மை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தி, ஊரகப் பகுதிகளிலுள்ள மக்களின் பொதுவான வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றம் அடையச் செய்தல்.

ஆ)சுகாதாரக் கல்வி மற்றும் விழிப்புணர்வு மூலம் ஊராட்சி அமைப்புகள் மற்றும் சமூகங்களுக்கிடையே ஆர்வத்தை தூண்டி, சுகாதார வசதிகள் மற்றும் நிலையான சுகாதாரப்பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்திடச் செய்தல்.

இ)ஊரகப் பகுதியில் ஒட்டுமொத்த சுகாதாரத்தினை ஏற்படுத்த அறிவியல் பூர்வமான திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை முறைகளைசமூகத்தால் நிர்வகிக்கப்படும் வகையில் ஏற்படுத்துதல்.

**தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கூறுகள்**:

தனிநபர் இல்லக் கழிப்பறை, சமூகத்தால் நிர்வகிக்கப்படும் சுகாதார வளாகம், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டம் ஆகியவை தூய்மை பாரத இயக்கத் (ஊரகம்) திட்டத்தின் முக்கிய கூறுகளாகும்.

**அ) தனிநபர் இல்லக் கழிப்பறை**

முழுமையாக முடிக்கப்பட்ட தனிநபர் இல்ல சுகாதார கழிப்பறையானது, அடித்தள கட்டுமானம், மேல்தளக் கட்டுமானம் மற்றும் தண்ணீர் வசதி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். தகுதியுடைய குடும்பங்களுக்கு தனிநபர் இல்லக் கழிப்பறை கட்ட ரூ12,000 ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. அனைத்து ஊரக குடும்பங்களும்

கழிப்பறை வசதி பெறுவதை உறுதி செய்வதே இவ்வியக்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

**(ஆ) சமூகத்தால் நிர்வகிக்கப்படும் சுகாதார வளாகங்கள்**

போதிய எண்ணிக்கையிலான கழிப்பறைகள், குளியலறைகள், கை கழுவுவதற்கான வசதி மற்றும் இதர வசதிகளை உள்ளடக்கிய சமூகத்தால் நிர்வகிக்கப்படும் சுகாதார வளாகங்கள், கிராம மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய மற்றும் எளிதில் அணுகக் கூடிய இடத்தில் இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படுகிறது. பகுதி–II ல்சமூகத்தால் நிர்வகிக்கப்படும் ஒவ்வொரு சுகாதார வளாகம் அமைப்பதற்கு நிதி உதவி ரூ. 3இலட்சம் ஆகும்.

**(இ) திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை**

திட மற்றும் திரவ கழிவுக் மேலாண்மை இத்திட்டத்தின் ஒரு கூறாகும். தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) பகுதி - II - ன் கீழ், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்ட செயலாக்கத்திற்கான மொத்த உதவித் தொகை ஒவ்வொரு கிராம ஊராட்சியின் தனிநபர்எண்ணிக்கைக்கு ஏற்ப கணக்கிடப்படும்.

**விருதுகள் மற்றும் அங்கீகாரம்**

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) ஒரு கழிப்பறை கட்டும் திட்டமாக மட்டுமே அல்லாமல் சமுதாயத்தின் பெரும் பங்கேற்புடன் கூடிய மாபெரும் மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளது. திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையை அடைந்ததைத் தொடர்ந்து கிராமங்களின் தூய்மை நிலை மற்றும் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை

நடவடிக்கைகளை மதிப்பீடு செய்ய 2019 ஆம் ஆண்டில் மத்திய ஜல் சக்தி அமைச்சகத்தால் தனியார் அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்ட "ஊரக தூய்மை கணக்கெடுப்பு - 2019" ல் இது பிரதிபலித்துள்ளது. 2.10.2019 நாளன்று, குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நடைபெற்ற "தூய்மை பாரத" நிகழ்ச்சியில், தமிழகத்திற்கு 'ஒட்டுமொத்த சிறந்த மாநிலம்' என்ற விருது மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களால் வழங்கப்பட்டது.

## 4.6. **தேசிய ரூர்பன் மிஷன்**

கிராமத் தொகுப்புகளை நகர்ப்புறங்களுக்கு இணையான வளர்ச்சி உடையதாக ஏற்படுத்த **"தேசிய ரூர்பன் மிஷன்"** திட்டம் மத்திய அரசால் 16.09.2015 அன்று துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கிராமங்களில் பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்தி சமூக, பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி சரியான திட்ட வடிவமைப்புடன் கூடிய **"ரூர்பன் தொகுப்பினை"** உருவாக்குவதாகும்.

**ரூர்பன் தொகுப்பினை தேர்வு செய்வதற்கான வழிமுறைகள்**

தேசிய ரூர்பன் மிஷன் வழிகாட்டுதலின்படி **"ரூர்பன் தொகுப்பு"** என்பது பூகோள அடிப்படையில் தொடர்ச்சியான நிலப்பரப்பில் உள்ள ஊராட்சிகளில் 25,000 முதல் 50,000 வரை மக்கள் தொகை கொண்ட ஊராட்சிகளின் தொகுப்பாகும்.

தேசிய ரூர்பன் மிஷன் திட்டத்தின்படி பழங்குடியினர் தொகுப்பு மற்றும் பழங்குடியினர் அல்லாத தொகுப்பு என இரண்டு பிரிவுகளில் ரூர்பன் தொகுப்புகள் உள்ளன. தமிழ்நாட்டிற்கு பழங்குடியினர் அல்லாத தொகுப்புகளை

தேர்வு செய்ய புதுடெல்லி, மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் கீழ்க்கண்ட அளவுகோலின் படி ரூர்பன் தொகுப்புகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

| காரணிகள் | முக்கியத்துவம் |
|---|---|
| • 10 ஆண்டுகளில் ஊரக மக்கள் தொகை வளர்ச்சி<br>• நிலங்களின் மதிப்பு உயர்வு<br>• 10 ஆண்டுகளில் விவசாயம் சாராத பணிகளில் மக்களின் பங்களிப்பு<br>• மேல்நிலைப் பள்ளிகளில் பெண்களின் சேர்க்கை சதவீதம் | **80 சதவீதம்** |
| • பிரதம மந்திரி ஜன்தன் யோஜனா திட்டத்தின் கீழ் (PMJDY) வங்கி கணக்குகள் துவங்கப்பட்டுள்ள குடும்பங்களின் சதவீதம்<br>• தூய்மை பாரத இயக்கம் (கிராமின்) திட்டத்தின் செயல்பாடு | **20 சதவீதம்** |

அதன்படி மத்திய அரசு மூன்று கட்டங்களாக கீழ்க்கண்ட 11 தொகுப்புகளை (Cluster) உருவாக்கிட அனுமதி வழங்கியுள்ளது.

| **வ.எ.** | **மாவட்டத்தின் பெயர்** | **தொகுப்பின் பெயர்** | **கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| **நிலை – I (2016 - 2019)** | | | |
| 1 | திருவள்ளூர் | குத்தம்பாக்கம் | 11 |
| 2 | சிவகங்கை | வாணியன்குடி | 7 |
| 3 | திருப்பூர் | வேலாயுதம்பாளையம் | 6 |
| 4 | கோயம்புத்தூர் | மதுக்கரை | 9 |
| 5 | திருநெல்வேலி | சுத்தமல்லி | 14 |
| **மொத்தம்** | | | **47** |
| **நிலை –II (2017 - 2020)** | | | |
| 1 | காஞ்சிபுரம் | சிங்கபெருமாள் கோவில் | 7 |
| 2 | மதுரை | கோவில் பாப்பாக்குடி | 16 |

| வ.எ. | மாவட்டத்தின் பெயர் | தொகுப்பின் பெயர் | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 3 | தஞ்சாவூர் | திருமலை சமுத்திரம் | 9 |
| **மொத்தம்** | | | **32** |
| **நிலை – III (2018 - 2021)** | | | |
| 1 | கன்னியாகுமரி | சடையமங்கலம் | 5 |
| 2 | தேனி | சீலயம்பட்டி | 7 |
| 3 | கிருஷ்ணகிரி | அலசபள்ளி பட்ரவபள்ளி | 7 |
| **மொத்தம்** | | | **19** |

**நிதி செயல்பாடு**

ஒரு தொகுப்பிற்கு தேவையான நிதி, மாநில மற்றும் மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் மூலம் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளவும், மீதமுள்ள பணிகளை நிறைவேற்றிட இடை நிரவல் நிரப்பு நிதியினை மத்திய அரசு வழங்குகிறது. இடை நிரவல் நிரப்பு நிதி திட்ட மதிப்பீடு செலவில் 30 சதவீதம் அல்லது ரூபாய் 30 கோடி இவற்றில் எது குறைவோ அத்தொகை ஒவ்வொரு தொகுப்பிற்கும் வழங்கப்படுகிறது.

தேசிய ரூர்பன் மிஷன் திட்டத்திற்கான இடைநிரவல் நிரப்பு நிதி (Critical Gap Fund) பகிர்வானது மத்திய அரசின் பங்கு 60 சதவீதம் மற்றும் மாநில அரசின் பங்கு 40 சதவீதம் என்ற விகிதாச்சார அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது.

**அட்டவணை** – 4.6

**தேசிய ரூர்பன் மிஷன் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடைநிரவல் நிரப்பு நிதி**

**(ரூபாய் கோடியில்)**

| **வ. எ.** | **நிலை** | **திட்ட காலம்** | **தொகுப்புகளின் எண்ணிக்கை** | **நிதி ஒதுக்கீடு** |
|---|---|---|---|---|
| 1 | நிலை –I | 2016 - 2019 | 5 | 150.00 |
| 2 | நிலை –II | 2017 - 2020 | 3 | 90.00 |
| 3 | நிலை - III | 2018 - 2021 | 3 | 90.00 |
| **மொத்தம்** | | | **11** | **330.00** |

மத்திய, மாநில அரசு திட்டங்களின் ஒருங்கிணைப்பு நிதி மற்றும் இடைநிரவல் நிரப்பு நிதியின் மூலம் பொருளாதார மேம்பாட்டுடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி, வேளாண்மை தொடர்பான திட்டப் பணிகள், கல்வி, சுகாதாரம், குடிநீர், திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை, கிராம தெருக்கள் மற்றும் வடிகால், தெரு விளக்கு, சாலை வசதிகள், போக்குவரத்து, சமையல் எரிவாயு இணைப்பு, கணினி எழுத்தறிவு மற்றும் மக்கள் சேவை மையம் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

இத்திட்டத்தின் திட்ட செயல்பாடுகளைக் கண்காணிக்க ரூர்பன் சாஃப்ட் (RurbanSoft) என்றஇணையதள வசதி மத்திய அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ஒருங்கிணைந்த தொகுப்பு செயல்திட்டம் (ICAP), விரிவான செயல்திட்ட அறிக்கைகள் (DPR)ஆகியன ரூர்பன் சாஃப்ட் இணைய தளத்தில்பதியப்படுகின்றன.

மத்திய அரசின் அறிவுறுத்தலுக்கிணங்க, ரூர்பன் சாஃப்ட்-ல் பொது நிதி மேலாண்மை அமைப்பின் (PFMS) செலவினத் தொகுப்பு முறையைப் பயன்படுத்தி நிதிச் செலவினம் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 4.7. **தேசிய கிராம சுயாட்சி திட்டம்** (RGSA)

ஊராட்சி நிறுவனங்களின் திறனை வலுப்படுத்தவும் ஊரக உள்ளாட்சி நிர்வாகம் உள்ளூர் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் வழங்குவதை உறுதி செய்யவும் இந்திய அரசானது சீரமைத்த தேசிய கிராம சுயாட்சி திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. மேலும் மக்கள் பங்கேற்புடன் கூடிய திட்டம் தயாரித்தல், தொழில்நுட்ப உதவியுடன் உள்ளூர் வளங்களை திறமையாக பயன்படுத்தி நீடித்த, நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் தொடர்புடைய உள்ளூர் பிரச்சனைகளுக்கு தீர்வுகள் ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். ஐக்கிய நாடுகளின் நீடித்த வளர்ச்சி இலக்குகளை (SDGs) 2030-க்குள் அடைவதற்கு ஊராட்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**நோக்கங்கள்**

- நீடித்த வளர்ச்சி இலக்குகளைஅடைய ஊராட்சி நிறுவனங்களின் நிர்வாகத் திறனைமேம்படுத்துதல்
- அனைவரையும் உள்ளடக்கிய உள்ளாட்சி நிர்வாகத்தை அளித்திடவும், உள்ளூர் வளங்களை தேவையான அளவு பயன்படுத்தி மற்ற திட்டங்களுடன் ஒருங்கிணைந்து தேசிய

முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் வகையில் ஊராட்சிகளின் திறனை மேம்படுத்துதல்

- கூடுதல் வருவாய் ஆதாரங்களை திரட்டும் வண்ணம் ஊராட்சிகளின் திறனை மேம்படுத்துதல்
- ஊராட்சி நிர்வாகத்தில் மக்கள் பங்களிப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையுடன் செயல்பட கிராமசபைகளை வலுப்படுத்துதல்
- ஊராட்சிகளின் திறன் மேம்பாடு மற்றும் அதனை வழி நடத்துவதற்காக கல்வி மற்றும் சீர்மிகு நிறுவனங்களை பயன்படுத்துதல்
- ஊராட்சி நிறுவனங்களின் திறன் மேம்பாட்டிற்காக பல்வேறு நிலைகளில் நிறுவனங்களை வலுப்படுத்துதல்
- நிர்வாகத்திறன் மற்றும் மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கும் வகையில் ஊராட்சிகளில் மின் ஆளுமை மற்றும் இதர தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்துதல்
- திறம்பட செயல்படும் ஊராட்சிகளைஅடையாளம் கண்டு ஊக்குவித்தல்.

**நிதிமுறை**

தேசிய கிராம சுயாட்சி திட்டமானது (RGSA) மத்திய மற்றும் மாநில அரசு 60:40 என்ற நிதி விகிதாச்சார முறையில் செயல்படுத்தப்படுகிறது. இந்திய அரசானது பயிற்சி, பயிற்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனிதவளம், தொலைதூரக் கல்வி, புதுமையான முயற்சிகள், ஊராட்சிகளுக்கு தொழில்நுட்ப உதவிகள், நிர்வாகம் மற்றும் நிதி தகவல் பகுப்பாய்வு மற்றும் திட்டப்பிரிவு, ஊராட்சி

கட்டிடம் மற்றும் சமுதாயகூடம், ஊராட்சி மின்னணு செயலாக்கம், பொருளாதார வளர்ச்சி மற்றும் வருவாய் மேம்படுத்துதலுக்கு திட்ட அடிப்படையில் உதவிகள், தகவல் கல்வி மற்றும் தொடர்பு (2%) மற்றும் திட்ட மேலாண்மை(5%) ஆகியவைகளுக்கு நிதி அளிக்கிறது.

மேலும் 2019-20 ஆண்டு வருடாந்திர செயல் திட்டத்திற்கு தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் (RGSA) கீழ் பல்வேறு பயிற்சிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவைகளுக்கு மத்திய அரசு ரூ.190.37 கோடி ஒப்புதல் அளித்துள்ளது.

## 4.8. **நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம்** (SAGY)

நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் 11.10.2014ல் மத்திய அரசால் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் www.saanjhi.gov.in வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்வு செய்யப்படும் கிராமங்களில் அனைத்து துறைகளின் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, ஒருமுகப்படுத்தி, செயல்படுத்தி மாதிரி கிராமங்களாக மாற்றி அனைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கிராம ஊராட்சியே இத்திட்ட செயலாக்கத்தின் அடிப்படை அலகாகும். சமவெளிப்பகுதிகளில், 3000 முதல் 5000 வரை மக்கள் தொகை கொண்ட கிராம ஊராட்சிகளையும் மலைப்பகுதி மற்றும் பழங்குடி கிராமங்கள் எனில் மக்கள் தொகை

1000 முதல் 3000 வரையும் உள்ள கிராம ஊராட்சியை ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தேர்ந்தெடுக்க வேண்டும். மாவட்டங்களில் இந்த அலகு அளவுக்கு மக்கள் தொகை கிடைக்கவில்லை என்றால் ஏறக்குறைய இதே அளவுக்கு மக்கள் தொகை உள்ள கிராம ஊராட்சிகளை தேர்வு செய்யலாம். நாடாளுமன்ற உறுப்பினர் தனது (அ) தனது மனைவியின் / கணவரின் சொந்த கிராமத்தை தவிர்த்து இதர கிராமங்களிலிருந்து மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய கிராம ஊராட்சியை தங்கள் விருப்பப்படி கண்டறியலாம். மக்களவை உறுப்பினர் தனது தொகுதிக்குள்ளும், மாநிலங்களவை உறுப்பினர் தனது மாநிலத்திற்குள்ளும், நியமன உறுப்பினர் இந்திய அளவில் எந்த ஒரு மாநிலத்திலும், ஒரு கிராமத்தை தேர்ந்தெடுக்கலாம். நகர்ப்புற தொகுதியை பொறுத்தவரையில் கிராம ஊராட்சிகள் இல்லையெனில் சம்பந்தப்பட்ட மக்களவை உறுப்பினர் அருகிலுள்ள ஊரகத் தொகுதியிலிருந்து கிராமத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய ஒரு கிராம ஊராட்சியை உடனடியாகவும் மற்ற இரண்டு கிராம ஊராட்சிகளை பின்னரும் தெரிவு செய்ய வேண்டும். முக்கியமாக, 2019 மார்ச் மாதத்திற்குள் மூன்று மாதிரி கிராமங்களை உருவாக்க வேண்டும், அதில் ஒன்று 2016க்குள் உருவாக்கப்படுதல் வேண்டும். இவ்வாறாக 2024 - க்குள் 5 மாதிரி கிராம ஊராட்சிகளை (ஆண்டிற்கு ஒன்று வீதம்) தேர்வு செய்து மேம்படுத்த வேண்டும்.

அரசு தலைமை செயலாளரின் தலைமையிலான உறுப்பினர்கள் அடங்கிய மாநில அளவிலான அதிகாரம் அளிக்கப்பட்ட குழு அரசாணை நிலை எண்.23, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி 2) துறை நாள் 13.02.2015ன்படி அமைக்கப்பட்டு திட்ட செயல்பாடுகளை கண்காணித்து வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி கிராமங்களில் பல்வேறு துறைகளில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள அரசுத் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு என தனியாக நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. மேலும், புதிய உட்கட்டமைப்பு மற்றும் கட்டுமானம் தொடர்புடைய திட்டங்களும் அனுமதிக்கப்படவில்லை. அனைத்து வளங்களும் ஒரே இலக்கினை நோக்கி ஒருங்கிணைந்த வகையில் அதிகபட்ச பயன்களை தரும் வகையில் உபயோகிக்கப்பட வேண்டும். மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களில் தொடர்புடைய அமைச்சகம், மத்திய அரசுத் துறைகள் / மத்திய அரசு நிதிப் பங்களிப்போடு செயல்படுத்தப்படும் திட்டங்களில் மாதிரி கிராங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் வழிகாட்டு நெறிமுறைகளில் தகுந்த மாற்றங்கள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தில் அதிகபட்ச பலன்களை அடைய மாநில அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த வேண்டும்.

## 4.9. **புதியதேசிய கரிமவாயு மற்றும் உயிர் உர மேலாண்மைத் திட்டம்** (NNBOMP)

புதிய தேசிய கரிமவாயு மற்றும் உயிர் உர மேலாண்மைத் திட்டத்தின் நோக்கம், ஊரகப் பகுதிகளில் இயற்கைக் கழிவுகளைத் திறம்பட பயன்படுத்தி, புதுப்பிக்கவல்ல எரிசக்தியாக மாற்றம் செய்வதே ஆகும்.

இத்திட்டத்தின் கீழ், மத்திய அரசு வகுத்துள்ள முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு -

i) ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள இல்லங்களில் இயற்கை கழிவுகளை மாசற்ற எரிபொருளாக உருவாக்கிட, முக்கியமாக சமையல் செய்வதற்கு கரிமவாயு எரி கலன்கள் அமைத்தல்.

ii) ஊரக பகுதிகளில் உள்ள மகளிர், காடுகளுக்கு சென்று எதிர்கொள்ளும் கடினமான சுமையை குறைத்து சமூக நன்மைகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்.

iii) கிராமப்புறங்களில் சுகாதாரத்தை மேம்படுத்திட கழிவறைகளுடன் கூடிய கரிம வாயு கலன்கள் அமைத்தல்.

iv) மேம்படுத்தப்பட்ட உயிர் செரிமானம் மூலம் (திட திரவ நிலையில் மற்றும் உலர்த்தப்பட்ட) இரசாயன உரங்களை செறிவூட்டல் / அல்லது அவற்றுக்கு இணையாக இரசாயன உரங்களைப் பயன்படுத்தும் அளவினை குறைத்தல் / உயிர் செரிமானக் குழம்பினை செறிவூட்டும் அலகான மண்புழு உர அலகுகளுடன் இணைத்தல்.

v) திட்ட குழுவின் ஒருங்கிணைந்த ஆற்றல் கொள்கை அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு சமைப்பதற்கான உயிர்சக்தி ஆற்றல் தேவைகளை பூர்த்தி செய்தல்.

இத்திட்டம் 100 விழுக்காடு மத்திய அரசு மானியத்துடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

## அட்டவணை - 4.7

## மானியக் கூறுகள் விவரம்

| வ. எண் | பிரிவுகள் | தேசிய கரிமவாயு மற்றும் உர மேலாண்மைத் திட்டத்தின் கீழ் சமையல் எரிவாயு கலன்கள் (NNBOMP) அமைப்பதற்கான மானிய விவரம் (ரூபாயில்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 கன அடி | 2 - 6 கன அடி | 8 - 10 கன அடி | 15 கன அடி | 20 - 25 கன அடி |
| 1 | பொது பிரிவு | 7,500 | 12,000 | 16,000 | 20,000 | 25,000 |
| 2 | ஆதிதிராவிடர் / பழங்குடியினர் | 10,000 | 13,000 | 18,000 | 21,000 | 28,000 |
| 3 | கால்நடை கழிவுகள் மற்றும் தனிநபர் வீடுகளில் உள்ள கழிவறைகளுடன் கூடிய கரிம வாயு கலன்களுக்கு கூடுதல் மானியம் - - ரூ. 1600/- | | | | இல்லை | இல்லை |
| 4 | பணி கட்டணம் (Turn key Cost) | ஒரு கலனுக்கு ரூ. 2,500/- வீதம் | | | | |

2019 - 20 ஆம் நிதி ஆண்டில் 1000 கரிமவாயுக் கலன்கள் அமைத்திட செயல் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

# 5. பணியமைப்பு

## 5.1. அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையானது மாநில நிர்வாகத்தில், மத்திய மற்றும் மாநில அரசு நிதிகளின் மூலம் ஊரக உட்கட்டமைப்பு உருவாக்குதல், அடிப்படை வசதிகள் பராமரிப்பு, இணைப்பு சாலைகள், சுகாதாரம், வீட்டு வசதி, வாழ்வாதாரம் உருவாக்குதல் மற்றும் ஊராட்சி நிர்வாகம் ஆகியவற்றை உள்ளடக்கிய பணிகளை செயல்படுத்தும் பொறுப்புடைய முக்கியமான துறையாக விளங்குகிறது. மத்திய நிதி உதவியுடன் கூடிய மாநில நிதித் திட்டங்கள் உள்ளிட்ட இத்தகைய பணிகள் இத்துறையின் மாநில மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்களால் திட்டமிட்டு, செயல்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.

**அட்டவணை 5.1**

**வகைவாரியான பணியாளர்கள் விபரம்**

**அரசுப் பணியாளர்கள் அரசிதழ் பதிவு பெற்றவர்கள்**

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | கூடுதல் ஊரக வளர்ச்சி இயக்குநர் | 18 | ரூ..123400 - 216300 (நிலை 29) |
| 2. | இணை இயக்குநர் | 86 | ரூ.61900 - 196700 (நிலை 26) |
| 3. | உதவி இயக்குநர் | 393 | ரூ.56100 - 177500 (நிலை 22) |
| 4. | வட்டார வளர்ச்சி அலுவலர் | 1061 | ரூ.37700 - 119500 (நிலை 20) |

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| மொத்தம் | | 1558 | |

**புதிய மாவட்டங்கள் மற்றும் புதிய ஊராட்சி ஒன்றியங்களில் பணியிடங்கள் உருவாக்குதல்**

புதியதாக தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் கீழ்க்கண்டவாறு பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பதவியின் பெயர் | உருவாக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | இணை இயக்குநர் | 10 | ரூ.61900 - 196700 (நிலை 26) |
| 2. | உதவி இயக்குநர் | 40 | ரூ.56100 - 177500 (நிலை 22) |
| 3. | வட்டார வளர்ச்சி அலுவலர் | 30 | ரூ.37700 - 119500 (நிலை 20) |
| | **மொத்தம்** | **80** | |

தர்மபுரி மாவட்டத்தில் ஏரியூர் மற்றும் கடத்தூர் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கடலூர் மாவட்டத்தில் ஸ்ரீமுஷ்ணம் ஊராட்சி ஒன்றியம் புதியதாக உருவாக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பதவியின் பெயர் | உருவாக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | வட்டார வளர்ச்சி அலுவலர் | 6 | ரூ.37700 - 119500 (நிலை 20) |
| | **மொத்தம்** | **6** | |

அரசு போதுமான அளவிலான பணியிடங்களுக்கு அங்கீகாரம் வழங்கி அலுவலர்களின் உரிமைகள், பதவி உயர்வு உள்ளிட்ட பயன்கள் வழங்கப்படுவதை உறுதி செய்துள்ளது.

- இத்துறையில் 18 கூடுதல் இயக்குநர்களும், அவற்றில் இதர துறைகளில் மாற்றுப்பணியில் 3 கூடுதல் இயக்குநர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.
- இத்துறையில் இணை இயக்குநர் நிலையில் 84 இணை இயக்குநர்களும், அவற்றில் இதர துறைகளில் மாற்றுப்பணியில் 7 இணை இயக்குநர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.
- இத்துறையில் உதவி இயக்குநர் நிலையில் 402 உதவி இயக்குநர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

### 5.2. **பொறியியல் பணியமைப்பு**

ஊரக உட்கட்டமைப்பு, பராமரிப்பு மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தருவதற்கான பணிகளை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பொறியியல் பணியமைப்பில் தொழில்நுட்ப பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

## அட்டவணை 5.2.
## வகைவாரியாக பொறியியல் பணியாளர்கள் விவரம்

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | கண்காணிப்பு பொறியாளர் | 3 | ரூ..123100 - 215900 (நிலை 28) |
| 2. | செயற்பொறியாளர் | 43 | ரூ.61900 - 196700 (நிலை 26) |
| 3. | உதவி செயற்பொறியாளர் | 177 | ரூ.59300 - 187700 (நிலை 25) |
| 4. | உதவிப் பொறியாளர் | 930 | ரூ.56100 - 177500 (நிலை 22) |
| 5. | முதுநிலை வரைதொழில் அலுவலர் | 31 | ரூ.37700 - 119500 (நிலை 20) |
| 6. | இளநிலைப் பொறியாளர் | 317 | ரூ.35900 – 113500 (நிலை 13) |
| 7. | பணிமேற்பார்வையாளர்/ இளநிலை வரைதொழில் அலுவலர் | 2587 | ரூ.35400 – 112400 (நிலை 11) |
| 8. | சாலை ஆய்வாளர் | 1145 | ரூ.19500 - 62000 (நிலை 8) |
| **மொத்தம்** | | **5233** | |

**புதிய மாவட்டங்கள் மற்றும் புதிய ஊராட்சி ஒன்றியங்களில் பணியிடங்கள் உருவாக்குதல்**

புதியதாக தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் கீழ்க்கண்டவாறு பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பதவியின் பெயர் | உருவாக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | செயற்பொறியாளர் | 5 | ரூ.61900 - 196700 (நிலை 26) |
| 2. | உதவி செயற்பொறியாளர் | 20 | ரூ.59300 - 187700 (நிலை 25) |
| 3. | உதவிப் பொறியாளர் | 21 | ரூ.56100 - 177500 (நிலை 22) |
| 4. | முதுநிலை வரைதொழில் அலுவலர் | 5 | ரூ.37700 - 119500 (நிலை 20) |
| 5. | பணிமேற்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர் | 21 | ரூ.35400 – 112400 (நிலை 11) |
| **மொத்தம்** | | **72** | |

தர்மபுரி மாவட்டத்தில் ஏரியூர் மற்றும் கடத்தூர் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கடலூர் மாவட்டத்தில் ஸ்ரீமுஷ்ணம் ஊராட்சி ஒன்றியம் புதியதாக உருவாக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பதவியின் பெயர் | உருவாக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | உதவிப் பொறியாளர் | 9 | ரூ.56100 - 177500 (நிலை 22) |
| 2. | பணிமேற்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர் | 13 | ரூ.35400 – 112400 (நிலை 11) |

| வ. எண். | பதவியின் பெயர் | உருவாக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 3. | சாலை ஆய்வாளர் | 4 | ரூ.19500 - 62000 (நிலை 8) |
| | **மொத்தம்** | **28** | |

- இத்துறையில் 46 செயற்பொறியாளர்களும், அவற்றில் இதர துறைகளில் மாற்றுப்பணியில் 8 செயற்பொறியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.
- இத்துறையில் உதவி செயற்பொறியாளர் நிலையில் 189 உதவி செயற்பொறியாளர்களும், அவற்றில் இதர துறைகளில் மாற்றுப்பணியில் 14 உதவி செயற்பொறியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.
- இத்துறையில் 946 உதவிப் பொறியாளர்களும், 317 இளநிலைப் பொறியாளர்களும், 34 முதுநிலை வரைதொழில்அலுவலர்களும், 2,605 பணிமேற்பார்வையாளர்கள் / இளநிலை வரைதொழில் அலுவலர்களும் 1147 சாலை ஆய்வாளர்கள் உள்ளனர். இத்துறையில் உள்ள 946 உதவிப் பொறியாளர்களில் இதர துறைகளில் மாற்றுப்பணியில் 11 உதவிப்பொறியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அதே போல், 317 இளநிலைப் பொறியாளர்களில், இதர துறைகளில் மாற்றுப்பணியில் 6 இளநிலைப் பொறியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

5.3. **முதுநிலை அலுவலர்களை பிற துறைக்கு மாற்றுப் பணியில் அனுப்புதல்**

இத்துறையைச் சார்ந்த கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர், செயற்பொறியாளர், உதவி இயக்குநர் மற்றும் உதவி செயற்பொறியாளர் நிலையில் உள்ள முதுநிலை அலுவலர்களை சிறப்பு திட்டங்கள் நிறைவேற்றல் துறை, தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம், மாநில திட்டக் குழு, கால்நடை பராமரிப்புத் துறை, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, மின் வாரியம், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, மோனோ ரயில் திட்டம், தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், சமூகநலம் மற்றும் சத்துணவுத் துறை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO), தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (ஆவின்), சென்னை பெருநகர வளர்ச்சி கழகம் (CMDA), சிப்காட் (SIPCOT) பேரூராட்சிகள் இயக்ககம், தேசிய ஊரக நலவாழ்வு சங்கம் (NRHM), தேசிய ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு முகமை (NRIDA), சுனாமிக்கு பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் (IFAD assisted PTSLP), இந்து சமய அறநிலையத் துறை (HR&CE), தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கழகம்போன்ற துறைகளில் மாற்றுப் பணியில் பணிபுரிய உத்தரவிடப்பட்டுள்ளது. இதுபோன்ற பல்வேறு இதர துறைகளில் பணிபுரிவதன் மூலம் பெறப்படும் அனுபவங்களை கொண்டு தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், பொது மக்களுக்கு சேவை புரிந்திடவும் உறுதுணையாக உள்ளது.

### 5.4. **அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் பணியமைப்பு**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அடிப்படை விதிகள், தமிழ்நாடு அமைச்சுப்பணி மற்றும் ஊரக வளர்ச்சி சார்நிலை பணி விதிகளுக்குட்பட்டு வரும் பணியாளர்களின் பணியமைப்பு, அரசிதழ் பதிவு பெறாத பணியமைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனுடன் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பணியாளர்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசிதழ் பதிவு பெறா பணியமைப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பணியாளர்களின் விபரம் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் மற்றும் அவற்றின் ஊதியக்கட்டு விகிதம் ஆகியவை கீழே அட்டவணையிடப்பட்டுள்ளன.

**அட்டவணை** 5.3

**அரசிதழ் பதிவுபெறா பணியாளர்களின் விபரம்**

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை | ஊதிய நிலை |
|---|---|---|---|
| அ) அரசுப் பணியாளர்கள் | | | |
| 1 | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 3926 | ரூ.36900 - 116600 |
| 2 | உதவியாளர் | 5522 | ரூ.20600 - 65500 |
| 3 | இளநிலை உதவியாளர் | 3110 | ரூ.19500 - 62000 |
| 4 | சுருக்கெழுத்து தட்டச்சர் | 178 | ரூ.20600 - 65500 |
| 5 | தட்டச்சர் | 1033 | ரூ.19500 - 62000 |
| 6 | ஓட்டுநர் | 880 | ரூ.19500 - 62000 |
| 7 | பதிவுரு எழுத்தர் | 131 | ரூ.15900 - 50400 |
| 8 | அலுவலக உதவியாளர் | 691 | ரூ.15700 - 50000 |
| 9 | இரவுக் காவலர் | 121 | ரூ.15700 - 50000 |
| 10 | மசால்ஜி | 14 | ரூ.15700 - 50000 |
| உள்ளாட்சிப் பணியாளர்கள் விவரம் | | | |
| ஆ)ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் விவரம் | | | |
| 1 | ஓட்டுநர் | 770 | ரூ.19500 - 62000 |
| 2 | பதிவுரு எழுத்தர் | 387 | ரூ.15900 - 50400 |

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை | ஊதிய நிலை |
|---|---|---|---|
| 3 | அலுவலக உதவியாளர் | 1521 | ரூ.15700 - 50000 |
| 4 | இரவுக் காவலர் | 377 | ரூ.15700 - 50000 |
| 5 | மசால்ஜி | 9 | ரூ.15700 - 50000 |
| **இ)கிராம ஊராட்சிப் பணியாளர்கள்** | | | |
| 1 | ஊராட்சி செயலர் | 12525 | ரூ.15900 - 50400 |
| 2 | துப்புரவு பணியாளர் | | |
| | சிறப்பு காலமுறை ஊதியம் | 26404 | ரூ.4100 - 12500 |
| 3 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குபவர் | 40419 | ரூ.2600/- தொகுப்பு ஊதியம் |

**புதிய மாவட்டங்கள் மற்றும் புதிய ஊராட்சி ஒன்றியங்களில் பணியிடங்கள் உருவாக்குதல்**

புதியதாக தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் கீழ்க்கண்டவாறு புதிய பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை | ஊதிய நிலை |
|---|---|---|---|
| **அ) அரசுப் பணியாளர்கள்** | | | |
| 1 | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 30 | ரூ.36900 - 116600 |
| 2 | உதவியாளர் | 122 | ரூ.20600 - 65500 |
| 3 | இளநிலை உதவியாளர் | 72 | ரூ.19500 - 62000 |
| 4 | சுருக்கெழுத்து தட்டச்சர் | 20 | ரூ.20600 - 65500 |
| 5 | தட்டச்சர் | 35 | ரூ.19500 - 62000 |
| 6 | ஓட்டுநர் | 55 | ரூ.19500 - 62000 |

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை | ஊதிய நிலை |
|---|---|---|---|
| 7 | பதிவுரு எழுத்தர் | 21 | ரூ.15900 - 50400 |
| 8 | அலுவலக உதவியாளர் | 75 | ரூ.15700 - 50000 |
| 9 | இரவுக் காவலர் | 14 | ரூ.15700 - 50000 |
| | **கூடுதல்** | **444** | |

தருமபுரி மாவட்டத்தில் ஏரியூர் மற்றும் கடத்தூர் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கடலூர் மாவட்டத்தில் ஸ்ரீமுஷ்ணம் ஊராட்சி ஒன்றியம் புதியதாக உருவாக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை | ஊதிய நிலை |
|---|---|---|---|
| **அ) அரசுப் பணியாளர்கள்** | | | |
| 1 | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 22 | ரூ.36900 - 116600 |
| 2 | உதவியாளர் | 26 | ரூ.20600 - 65500 |
| 3 | இளநிலை உதவியாளர் | 14 | ரூ.19500 - 62000 |
| 4 | தட்டச்சர் | 5 | ரூ.19500 - 62000 |
| 5 | ஓட்டுநர் | 9 | ரூ.19500 - 62000 |
| 6 | பதிவுரு எழுத்தர் | 3 | ரூ.15900 - 50400 |
| 7 | அலுவலக உதவியாளர் | 12 | ரூ.15700 - 50000 |
| 8 | இரவுக் காவலர் | 3 | ரூ.15700 - 50000 |
| | **கூடுதல்** | **94** | |

1) **காலிப் பணியிடங்களை நிரப்புதல்**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2018 - 2019 மற்றும் 2019 - 20ம் ஆண்டுகளில், 205 உதவியாளர்கள், 475 இளநிலை உதவியாளர்கள், 226

தட்டச்சர்கள் மற்றும் 60 சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் தேர்ந்தெடுக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அடிப்படை பணியிட நிலைகளில் ஏற்படும் காலிப் பணியிடங்களைப் பொறுத்தவரையில், வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் பத்திரிகை அறிவிப்பு மூலம் நேரடியாக நிரப்பப்படுகின்றன. 2019 - 20ம் ஆண்டில் அலுவலக உதவியாளர் / பதிவறை எழுத்தர் / இரவுக் காவலராக பணியாற்றிய 27 நபர்கள் 10% இட ஒதுக்கீட்டின் கீழும், 78 ஊராட்சி செயலர்கள் 20% இட ஒதுக்கீட்டின் கீழும் இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

இவற்றுடன் 2019 - 20ஆம் ஆண்டில், 287 தட்டச்சர்கள்/ இளநிலைஉதவியாளர்கள் உதவியாளர்கள் ஆகவும், 332 உதவியாளர்கள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களாகவும் மற்றும் 167 துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வட்டார வளர்ச்சி அலுவலர்களாகவும் பதவி உயர்வு வழங்கப்பட்டு பணிநிலை உயர்த்தப்பட்டுள்ளனர்.

2) **ஊராட்சி செயலர் பணியிடங்களுக்கு நியமனம் செய்தல்**

தமிழக அரசின் வேலை வாய்ப்புகளில் பின்பற்றப்படும் இட ஒதுக்கீடு முறை முதன் முறையாக ஊராட்சி செயலர் பணியிடங்களுக்கும் பின்பற்றப்பட்டு 2019ம் ஆண்டில் 786 ஊராட்சி செயலர் பணியிடங்கள் நிரப்பட்டுள்ளன. இதன் பின்னர் ஏற்பட்ட 494 காலி பணியிடங்களையும் இட ஒதுக்கீடு அடிப்படையில் நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3) **கருணை அடிப்படை பணி நியமனம்**

பணியிடைக் காலமான அரசு ஊழியர்களின் குடும்பங்களுக்கு ஆதரவளித்திடும் வண்ணம் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கும் திட்டம் 2016-17 ஆம் ஆண்டு முதல் பணியிடைக்காலமான ஊராட்சி செயலர்களின் வாரிசுதாரர்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பல்வேறு நிலைகளில் பணிபுரிந்து பணியிடைக்காலமான அரசு ஊழியர்கள் மற்றும் ஊராட்சி செயலர்களின் தகுதி வாய்ந்த வாரிசுதாரர்கள் 104 நபர்களுக்கு, 2019-20 ஆம் நிதியாண்டில் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

4) **கிராம ஊராட்சி செயலர்களுக்கு காலமுறை ஊதியத்தில் ஊதியம் வழங்குதல்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அடித்தள நிர்வாகத் திறனை வலுப்படுத்தும் பொருட்டு, கிராம ஊராட்சி செயலர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.2500-5000 + 500 தர ஊதியம் என்ற விகிதத்திலிருந்து ரூ.15900-50400 என்ற விகிதத்தில் உயர்த்தி வழங்கிட அரசாணை (நிலை) எண்.171, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(இ5) துறை, நாள்.30.11.2018ன்படி ஆணையிடப்பட்டுள்ளது.

5) **கிராம ஊராட்சி பணியாளர்களுக்கான சலுகைகள்**

கிராம ஊராட்சி செயலர்களின் நலன் கருதி கூடுதல் பொறுப்பு படி, அறுதியிட்ட பயணப்படி, பெண் ஊராட்சி

செயலாளர்களுக்கு 270 நாட்களாக மகப்பேறு விடுப்பு நீட்டிப்பு, சிறப்பு ஓய்வூதியம், ஓய்வூதிய ஒட்டுமொத்த தொகை மற்றும் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்குதல் தொடர்பாக 2011 முதல் 2017 ஆம் ஆண்டு வரை பல்வேறு அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில், 1.10.2010 தேதியில் மூன்று ஆண்டுகள் பணிமுடித்து தொகுப்பூதியத்தில் பணியாற்றும் 9896 துப்புரவு பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் வழங்கி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. அதே போன்று தற்போது கிராம ஊராட்சிகளில் மூன்று ஆண்டுகள் பணி முடித்த தொகுப்பூதியத்தில் பணியாற்றும் 16,508 துப்புரவு பணியாளர்களுக்கும் சிறப்பு காலமுறை ஊதியம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

12,524 கிராம ஊராட்சிகளில் 40,419 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் தொகுப்பூதியமாக ரூ.2600/- பெற்று பகுதிநேரமாக பணிபுரிந்து வருகின்றனர். அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு ஒவ்வொரு முறை வழங்கப்படும் பொழுதும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கும் தற்காலிக உயர்வாக ரூ.100/- உயர்த்தப்படுகிறது.

சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் ஓய்வுபெறும் பொழுது ரூ.2,000/- சிறப்பு ஓய்வூதியமாகவும், ரூ.50,000/- ஓய்வூதிய ஒட்டுமொத்தத் தொகையாகவும் வழங்கப்படுகிறது.

6) **அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் அடிப்படை பயிற்சி**

இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர் ஆகிய நிலை பணியிடங்களின் அலுவலக ரீதியான முன்னேற்றத்திற்கு தேவையான அலுவலக நடைமுறை சார்ந்த அறிவு மற்றும் ஆற்றல் ஆகியவற்றை அளிப்பதில் அடிப்படை பயிற்சி முக்கிய பங்கு வகிக்கிறது. இப்பயிற்சியானது இவர்களது நுழைவுப் பணியிடமான இளநிலை உதவியாளர்/ உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்திட தேவையான தகுதி பெற வேண்டியபயிற்சியாகும்.2019 - 20ம் ஆண்டில் 2478பணியாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

# 6. திறன் மேம்பாடு

## 6.1. **திறன் மேம்பாடு**

ஒரு அரசு துறையோ அல்லது நிறுவனமோ தனது பணியாளர்களை வடிவமைக்கப்பட்ட முறையில் பயிற்றுவிப்பதற்கு வலுவான பயிற்சி கொள்கை அவசியமானது. திறன் மேம்பாடு பயிற்சி பணியாளர்களுக்கு தேவையான திறனை மேம்படுத்த உதவுகிறது. இது பணியாளர்களின் அடிப்படை அறிவு மற்றும் திறனை மேம்படுத்துவதற்கு வாய்ப்பளிப்பதன் மூலம் அவர்களை உயர் நிலைக்கு கொண்டு செல்கிறது. இப்பயிற்சிகளில் செய்யப்படும் முதலீடானது, பணியாளர்களின் அணுகுமுறையில் மாற்றம், தன்னம்பிக்கை மற்றும் அறிவாற்றலை மேம்படுத்தி அரசு திட்டங்களை முறைப்படி செயல்படுத்த பயன்படுகிறது. செயல்திறனை மேம்படுத்துவதன் மூலம் பல்வேறு அரசு நலத் திட்டங்களை திறமையாக செயல்படுத்துவதினால் பொது மக்களின் நலன் பெருமளவு உறுதி செய்யப்படுகிறது.

ஊரக வளர்ச்சித் துறை பயிற்சி ஆணையரகம் திறன் மேம்பாடு பயிற்சிக்கு என பிரத்யேகமாக செயல்படுகிறது. பல்வேறு பயிற்சிகளை மேற்கொள்ள மாநில அளவில், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில் சத்திய விஜயநகரம், ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை மற்றும் மதுரை மாவட்டத்தில் தே.கல்லுப்பட்டி ஆகிய ஐந்து இடங்களில்அமைக்கப்பட்டுள்ளன. இப்பயிற்சி நிறுவனங்களின்

மூலம் பல்வேறு நிலை ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள், ஊரக உள்ளாட்சிபிரதிநிதிகள் மற்றும் இதர பணியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## அட்டவணை - 6.1
## மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் குறித்த அடிப்படை விவரங்கள்

| வ. எண். | மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் | அமைந்துள்ள மாவட்டம் | எல்லைக்குட்பட்ட மாவட்டங்கள் | துவங்கப் பட்ட ஆண்டு |
|---|---|---|---|---|
| 1. | ச.வி.நகரம் | திருவண்ணாமலை | காஞ்சிபுரம், விழுப்புரம், திருவள்ளூர்,கடலூர் , திருவண்ணாமலை (5 மாவட்டங்கள்) | 1956 |
| 2. | கிருஷ்ணகிரி அணை | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம்,தர்மபுரி, வேலூர் (5 மாவட்டங்கள்) | 1958 |
| 3. | பட்டுக்கோட்டை | தஞ்சாவூர் | தஞ்சாவூர், திருவாரூர் நாகப்பட்டிணம், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை (6 மாவட்டங்கள்) | 1954 |
| 4. | பவானிசாகர் | ஈரோடு | ஈரோடு, கோயம்புத்தூர், திண்டுக்கல், நீலகிரி, கரூர், பெரம்பலூர், அரியலூர், திருப்பூர் (8 மாவட்டங்கள்) | 1972 |
| 5. | தே.கல்லுப்பட்டி | மதுரை | மதுரை, தேனி, விருதுநகர், இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி (7 மாவட்டங்கள்) | 1948 |

### 6.1.1. **மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சி பெறுபவர்கள்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி செயலாளர்கள் மற்றும் அனைத்து

ஊராட்சி பணியாளர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள், சமூகம் சார்ந்த அமைப்புகள், பிற துறையில் பணிபுரியும் அலுவலர்கள் ஆகியோருக்கு ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

### 6.1.2. **பயிற்சிகள்**

மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, ஊராட்சி நிர்வாகம், கணக்குகள் பராமரிப்பு, தணிக்கை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பல்வேறு திட்டங்கள், சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை, மரபு சாரா எரிசக்தி, மனவியல் மேலாண்மை, ஆளுமை வளர்ச்சி, சமூக தணிக்கை, கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம், நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG), மின் ஆளுமை, தகவல் அறியும் உரிமைச் சட்டம், பணமில்லா பரிவர்த்தனை, வாழ்வாதாரம் போன்ற பொருட்கள் குறித்து பயிற்சி மற்றும் கணினி பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. சாலைகள், பாலங்கள், சிறு பாலங்கள் போன்ற கட்டமைப்பு பணிகள் தரமான முறையில் மேற்கொள்ள தொழில்நுட்பப் பயிற்சியும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனமும் ஓர் ஆண்டிற்கு குறைந்தபட்சம் 5,000 நபர்களுக்கு உள் வளாகப் பயிற்சியும், அதிகபட்சம் 25,000 நபர்களுக்கு வெளி வளாகப் பயிற்சியும் அளிக்க இயலும்.

### 6.1.3. **பணியமைப்பு**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் இயக்குநர்/இணை இயக்குநர் நிலையிலான

முதல்வர்கள் தலைமையின் கீழ், மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

### 6.1.4. **நிதி**

தமிழ்நாடு அரசு, மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் செயல்பாட்டிற்கு ரூ.7.09 கோடி நிதி 2019-20ம் ஆண்டு வழங்கியுள்ளது. மத்திய அரசு ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கும் அவ்வப்போது பயிற்சித் திட்டம் தொடர்பானசெலவினங்களை மேற்கொள்ள ரூ.20 இலட்சம் தொடர்செலவின மானியமாக வழங்குகிறது. மேலும் இந்நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் மற்றும் பயிற்சி உபகரணங்களுக்காகவும் தேவையின் அடிப்படையில் மத்திய அரசு தொடரா செலவினத்தின் கீழ் நிதியினை வழங்குகிறது.

**அட்டவணை** 6.2

2019-20 **ஆம் ஆண்டில்** 5 **மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களால்வழங்கப்பட்ட பயிற்சி விவரங்கள்** (31.1.2020 **வரையிலான**)

**(பொது, கணினி மற்றும் சிறப்புப் பயிற்சிகள்)**

| வ.எண் | பயிற்சியின் பெயர் | அணிகள் | பயிற்சியாளர்கள் |
|---|---|---|---|
| 1 | ஊரக வளர்ச்சி அலுவலர்களுக்கான பொது பயிற்சி | 237 | 4882 |
| 2 | கணிணி பயிற்சி | 169 | 3699 |
| 3 | சிறப்பு பயிற்சி | 41 | 2059 |
| 4 | நிர்வாகம், நீர்மேலாண்மை, உடல்நலம் மற்றும் சுகாதாரம் குறித்த பயிற்சி | 21 | 412 |

| வ.எண் | பயிற்சியின் பெயர் | அணிகள் | பயிற்சியாளர்கள் |
|---|---|---|---|
| 5 | ஊரக வளர்ச்சி தணிக்கை அலுவலர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி (கிராம தணிக்கை அலுவலர்கள்) | 7 | 232 |
| 6 | தொழில்நுட்ப அலுவலர்களுக்கான தணிக்கை பயிற்சி | 5 | 77 |
| 7 | ஊரக பகுதிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை பராமரிப்பது குறித்த ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பயிற்சி | 14 | 440 |
| 8 | ஊரக பகுதிகளில் சாலைகள் மற்றும் கட்டிடங்கள் அமைப்பது குறித்து அடிப்படை தொழில்நுட்ப பயிற்சி | 11 | 278 |
| 9 | தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் சட்ட மேலாண்மை குறித்த பயிற்சி | 9 | 306 |
| 10 | ஊர்நல அலுவலர் (மகளிர்) சமூக நலம் - பயிற்சி | 1 | 35 |
| 11 | பருவநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை பயிற்சி | 4 | 148 |
| 12 | பணமில்லா பரிவர்த்தனை பயிற்சி | 6 | 180 |
| 13 | சுகாதாரம் சமுதாய மேம்பாட்டில் அணுகுமுறை பயிற்சி | 6 | 112 |
| 14 | தகவல் தொழில்நுட்ப பயிற்சி | 101 | 4001 |
| 15 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்ககம் - தீன தயாள் அந்தியோதையா யோஜனா/ தேசிய நகர்புற வாழ்வாதார இயக்ககம் / ஒருங்கிணைந்த பயிற்சி | 7 | 476 |

| வ.எண் | பயிற்சியின் பெயர் | அணிகள் | பயிற்சியாளர்கள் |
|---|---|---|---|
| | பட்டறை | | |
| 16 | நரிக்குறவர்களுக்கான திறன் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி | 3 | 90 |
| 17 | நீர்மேலாண்மை குறித்த வட்டார அளவிலான அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல் | 17 | 217 |
| 18 | ஊராட்சிகள் சொந்தமாக வருவாய் ஈட்டுதல் குறித்து ஊராட்சி செயலருக்கான பயிற்சி. | 6 | 175 |
| 19 | சுகாதாரம் மற்றும்தூய்மை பாரத இயக்கம் பயிற்றுநர்களுக்கான பயிற்சி | 6 | 112 |
| 20 | நீலகிரி மாவட்ட மலைவாழ் பழங்குடியினருக்கான சிறப்பு பயிற்சி | 5 | 187 |
| 21 | அழகுகலை பயிற்சி (Beautician) | 1 | 35 |
| 22 | பொது நிதி மேலாண்மை /ஊரக மின்னனு தொகுப்பு பயிற்சி | 2 | 28 |
| 23 | உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுக்கு போதைபொருள் தடுப்பு குறித்து 1 நாள் விழிப்புணர்வு பயிற்சி | 1 | 40 |
| | **மொத்தம்** | **680** | **18221** |

2019-20 ஆம் ஆண்டில், ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில், 18,221 நபர்களுக்கு 680 அணிகளில் பலவகையான பயிற்சிகள் மேற்கூறிய அட்டவணைப்படி வழங்கப்பட்டுள்ளன.

6.1.5. **மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் சிறப்பு செயல்பாடுகள்**

**அ) வெளி நிறுவனங்கள் மூலம் மதிப்பீடு – புதிய முயற்சி**

கடந்த 2019-20ம் ஆண்டு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் பயிற்சி திட்டங்கள் வெளி நிறுவனங்கள் மூலம் மதிப்பீடு செய்யப்படுகிறது. இது தொடர்பாக வெளி நிறுவனங்களான பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், உட்பட அனைத்து நிறுவனங்களும் தங்களுடைய அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளன.

**அட்டவணை** 6.3

**வெளி நபர் மதிப்பீடு செய்யும் தலைப்புகள் விவரம்**

| வ எண் | மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் | பொருள் | மதிப்பீடு செய்யும் வெளி நபர் விவரம் |
|---|---|---|---|
| 1 | ச.வி.நகரம் | கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம் | ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் நல மேம்பாட்டு நிறுவனம், காஞ்சிபுரம் மாவட்டம் |
| 2 | பவானிசாகர் | கணினி பயற்சி | பாரதியார் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர் மாவட்டம் |
| 3 | பட்டுக்கோட்டை | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் | அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி |
| 4 | தே.கல்லுப்பட்டி | பொது பயிற்சி | மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை மாவட்டம் |
| 5 | கிருஷ்ணகிரி அணை | சுகாதாரம் | பாரதியார் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர் மாவட்டம் |

**ஆ.ஆராய்ச்சிப் பணிகள்**

2019 - 20 ஆம் ஆண்டில் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவன விரிவுரையாளர்கள் தங்களுடைய திறமைகளை வளர்த்து கொள்வதற்காக பல்வேறு தலைப்புகளில் ஆராய்ச்சி பணிகளை மேற்கொண்டனர்.

மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவன விரிவுரையாளர்கள் ஆராய்ச்சி நுட்பங்களை அறிந்து கொண்டு பல்வேறு ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையில், ஐதராபாத்திலுள்ள தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் வல்லுநர்களை கொண்டு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் பல்வேறு சிறப்பு பயிற்சிகள் நடத்தப்பட்டன.

மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவன விரிவுரையாளர்கள் தங்களுடைய ஆராய்ச்சி பணிகளுக்கான திட்டங்களை சமர்ப்பித்து அதற்கு நியமிக்கப்பட்ட குழுவும் ஒப்புதல் வழங்கியுள்ளது.

## அட்டவணை 6.4

## மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் எடுத்துக் கொண்ட ஆராய்ச்சி தலைப்புகளின் விவரம்

| வ.எண். | மண்டல ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனத்தின் பெயர் | ஆராய்ச்சி தலைப்புகளின் பெயர் |
|---|---|---|
| 1 | ச.வி.நகரம் | ஊரகப் பகுதிகளில் நடைமுறையில் உள்ள சொத்துவரி முறை மற்றும் செயலாக்கம் குறித்த ஆய்வு |
| 2 | பவானிசாகர் | கிராம ஊராட்சிகளின் வரியில்லா வருவாயினை பெருக்குதல் குறித்த |

| வ.எண். | மண்டல ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனத்தின் பெயர் | ஆராய்ச்சி தலைப்புகளின் பெயர் |
|---|---|---|
| | | விளக்கமான ஆய்வு |
| 3 | பட்டுக் கோட்டை | ஊரகப் பகுதிகளில் குடிநீர் விநியோகத்தில் எழும் பிரச்சனைகள் குறித்த ஆய்வு |
| 4 | கிருஷ்ணகிரி | ஊரகப் பகுதிகளில் மின்னணு சேவை பயன்பாடு மற்றும் விழிப்புணர்வு குறித்த ஆய்வு |
| 5 | தே.கல்லுப்பட்டி | கடலோர பகுதிகளில் அமைந்துள்ள கிராம ஊராட்சிகளின் குடிநீரின் தரம் குறித்த ஆய்வு. |

**இ) பவானிசாகர், மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் சாண எரிவாயு கலன் அமைத்தல்**

சாண எரிவாயு கலன்பவானிசாகர் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் உணவு, காய்கறி மற்றும் சமையலறை கழிவுகளை கொண்டு கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மூலம் அமைக்கப்பட்டு தற்போது செயல்பாட்டில் உள்ளது. மேலும் இது போன்ற சாண எரிவாயு கலன் இதர மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மற்றும் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**ஈ) கிருஷ்ணகிரி மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் விவசாயம் சார்ந்த சூழல் சுற்றுலா**

கிருஷ்ணகிரி மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் விவசாயம் மற்றும் தோட்டக்கலை உற்பத்தி செய்ய தேவையான சாகுபடிக்குரிய நிலம் உள்ளது. மேலும் இந்நிறுவனம் சுற்றுலா பயணிகளை கவரும் சூழலில் அமைந்துள்ளது. மேலும் இது பண்ணை விவசாயம், இயற்கை வழி விவசாயம், பண்ணை சார்ந்த வணிகம் மற்றும் சுற்றுலா ஆகிய அம்சங்களை கொண்டது. விவசாயம் சார்ந்த சூழல் சுற்றுலா சமீப காலமாக பிரசித்தி பெற்று திகழ்கிறது வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல் சுற்றுலா என்பது விவசாய பண்ணைக்கு சென்று இயற்கை வழி விவசாயம், தோட்டக்கலை, நீர் சேமிப்பு யுக்திகள், விவசாயம் சார்ந்த தொழில்கள் ஆகியவற்றில் நேரில் அனுபவ பூர்வமாக கற்றறிதல், ஈடுபடுதல் மற்றும் வருவாய் ஈட்டுதல் ஆகும். இது இளைய தலைமுறை அதிகம் பயன்பெற உதவும்.

எனவே கிருஷ்ணகிரி மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் வேளாண்மை சார்ந்த சூழல் சுற்றுலா மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்துடன் இணைந்து ரூ.56.61 இலட்சத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

**உ) நீலகிரி மாவட்டவாழ் பழங்குடியினருக்கான சிறப்பு பயிற்சி**

நீலகிரி மாவட்டத்தில் 187 பழங்குடியினருக்கு உடல் நலம், சுகாதாரம், விவசாயம், தோட்டக்கலை மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகிய தலைப்புகளில் ஒரு சிறப்பு பயிற்சி பவானிசாகர் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தால் டிசம்பர் மாதம் 2019-ல்அளிக்கப்பட்டது.

**ஊ) திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல்**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் திருவண்ணாமலை மாவட்டத்தில் ஊரக பகுதிகளில் பின்தங்கி உள்ள 35 ஊரக பெண்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் வகையில் அழகுகலை திறன்பயிற்சி (40 நாட்கள்) 18.11.2019 முதல் 20.1.2020 வரை சத்திய விஜய நகர மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தினால் அளிக்கப்பட்டது. மேலும் கிராமப்புற வாழ் பெண்களுக்கு இந்த அழகுகலை திறன் மேம்பாட்டு பயிற்சி இரண்டாவது அணி உடனடியாக துவக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**எ) சமூக நலத் துறை சார்ந்த மகளிர் ஊர்நல அலுவலர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி**

சமூக நலத்துறை சார்ந்த மகளிர் ஊர்நல அலுவலர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மூலம் அளிக்கப்பட்டது. குழந்தை நலம், மகளிர் நலம், பெண்களுக்கான சட்டங்கள், முதியோர் மற்றும் மூத்த குடிமக்கள் நலம், திருநங்கைகள் நலம் போன்ற தலைப்புகளில் 175 மகளிர் ஊர்நல அலுவலர்களுக்கு பயிற்சிஅளிக்கப்பட்டது.

## 6.2. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்

பல்வேறு திறன் மேம்பாடு பயிற்சிகளை மேற்கொள்ள, மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தினை, தமிழக அரசு மாநில அளவிலான தலைமைப் பயிற்சி நிறுவனமாக அமைத்துள்ளது. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்,தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் ஓர் சங்கமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது,இந்நிறுவனம்சென்னைக்கு அருகில் உள்ள மறைமலைநகரில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கி வருகிறது.

தலைமை பயிற்சி நிறுவனம் என்ற வகையில், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்றடுக்கு ஊராட்சி பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பல்வேறு நிலையில் உள்ள அலுவலர்கள் மற்றும் பிற துறை அலுவலர்களுக்கு உறைவிடப் பயிற்சி மற்றும் வெளிவளாக பயிற்சி வாயிலாக திறன் மேம்பாடு மற்றும் இதர பயிற்சிகள் அளிக்கிறது.

### 6.2.1. **குறிக்கோள்**

பயிற்சிகள் மூலம் பயிற்சியாளர்களின் அறிவு மற்றும் திறனை மேம்படுத்துவது, மேலும் குடிமக்களை மையப்படுத்தும் அணுகுமுறை குறித்த நேர்மறை மனப்பான்மையை உருவாக்குவதன் மூலம் பல்வேறு ஊரக வளர்ச்சி திட்டங்களை அவற்றின் நோக்கம் நிறைவேறும் வகையில் செயல்படுத்துவதே இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். மேலும், பல்வேறு பயிற்சிகளுக்கு தேவையான பயிற்சி பாடதிட்டங்களையும் உருவாக்குகிறது.

### 6.2.2. **பயிற்சி முறைகள்**

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், பங்கேற்புடன் கூடிய பயிற்சி முறைகள், விரிவுரைகள், களப்பார்வை, மேற்கோள் காட்டுதல், கலந்துரையாடல், அனுபவ பகிர்வு போன்ற பயிற்சி முறைகளை கடைபிடிக்கிறது. மாவட்ட மற்றும் வட்டார அளவிலான பயிற்சிகளுக்கு, சிறந்த

பயிற்றுநர்கள் மாநில நிலை முதல் கிராம நிலை வரை அனைத்து மட்டங்களிலும் படிப்படியாக பயிற்சி அளிக்கும்முறையில் (Cascading Model) பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

இந்நிறுவனமானதுஉறைவிடப்பயிற்சிகளை மறைமலை நகரில் உள்ள அதன் நிறுவன வளாகத்தில் நடத்துகின்றது. மேலும் மாவட்ட நிர்வாகம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மூலம் மாவட்ட, வட்டார மற்றும் கிராம ஊராட்சி அளவில் வெளிவளாக பயிற்சிகளை நடத்துகிறது.

### 6.2.3. **பயிற்சிக்கான நிதி ஆதாரம்**

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மாநில மற்றும் மத்திய அரசு மற்றும் இதர நிறுவனங்களிடமிருந்து பயிற்சிகள் நடத்துவதற்காக பின்வரும் விவரப்படி நிதி உதவியினை பெறுகிறது.

- மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் அதன் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஊதியமில்லாத செலவினங்களுக்கான மானிய நிதி உதவியினை (Grants - in - aids) தொடர் செலவினத் தலைப்பில் மத்திய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து 50:50 என்ற விகிதாச்சார அடிப்படையில் பெறுகின்றது.
- பயிற்சி தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளான பயிலரங்கு கூடங்கள், விடுதிகள் கட்டுதல் மற்றும் பயிற்சி

உபகரணங்கள் கொள்முதல் ஆகியவற்றிற்காக ஒவ்வொரு ஆண்டும் தேவையின் அடிப்படையில் மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் 100 சதவிகித நிதி உதவி வழங்குகிறது.

- தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்பு பிரதிநிதிகள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி பல்வேறு தலைப்புகளில் வழங்க மத்திய ஊராட்சிகள் அமைச்சகம் தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் (RGSA) கீழ் நிதி உதவி வழங்குகிறது.

### 6.2.4. 2019-20-**ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சிகள் விவரம்**

இந்நிறுவனம் 2019-20 ஆம் ஆண்டில் பின்வரும் அட்டவணையில் தெரிவித்துள்ளபடி 1,01,916 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அலுவலர்கள், ஊராட்சி அமைப்பின் களப்பணியாளர்கள், பிற துறை பணியாளர்கள் மற்றும் பயிற்றுநர்களுக்கு பயிற்சிகள் அளித்துள்ளது.

**அட்டவணை 6.5**

**மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனத்தில் வழங்கப்பட்ட பயிற்சி விவரம் - 2019-20**

| வ.எண் | திட்டம் | சாதனை | |
|---|---|---|---|
| | | அணிகள் | எண்ணிக்கை |
| 1 | நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள்/ சுயஉதவிக்குழுக்கள் மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் | 92 | 2,919 |

| வ.எண் | திட்டம் | சாதனை | |
|---|---|---|---|
| | | அணிகள் | எண்ணிக்கை |
| | ஒருங்கிணைப்பு பயிற்சி /கிராம ஊராட்சி வளர்ச்சித்திட்டம்/ பொது நிதி மேலாண்மை அமைப்பு பயிற்சி/ தொழில் நுட்ப பயிற்சி | | |
| 2 | சுயஉதவிக்குழு அலுவலக பொறுப்பாளர்கள்/ ஊராட்சி கூட்டமைப்பு/ கிராம வறுமை ஒழிப்பு சங்கஙளுக்கான ஒருங்கிணைந்த வலைதளப்பயிற்சி | 1847 | 73,850 |
| 3 | சுயஉதவிக்குழுக்கள்/ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு/ஊராட்சி நிறுவனங்களுக்கு வாழ்வாதார பயிற்சி | 43 | 850 |
| 4 | கிராம ஊராட்சி தலைவர் மற்றும் துணை தலைவர்களுக்கு சிறப்பு பயிற்சி | 76 | 19,173 |
| 5 | தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், ஐதராபாத் - வெளி பயிற்சி | 03 | 289 |
| 6 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி பற்றிய மூன்று மாத கால சான்றிதழ் படிப்பு | 12 | 793 |
| 7 | ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறை பயிற்சி | 32 | 2,628 |
| 8 | பிற துறையினரால் நடத்தப்பட்ட பயிற்சிகள் | 06 | 513 |
| 9 | இதர பயிற்சிகள் | 31 | 901 |
| | **மொத்தம்** | **2142** | **1,01,916** |

### 6.2.5.**தேசிய விருதுகள்**

தமிழ்நாடுமாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கு2018 - 2019ஆம் ஆண்டிற்காக பாராட்டதக்க வகையில் அதிக எண்ணிக்கையிலான பயிற்சிகள்

நடத்தியமைக்கும்,அதிக எண்ணிக்கையிலான பங்கேற்பாளர்கள் பங்குபெற்றமைக்காகவும் தேசிய விருதுகள் வழங்கப்பட்டன.

இம்மாநிலம், 2018 - 2019ஆம் ஆண்டில் சமவெளி பகுதியில் அதிக எண்ணிக்கையிலான பயிற்சிகள் நடத்தியமைக்கு முதல்நிலையும்அதிக எண்ணிக்கையிலான பங்கேற்பாளர்கள் பங்குபெற்றமைக்கு இரண்டாம் நிலையும் பெற்று, இந்திய அரசினால் இவ்விருதுகள் வழங்கப்பட்டன.

### 6.2.6. **மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தை வலுப்படுத்துதல்.**

1. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் ஏற்பட்டுள்ள மாறுபட்ட அணுகுமுறைகளின் காரணத்தால் அதன் திறன் மேம்பாடு நடவடிக்கைகளையும் வலுப்படுத்தும் வகையில் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் பல சீர்மிகு மையங்களை அமைக்கவும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களை வலுப்படுத்தும் வகையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

   மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் பின்வரும் ஏழு மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன:

   1. ஊராட்சி நிர்வாக மையம் / மாநில ஊரக வள மையம்.
   2. ஊரக வளர்ச்சி திட்ட செயல்பாடு மற்றும் பயிற்சி ஒருங்கிணைப்பு மையம்.
   3. வாழ்வாதாரம், மகளிர் மேம்பாடு மற்றும் ஊரக தொழில் நிறுவனங்கள் மேம்பாடு மையம்
   4. பொறியியல் மற்றும் தொழில் நுட்ப மையம்

5. தகவல் தொடர்பு தொழில் நுட்ப மையம்
6. பருவ நிலை மாற்றம் மற்றும் இயற்கை வள மேலாண்மை மையம்
7. ஒருங்கிணைப்பு, தொடர்பு மற்றும் புதிய முயற்சிகள் மையம்.

### 6.2.7. **வளாக மேம்பாடு மற்றும் நிறுவன மேம்பாட்டுக்கான முதன்மை மேம்பாட்டுத்திட்டம்**

ஒரு முழுமையான மற்றும் நீடித்த வளர்ச்சியைப் பெறுவதற்காக,மாநிலஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் வளாக மேம்பாட்டிற்கான ஒரு பெருந்திட்டத்தை தயாரித்துள்ளது. இப்பெருந்திட்டத்தில் மாதிரி சாலைகள், பாதைகள்,விளையாட்டு வளாகம், நீர் வள மேலாண்மை, திரவ மற்றும் திடகழிவு மேலாண்மை, மூலிகைத்தோட்டம், கலை நிகழ்ச்சி கூடம்,மலர் தோட்டம், குளம், மாதிரி கிராமம் ஆகியவற்றின் எதிர்கால கட்டமைப்பு மற்றும் வளர்ச்சிக்கு இந்நிறுவன வளாகத்தில் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

### 6.2.8. **ஆராய்ச்சி நடவடிக்கைகள்**

தமிழ்நாட்டில் கடலோர பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சிகளில் வசிக்கும் ஊரக சமுதாயத்தில் தீவிர பருவநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை கண்டறிவதற்கு ஏதுவாக சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுதவிர கீழ்க்காணும் இனங்களிலும் மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனத்தால் ஆராய்ச்சிப்படிப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

அ). தமிழ்நாட்டின் ஊரக பகுதியில் உள்ள உள்ளூர் சமுதாயம், தீவிர பருவநிலை மாற்றங்களை ஏற்றுக் கொள்ளவும், மட்டுப்படுத்தவும் மேற்கொண்ட வளர்ச்சி நடவடிக்கைகள், குறிப்பாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணிகள் பற்றிய விரிவான ஆராய்ச்சி.

ஆ). கிராம ஊராட்சிகளின் தணிக்கை நடைமுறைகள் மற்றும் செயல்பாடு குறித்து ஆய்வு.

இ). நகர பகுதிகளை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் வீட்டு வரி வசூலிப்பதில் உள்ள சவால்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்தல்.

6.2.9. **இதர கல்வி நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுதல்**

இந்திய தொழில் நுட்ப நிறுவனம் - மதராஸ், சென்னை காந்தி கிராமம் ஊரக நிறுவனம், திண்டுக்கல்,குஜராத் ஆனந்தில் உள்ள ஊரக மேலாண்மை நிறுவனம், மதராஸ் சமூக பணிகள் பள்ளி சென்னை, ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றும் ஒப்பந்தங்கள் (MoUs) இந்நிறுவனத்தால் 2019 - 20 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டன. பயிற்றுநர் மேம்பாடு, ஆய்வு, களப்பார்வை, திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு, வெளியீடு, ஊரக வளர்ச்சி, பேரிடர் மேலாண்மை போன்ற துறைகளில் நிபுணத்துவம் பெற்றிட இம்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதேபோன்று பங்கேற்கும் நிறுவனங்களுக்கும், தங்களுடைய மாணவர்களுக்கும் பயிற்சியளித்திடவும், பணி அனுபவம் (Internship) பெற்றிடவும், திட்டங்கள் தொடர்பாக நிறுவனத்துடன் இணைந்த ஆய்வு மற்றும் மதிப்பீடு

மேற்கொள்ளவும், ஆசிரியர்களாக பணியாற்றவும், நடைமுறையில் உள்ள சிறந்த முறைகளை ஆவணப்படுத்தவும் ஏதுவாகிறது.

### 6.2.10. **தொழில்நுட்ப அலுவலர் பயிற்சி**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் தொழில் நுட்ப அலுவலர்களுக்கு பயிற்சிகள் அளித்திட மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனத்தில் தொழில்நுட்ப பயிற்சி பிரிவு செயல்பட்டு வருகிறது. இதுவரை 155 பல்வேறு நிலையில் உள்ள பொறியாளர்களுக்கு புதுடில்லியில் உள்ள தேசிய சாலை ஆராய்ச்சி நிறுவனத்தில் தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### 6.2.11. **மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தால் நடத்தப்படும் இதர பயிற்சிகள்**

**அ) பொது நிதி மேலாண்மை அமைப்பு** (PFMS)

பொது நிதி மேலாண்மை அமைப்பை (PFMS) செயல்படுத்தும் வகையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் 20,339 அலுவலர்களுக்கு 514 பிரிவுகளாக மாநில ஊராட்சி நிறுவனம் மற்றும் இதர மாவட்ட மையங்களில் ரூ.3.80கோடி செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**ஆ) பல்லுயிர் பெருக்கம் தொடர்பான பயிற்சிகள்**

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், தமிழ்நாடு பல்லுயிர் வாரியம், புதுடில்லியில் உள்ள GIZ, நிறுவனத்துடன் இணைந்து பல்லுயிர் பெருக்கம் தொடர்பான பயிற்றுனர் பயிற்சிகள் நடத்தப்பட்டன.

**இ) கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம்**

அரசாணை எண்:34 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா - I) துறை நாள் 02.03.2016ன் படி கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம் தயாரித்தல் குறித்து முதன்மை மற்றும் இரண்டாம் கட்ட பங்கேற்பாளர்களுக்கு திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி வழங்க மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மற்றும் ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களுக்கு ஒப்படைக்கபட்டுள்ளது. நேர்முக/ வெளிவளாகப் பயிற்சி மூலம் 1,37,000 நபர்களுக்கு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் பயிற்சி வழங்கியுள்ளது.

**ஈ) புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்பகளின் பிரதிநிதிகளுக்கு பயிற்சி**

புதிதாக தேர்வு செய்யப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு அடிப்படை பயிற்சி அளிப்பதற்கு ஏதுவாக மிகப்பெரிய திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சி திட்டங்களை நடத்துவதற்கு மாநில அளவிலான முதன்மை பயிற்றுனர்கள், மண்டல அளவிலான வளஅுலுலர்கள்,மாவட்ட வள அலுவலர்கள் மற்றும் சார் கோட்ட வள அலுவலர்கள் உள்ளிட்ட நான்கு நிலை பயிற்சியாளர்கள் கண்டறியப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். மேற்கண்ட பயிற்சியாளர்கள் தேர்வு செய்யபட்ட ஆறு வகையான பிரதிநிதிகளுக்கு பயிற்சிகள் வழங்குவார்கள்.

திறமை வாய்ந்த செயல்பாடு மற்றும் விதிகளுக்கு உட்பட்ட நிர்வாகத்திற்கு ஏதுவாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக

உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு பயன்படும் வகையில் ஊராட்சி பொது நிர்வாகம் திட்டங்கள் செயல்பாடு நிதி நிர்வாகம், மின் ஆளுமை ஆகிய பல்வேறு தலைப்புகளில் 15 கையேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகள், பட்டியல் இன மற்றும் பழங்குடியின பிரதிநிதிகள் திறன்பட செயல்படும் வகையில் சிறப்பு பயிற்சி திட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**உ) தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் புளூரைடு தீவிரத்தினை குறைக்கும் திட்டம்**(HWS& FMP)

தமிழகஅரசு ஜப்பான் சர்வதேச கூட்டுறவு நடுவம் என்ற நிறுவனத்திடமிருந்து கடனுதவி பெற்று தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் முழுவதும் ஒகேனக்கல் குடிநீர் விநியோகம் மற்றும் புளூரைடு தீவிரத்தினை குறைத்திடும் திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தேவையான திறன் மேம்பாடு மற்றும் பயிற்சிகளை ரூ.276.64 லட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மேற்கொள்ளும்.

**ஊ) அண்ணா மேலாண்மை நிறுவனத்துடனான பயிற்சி**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அலுவலர்களுக்கு புதுமையான தலைப்புகளில் பயிற்சி அளிப்பதற்கென ரூ.36.00 இலட்சம் அண்ணா மேலாண்மை நிறுவனத்திற்கு நிதி

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இதன் மூலம் 28 அணிகளில் 840 அலுவலர்கள் பயிற்சி பெறுவார்கள்.

**எ) சான்றிதழ் வகுப்பு**

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், அரசு அலுவலர்கள் மற்றும் பொது மக்களுக்கு ஊராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி குறித்து மூன்று மாத கால சான்றிதழ் வகுப்பு நடத்துகிறது.இவ்வகுப்பு டிசம்பர் 2018-ல் துவக்கப்பட்டது. தற்போது மூன்று அணிகளில் நடத்தப்பட்டு 793 நபர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

### 6.2.12. **மாநில ஊராட்சி வள மையம்** (SPRC)

ஊராட்சி அமைப்புகளின் திறன் மேம்பாடு மற்றும் பயிற்சியில் தனி கவனம் செலுத்தும் பொருட்டு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் மத்திய அரசு நிதி உதவியுடன் மாநில ஊராட்சி வள மையம் அமைக்கப்பட்டுள்ளது. ஊராட்சி நிர்வாகிகளின் திறனை விரைந்து மேம்படுத்துதல், ஊராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி பற்றிய அறிவை ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் மற்றும் இதர துறை அலுவலர்களுக்கு வழங்குதல், ஊராட்சி நிர்வாகத்தின் மாநில அரசுக்கு ஆலோசனைகள் வழங்குதல் போன்றவை இந்நிலையத்தின் முதன்மை பொறுப்புகளாகும்.

### 6.2.13. **ஊராட்சிகளுக்கான மாவட்ட வளமையங்கள்** (DRCP)

மாவட்ட அளவில் ஊராட்சி அமைப்புகளுக்கு தேவையான திறன் மேம்பாடு மற்றும் பயிற்சிகளை சிறப்பாக

மேற்கொள்ள ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் மத்திய அரசு நிதி உதவியுடன் தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் (RGSA) கீழ் அமைக்கப்பட்டுள்ளன.

மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்வாக கட்டுப்பாட்டிற்குள் செயல்படும் இம்மையங்களின் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு பணிகள் சம்பந்தப்பட்ட மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் வழிகாட்டுதல் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

## 6.3. **செயலாக்கம்** 2020-21

2020-21ஆம் ஆண்டில், மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனம் மற்றும் ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் மூலம் சுமார் 1,53,620 நபர்களுக்கு 3840அணிகளில் பல்வேறு பயிற்சிகளை அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது அனைத்து திட்டங்களையும் நீண்ட காலத்திற்கு திறம்பட செயலாக்க பயனளிக்கும்.

எல்லா பயிற்சி நிறுவனங்களும் தங்கள் திறமைகளை வலுப்படுத்தவும், பலவீனங்களை பலவீனப்படுத்தவும் முயற்சி செய்கின்றன.

# 7. தமிழ்நாடுமகளிர் மேம்பாட்டு நிறுவனம்

## 7.**தமிழ்நாடுமகளிர் மேம்பாட்டுநிறுவனம்**

இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகத் தமிழகம் விளங்கவும், பெண்களுக்காகப் பல நலத்திட்டங்களை உருவாக்கிச் செயலாக்கவும், வறுமைக் கோட்டிக்குக் கீழ் எவருமே இருக்கக் கூடாது என்ற இலட்சியத்தை நிறைவேற்றிடவும் அயராது பாடுபடுவதே எனது குறிக்கோள்.

ஏழை எளியோர், ஆதரவற்றோர், முதியோர், விதவைகள், நலிவுற்ற பிரிவினர் ஆகிய சமுதாயத்தின் அடித்தளத்து மக்களுக்குக் கைகொடுத்து, அவர்களை உயர்த்த வேண்டும் என்பதில், நான் அளவற்ற அக்கறை கொண்டுள்ளேன்.

- ***மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்***

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மகளிரின் சமூக பொருளாதார ஆற்றல் மேம்பாட்டிற்காகவும், பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சி திட்டங்களின் மூலம் மகளிரைக் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு போன்றவற்றில் உயரச்செய்து அவர்களை சமூகத்தில் சமத்துவம் மிக்கவர்களாக, தற்சார்பு கொண்டவர்களாக, தன்னம்பிக்கை மிக்கவர்களாக உருவாக்குவதற்கும் தமிழக அரசினால் 1983ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் ஏழை எளிய மகளிரையெல்லாம் ஒன்றுபடுத்தி சுய உதவிக் குழுக்களாக மாற்றி அச்சுய உதவிக் குழுக்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சிகள் வழங்கி,

வலுவான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, நிதி இணைப்புகளையும் தொழில் வாய்ப்புகளையும் ஏற்படுத்தி, மகளிரின் ஆற்றலை மேம்படுத்தி சுய உதவிக் குழுக்கள் இயக்கத்தை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஒரு மாபெரும் சக்தியாக உருவாக்கியுள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் தொடர் முயற்சிகளின் விளைவாகவும், தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டச் செயல்பாடுகளின் காரணமாகவும் தமிழ்நாட்டில் உள்ள ஏழை மக்களின் நடைமுறை வாழ்வில் பெரும் மாற்றங்களும் வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளான (Sustainable Development Goals)வறுமையின்மை மற்றும்பாலின சமத்துவம் ஆகியவற்றை அடைவதற்கு இந்நிறுவனம் பெரும் முயற்சி மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் நான்கு முக்கிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

i. **தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்**

ஊரகப் பகுதிகளில் வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்காக மத்திய மற்றும் மாநிலஅரசுகளால் 60:40 என்ற நிதி விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டம்.

ii. **தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்**

நகர்ப்புற ஏழை மக்களுக்காக மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற நிதி விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டம்.

iii. **தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டம்**இத்திட்டமானது 2019 ஆம் ஆண்டு முதல் 5 மாவட்டங்களில் 20 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான நிதியானது மத்திய மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதாசாரத்தில் பங்களிப்பு செய்யப்படுகிறது.

iv. **அம்மா இருசக்கர வாகனத் திட்டம்**

உழைக்கும் மகளிருக்கு அவர்களின் பணியிடங்களுக்கு எளிதில் சென்று வர ஏதுவாக மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கும் அம்மா இருசக்கர வாகனத் திட்டம் தமிழ்நாடு அரசின் முழு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 7.1. மகளிர் திட்டம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் துவக்கத்தில் வேளாண் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டிருந்த மகளிரைக் கொண்டு பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) நிதியுதவியுடன் சுய உதவிக் குழுக்களை அமைத்து மகளிர் மேம்பாட்டு திட்டத்தை செயல்படுத்தியது. இத்திட்டம் முதலில் தருமபுரி மாவட்டத்திலும் அதனை தொடர்ந்து சேலம், இராமநாதபுரம், விழுப்புரம் மற்றும் மதுரை மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்தின் சிறப்பானசெயல்பாடுகளின் காரணமாக தமிழ்நாடு அரசு அனைத்து மாவட்டங்களுக்கும் **'மகளிர் திட்டம்'** என்ற பெயரில் மகளிரின் முன்னேற்றத்திற்காக இத்திட்டத்தை படிப்படியாக செயல்படுத்தியது.

சமூக பொருளாதார மேம்பாட்டை அடைவதற்கு மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளை உருவாக்கி, அவர்களுக்கு முறையான பயிற்சிகள் வழங்கி, வருமானம் ஈட்டும் தொழில் தொடங்க தேவையான வங்கிக்கடன் இணைப்புகள் ஏற்படுத்தி சுய உதவிக் குழு இயக்கத்தை வலுப்படுத்த இத்திட்டத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சி திட்டங்கள், உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்படும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் யாவும் மகளிர் திட்டத்தின் மேம்படுத்தப்பட்ட வடிவங்களேயாகும்.

### 7.1.1. **சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்**

ஒரே பகுதியில் வசிக்கும் 18 முதல் 60 வயதுக்கு உட்பட்ட 12 முதல் 20 மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. குழு உறுப்பினர்களிடையே சேமிப்பு பழக்கத்தையும், அவர்களுக்குள்ளேயே உள்கடன் வழங்குதலையும், ஒன்று கூடி ஒற்றுமையாகவும் மற்றும் ஜனநாயக ரீதியாகவும் முடிவெடுக்கும் பழக்கத்தை ஊக்கப்படுத்துவதும் சுய உதவிக் குழுக்களின் நோக்கங்களாகும். மகளிரின் பொருளாதார மற்றும் சமுதாய மேம்பாட்டினை உறுதிசெய்யும் பொருட்டு சுய உதவிக் குழுக்கள் முறையான கூட்டம் நடத்துதல், சேமித்தல், உள்கடன் வழங்குதல், கடன் திரும்ப செலுத்துதல், முறையான கணக்குப் பதிவேடுகள் பராமரித்தல் ஆகிய பஞ்ச சூத்திரங்களை கடைப்பிடித்து சிறப்புடன் செயல்பட பயிற்சி வழங்கப்படுகிறது.

**அட்டவணை 7.1**

**சுய உதவிக் குழுக்கள் பற்றிய விவரம்**

| | | |
|---|---|---|
| 1 | சுய உதவிக் குழுக்களின் மொத்த எண்ணிக்கை | 6.96 இலட்சம் |
| | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 103.32 இலட்சம் |
| 2 | ஊரகப் பகுதி சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 4.67 இலட்சம் |
| | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 69.28 இலட்சம் |
| 3 | நகர்ப்புற பகுதி சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 2.29 இலட்சம் |
| | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 34.04 இலட்சம் |
| 4 | மொத்த சேமிப்பு | 8,921 கோடி ரூபாய் |
| 5 | ஆதார நிதி பெற்ற சுய உதவிக்குழுக்களின் எண்ணிக்கை | 5.98 இலட்சம் |
| 6 | சுய உதவிக் குழுக்கள் பெற்ற ஒட்டு மொத்த கடன் இணைப்பு (2011 - 2020) | 65,930கோடி ரூபாய் |

## 7.2. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 2012 - 13 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஊரக ஏழை மக்களுக்காக வலுவான மற்றும் துடிப்பான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, வாழ்வாதாரத்தை உயர்த்தி, நிதி மற்றும் பல்வேறு சேவைகளை முறையாகப் பெற வழிவகை செய்து, குடும்ப வருமானத்தை பெருக்குவதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் சமுதாயத்தில் உள்ள ஏழைகள், மிகவும் ஏழைகள், நலிவுற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் போன்றோரே இலக்கு மக்கள் ஆவர்.

7.2.1. **முக்கிய அம்சங்கள்**:

- மிகவும் ஏழைகள், ஏழைகள், நலிவுற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோரிடத்தில் சிறப்பு கவனம் செலுத்துதல்.
- விடுபட்ட ஏழை மக்களை கண்டறிந்து அவர்களை சுய உதவிக் குழுவில் ஒருங்கிணைத்தல்.
- ஊரகப் பகுதிகளில் ஏழை மக்களின் வளர்ச்சிக்காக சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி வலுப்படுத்துதல்.
- சமூக மேம்பாட்டிற்கான திறன் வளர்ப்புப் பயிற்சிகளின் மூலம் ஊரக ஏழை மக்களை மேம்பாடு அடையச் செய்தல்.
- சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்தி சந்தைப்படுத்துதலை எளிதாக்குதல்.
- சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்களுக்கு கடன் வழங்கும் பொருட்டு குழுக்களுக்கு நிதியுதவி வழங்குதல்.
- ஊரக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன்மேம்பாடு பயிற்சி அளித்தல்.
- அரசுத்துறைகள் மூலம் கிடைக்கப் பெறும் பல்வேறு நிதி மற்றும் நிதி சாரா சேவைகளை ஒருங்கிணைத்து திறம்பட பயன்படுத்திட வழிவகை செய்தல்.
- கிராமப்புற ஏழை மக்கள் அனைவரும் அடிப்படை வசதிகளைப் பெறக்கூடிய வாய்ப்புகளை உருவாக்குதல், சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கான பயிற்சிகள் வழங்குதல்.

### 7.2.2. **செயலாக்கப் பகுதி**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், சென்னை நீங்கலாக, தமிழ் நாட்டின் 36 மாவட்டங்களில் 388 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவற்றுள் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் செயல்படும் 120 வட்டாரங்களும் மற்றும் தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டம் செயல்படும் (NRETP) 5 மாவட்டங்களில் உள்ள 20 வட்டாரங்களும் அடங்கும்.

**அட்டவணை 7.2**

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் தற்போது செயல்படுத்தப்படும் வட்டாரங்களின் விபரம்**

| வ. எண் | திட்டம் | மாவட்டங்கள் | வட்டாரங்கள் | ஊராட்சி கள் |
|---|---|---|---|---|
| 1 | முதற் கட்டம் | 20 | 60 | 2250 |
| 2 | இரண்டாம் கட்டம் | 32 | 110 | 3391 |
| 3 | மூன்றாம் கட்டம் | 26 | 98 | 2472 |
| 4 | நான்காம் கட்டம் (புதுவாழ்வுத் திட்ட வட்டாரங்கள்) | 31 | 120 | 4174 |
| **கூட்டுத்தொகை** | | **36** | **388** | **12,287** |
| 5 | சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் (PTSLP) | - | - | 238 |
| **மொத்தம்** | | **36** | **388** | **12,525** |

**முதற் கட்டம்: -** 2012 - 13 ஆம் ஆண்டு முதல் 60 வட்டாரங்களில் உள்ள 2,323 கிராம ஊராட்சிகளில் 2,250 கிராம ஊராட்சிகள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார

இயக்கத்தின் கீழும், 73 கிராம ஊராட்சிகள் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலமும் செயல்படுத்தப்படுகிறது.

**இரண்டாம் கட்டம்:–**2013-14 ஆம் ஆண்டு முதல் 27 மாவட்டங்களிலுள்ள (தற்போது 32 மாவட்டங்கள்) 110 வட்டாரங்களைச் சார்ந்த 3,491 கிராம ஊராட்சிகளில் 3,391 கிராம ஊராட்சிகள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலமும், எஞ்சியுள்ள 100 கிராம ஊராட்சிகள் சுனாமிக்குப்பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலமும் பயன்பெற்று வருகின்றன.

**மூன்றாம் கட்டம்:–**2014-15 ஆம் ஆண்டு முதல் மூன்றாம் கட்டமாக 98 வட்டாரங்களில் உள்ள 2,536 கிராம ஊராட்சிகளில் 2,471 கிராம ஊராட்சிகளில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படுகிறது. எஞ்சியுள்ள 65 கிராம ஊராட்சிகளில் சுனாமிக்குப்பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.


**நான்காம் கட்டம் (ஜூலை 2017 முதல்):–**தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டம் முந்தைய 26 மாவட்டங்களில் (தற்போது 31 மாவட்டங்கள்) 120 வட்டாரங்களில் உள்ள 4,174 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டது. தற்போது இவை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 7.2.3. **உயர்நிலைக் குழு அமைப்பு**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தை செயல்படுத்த மாநில இயக்க மேலாண்மை அலகாக, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தை மாநில அரசு

நியமித்துள்ளது. இந்த இயக்கத்தின் செயல்பாடுகளுக்கு கொள்கை வடிவிலான வழிகாட்டுதல் மற்றும் திட்டச் செயல்பாடுகளைக் கண்காணித்தல் போன்ற பணிகளுக்காக மாண்புமிகு அமைச்சர், நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அவர்களின் தலைமையில் உயர்நிலை அதிகாரம் பெற்ற குழு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வியக்கத்தின் இயக்குநராக அரசு கூடுதல் தலைமைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களும், தலைமை செயல் அலுவலராக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வியக்கத்தினைச் செயல்படுத்துவதற்காக மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் தனி நிர்வாக அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

### 7.2.4. திட்டச் செயல்பாடுகளின் வரிசை



## 7.3. திட்ட செயல்பாடுகள்

ஒவ்வொரு ஊராட்சியிலும் திட்டத்தின் செயல்பாடுகள்விரிவான முறையில் கீழ்க்கண்டவாறுமேற்கொள்ளப்படுகின்றன.

### 7.3.1. தகவல், கல்வி மற்றும் தொடர்பு

கலை நிகழ்ச்சிகள், தெரு நாடகங்கள், பேரணி, ரத ஊர்வலம் போன்றவற்றின் மூலமும் சுவர் ஓவியங்கள், சுவரொட்டிகள், இயக்க தகவல் பலகைகள் மற்றும் துண்டு பிரசுரங்கள் ஆகியவற்றின் வாயிலாகவும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் கிராமங்களிலுள்ள மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

### 7.3.2. சுய உதவிக் குழுக்கள் விவரக் கணக்கெடுப்பு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் செயலாற்றும் சமுதாய வளப் பயிற்றுநர்களைக் கொண்டு, அனைத்து கிராம ஊராட்சிகளிலும், சுய உதவிக் குழுக்களின் புள்ளி விவரக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, செயல்பாட்டில் உள்ள குழுக்கள், செயல்படாத மற்றும் கலைந்த குழுக்கள் போன்றவை கண்டறியப்பட்டுள்ளன. செயல்பாட்டில் இல்லாத சுய உதவிக் குழுக்களை திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மூலமாக, மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டுவர இப்புள்ளி விவரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

### 7.3.3. மக்கள் நிலை ஆய்வு

2013-14 முதல் 2016 ஆம் ஆண்டு வரை பல்வேறு கட்டங்களாக அனைத்து கிராம ஊராட்சிகளிலும் உள்ள ஏழைகள், மிகவும் ஏழைகள், மாற்றுத்திறனாளிகள்,

நலிவுற்றோர், பழங்குடியினர் மற்றும் விளிம்புநிலை சமூகத்தினரைக் கண்டறிந்திட அனைத்து சமுதாயத்தினரின் பங்கேற்புடன் கூடிய மக்கள் நிலை ஆய்வு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டது. ஏழைக் குடும்பங்கள் எதுவும் விடுபடாமல் இருப்பதை உறுதி செய்ய மக்கள் பங்கேற்புடன் கூடிய ஊரக மதிப்பீட்டு முறை மற்றும் பிற யுக்திகளான நடைப்பயணம், சமூக வரைபடம், பொருளாதார மதிப்பீடு மற்றும் மூன்று வெவ்வேறு குழுக்களில் சரிபார்க்கும் முறை போன்ற வழிமுறைகளை பின்பற்றி மக்கள் நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வின் மூலம் தேர்வு செய்யப்பட்ட இலக்கு மக்கள் பட்டியல் அனைத்து குக்கிராமங்களிலும் உள்ள முக்கியமான இடங்களில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு, சேர்த்தல் மற்றும் விடுதல் ஏதேனும் இருப்பின், அவற்றையும் பெற்று, இறுதி இலக்கு மக்கள் பட்டியல் கிராம சபையில் வைத்து ஒப்புதல் பெறப்பட்டது.

இத்தகைய மக்கள் நிலை ஆய்வு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளுக்கு இப்பட்டியலே அடிப்படையாக உள்ளது.

### 7.3.4. **கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைத்தல்**

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஏழைகள், மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர், பழங்குடியினர் போன்ற இலக்கு மக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு

சங்கமாகும்.

11 முதல் 19 உறுப்பினர்களை கொண்ட இச்சங்கம், இலக்கு மக்களைக் கண்டறிந்து அவர்களுக்குத் தனி நபர் கடன் வழங்கி அவர்களை வறுமையில் இருந்து மீட்கவும், அவர்களின் நலிவுநிலையைக் குறைக்கவும் உதவுகின்றது. இச்சங்கத்தில் ஊராட்சி மன்றத் தலைவர் அலுவல் சாரா மரபுவழி தலைவராக செயல்படுவார்.

இதுவரை 12,734 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் (பழங்குடியினருக்கான 472 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட) திட்ட செயலாக்கப் பகுதிகளான 388 வட்டாரங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

### 7.3.5.**சமூகத் தணிக்கை குழு ஏற்படுத்துதல்**

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைக்கப்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும், சமூகத் தணிக்கை குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. சமூகத் தணிக்கை குழுவில் 5 முதல் 7 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை சமூகத் தணிக்கை குழு கண்காணித்து, கிராம சபைக்கு அறிக்கையாக சமர்ப்பிக்கின்றது.

### 7.3.6. **புதிய சுய உதவிக் குழுக்கள்**

மக்கள் நிலை ஆய்வின் மூலம் கண்டறிந்த, விடுபட்ட ஏழை மகளிரைக் கொண்டு புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. குழுவிலுள்ள ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கும் மற்றும் குழுவின் உறுப்பினர்களுக்கும் குழு செயல்பாடுகள் மற்றும் கணக்குப்

புத்தக பராமரிப்பு பயிற்சியும் வழங்கப்படுகிறது. மகளிர் சுய உதவிக் குழுக்கள் பஞ்சசூத்திரங்களை கடைப்பிடித்து தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் பல்வேறு உதவிகளைப் பெற்று பொருளாதார முன்னேற்றம் பெறவும் வழிவகை செய்யப்படுகிறது.

2019-20 ஆம் ஆண்டில் 11,264 சுய உதவிக் குழுக்கள் (புதிய மற்றும் புதுப்பிக்கப்பட்ட குழுக்கள் சேர்த்து) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழுக்கள் பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏதுவாக, குழுக்களை தரமதிப்பீடு செய்து, ஆதார நிதி, சமுதாய முதலீட்டு நிதி மற்றும் வங்கிக் கடன் போன்ற நிதியுதவிகள் வழங்கப்படுகின்றன.

### 7.3.7.**ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு**

ஊராட்சியில் செயல்படும் அனைத்து சுய உதவிக் குழுக்களும் ஜனநாயக முறையில் ஒன்றாக இணைந்து செயல்படவும்,சுய உதவிக் குழு இயக்கத்தினை வலுப்படுத்தும் வகையில், பல்வேறு நிதி சார்ந்த மற்றும் இதர சேவைகளை சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கி வழி நடத்திடவும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்ட ஒரு சமுதாயம் சார்ந்த அமைப்பாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம்1975-ன் கீழ் பதிவு பெற்ற அமைப்புகளாகும்.

இப்பதிவுச் சட்டம் 1975-ன் விதி எண்.25 மற்றும் 42-ன் படி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வருவாய்

ஈட்டும் தொழிலை மேற்கொண்டு அவற்றிலிருந்து பயன்கள் அடையும் வகையில் ஒரு நிறுவன அமைப்பாக உருவாக வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்த அமைப்பானது, ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், கிராம மக்களுக்கும் இடையே மிக முக்கியமான இணைப்புப் பாலமாக செயல்பட்டு வருகிறது.

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் கடமைகள் மற்றும் பொறுப்புகள்**

- மக்கள் நிலை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட தகுதிவாய்ந்த மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை அமைத்தல்.
- தேவையான நிதியினை பெற்று வழங்குதல் மூலம் சுய உதவிக் குழுக்களை வலிமைப்படுத்துதல் மற்றும் வழிநடத்துதல்.
- திட்டம் சார்ந்த தகவல்கள்சுய உதவிக் குழுக்களிடம் சென்றடையச் செய்தல்.
- சுய உதவிக் குழுக்களின் கணக்கு மற்றும் பதிவேடுகளை பராமரித்தல், தணிக்கை செய்தல், குழுக்களை தரம் பிரித்தல் மற்றும் கடன் மதிப்பீட்டிற்கு ஏற்பாடு செய்தல்.
- வங்கிகளிலிருந்து நேரிடையாக கடன் பெற்று, சுய உதவிக் குழுக்களுக்கு குறைந்த வட்டியிலான கடன் அளிப்பதன் மூலம் இடைநிலை நிதி நிறுவனமாக செயல்படுதல்.
- அரசின் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்துமகளிரின் வளர்ச்சி மற்றும் ஆற்றல் மேம்பாடுதொடர்பான சமூகப் பிரச்சனைகள், சுகாதாரம், ஊட்டச்சத்து, மற்றும் பாலின

பிரச்சினைகள் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ளுதல்.

**துணைக் குழுக்கள்**

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பானது, கிராம வளர்ச்சி மற்றும் குழு உறுப்பினர்களின் நலனுக்காக பல்வேறு செயல் திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றும் பொருட்டு, கீழ்க்காணும் துணைக் குழுக்களை அமைத்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

- குழு அமைத்தல் மற்றும் வலுப்படுத்துதல் துணைக்குழு
- கடன் இணைப்பு மற்றும் கடன் கண்காணிப்பு துணைக் குழு
- வாழ்வாதார துணைக் குழு
- சமூக மேம்பாட்டிற்கான துணைக் குழு

மொத்தம் 388 வட்டாரங்களில், 12,358 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளும், 166 வாழ்வாதார துணைக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 7.3**

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் விபரம்**

| வ. எண் | திட்டம் | வட்டாரங்கள் | கிராம ஊராட்சிகள் | ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு | வாழ்வாதார துணைக் குழுக்கள் * | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் முந்தைய புதுவாழ்வு திட்டம் | 388 | 12,287 | 12,120 | 166 | 12,286 |
| 2 | சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டம் | - | 238 | 238 | - | 238 |
| **மொத்தம்** | | **388** | **12,525** | **12,358** | **166** | **12,524** |

*10 க்கும் குறைவான மகளிர் சுய உதவிக் குழுக்கள் உடைய கிராம ஊராட்சிகளில் வாழ்வாதாரத் துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்துணைக் குழுக்கள் அவ்வூராட்சிகளில், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பாக செயல்படுகிறது.

## 7.3.8. **வட்டார அளவிலான கூட்டமைப்பு**

தமிழ்நாட்டில், 385 வட்டாரங்களில் வட்டார அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டுள்ளன. வட்டாரத்தில் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை முதன்மையாகக் கொண்டு வட்டார அளவிலான கூட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

**வட்டார அளவிலான கூட்டமைப்பின் பணிகள்**

- வங்கிக்கடன் இணைப்பைப் பெறுவதில் சுய உதவிக் குழுக்களின் திறனை மேம்பாடு அடையச் செய்தல்.
- வங்கிக்கடனை,குறித்த காலத்தில் திருப்பி செலுத்துவதை உறுதி செய்தல்.
- நிலையான வருமானம் தரத்தக்க இலாபகரமான வாழ்வாதார தொழில் நடவடிக்கைகளைக் கண்டறிதல்.
- சமூக உள்ளாக்கத்தை உறுதி செய்தல் மற்றும் பாலின சமத்துவம், மகளிருக்கான பல்வேறு அரசு நலத் திட்டங்களில் உள்ள உரிமைகள் மற்றும் உதவிகளை பெற வழிவகை செய்தல்.
- திட்டம் குறித்த பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகளை சமூக வள பயிற்றுநர், சமூக வல்லுநர்கள்

மூலம் அளிக்கும் பயிற்சி நிறுவனமாக வட்டார அளவில் செயல்படுதல்.

### 7.3.9. **சுய உதவிக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்குதல்**

**அ. சுய உதவிக் குழுக்களுக்கு ஆதாரநிதி**

மூன்று மாதம் முடிவு பெற்று தரமதிப்பீடு செய்யப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதியாக குழு ஒன்றுக்கு ரூ.15,000/- வீதம் நிதி வழங்கப்படுகிறது. இந்த ஆதார நிதியானது அவர்களை ஊக்குவிப்பதற்கு ஒரு காரணியாகவும், அவர்களின் சேமிப்போடு தொகுப்பு நிதியை அதிகப்படுத்தி அதிகமான உறுப்பினர்கள் உள்கடன் பெறுவதற்கும் வழிவகை செய்கிறது.

2019-20 ஆம் ஆண்டில் தகுதியான 5,745 சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதியாக ரூ.15,000/- வீதம் மொத்தம் 8.62 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**ஆ. சமுதாய முதலீட்டு நிதி**

சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார செயல்பாடுகளுக்காக இத்திட்டத்தின் கீழ் கடனாக வழங்கப்படும் தொகை சமுதாய முதலீட்டு நிதியாகும். சமுதாய முதலீட்டு நிதியானது ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்டு, அவைகளின் மூலம் தகுதியான சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விடுவிக்கப்படுகிறது. சுய உதவிக் குழுவிற்கு அதிகபட்ச தொகையாக ரூ.75,000/- வீதம் ஆண்டிற்கு 9சதவீத வட்டியுடன் கடனாக வழங்கப்படுகிறது. சமுதாய முதலீட்டு நிதி வாழ்வாதார

மேம்பாட்டிற்காக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைகளில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் குறைந்தபட்சம் 50சதவீதம் சுய உதவிக் குழுக்களுக்கு கடனாக விடுவிக்கப்படுகிறது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பானது, 100 சதவீதம் கடன் திருப்பம், முறையான பயன்பாடு மற்றும் சமுதாய முதலீட்டு நிதியினை சுழற்சி முறையில் அனைத்துக் குழுக்களும் பெறுவதை உறுதிசெய்யும் பணியினை மேற்கொள்ளும்.

2019 - 20 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்களுக்கான சமுதாய முதலீட்டு நிதி ரூ.50,000 வீதம் 15,238 சுய உதவிக் குழுக்களுக்கு மொத்தம் 76.19 கோடி ரூபாய்வழங்கப்பட்டுள்ளது.

**இ. நலிவுநிலைக் குறைப்பு நிதி**

மக்கள் நிலை ஆய்வின் போது மாற்றுத்திறனாளி மற்றும் நலிவுற்றோர் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு நலிவுற்றோர் மேம்பாட்டு நிதியாக ரூ.10,000 முதல் ரூ.25,000 வரை தனி நபர் கடனாக வழங்கப்பட்டு வருகிறது. நலிவுற்றோருக்கான நிதியானது மாற்றுத்திறனாளிகளின் உணவுப் பாதுகாப்புக்கும், வாழ்வாதார செயல்பாடுகளுக்கும், உடல் நலக் குறைவு அல்லது எதிர்பாரா மருத்துவ செலவிற்கும் மற்றும் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்டோரின் மறுவாழ்விற்கும் பயன்படுத்தப்படுகிறது. நலிவுநிலைக் குறைப்பு நிதி கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் மூலம் தனிநபர் கடனாக வழங்கப்படுகிறது.

2019-20 ஆம் ஆண்டில் 14.60 கோடி ரூபாய் நலிவுற்றோர் மேம்பாட்டு நிதியாக 5,839 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு ரூ.10,000/- முதல் ரூ.25,000/- வரை வழங்கப்பட்டுள்ளது.

## 7.4. **திறன் மேம்பாடு**

### 7.4.1. **பணியாளர்களுக்கான பயிற்சிகள்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் பணியாளர்களுக்கு அவசியத் தேவையாக வாழ்வாதார இயக்கம் குறித்து பல்வேறு கூறுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றது. இவ்வியக்கத்தின் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளை இயக்கப் பணியாளர்கள் அறிந்து கொள்ளவும் அவைகளை சீரான முறையில் செயல்படுத்தவும் இயக்கம் குறித்த கீழ்க்கண்ட பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

1. தூண்டல் பயிற்சி - I (நிறுவனக் கட்டமைப்பு)
2. தூண்டல் பயிற்சி - II
3. கருப்பொருள் சார்ந்த பயிற்சி

### 7.4.2. **சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கான பயிற்சிகள்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு சமுதாயம் சார்ந்த அமைப்புகளே அடிப்படையாக விளங்குகின்றன. ஏழை மக்களின் அமைப்புகளான சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், வட்டார அளவிலான கூட்டமைப்புகள், மக்கள் கற்றல் மையம் (மகமை) போன்றவை தங்கள்

உறுப்பினர்களுக்கு சிறந்த சேவைகள் வழங்குவதை உறுதிசெய்யும் பொருட்டு அவர்களுக்கு தேவையான பயிற்சிகளை தொடர்ந்து மேற்கொள்கின்றன. பொதுவாக இப்பயிற்சிகளின் முக்கிய நோக்கமாக சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் நிர்வாகமும் நிதி மேலாண்மையும் திகழ்கின்றன. திறன் வளர்ப்பிலுள்ள கீழ்க்கண்ட அனைத்து நிலை பயிற்சிகளும் இவ்வமைப்புகளுக்கு அளிக்கப்படுகின்றன.

- புதிதாக அமைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சி.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கு நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை சார்ந்த பயிற்சி.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி.
- கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களுக்கு இயக்கவழிகாட்டி கையேடுகள் விளக்கப் பயிற்சி.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் துணைக் குழுக்கள்மற்றும் சமூக தணிக்கை குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி.
- வட்டார அளவிலான கூட்டமைப்புகளுக்கான உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் பயிற்சி

### 7.4.3. **முதன்மைப் பயிற்றுநர்கள் மற்றும்சமுதாய வளப் பயிற்றுநர்கள் தொகுப்பை உருவாக்குதல்**

எந்த ஒரு சமுதாய வளர்ச்சித் திட்டத்திற்கும், சமூக மூலதனம் என்பது ஒரு மிகப்பெரிய அம்சமாகும். சமுதாயத்தின் தேவைக்கு ஏற்ப திட்டத்தினை உறுதிப்படுத்திட, வளப் பயிற்றுநர்கள் பல்வேறு நிலைகளில்

ஆய்வுக்குட்படுத்தப்பட்டு அதில் மிகச்சிறந்த செயல்திறன் படைத்த வளப்பயிற்றுநர்கள் அடையாளம் காணப்பட்டு முதன்மைப் பயிற்றுநர்களாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மைப் பயிற்றுநர்கள் பிற வளப்பயிற்றுநர்களுக்கு திட்டம் சார்ந்த கருப்பொருட்களை விளக்கும் பயிற்சியாளர்களாக செயல்படுகின்றனர். இவர்களிடம் பயிற்சி பெற்ற வளப்பயிற்றுநர்கள் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு பயிற்றுநர்களாக செயல்படுகின்றனர்.

இவ்வாறு வகைப்படுத்தப்பட்ட பயிற்றுநர்கள், மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் பயிற்சிகள் அளித்திடும் வல்லுநர்கள் ஆவர். இப்பயிற்றுநர்களை உருவாக்கிடும் முனைப்பில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சீரிய முறையில் செயல்பட்டு, திட்டம் சார்ந்த பயிற்சிகள் பயனாளிகளைச் சென்றடைவதை உறுதி செய்கிறது. பயிற்சிகளின் மூலம் உருவாக்கப்பட்ட பல்வேறு சமுதாய பயிற்றுனர்கள் விபரம் பின்வருமாறு.

- **சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்கள் (CSTs) பணி –** சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்கள் சுய உதவிக் குழுக்களின் உருவாக்கம் மற்றும் அக்குழுக்களின் செயல்பாடு குறித்த தொடர் கண்காணிப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்திட கண்டறியப்படுகின்றனர். இவர்கள் அடிப்படையில் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் ஆவர். கிராம அளவில் துடிப்புடன் செயல்படும் சுய உதவிக் குழுவில் இருந்து சிறப்பாக செயல்படும் உறுப்பினர்கள் அடையாளம் காணப்பட்டு, அவ்வுறுப்பினர்கள் தொடர் பயிற்சிகளுக்கு உட்படுத்தப்பட்டு, திறன் மேம்பாடு பெற்று

சுய உதவிக் குழுக்களின் கண்காணிப்பு மற்றும் அக்குழுக்களுக்கான தேவை சார்ந்த நிகழ்வுகளில் உதவி புரிகின்றனர். சுய உதவிக் குழுக்களின் சிறப்பான செயல்பாட்டையும் அவர்களின் பஞ்சசூத்திரத்தைக் கடைப்பிடிப்பதையும் மேற்பார்வையிடுதல் இவர்களின் முக்கிய பணியாகும். இவர்கள் சுமார் 10 முதல் 15 குழுக்களை கண்காணித்து வருகின்றனர்.

- **சமுதாய மாற்றுத் திறனாளிகளுக்கான வழிநடத்துநர்கள் (CDFs)–**ஒவ்வொரு கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும்ஒருவர் என்ற முறையில் சமுதாய மாற்றுத் திறனாளிகளுக்கானவழிநடத்துநர் தேர்வு செய்யப்பட்டு, பயிற்சிகள் வழங்கப்பட்டு சமுதாயம் சார்ந்த மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு மேலாண்மைக்கு பணியமர்த்தப்படுகிறார்கள். இவர்கள் மாற்றுத் திறனாளிகளின் தேவைகளைக் கண்டறிந்து, நிறுவனம் சார்ந்த தேவையான மறுவாழ்வு பயிற்சிகளை வழங்கி, மாற்றுத் திறனாளிகளுக்கான பல்வேறு அரசுத் துறை சார்ந்த சேவைகளை ஒருங்கிணைத்து உதவிகள் பெற்றுத் தந்திட வழிவகை செய்வர்.

- **சமுதாய வளப் பயிற்றுநர்கள் - வேலை வாய்ப்பு (CRP-Jobs) -** இளைஞர்களுக்கான பல்வேறு திறன் சார்ந்த பயிற்சிகளை செவ்வனே செயல்படுத்தி வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது இளைஞர்களுக்கான திறன் பயிற்சிகளை வழங்குவதில் முன்னோடியாகத் திகழ்கிறது. இப்பயிற்சிகளை

வழங்குவதற்காக கிராமங்கள் தோறும் இளைஞர்களை திரட்டுவதற்கு சமுதாய வளப் பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். இவ்வளப்பயிற்றுநர்கள் கிராம அளவில் தகுதிடைய இளைஞர்களைத் தேர்வு செய்வதோடு அவர்களைப் பற்றிய அடிப்படைத் தகவல்களை திரட்டி நிர்வகிக்கிறார்கள். அந்த தகவல்களின் அடிப்படையில் தகுதியான இளைஞர்களை அவர்கள் விருப்பப்படும் தொழில் சார்ந்த பயிற்சி பெற வழிவகை செய்வதோடு அவர்களின் முன்னேற்றத்தையும் கண்காணிக்கின்றனர்.

- **சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் (CBCs) -** சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்பை ஏற்படுத்தி செயல்படுத்திட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படும் தொகுப்புகளில் (Clusters) தொகுப்பு ஒன்றுக்கு 2 நபர்கள் வீதம் சிறப்பாக செயல்படும் குழுக்களின் உறுப்பினர்கள் சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களாக தேர்வு செய்யப்படுகின்றனர். இவர்களுக்கு தங்கள் பணியினை திறம்பட செய்திடும் விதமாக வங்கி இணைப்பு, நிதி உள்ளாக்கம் மற்றும் நிதிதகவல்கள் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இப்பயிற்சிகளின் மூலம் இச்சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி இணைப்பை ஏற்படுத்துவதுடன், சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு கடன் பெற வழிகாட்டுதல், கடன் திரும்ப செலுத்துதல் மற்றும் காப்பீடு செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கின்றனர். அத்துடன் நிதி சார்ந்த

கல்வியறிவு மற்றும் மின்னணு பணப்பரிவர்த்தனை குறித்த கூட்டங்கள் நடத்தி அதன் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகளையும் மேற்கொள்கின்றனர்.

7.4.4. **வங்கியாளர்களுக்கான பயிற்சி**

சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு பெற்றுத் தருவது தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மிக முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதார மேம்பாடு மற்றும் வருவாய் பெருக்கத்திற்கு கடன் இணைப்பு சரியான வட்டி விகிதத்தில் தேவைப்படுகிறது. வங்கிக் கடன் அளிப்பதில் வங்கி மேலாளர்கள் / அலுவலர்கள் பணியானது மிக முக்கியம் வாய்ந்ததாகும். எனவே சுய உதவிக் குழு இயக்கம், வறுமை ஒழிப்பில் அதன் பங்கு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூறுகள் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்தும் இதர திட்டங்கள் பற்றி வங்கி அலுவலர்கள் அறிந்திருத்தல் அவசியமாகிறது. இந்த நோக்கத்திற்காக சுய உதவிக் குழு – வங்கி இணைப்பு, நிதிக் கல்வி, நிதி உள்ளாக்கம், மின்னணு பரிவர்த்தனை அறிவு போன்ற பல தலைப்புகளில் விளக்கப் பயிற்சிகள் நடத்தப்படுகிறது. மாநில மற்றும் மாவட்ட அளவில் வங்கியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு திறன் மிக்க வளப்பயிற்றுநர்கள் கொண்ட குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

7.4.5. 2019-20**ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்**

- 3,902 புதிய சுய உதவிக்குழுக்களின் ஊக்குநர், பிரதிநிதி மற்றும் உறுப்பினர்களுக்கு 1,951 தொகுப்புகளில்

(தொகுப்பிற்கு 30 உறுப்பினர்கள்) பயிற்சிகள் வழங்கப்பட்டது.

- சுய உதவிக்குழு ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கு பயிற்சிகள் வழங்குவதற்காக 10,607 சமுதாய சுய உதவிக்குழு பயிற்றுநர்களுக்கு கணக்கு பராமரிப்பு பயிற்சி வழங்கப்பட்டது.
- 7,842 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உள்ள 39,210 உறுப்பினர்களுக்கு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகம் மற்றும் நிதி ஆளுமை பயிற்சி வழங்கப்பட்டது.
- 400 சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கு நிதி உள்ளாக்கத்தை வலிமைப்படுத்தும் பயிற்சி வழங்கப்பட்டது.
- 8,013 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் கணக்கு புத்தக பராமரிப்பாளர்களுக்கு கணக்கு புத்தக பராமரிப்பு பயிற்சி வழங்கப்பட்டது.
- வட்டார அளவிலான கூட்டமைப்பின் 1,432 பிரதிநிதிகளுக்கும்மற்றும் 1,565 வட்டார அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கும் வட்டார அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகம் மற்றும் நிதி ஆளுமை பயிற்சி வழங்கப்பட்டது.

## 7.5. **தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி**

மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் இத்திட்டமானது மாநில அரசின் வாயிலாக 60:40 என்ற விகிதாச்சார அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கிராமப்புற இளைஞர்களின் வேலைவாய்ப்பிற்காக

செயல்படுத்தப்பட்டு வருகிறது. “ஊரக ஏழை இளைஞர்களைப் பொருளாதார ரீதியாக சுதந்திரம் உடையவர்களாகவும் மற்றும் உலகளவில் பொருத்தமான தொழிலாளர் சக்தியாகவும் மாற்றுவதே" இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். இத்திட்டம் 18 முதல் 35 வயதிற்கு உட்பட்ட ஊரக ஏழை இளைஞர்களுக்கு தொடர்ச்சியான மாத வருமானம் அல்லது மாநில அரசின் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயத்திற்கு மேலான மாத வருமானத்துடன் கூடிய வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தருவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

**தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டத்தின் சிறப்பம்சங்கள்**:

- ஊரக பகுதியின் ஏழைக் குடும்பங்களில் உள்ள 18 முதல் 35 வயது வரையிலான ஆண், பெண் இருபாலரும் இப்பயிற்சிக்கு தகுதியானவர்களாக கருதப்படுவார்கள் (நலிவடைந்த பிரிவினரான பழங்குடியினர், விதவைகள், கைவிடபட்ட பெண்கள், விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள் மற்றும் திருநங்கைகள் ஆகியோருக்கு வயது வரம்பு 45 ஆகும்).
- நிரந்தர பதிவெண் பெற்ற, வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சியில் நிபுணத்துவம் பெற்ற பயிற்சி நிறுவனங்கள் / தொழில் நிறுவனங்கள் இத்திட்டத்தின் கீழ் திட்ட செயலாக்க முகமையாக விண்ணப்பிக்கவும், பயிற்சி வழங்கவும் தகுதியானவர்களாக அனுமதிக்கப்படுகின்றனர்.
- சமூகத்தில் பின் தங்கிய பிரிவினர்களான தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 62%, பழங்குடியினர் 3%, சிறுபான்மையினர் 16%, மாற்றுத்திறனாளிகள் 3% மற்றும் பெண்கள் 33%

(அனைத்து பிரிவுகளிலும்சேர்த்து) ஆகியோரைக் கட்டாய ஒதுக்கீடு மூலம் சமூக உள்ளாக்கத்தின் கீழ் சேர்ப்பது இத்திட்டத்தின் முக்கியமான அம்சங்களில் ஒன்றாகும்.

- பயிற்சி பெற்ற 70% இளைஞர்களுக்கு கட்டாய பணியமர்வு.
- தொழில் பயிற்சி பிரிவு, திறன் தேவை மற்றும் வேலைவாய்ப்பு சந்தையின் தேவைக்கேற்ப பயிற்சி காலமானது 3 முதல் 12 மாதங்கள் வரை வேறுபடும்.
- உண்டு உறைவிடப் பயிற்சியாகவும், உண்டு உறைவிடம் அல்லாத பயிற்சியாகவும் வழங்கப்படுகிறது.
- இளைஞர்களைப் பயிற்சிக்காக ஒன்றுதிரட்டுவதும் சமுதாய அடிப்படையிலான கண்காணிப்பும் களப்பணியாளர்களான சமுதாய வளப்பயிற்றுநர் வேலைவாய்ப்பு மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் - திறன் மூலம் (CRP Jobs, BC skills) எளிதாக்கப்பட்டுள்ளது.
- பயிற்சியானது தொழிற் சார்ந்த திறன்கள் மற்றும் தொழிற் சாரா திறன்களான ஆங்கில அறிவு, அடிப்படை கணினி அறிவு, மென் திறன்கள் மற்றும் பணியிடப் பயிற்சி (OJT) ஆகியவற்றிற்கான பாடத்திட்டத்தை உள்ளடக்கியதாகும்.
- பயிற்சியில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு மதிப்பீடு மற்றும் சான்றிதழ்கள் அரசு நிறுவனங்களான தேசிய தொழிற் பயிற்சி குழு (NCVT) மற்றும் திறன் பிரிவு குழுவின் மூலம் (SSC) வழங்கப்படுகிறது.
- குறைந்தபட்ச மாத வருமானம் ரூ.6000/- அல்லது மாநிலத்தில் பகுதித் திறன் வாய்ந்த இளைஞர்களுக்கு

நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியத்திற்கு குறையாமல் பயிற்சியளிக்கப்பட்ட இளைஞர்களுக்கு பணியமர்வின் போது வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது. இருப்பினும் தமிழ்நாட்டின் DDU-GKY திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற பயனாளிகளுக்கு குறைந்த பட்சம் மாத ஊதியம் ரூ.8,000/- பெற்றுத் தர வலியுறுத்தப்பட்டுள்ளது.

- இத்திட்டம் பணியமர்வுக்கு பின்பான உதவித் தொகை, பணி முன்னேற்றம் மற்றும் இடம்பெயர்வு ஆதரவு மையம் ஆகிய வசதிகளோடு வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டம் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பணியமர்வுக்கு வழிவகை செய்கிறது.
- பணியமர்வுக்கு பின் ஓராண்டு தொடர் கண்காணிப்பு செய்யப்படுகிறது.
- இளைஞர்களைத் திரட்டும் நிகழ்வில் பெற்றோர்களுக்கும் ஆலோசனை வழங்கப்படுகிறது.

**அட்டவணை 7.4**
**தொழில் வாரியான திறன் பயிற்சி சாதனை விபரம்**
**(2012-13 முதல் 31.01.2020 வரை)**

| வ. எண் | தொழில் பிரிவு | பயிற்சி பெற்றவர்கள் |
|---|---|---|
| 1 | தொழிற்சாலைகள் | 4,203 |
| 2 | தகவல் தொழில்நுட்பம் | 14,868 |
| 3 | உடைகள் மற்றும் ஆயத்த ஆடைகள் | 10,040 |
| 4 | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் | 3,483 |
| 5 | கட்டுமானம் | 1,221 |
| 6 | ஆட்டோமொபைல் | 4,353 |
| 7 | அழகுக்கலை பயிற்சி | 1,236 |

| வ. எண் | தொழில் பிரிவு | பயிற்சி பெற்றவர்கள் |
|---|---|---|
| 8 | தீ மற்றும் பாதுகாப்பு | 458 |
| 9 | சுகாதாரம் | 2,904 |
| 10 | சில்லரை வணிகம் | 2,535 |
| 11 | தோல் பொருட்கள் | 720 |
| 12 | ஓட்டுநர் பயிற்சி | 2,110 |
| 13 | ஆட்டோமோடிவ் | 760 |
| 14 | மின்னணுவியல் | 632 |
| 15 | மூலதனப் பொருட்கள் | 541 |
| 16 | தளவாடங்கள் | 647 |
| 17 | வங்கி நிதி சேவை மற்றும் காப்பீடு | 484 |
| **மொத்தம்** | | **51,195** |

2016-17ம் ஆம் ஆண்டு முதல், அரசு கூடுதல் தலைமைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட திட்ட ஒப்புதல் குழு மூலம் இளைஞர்களுக்கு பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு திட்டங்கள் மூன்று ஆண்டுகளில் செயல்படுத்த திட்ட செயலாக்க முகமைகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் 2016 முதல் 2019 வரையிலான இலக்காக 44,416 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு, இதுவரை 102 பயிற்சி நிறுவனங்களுக்கு திட்ட ஒப்புதல் வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 2019 முதல் 2022 வரையிலான காலத்திற்கு மொத்தம் 84,000 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க

1,026.50 கோடி ரூபாய் மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

### 7.5.1.**தகவல் கல்வி தொடர்பு செயல்பாடுகள்**

#### i. **தொலைபேசி அழைப்பு மையம்** ( Dial a Job)

மாநில இயக்க மேலாண்மை அலகானது இத்திட்டத்திற்கு சரியான பயனாளிகளை தேர்ந்தெடுத்து ஒருங்கிணைக்கும் பொருட்டு Dial a Job எனும் அழைப்பு மையத்தை அமைத்து செயல்படுத்தி வருகிறது. இவ்வழைப்பு மையம் அனைத்து வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை அழைப்பாளர்களுக்கு

- திட்ட விபரம் (DDU-GKY).
- மாவட்டங்களில் அமைந்துள்ள பயிற்சி நிறுவனங்கள்மற்றும் வழங்கப்படும் பயிற்சிகள் விபரம்.
- மாவட்ட அலுவலகம் மற்றும் பயிற்சி நிறுவனங்களின் தொடர்பு விபரங்கள்.
- ஊரக இளைஞர்களுக்கு ஆலோசனை –போன்ற தகவல்களை வழங்கி வருகிறது.

#### ii. **பயிற்சி அட்டவணை**

தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டத்தை சிறந்த முறையில் கண்காணிக்க முதன் முறையாக பயிற்சி அட்டவணை தயாரிக்கப்பட்டு, அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி அட்டவணை இத்திட்டத்தின் கீழ் செயல்படும் அனைத்து பயிற்சி நிறுவனங்களின் இலக்குகளைப் பற்றிய விவரங்களை வழங்குகிறது. மாவட்ட அளவிலுள்ள அணிகள் செயல்

திட்டம் தயாரிக்கவும், இளைஞர்களை பயிற்சிக்கு ஒன்று திரட்டவும் இப்பயிற்சி அட்டவணை பயனுள்ளதாக உள்ளது.

7.5.2. **திறன் வளர்ப்பு பயிற்சிக்கான பதிவு செயலி (கௌசல் பஞ்சி)**

18 முதல் 35 வயதிற்குட்பட்ட கிராமப்புற இளைஞர்களின் திறன் விபரங்களை சேகரித்து பதிவு செய்திட மத்திய அரசின் ஊரக மேம்பாட்டு அமைச்சகம் திறன் வளர்ப்பு பயிற்சிக்கான பதிவு செயலியை (கௌசல் பஞ்சி) துவக்கியுள்ளது. திட்ட செயலாக்க முகமைகள் இச்செயலி மூலம் பயிற்சியாளர்களின் திறன் தேவைகளை பதிவு செய்வதில் பங்களிக்க முடியும்.

ஒரு இளைஞர் ஏற்கனவே உள்ள சமூக பொருளாதார சாதி வாரியான கணக்கெடுப்பின் (SECC) விவரங்களை பயன்படுத்தியோ அல்லது புதிய விண்ணப்பதாராகவோ விவரங்களை உள்ளிடுவதன் மூலம் தன்னை பதிவு செய்யலாம்.

31.01.2020 வரை இச்செயலி மூலமாக 4,47,030 இளைஞர்களின் விவரங்களை பதிவு செய்து தமிழ்நாடு தேசிய அளவில் முதலிடத்தை பெற்றுள்ளது.

7.5.3. **ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள்** (RSETIs)

கிராமப்புற இளைஞர்களிடையே வேலையின்மையைக் குறைக்கும் நோக்கத்தோடு கனரா வங்கி மற்றும் சிண்டிகேட் வங்கியால் ஊரக வளர்ச்சி மற்றும் சுய வேலைவாய்ப்பு பயிற்சி (RUDSETI)நிறுவனங்கள் பெங்களூரு, மதுரை போன்ற

நகரங்களில் ஆரம்பிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து ஊரகப்பகுதிகளில் சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்தி கிராமப்புற இளைஞர்களை தொழில் முனைவோராக உருவாக்கிட பல்வேறு வங்கிகள் மூலம் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETI) தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிறுவனங்களில் பயற்சி பெறும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள இளைஞர்களுக்கான பயிற்சி செலவினத்தையும் பயிற்சி நிறுவனத்தின் உள்கட்டமைப்பிற்கான நிதி உதவியையும் மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் வழங்குகிறது. மாநில அரசுகள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், பாரத சிறு தொழில் வளர்ச்சி வங்கி (SIDBI), தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) போன்ற மேம்பாட்டு நிறுவனங்களும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களின்**(RSETIs)**பயிற்சித் திட்டங்களுக்கு நிதி உதவிகளை செய்து வருகிறது. தமிழ்நாட்டில் 30 ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

பயிற்சி பெற்ற பயனாளிகள் அனைவரும் சுய வேலை வாய்ப்பு மேற்கொள்ளவும், அதற்கான வங்கிக்கடன் உதவி பெற வழிகாட்டவும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள்பெரும் பங்காற்றி வருகின்றன.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், DDU-GKY திட்டத்தின் மூலமாக ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களுக்குத் தேவையான இளைஞர்களைப்

பயிற்சிக்காக ஒன்று திரட்டுவதிலும், அதற்கான நிதி விடுவிப்பு மற்றும் கண்காணிப்புப் பணிகளை மாநில அளவில் மேற்கொள்வதிலும் முக்கியப் பங்கு வகித்து வருகிறது.

**அட்டவணை 7.5**

**RSETIபயிற்சி மற்றும் பயன்பெற்றோர் விபரம் – 2019-20**

| வ. எண் | வங்கியின் பெயர் | RSETI பயிற்சி நிறுவங்களின் எண்ணிக்கை | பயிற்சி பெற்றவர்கள் | பயன் பெற்றவர்கள் | சுய வேலைவாய்ப்பு | | ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | வங்கி கடன் | சுய நிதி | |
| 1 | இந்தியன் ஓவர் சீஸ் வங்கி | 11 | 9,704 | 4,207 | 1,718 | 2,489 | 169 |
| 2 | இந்தியன் வங்கி | 10 | 5,453 | 2,888 | 742 | 2,146 | 274 |
| 3 | கனரா வங்கி | 6 | 3,329 | 3,136 | 771 | 2,365 | 432 |
| 4 | பாரத ஸ்டேட் வங்கி | 2 | 1,178 | 819 | 248 | 571 | 58 |
| 5 | RUDSETI(மதுரை) | 1 | 643 | 384 | 180 | 204 | 79 |
| **மொத்தம்** | | **30** | **20,307** | **11,434** | **3,659** | **7,775** | **1,012** |

### 7.5.4. **உன்னத்தி திட்டம்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005 ஆனது கிராமப்புற குடும்பங்களின் நீடித்த நிலைத்த வாழ்வாதாரத்தை உருவாக்குவதை நோக்கமாக கொண்டதாகும். ஊரக பகுதிகளில் திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள தகுதியான

ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்களுக்கு குறையாமல் வேலை வாய்ப்பினை அளிக்க இச்சட்டம் உறுதி செய்கிறது.

இதன் மேம்படுத்தப்பட்ட வடிவமாகமத்திய அரசு மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் பயனாளிகளுக்கு திறன் சார்ந்த பயிற்சி வழங்கும் உன்னத்தி திட்டத்தினை உருவாக்கி உள்ளது.

**திட்டத்தின் நோக்கம்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் பயனாளிகளுடைய திறன் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது உன்னத்தி திட்டத்தின் நோக்கமாகும். இதனால் அவர்கள் பகுதி நேர வேலைவாய்ப்பிலிருந்து முழு நேர வேலை வாய்ப்பிற்கு மாறுவதற்கு ஏதுவாகவும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தினை சார்ந்திருப்பதைக் குறைக்கவும் வழிவகை ஏற்பட்டுள்ளது.

## 7.6. நிதி உள்ளாக்கம் மற்றும் நுண்கடன்

### 7.6.1. சுய உதவிக் குழுக்களுக்கான வங்கிக் கடன் இணைப்பு

சுய உதவிக் குழு - வங்கிக் கடன் இணைப்பு திட்டத்தின் மூலம் முறையான வங்கி மற்றும் நிதி சேவைகள் ஏழை மக்களை சென்றடைந்து அவர்களுக்கு "***கடன் பெறும் உரிமை***" உள்ளது என்பதை உறுதி செய்துள்ளது. இந்த கடன் பெறும் உரிமை, வங்கிகளை சுலபமாக அணுகுதல் மட்டும் அல்லாமல் போதுமான கடன் அளவு, உரிய நேரத்தில் மற்றும் குறைந்த வட்டி விகிதத்தில் கிடைப்பதை உறுதி செய்கிறது. வங்கிக்கடன் இணைப்பு எண்ணற்ற குடும்பங்கள்

கடன் சுமையிலிருந்து மீளவும், வருமானம் ஈட்டக்கூடிய பல்வேறு தொழில்களை தொடங்கி நடத்திடவும், வீட்டின் வருமானத்தைப் பெருக்கி குடும்ப சூழ்நிலையை நல்ல முறையில் அமைத்துக் கொள்ளவும் மற்றும் வறுமையின் மீளாச்சுழற்சியிலிருந்து விடுபடவும் உதவிகரமாக உள்ளது.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் வங்கிகளில் குறைந்த வட்டியில் கடன் பெறவும் மற்றும் வங்கிகளுடன் வலுவான நல்லுறவை ஏற்படுத்திக்கொண்டு பொருளாதார தொழில்கள் தொடங்கி நடத்திடவும், அதிக அளவு கடன்கள் தொடர்ச்சியாக பெறவும் சுய உதவிக் குழு வங்கிக் கடன் இணைப்பு திட்டம் வழிவகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் வட்டி மானியம் சுய உதவிக் குழுக்களின் கடன் சுமையை மேலும் குறைக்க உதவுவதன் மூலம் நமது மாநிலத்தில் பெண்களுக்கு பொருளாதார அதிகாரம் கிடைக்கப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2018-19 ஆம் ஆண்டில், 2,95,612 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 11,448.99 கோடி ரூபாய்வங்கிக் கடன் வழங்கியதன் மூலம் வங்கிக்கடன் இணைப்பு இலக்கான 11,000 கோடி ரூபாய்க்கு மேல் எய்தி சாதனை செய்யப்பட்டுள்ளது. இந்த சாதனை, நமது மாநிலத்தில் மகளிர் சுய உதவிக் குழு வங்கிக் கடன் இணைப்பு திட்டத்தின் கீழ், முதல் முதலாக எப்போதும் கண்டறியாத உயரிய சாதனையாகும்.

நமது மாநிலத்தில் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் வருமானம் ஈட்டக்கூடிய, நீடித்த தன்மையுடைய தொழில்களை தொடங்கி குடும்ப வருமானத்தை உயர்த்திக்

கொண்டு வறுமையிலிருந்து வெளிவர, ஒவ்வொரு சுய உதவிக் குழுவின் சராசரி வங்கிக் கடனுதவி அளவு 6.00 இலட்சம் ரூபாய் இருக்க வேண்டுமென்பது அரசின் குறிக்கோளாகும்.

2019-20ஆம் ஆண்டின் இலக்கான 12,500 கோடி ரூபாய்களில், 29.02.2020 வரை 3,03,703 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 13,300.64 கோடி ரூபாய் கடன்கள் கொடுக்கப்பட்டு கடந்த ஆண்டின் சாதனையை முறியடித்து புதிய சாதனை எய்தப்பட்டுள்ளது. மேலும், சுய உதவிக் குழுக்களின் சராசரி கடன் அளவு 3.87 இலட்சம் ரூபாய் இருந்து 4.37 இலட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது.

2011 ஆம் ஆண்டு முதல் பொதுத்துறை வங்கிகள், தனியார் வங்கிகள், கிராமப்புற வங்கிகள் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் (DCCB/PACCs) மூலமாக நமது மாநிலத்தில் கடந்த 9 ஆண்டுகளில் மட்டும் 65,929.61கோடி ரூபாய்வங்கிக்கடன் தொகை மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், 80 சதவீத கடன் தொகையை வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களைத் தொடங்கி, குடும்ப வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்பதே தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் குறிக்கோளாகும்.

### 7.6.2 **வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

வங்கிகள், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் போதிய அளவு தொடர்ந்து

கடன்கள் வழங்கிட வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட ஆறு வங்கிகளுடன் இதுவரையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

**அட்டவணை 7.6**

| வ. எண் | வங்கியின் பெயர் | புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்த நாள் |
|---|---|---|
| 1 | ஐ டி பி ஐவங்கி (IDBI Bank) | 07.09.2017 |
| 2 | ஐசி ஐசி ஐவங்கி (ICICI Bank) | 07.09.2017 |
| 3 | பேங்க் ஆப் பரோடா (BOB) | 25.07.2018 |
| 4 | பாரத ஸ்டேட் வங்கி (SBI) | 25.01.2019 |
| 5 | யூகோ வங்கி (UCO) | 06.11.2019 |
| 6 | தமிழ் நாடு கிராம வங்கி (TGB) | 09.12.2019 |

புரிந்துணர்வு ஒப்பந்தம் கீழ்க்கண்ட முக்கிய கூறுகளை உள்ளடக்கியது

1. மத்திய ரிசர்வ் வங்கி (RBI) அறிவுறுத்தலின்படி வங்கிக் கிளைகள் சுய உதவிக் குழுக்களுக்கு காலதாமதமின்றி, போதுமான அளவு கடன்கள், தொடர்ந்து மறுகடன்கள் மற்றும் குறைந்த வட்டி விகிதத்தில் கடன்கள் வழங்க வேண்டும்.

2. பூனாவில் உள்ள வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கான இந்திய பயிற்சி நிறுவனம் (IndianInstitute of Banking and Finance–IIBF, Pune) மூலம் வங்கி வணிக தொடர்பாளர்களுக்கான (BC-Sakhi))பயிற்சி பெறப்பட்ட மகளிர் சுய உதவிக்

குழு உறுப்பினர்களை வங்கிகள் நேரிடையாகவோ அல்லது வங்கியின் பெரு நிறுவன வணிக தொடர்பாளர்கள் (Corporate BC)மூலமாகவோ நியமிக்க வேண்டும்.

3. வங்கிகள், IIBFமூலமாக பயிற்சி பெற்ற மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களை, வணிக வசதிகள் வழங்கும் (Business Facilitators)தொடர்பாளர்களாக நியமித்து, வங்கி சார்பாக பொது மக்களிடமிருந்து சேமிப்பு, கடன் திரட்டுதல் மற்றும் நிலுவை கடன்களை வசூலிக்கும் முகவர்களை நியமித்து அதற்குரிய ஊக்கத் தொகை வழங்க வேண்டும்.

மேற்கண்ட வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிட்ட பிறகு, சுய உதவிக் குழுக்களுக்கான கடன் உதவி வழங்கியது கணிசமாக அதிகரித்துள்ளது.

### 7.6.3 **தமிழ்நாடு கிராம வங்கி**

தமிழகத்தில் சேலம் மாநகரைத் தலைமை இடமாக கொண்டு வட தமிழகத்தின் 15 மாவட்டங்களை உள்ளடக்கி இந்தியன் வங்கியின் ஆதரவுடன் செயல்பட்டு வந்த பல்லவன் கிராம வங்கி மற்றும் விருதுநகரை தலைமை இடமாக கொண்டு தமிழகத்தின் தென் பகுதியில் 16 மாவட்டங்களில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆதரவுடன் செயல்பட்டு வந்த பாண்டியன் கிராம வங்கிஆகிய இரண்டு ஊரக வங்கிகள் இந்திய அரசின் நிதி சேவைத் துறை (Department of Financial Services-GoI) ஆணைப்படி ஒருங்கிணைந்த

(Amalgamation) "தமிழ்நாடு கிராம வங்கியாக" 01.04.2019 முதல் சேலம் மாநகரில் இந்தியன் வங்கி ஆதரவுடன் செயல்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு கிராம வங்கியின் இயக்குநர் குழுமத்தின் (Board of Directors)9 இயக்குநர்களில், அரசு கூடுதல் தலைமைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மற்றும் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் / தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வதார இயக்கம் ஆகியோர் இயக்குநர்களாகவும் தமிழக அரசின் பிரதிநிதிகளாகவும் செயல்பட்டு வருகின்றனர்.

தமிழ்நாடு கிராம வங்கியும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமும் ஒருங்கிணைந்து மாநிலம் முழுவதும் செயல்படுவதால், சுய உதவிக் குழுக்கள் வங்கிக் கடன் மூலம் முழுமையான நிதி உள்ளாக்கம் (Deepening Financial Inclusion)அடையவும், சுய உதவிக் குழுக்கள் சிறு தொழில் நிறுவனம் (Enterprises)துவங்க நிதி பெறுவதற்கும் வழிவகை ஏற்பட்டுள்ளது.

### 7.6.4. **சுய உதவிக் குழு கடன்களுக்கான ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்**

ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல் படி சுய உதவிக் குழுக்கள், அவர்களின் தேவையின் அடிப்படையில், தவணைக் கடன்கள் (Term Loan) அல்லது ரொக்கக் கடன் (Cash Credit Limit-CCL)அல்லது இரண்டு வகை கடன்களையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**ரொக்கக் கடன் (Cash Credit Limit-CCL)**

ரொக்கக்கடன் திட்டத்தின் கடன் உதவி பெற தகுதி பெற்ற சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் குறைந்தபட்சம் 5.00 இலட்சம் ரூபாய் கடன் தொகையை 5 ஆண்டு காலத்திற்கு கடன் தொகையாக வழங்கிடவும் ஆண்டு வாரியான பணம் எடுக்கும் கடன் அளவு (Drawing Power) முறையை பின்பற்றவும் வேண்டும் என்று வங்கிகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கியால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்களின் கடன் திருப்பிச் செலுத்துதல் திறனைப் பொறுத்து ஆண்டு வாரியாக இத்தொகை அதிகரிக்கப்பட வேண்டும்.

7.6.5. **சமுதாய பங்கேற்புடன் கடன் வசூலிக்கும் குழு** (CBRM)

வங்கிகள், சமுதாயத்தினரை வங்கியின் செயல்பாட்டில் இணைத்துக் கொண்டு கடன்களை முறையாகத் திரும்ப செலுத்துவதற்கும், வாராக் கடன்களை வசூல் செய்து கொடுத்து மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் மற்றும் வங்கிகளுக்கும் உதவிகரமாக இருப்பதற்கும் ஏற்படுத்தப்பட்டதே சமுதாய பங்கேற்புடன் கடன் வசூலிக்கும் குழுவாகும்.

வங்கிகள் போதுமான கடன் அளவு கொடுப்பதற்கும், அதனைத்திறம்பட கண்காணிப்பதற்கும், கடன் தவணை தொகைகளை திரும்ப செலுத்துவதையும் மற்றும் வாராக் கடன்களை வசூலிப்பதற்கும் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கும் ஒவ்வொரு வங்கி கிளைகளிலும் இக்குழு

துவக்கப்படுகிறது. இக்குழு, வங்கிக்கடன் இணைப்பு பற்றிய பிரச்சனைகளை அவ்வப்போது கூட்டங்கள் நடத்தி ஆராய்ந்து தீர்வு காணும்.

### 7.6.6 **சுய உதவிக் குழுக்களுக்கான வட்டிமானியம்**

நிதி உள்ளாக்கக் குழுவின் எதிர்பார்ப்பின்படி, ஏழை எளிய மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஏழ்மையிலிருந்து வெளிவர, மத்திய அரசின் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் 2013-14 ஆம் ஆண்டில், சுய உதவிக் குழுக்கள் பெறும் மொத்த வங்கிக் கடன்களில் ரூ.3 இலட்சம் வரையிலான கடன்களுக்கு "வட்டி மானியத் திட்டத்தை" அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த வட்டிமானியத் திட்டம் தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் மத்திய அரசு நேரடியாகவே செயல்படுத்துகிறது. மீதமுள்ள மாவட்டங்களில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் 60:40 என்ற விகிதத்தில் செயல்படுத்தப்படுகிறது. கடன் தவணைக் தொகையை தொடர்ச்சியாக காலம் தவறாமல் மற்றும் தவணை தவறாமல் திரும்ப செலுத்தும் சுய உதவிக் குழுக்கள் வட்டி மானியம் பெற தகுதி பெறும்.

இதுவரையில், 3,56,006 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு,பொதுத்துறை வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகள் மூலம் கிடைத்த கடன்களை முறையாக திருப்பிச் செலுத்தி வருவதால்,தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார

இயக்கத்தின் மூலம் 59.91 கோடி ரூபாய் வட்டி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

2019-20 ஆம் ஆண்டில் இதுவரை மட்டும் 18.73 கோடி ரூபாய் வட்டிமானியம் 1,32,352 குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2020-21 ஆம் ஆண்டில், 20 கோடி ரூபாய் வட்டிமானியம் வழங்குவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

### 7.6.7. **ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்குபெருங்கடன்**

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு போதுமான அளவு வங்கிக் கடன்கள் கிடைக்கப் பெறாத போது அதிக வட்டிக்கு கடன் வழங்கும் நிறுவனத்தில் கடன் பெறுவதை தடுக்க ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வங்கிகள் மூலம் கடன்கள் பெற்று சுய உதவிக் குழுக்களுக்கு வழங்க பெருங்கடன் திட்டம் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ரூ.10.00 இலட்சம் முதல் 1.50 கோடி ரூபாய்அல்லது அதற்கும் மேல் வங்கிகளில் பெருங்கடனாக பெற்று கூட்டமைப்பில் உள்ள குழுக்களின் அதிகபட்ச கடன் தேவைகளை பூர்த்தி செய்கின்றது. கடந்த 9 ஆண்டுகளில் 765 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 176.88 கோடி ரூபாய்கடன் பெற்று மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. 2019-20ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட பெருங்கடன் இலக்கு 150.00 கோடி ரூபாயில், 94 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 48.74 கோடி ரூபாய் பெருங்கடன் இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

## 7.7. **வாழ்வாதார மேம்பாடு**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஏழை மக்களுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட வாழ்வாதார வாய்ப்புகள் தேவை என்பதை அங்கீகரிக்கிறது. ஊரக ஏழை மக்களின் தற்போதைய வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் விரிவாக்குதல், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய அம்சமாகும். ஊரகப் பகுதிகளில் 70%க்கும் மேலான மக்கள் வேளாண்மையை சார்ந்த ஒரு விவசாயியாகவோ அல்லது விவசாயக் கூலியாகவோ வாழ்கின்றனர். இது தவிர, கால்நடை வளர்ப்பும் ஊரக மக்களின் முக்கிய வாழ்வாதாரமாகத் திகழ்கிறது.

வேளாண் சார்ந்த வாழ்வாதார நடவடிக்கைகளின் முக்கிய நோக்கங்கள்:

- ஒவ்வொரு ஏழைக் குடும்பத்திற்கும் குறைந்தபட்சம் இரண்டு வேளாண் சார்ந்த வாழ்வாதார வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல்.
- இரண்டு ஆண்டுகள் தொடர் ஆதரவின் மூலம் ஒரு குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.50,000 க்கு மேல் கூடுதலாக வருமானம் கிடைப்பதை உறுதி செய்தல்.
- வருடம் முழுவதும் ஒவ்வொரு குடும்பத்தின் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்தல்.
- வருடம் முழுவதும் தொடர்ந்து வருமானம் கிடைக்கச் செய்தல்.
- வேளாண்மை, மரம் நீங்கலான வனம் சார்ந்த பொருள் தயாரித்தல் மற்றும் கால்நடை சம்பந்தப்பட்ட பயிற்சியாளர்களிலிருந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களை,சமூக மூலதனமாக உருவாக்கி, விரிவாக்க பணிகளை மேற்கொள்ளச் செய்தல்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது, மேற்கண்ட குறிக்கோள்களை எய்திட முழு முனைப்புடன் பணியாற்றி வருகிறது.

**வாழ்வாதார நடவடிக்கைகளை வட்டாரங்களுக்கு விரிவாக்குவதில் முன்னேற்றம்**

வாழ்வாதார நடவடிக்கைகள், முதன் முதலாக "பெண் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்" (மகிளா கிசான் சசக்திகரன் பரியோஜனா) கீழ் 2015-16 ஆண்டு முதல் துவங்கப்பட்டது. இத்திட்டமானது வேளாண்மையில் மகளிர் விவசாயிகளின் பங்கினை உணர்ந்து கொள்ளவும், அவர்களின் திறன் மேம்பாட்டிற்கும், வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த துறை செயல்பாடுகளின் மூலம் அவர்களின் வருமானத்தை பெருக்கவும் கூடிய ஒருமித்த முயற்சியாகும். தமிழ்நாட்டில் பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டமானது 24.35 கோடி ரூபாய்மதிப்பீட்டில் விழுப்புரம், திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 14 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டது.

தொடர்ந்து 2016-17 ஆம் ஆண்டு முதல் வாழ்வாதார மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஆண்டு செயல் திட்டத்தின் கீழ் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆண்டு வாரியாக வாழ்வாதார நடவடிக்கைகள் விரிவாக்கம் செய்யப்பட்டதற்கான திட்ட முன்னேற்ற விவரம் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 7.7**
**வட்டாரங்களின் தேர்வு விவரங்கள்**

| வ. எ ண் | வருடம் | | மாவட்டங்களின் எண்ணிக்கை | வட்டாரங்களின் எண்ணிக்கை | பெண் விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | **பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம்** | | | |
| 1 | முதல் கட்டம் | | 3 | 10 | 16,800 |
| 2 | இரண்டாவது கட்டம் | | 2 | 4 | 12,000 |
| | **மொத்தம்** | | **4** | **14** | **28,800** |
| | | **தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம்** | | | |
| 3 | 2016-17 | | 14 | 7 | 38,400 |
| 4 | 2017-18 | | 9 | 15 | 28,950 |
| 5 | 2018-19 | | 9 | 29 | 47,150 |
| 6 | 2019-20 | | 30 | 65 | 2,71,370 |
| | **மொத்தம்** | | **30** | **116** | **3,85,870** |

2020-21 ஆம் ஆண்டில் புதிதாக 29 வட்டாரங்களில் உள்ள 97,900 பெண் விவசாயிகள் பயன்பெற உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

### 7.7.1. **வாழ்வாதார நடவடிக்கைகளுக்கான செயல்பாட்டு உத்திகள்**

பண்ணை சார்ந்த வாழ்வாதார உத்திகளை செயல்படுத்துவதன் முக்கிய நோக்கம், நீடித்த நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல், உள்ளூரிலேயே கிடைக்கும் இடுபொருட்களை பயன்படுத்துதல், வேளாண் சாகுபடியில் உள்ள பிரச்சனைகளை குறைத்தல், உற்பத்தித் திறனை அதிகரித்தல், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்தல் ஆகியவை ஆகும். இதன் மூலம் ஒரு கிராமப்புற குடும்பத்தின் நிகர வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், குறைந்த செலவிலான, நீடித்த நிலைத்த இயற்கை வேளாண் சாகுபடி முறைகளான, இயற்கை முறை பயிர்பாதுகாப்பு முறைகள், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை உள்ளிட்ட சாகுபடி முறைகள், காலநிலை மாற்றங்களுக்கேற்ற வழிமுறைகள், மண்வள மேம்பாடு மற்றும் மேலாண்மை, நீர்வளப் பாதுகாப்பு, பல்வகை பயிர்களின் சாகுபடியினை மேற்கொள்ளுதல் மற்றும் பாரம்பரிய இரகங்களை பரவலாக்கம் செய்வதன் மூலம் தகுந்த வேளாண் சூழலை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஏழை மக்களின் வாழ்வாதாரத்திற்கு ஆடுகள், மாடுகள் மற்றும் கோழி வளர்ப்பு முதலான கால்நடை வளர்ப்பின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்துள்ளது. விவசாயம் சார்ந்த வாழ்வாதாரத்தில் கால்நடை வளர்ப்பையும் ஒரு அங்கமாக இணைத்து, சமூக மூலதனத்தை உருவாக்கி, கால்நடை வளர்ப்பு சம்பந்தப்பட்ட பல்வேறு சேவைகளை நேரிடையாக சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஒவ்வொரு கிராம அளவிலும் குடும்ப அளவிலும் செயலாக்கப்படவுள்ள வாழ்வாதார உத்திகள் கீழ்வருமாறு.

**அ. குடும்ப அளவில்**

- குடும்ப உறுப்பினர்களின் ஊட்டச்சத்துப் பாதுகாப்பிற்கும், நிரந்தரமான வருமானத்திற்கும் ஊட்டச்சத்து காய்கறி தோட்டம் அமைத்தல்.

- விதை நேர்த்திக்காக பீஜாமிர்தத்தையும், மண்வளத்தை மேம்படுத்துவதற்காக கஞ்சீவாமிர்தத்தையும் தயாரித்து பயன்படுத்துதல்.
- மண்புழு உரம், "நாடெப்" தொட்டிகள், ஒட்டும் பொறி, ஆகியவற்றின் உபயோகத்தை ஊக்குவிக்குதல்.
- மண்ணின் ஈரப்பதத்தைக் காக்க நிலப்போர்வை முறையை பயன்படுத்துதல்.
- திருந்திய நெல் சாகுபடி, நிலையான கரும்பு சாகுபடி, அசோலா உற்பத்தி, பொறிப் பயிர் வளர்ப்பு, வரப்பில் சாகுபடி போன்ற முன்னேற்ற நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

**ஆ. ஊராட்சி அளவில்**

- இயற்கை வழி பூச்சிக்கொல்லிகளின் விற்பனையகம்
- பண்ணை இயந்திர வாடகை மையம்
- பண்ணை விவசாய பள்ளிகள்
- சமுதாய வளப்பயிற்றுநர்கள்
- விதை வங்கி
- ஊராட்சி அளவிலான துணைக் குழுக்கள்
- உற்பத்தியாளர்குழுக்களை உருவாக்கி வேளாண்மை சார்ந்த வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இந்த வாழ்வாதார இயக்கம் ஒவ்வொரு கிராமத்திலும் வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பில் சிறந்த அனுபவமுள்ள நபர்களை, வேளாண்மைக்கு ஒருவர் மற்றும்

கால்நடைக்கு ஒருவர் என சமுதாய வளப்பயிற்றுநர்களாகத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலமாக வாழ்வாதார முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஒவ்வொரு ஒன்றியத்திலும், வாழ்வாதாரத் திட்டம் கீழ்க்கண்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- சிறு மற்றும் குறு விவசாயிகள் முன்னுரிமைஅடிப்படையில் பயனாளிகளாகத்தேர்ந்தெடுக்கப்படுவர். அதிலும் நலிவுற்ற, கைவிடப்பட்ட மற்றும் பெண்களை குடும்பத்தலைவியாகக் கொண்ட குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளாக தேர்வு செய்வதில் முன்னுரிமை பெறுவர்.
- அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் பயனாளிகளை ஒருங்கிணைத்து உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் உற்பத்தியாளர் நிறுவனங்களாக உருவாக்குதல்.
- பண்ணை விவசாயப் பள்ளிகள் மூலம் நீடித்த நிலைத்த இயற்கை சாகுபடி முறைகள், தொழில்நுட்பம் சார்ந்த மற்றும் நவீன சாகுபடி முறைகளைக் கற்றுத் தருதல்.
- திறன் மேம்பாட்டுப்பயிற்சி அளித்து அவர்களை தற்சார்பு மிக்கவர்களாக மாற்றுதல்.
- சமுதாய மூலதனத்தை உருவாக்கிடவும், புதிய பகுதிகளில் வாழ்வாதாரத் திட்டத்தை விரிவுபடுத்திட சமுதாய வளப்பயிற்றுநர்களை உருவாக்குதல்.

- வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பினை ஒருங்கிணைத்து மக்களின் முழுமையான வாழ்வாதாரத் தேவையை பூர்த்தி செய்தல்.

7.7.2. **முதன்மை உற்பத்தியாளர் குழுக்கள்**

தனிநபர் விவசாயிகள் தங்கள் தடைகளைக் கடந்து வரவும், தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களின் விலையினை தாங்களே நிர்ணயம் செய்யும் திறனை மேம்படுத்தவும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது கூட்டு அணுகு முறையினை ஊக்கப்படுத்திட விவசாயிகளை ஒருங்கிணைத்து முதன்மை உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்குகிறது. வேளாண் மற்றும் கால்நடை தொழிலில் ஈடுபட்டு விளைப்பொருட்களை சந்தைப்படுத்தி வரும் தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர், விவசாயிகள் குழுவாக ஒருங்கிணைக்கப்பட்டு "உற்பத்தியாளர் குழு" உருவாக்கப்படுகிறது.

இந்த உற்பத்தியாளர் குழுக்கள் சாகுபடி செய்யும் பிரதான பயிருக்கேற்ப, அவர்களுக்கு, நீடித்த நிலையான சாகுபடி முறைகளான நுண்ணீர்ப்பாசனம், இயற்கைப் பண்ணையம், ஒருங்கிணைந்த பண்ணையம், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேலாண்மை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம் மற்றும் சந்தைப்படுத்துதல் போன்றவற்றிற்கான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் மற்றும் செயல்விளக்கங்கள், சம்மந்தப்பட்ட வேளாண்மை மற்றும் கால்நடைத் துறை மூலமாக ஒருங்கிணைத்து வழங்கப்படுகிறது.

இதுவரை இத்திட்டத்தின் கீழ் 3,850 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு 1,01,019 மகளிர் விவசாயிகள் இணைந்துள்ளனர். உற்பத்தியாளர் குழு உறுப்பினர்கள், தங்களுக்குத் தேவையான மூலப் பொருள்கள் மற்றும் பிற உள்ளீடுகளை கூட்டாக கொள்முதல் செய்தல், சந்தைப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டலுக்காக விளைப்பொருட்களை ஒன்றிணைத்தல் போன்ற கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஊக்கப்படுத்தப்படுவார்கள்.

இத்திட்டத்தின் வேளாண் சார்ந்த செயல்பாடுகள் 2020-21 ஆம் ஆண்டில், மேலும் 979 கிராம ஊராட்சிகளுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டு ஒரு இலட்சம் பயனாளிகளை இந்த திட்டத்தில் இணைக்கவும், கூடுதலாக850 உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு உற்பத்தியாளர் குழுவுக்கும் தொழில் மூலதனமாக 1.50 இலட்சம் ரூபாய் வரை கடனாக வேளாண் மற்றும் வேளாண்மை சார்ந்த செயல்பாடுகளுக்குத் தேவையான இடுபொருள்கள், இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாடகைக்கு எடுத்தல், உற்பத்திப் பொருட்களை கொள்முதல் செய்தல், சந்தைப் படுத்துதல் போன்ற முயற்சிகளை மேற்கொள்ள ஊக்கப்படுத்தப்படுவார்கள். இது தவிர, ஒவ்வொரு உற்பத்தியாளர் குழுக்களும் தங்களது விளைப்பொருட்களை தூய்மைப்படுத்துதல், தரம் பிரித்தல், பொருட்களை எளிதில் எடுத்துச் செல்ல ஏதுவாக பிளாஸ்டிக் கிரேட்டுகள் மற்றும் பிற கருவிகள், பாதுகாப்பான சேமிப்பு மற்றும் போக்குவரத்துக்கான உபகரணங்கள் ஆகிய

உள்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.50,000/- வரையிலும் கடனாக பெறலாம்.

### 7.7.3. **உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்**

தற்போதுள்ள போட்டி நிறைந்த சந்தை சூழலில் நிலைத்து நீடித்து வெற்றி பெறவும், மதிப்புத் தொடரில் உள்ள வாய்ப்புகளைக் கண்டறிந்து அவற்றை திறம்பட தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளவும் ஏதுவாக உழவர் உற்பத்தியாளர்களை ஒருங்கிணைத்து உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்கப்படவுள்ளது. இந்த உற்பத்தியாளர் நிறுவனங்கள் கம்பெனி / கூட்டுறவு சங்க சட்டம் அல்லது ஏதேனும் உரிய சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படும். இத்தகைய உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உயரிய சேவைகள் வழங்கும் விதமாக,சுத்திகரிப்பு, அறுவடை பின்செய் நேர்த்தி, தேவைப்படும் இடுபொருள் வாங்கி வழங்குதல், சந்தைப் படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டுதல் மற்றும் இதர பிற சேவைகளையும் வழங்கி விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கிட உதவிடும். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் வரும் ஆண்டுகளில் 10 முதல் 20 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.7.4. **வாடகை இயந்திர மையம்**

வாடகை இயந்திர மையம் என்பது பல்வேறு பயிர்களுக்குத் தேவையான விவசாயக் கருவிகள் மற்றும் இயந்திரங்களை ஒரே இடத்தில் கிடைக்கச்செய்து விவசாயப்

பணிகளுக்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட நியாயமான வாடகைக்கு கொடுப்பது ஆகும். தேவைப்படும் நபர், அதற்குரிய கட்டணத்தை செலுத்தி தேவைப்படும் சேவைகளைப் பெற்று கொள்ளலாம். இத்தகைய வாடகை இயந்திர மையத்துக்குத் தேவையான கருவிகள் மற்றும் இயந்திரங்களை, அந்தந்த பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகின்ற பயிர், இயந்திரங்களின் தேவை, அவற்றின் விலை, நிர்வகிக்கும் திறன் போன்றவற்றின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும். வாடகை இயந்திர மையம் சிறந்த முறையில், வருடம் முழுவதும் இயங்குவதற்கு ஏதுவாக அந்தந்த பகுதியில் சாகுபடி செய்யப்படுகின்ற பயிர்களுக்கு ஏற்ற கருவிகள், இயந்திரங்கள் மற்றும் அக்கருவிகளை இயக்கிடத் தேவையான நபர்களையும் மிகவும் கவனத்துடன் தேர்வு செய்வது அவசியமாகிறது.

2019 -20ஆம் ஆண்டில் ஒரு மையத்திற்கு 10 இலட்சம் ரூபாய் வீதம் 251 வாடகை இயந்திர மையங்கள் உருவாக்க ஆணை பெறப்பட்டு துறை மானியம் 80%, திட்ட நிதி 15%, பயனாளிகள் பங்களிப்பு 5% என்ற விகிதத்தில், ஒவ்வொரு வாடகை இயந்திர மையமும் உருவாக்கப்பட உள்ளது. மாவட்ட வாரியாக, வாடகை இயந்திர மையங்களை 5% பங்களிப்புடன் நடத்த ஆர்வமுள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இக்கூட்டமைப்புகளுக்கு இயந்திரங்கள் தேர்வு செய்வது தொடர்பாக பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. இவ் வாடகை இயந்திர மையங்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளால் பாரமரிக்கப்படும். தேர்வு

செய்யப்படும் இயந்திரங்களை இயக்குவதற்கு, ஆர்வமும் திறமையும் கொண்ட சுய உதவிக் குழு பெண்கள் கொண்ட தொழிலாளர் படை உருவாக்கப்பட்டு அதன் மூலம் பல்வேறு பயிர்களுக்கு தேவையான சேவைகள் வாடகை அடிப்படையில் வழங்கப்படும்.

**வாடகை இயந்திர மையத்தின் குறிக்கோள்கள்**:

- மகளிர் குழுக்களுக்கு வாடகை இயந்திர மையம்அமைப்பதற்கான வாய்ப்புகளை வழங்கி அதன் மூலம் வருவாயை அதிகரிக்க செய்தல்.
- பயிர்களுக்கேற்றவாறு மகளிர் கையாளக்கூடிய கருவிகள் மற்றும் இயந்திரங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் வேளாண் மகளிரின் வேலைப் பளுவினைக் குறைத்தல்.
- பண்ணை இயந்திரமயமாக்கத்தினை சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடையும் வகையில் விரிவுப்படுத்துதல்.

### 7.7.5. **பண்ணை விவசாயப் பள்ளிகள்**

வேளாண் தொழிலில் விவசாயிகளை தீவிரமாக ஈடுபடுத்துவதற்கும் பல்வேறு வேளாண் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடம் கொண்டு சேர்ப்பதற்கும் "பண்ணை விவசாயப் பள்ளிகள்" தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தால் நடத்தப்பட்டு வருகிறது. பண்ணை விவசாயப் பள்ளிகள், விவசாயிகள் பங்கேற்பு முறை மூலம், வேளாண்மை சார்ந்த பிரச்சனைகளை குழுவாக ஆராய்ந்து முழுமையாக சோதித்துப் பார்த்துக் கற்றுக் கொள்ள ஒரு வாய்ப்பினை உருவாக்குகிறது. இந்த பண்ணை விவசாய பள்ளியில், ஒவ்வொரு பயிருக்கும் அந்த பயிரின் பருவகாலம் முடியும்

வரை விவசாயிகள் குழுவாக வாரம் ஒரு முறை ஒரு மேற்பார்வையாளரின் தலைமையில் ஒருங்கிணைந்து, கலந்துரையாடி தங்களின் சந்தேகங்களை தீர்த்துக் கொண்டு, அந்த பயிருக்குரிய தொழில் நுட்பங்களை 8 முதல் 12 வாரங்களில் கற்றுக்கொள்வார்கள்.

பண்ணை விவசாயப் பள்ளிகள், 'கேட்டறிதலைவிட செய்து அறிதலே திறமையை வளர்க்கும்' என்ற அடிப்படையில் அமைந்துள்ளது. இந்த பள்ளிகளில் விவசாயிகள் தாங்களாகவே முன் வந்து விவசாய நடைமுறைகளை செய்து பார்த்து முடிவெடுக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். பண்ணை விவசாய பள்ளியில் விவசாயம் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பை மட்டும் கற்றுக்கொடுக்காமல் நீர் மேலாண்மை, குடும்ப வாழ்வாதார பாதுகாப்பு போன்றவற்றையும் கற்றுக்கொள்ள வழிவகை செய்யப்படுகிறது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், வேளாண் சார்ந்த வாழ்வாதார மேம்பாட்டுத்திட்டம் செயல்படுத்தப்படும் அனைத்து வட்டாரங்களிலும் ஒரு வட்டாரத்திற்கு 20 பண்ணை விவசாய பள்ளிகள் வீதம் (விவசாயம் சார்ந்த பள்ளிகள் 10 மற்றும் கால்நடை சார்ந்த பள்ளிகள் 10) மொத்தம் 2,320 பண்ணை விவசாயப் பள்ளிகள் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.7.6 **ஊட்டச்சத்து தோட்டம்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ், கிராமப்புற மக்களிடையே குறிப்பாக ஏழை எளிய மக்களின்

ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான சிறப்பு முயற்சியாக ஊட்டச்சத்து தோட்டம் அமைக்க ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் உணவு மற்றும் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வு உருவாக்கப்பட்டு, ஊட்டச்சத்து தோட்டம் அமைக்க பயிற்சியளிக்கப்படுகிறது. மேலும் ஊட்டச்சத்து தோட்டம் அமைக்கத் தேவையான விதைகள் மற்றும் நாற்றுகள் தேர்ந்தெடுக்கப்பட்ட சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. பயனாளிகள் தங்கள் வீட்டின் பின்புறம் அல்லது வீட்டின் மாடிப்பகுதியில் அல்லது அவர்களுக்குரிய வேறு எந்த இடத்திலும் ஊட்டச்சத்து தோட்டத்தை அமைக்கலாம். காய்கறிகள் தவிர பப்பாளி, முருங்கை, எலுமிச்சை, கறிவேப்பிலை, மணத்தக்காளி, மா, கொய்யா, வாழை போன்றவைகலும் ஊட்டச்சத்து தோட்டத்தின் கீழ் வளர்க்கப்படும். 2019 - 20 ஆம் ஆண்டில் இரண்டு இலட்சம் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ஊட்டச்சத்து தோட்டம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2020 - 21 ஆம் ஆண்டில், கூடுதலாக இரண்டு இலட்சம் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு இத்திட்டம் விரிவுப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 7.7.7. **இயற்கை வேளாண் கிராம தொகுப்புகளை ஏற்படுத்துதல்**

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், வேளாண் சாகுபடியில் நீடித்த நிலையான இயற்கை சாகுபடி

முறைகளையும், முன்னோடியான கால்நடை பாரமரிப்பு முறைகள், மரம் நீங்கலான வனப்பொருட்களை சேகரித்தல் மற்றும் மதிப்புக் கூட்டுதல் போன்றவற்றின் மூலம் ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தினை வலுப்படுத்தி வருகிறது. விவசாயிகளை மேலும் மேம்பட்ட பொருளாதார நிலைக்கு முன்னேற்றுவதற்கு இயற்கை வேளாண்மை சான்று பெறுவதும், சந்தைப்படுத்துதலில் இலாபகரமான விலை பெறவும் வழிவகை செய்ய வேண்டும்.

இயற்கை வேளாண் கிராம தொகுப்புகள் கீழ்க்கண்ட நன்கு வரையறுக்கப்பட்ட திட்ட செயலாக்க நடவடிக்கைகள் மூலம் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளன.

- இயற்கை விவசாயம்செய்ய ஆர்வமுள்ள விவசாயிகளைக் கொண்ட அருகருகாமையில் உள்ள தொகுப்பு கிராமங்களை தேர்வு செய்வது.
- திட்டத்தை செயல்படுத்த திறமையான அலுவலர்களை நியமிப்பது.
- தொழில்நுட்ப நிறுவனங்களின் ஆலோசனையுடன் திட்ட செயல்பாடு.
- ஆர்வமுள்ள மகளிர் விவசாயிகளை தேர்வு செய்வது
- பயிற்றுநர்கள் தேர்வு (சமுதாய வளப்பயிற்றுநர்கள் மற்றும் முதன்மை பயிற்சியாளர்கள்).
- அங்ககச்சான்றிதழ் (Organic Certification) வழங்கும் நடைமுறை

- இந்த திட்டத்தில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள், சமுதாய வளப்பயிற்றுநர்கள் மற்றும் பெண் விவசாயிகளுக்கு உரிய திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல்.
- மாநில மற்றும் மாவட்ட அளவிலான ஆலோசனைகளை உரிய அமைப்புகள் மற்றும் சார்புடைய துறைகளிலிருந்து பெறுவது மற்றும் ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள பாரம்பரிய இயற்கை வேளாண் திட்டத்தில் இணைந்து செயல்படுதல்.

2018-19ஆம் ஆண்டில், இயற்கை வேளாண் கிராம தொகுப்புகளை ஏற்படுத்தும் திட்டத்தின் கீழ் 2,000 விவசாயிகளை உள்ளடக்கி 20 இயற்கை வேளாண் கிராம தொகுப்புகள் அமைக்கப்பட்டது. இத்தொகுப்பின் கீழ் இணைந்த விவசாயிகளை ஆங்காங்கே உள்ளூர் தொகுப்பு குழுக்களாக உருவாக்கி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. 2019-20ஆம் ஆண்டில் மேலும் கூடுதலாக 2,000 விவசாயிகளை உள்ளடக்கி 20 இயற்கை வேளாண் கிராம தொகுப்புகள் உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. அனைத்து விவசாயிகளையும் உள்ளூர் தொகுப்பு குழுக்களாக உருவாக்கி பயிற்சி அளித்து அங்ககச்சான்றிதழ் பெறவும் பணிகள் நடைபெற்று வருகிறது. இயற்கை வேளாண் கிராம தொகுப்புகள் உருவாக்கும் முயற்சி வெற்றிகரமாக நடைபெறுவதின் அடிப்படையில், 2020-21 ஆம் ஆண்டில் மேலும் 100 இயற்கை வேளாண் கிராம தொகுப்புகளை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.7.8. **கிராமிய தொழில் முனைவோர் திட்டம்**

கிராமிய தொழில் முனைவோர் திட்டம் என்பது பண்ணை சாரா வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் துணைத் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் சிறிய தொழில்களை துவங்க ஊக்குவிக்கப்பட்டு அதன் மூலம் வறுமையையும், வேலையில்லா சூழ்நிலையையும் குறைத்து கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்தத்திட்டம் 2014-15ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் 60:40 என்ற பங்களிப்பு அடிப்படையில் நிதி வழங்குகின்றன.

**இந்த திட்டத்தின் அடிப்படை குறிக்கோள்கள்**:

- கிராமப்புற ஏழை மக்கள் தொழில் துவங்க உதவி செய்து, தொழில் நிலைபெறும் வரை தேவையான வழிகாட்டுதல் தந்து அவர்களை வறுமையிலிருந்து மீட்டு வருவது.
- புதிய தொழில்கள் தொடங்கத் தேவையான கடன்வசதி, திறன் வளர்த்தல், கண்டுணர்வு பயணங்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்து அத்தொழில் துவங்கிய முதல் ஆறுமாதத்திற்குத் தேவையான ஆதரவை சுய உதவிக்குழுக்கள் மற்றும் அவற்றின் கூட்டமைப்பு மூலம் கிடைக்க வழிவகுத்தல்.
- "தொழில் மேம்பாட்டுக்கான சமுதாய பயிற்றுநர்" என்ற சமூக மூலதனத்தை உருவாக்கி அவர்கள் மூலம் புதிய

தொழில்கள் தொடங்குவதற்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கிடச் செய்தல்.

- தொழில் முனைவோரின் திறமைகளை வளர்த்தல்.

தமிழகத்தில் திருப்போரூர் (செங்கல்பட்டு மாவட்டம்) மற்றும் உளுந்தூர்பேட்டை (கள்ளகுறிச்சி மாவட்டம்) ஆகிய இரண்டு ஒன்றியங்களில் 10.18 கோடி ரூபாய்நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 3,096 குறுந்தொழில்கள் துவங்கி வெற்றிகரமாக நடத்திட மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு உதவிகள் வழங்கப்படும்.

பயிற்சி பெற்ற தொழில் மேம்பாட்டு சமுதாய வளப் பயிற்றுநர்கள், கிராமப்புறங்களில் இலாபமும், வேலை வாய்ப்பும் ஈட்டித்தரக் கூடிய சேவை, உற்பத்தி மற்றும் வணிகம் ஆகிய துறைகளில் தொழில் வாய்ப்புகளை கண்டறிய உதவுவார்கள். சுய உதவிக் குழு உறுப்பினர்களால், தேர்வு செய்யப்பட்ட தொழிலில் அவர்களுக்கு உள்ள ஆர்வம் மற்றும் அடிப்படை அறிவை வைத்து அவர்களுக்குத் தேவையான வணிகத் திட்டத்தை தொழில் மேம்பாட்டுக்கான சமுதாய வளப் பயிற்றுநர் மூலம் தயாரித்து வழங்கப்படும். பயன்பெற்ற தொழில் முனைவோர்களுக்குத் தேவையான வழிகாட்டுதலையும் ஆதரவையும் மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் வழங்கிடும்.

தொழில் திட்டம் ஒப்புதல் ஆன பிறகு அத்தொழில் துவங்குவதற்குத் தேவையான நிதியை, சமுதாய முதலீட்டு நிதி அல்லது சமுதாய தொழில் நிதி மூலமும் மற்றும்

வங்கியுடன் இணைக்கப்பட்ட நிதித் திட்டங்கள் மூலமும் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

7.7.9. **தேசிய ஊரக வாழ்வாதார திட்டத்தின் கீழ் பண்ணை சாரா நிறுவனங்களை ஊக்குவித்தல்**

கிராமிய தொழில் முனைவோர் திட்டம் மட்டுமல்லமால் கூடுதலாக, தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டராங்களில் தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டம்மற்றும் மாநில ஊரக வாழ்வாதார திட்டத்தின் கீழும் பண்ணைசாரா தொழில் நிறுவனங்களை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஓரிட வசதி (One stop facility) மூலம் தனிநபர் மற்றும் குழு நிறுவனங்களை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தொழில் முனைவோருக்கு தேவையான உதவியளிக்கும் திறன் கொண்ட தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழில் மேம்பாட்டிற்கான சமுதாய வளப்பயிற்றுநர்கள் ஆகியோர்களை உள்ளடக்கியதாக ஓரிட வசதி விளங்கும். தொழில் முனைவோர்களுக்கு சாத்தியமான தொழில் வாய்ப்புகளை அடையாளம் காணவும், வணிகத் திட்டத்தை தயாரிக்கவும், சமூக நிறுவன நிதி அல்லது வங்கிக் கடனை பெற்றுத்தரவும் ஆவன செய்யப்படும். ஓரிட வசதி போலவே "இன்குபேட்டர்" என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு, அப்பகுதிகளில் அதிக அளவில் உருவாக வாய்ப்புள்ள தொழில் நிறுவனங்கள் இந்நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்படும்.

2020-21ஆம் ஆண்டில் ஓரிட வசதி, இன்குபேட்டர் மற்றும் தொகுப்புகளின் மூலம் 3,000 பண்ணைசாரா தொழில் நிறுவனங்களை உருவாக்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 7.7.10. **சந்தைப்படுத்துதலுக்கு ஆதரவு**

**அ. கண்காட்சிகள்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை கண்காட்சிகள் மற்றும் வணிக வளாகங்கள் மூலம் சந்தைப்படுத்திட தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறது. இக்கண்காட்சிகள் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களுக்கு கூடுதல் விற்பனை வாய்ப்புகளையும் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் விற்பனைத் திறனை மேம்படுத்துவதற்கும் உதவுகின்றன.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கைவினைப் பொருட்கள், செயற்கை அணிகலன்கள், சணல் பொருட்கள், தோல் பொருட்கள், சிறுதானியங்கள் போன்ற மகளிர் சுய உதவிக் குழு பொருட்களின் விற்பனையை அதிகரிக்கவும், பொருட்களை விளம்பரப்படுத்தி, சந்தைப்படுத்திடவும் ஒவ்வொரு ஆண்டும் **'மகளிர் மேளா'** என்ற பெயரில் பொங்கல், சித்திரை மற்றும் நவராத்திரி பண்டிகை காலங்களில் மாநில அளவிலான மூன்று கண்காட்சிகளை நடத்துகின்றது. மகளிர் சுய உதவிக் குழுக்களின் விற்பனைத் திறனை மேம்படுத்துவதற்கும், மொத்த கொள்முதல், தரம் மற்றும் விலை நிர்ணயம் ஆகியவற்றின் திறனை வளர்ப்பதற்கும், இக்கண்காட்சிகள் உதவுகின்றன. 2019-20 ஆம் ஆண்டில் நவராத்திரி கண்காட்சி மாநில அளவில் நடத்தப்பட்டதில் 130 மகளிர் சுய உதவிக் குழுக்கள் பங்கேற்று 68.25 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்து பயனடைந்தனர்.

சாராஸ் (Sale of Articles of Rural Artisans Society) என்பது ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகின்ற ஊரக கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் தேசிய அளவிலான கண்காட்சி ஆகும். இக்கண்காட்சியில் நாடு முழுவதிலிருந்தும் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்கள் உற்பத்தி செய்த சிறந்த கைவினைப் பொருட்கள் பார்வைக்கும் விற்பனைக்கும் வைக்கப்படுகிறது. 2019-20 ஆம் ஆண்டில் 11 மாநிலங்களில் நடைபெற்ற சாராஸ் கண்காட்சிகளில் தமிழ்நாட்டைச் சார்ந்த 319 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்துகொண்டு 86.00 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்து பயன் அடைந்துள்ளனர்.

**இயற்கை வேளாண் பொருட்கள் விற்பனை கண்காட்சி**:

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் இயற்கை விவசாயம் செய்யும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் விளைபொருட்களுக்கு உரிய சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக இயற்கை வேளாண் பொருட்களின் விற்பனை கண்காட்சிகள் நடத்தப்படுகிறது. இதனால் இயற்கை விவசாயம் செய்யும் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு இக்கண்காட்சி பயனுள்ளதாக அமைகிறது. 2019-20 ஆம் ஆண்டில், 9 விற்பனை கண்காட்சிகள் நடத்தப்பட்டு, அதன் மூலம் 45.00 இலட்சம் ரூபாய் மதிப்பிலான விளைப்பொருட்களை விற்பனை செய்து மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயன் அடைந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து 2020-21 ஆம் ஆண்டில் 12 இயற்கை வேளாண் பொருட்கள் விற்பனை கண்காட்சிகள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**ஆ. மாநில / மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம்**

தேசிய, மாநில, மாவட்ட மற்றும் உள்ளூர் அளவில் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களின் விற்பனையை மேம்படுத்தும் பொருட்டு, மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் மற்றும் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டு, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்திடவும், மாவட்ட அளவில் உள்ள விற்பனை வளாகங்கள் மற்றும் விற்பனை அங்காடிகளை மேலாண்மை செய்தும் வருகின்றன. மாவட்ட அளவில் உள்ள வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்கள் அனைத்தும் மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

**இ. கல்லூரிச் சந்தைகள்**

மகளிர் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை இளைஞர்களிடையே பிரபலப்படுத்துவதற்கு கல்லூரிச் சந்தைகள் மிக முக்கியமான சந்தை வாய்ப்புகளில் ஒன்றாக உள்ளது. இச்சந்தைகள் சுய உதவிக் குழுக்களுக்கு நல்ல வருவாய் ஈட்டித் தருவதோடு மட்டுமின்றி சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தற்போதைய சந்தை தேவை நிலவரங்களை

அறிந்து கொள்வதற்கும் உற்பத்திப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்கும் வாய்ப்பு ஏற்படுத்தி தருகின்றன.

2019-20ஆம் ஆண்டில் 26 கல்லூரிச் சந்தைகள் நடத்தப்பட்டது. இந்த கல்லூரி சந்தைகளின் மூலம் 682 மகளிர் சுய உதவிக் குழுக்கள் பங்கு கொண்டு 82.78 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்து பயன் அடைந்துள்ளனர்.

**ஈ. மதி அங்காடி** (Mathi KIOSK)

மதி அங்காடிகள் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதற்காக உருவாக்கப்பட்ட சிறப்பு ஏற்பாடாகும். நகர்ப்புற பகுதிகள், குறிப்பாக சுற்றுலா தலங்கள், பேருந்து நிலையங்கள், கோவில்கள், அரசு அலுவலகங்கள், நிறுவனங்கள் மற்றும் இதர மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் 137 மதி அங்காடிகள் நிறுவப்பட்டுள்ளது. இதில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களான மூலிகைப் பொருட்கள், அலங்காரசணல் பொருட்கள், கைவினைப் பொருட்கள், சிறுதானியங்கள், செயற்கை நகைகள் மற்றும் கைவினை பொம்மைகள் போன்ற பொருட்கள் பார்வைக்கு வைக்கப்பட்டும் விற்பனை செய்யப்பட்டும் வருகிறது.2019-20 ஆம் ஆண்டில் மட்டும் மதி அங்காடிகள் மூலம் 192.40 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**உ. சானிடரி நாப்கின் உற்பத்தியாளர் கூட்டமைப்பு**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் உள்ள சானிடரி நாப்கின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 54 சுய உதவிக் குழுக்களை

ஒருங்கிணைத்து ஒரு கூட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இக்கூட்டமைப்பு சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறையால் செயல்படுத்தப்படும் மாதவிடாய் சுகாதாரத் திட்டத்திற்கு தேவைப்படும் பெல்ட் வகை சானிடரி நாப்கின்களை உரிய நேரத்திலும், தரமானதாகவும் தயாரித்து மாவட்ட சுகாதார மையங்களுக்கு வழங்கி வருகிறது.

சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை அரசாணை எண்.458 நாள்.08.12.2017-ன் படி 2018-19ஆம் ஆண்டிற்கு 7.56 கோடி ரூபாய்மதிப்பிலான 36 இலட்சம் பெல்ட் வகை சானிடரி நாப்கின் பாக்கெட்டுகளை விநியோகம் செய்வதற்கான ஆணை பெறப்பட்டு மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் நாப்கின்கள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

2019-20ஆம் ஆண்டிற்கு 54 மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் 32 மாவட்ட சுகாதார மையங்களுக்கு 43.75 இலட்சம் சுகாதார நாப்கின் பாக்கெட்டுகள் 9.18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விநியோகம் செய்ய ஆணை பெறப்பட்டு சுகாதார நாப்கின் உற்பத்தி செய்யும் மகளிர் சுய உதவி குழுக்களால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**ஊ. தொழில் முனைவோரை முறைப்படுத்துதல்**

உற்பத்தி, வணிகம், சேவைபோன்ற தொழில் நடவடிக்கைகளில் நீண்ட காலமாக சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஈடுபட்டு இருந்தாலும் அத்தொழிலை மேலும் நல்லமுறையில் விரிவுபடுத்தி செய்வதற்குத் தேவையான தொழில் முனைவோர் சான்று(Udhyog Aadhar),நிரந்தர

கணக்கு எண் (PAN),உணவுக்கான தரச்சான்றுஉரிமம் (FSSAI) மற்றும் சரக்கு சேவை வரி உரிமம்(GST) போன்றவைகள் பெறப்படாமல் உள்ளனர்.

மேற்கூறிய சான்றிதழ்கள் கிடைக்கப் பெற்றால், மகளிர் சுய உதவிக் குழு தொழில் முனைவோருக்கு அரசு மானியம், கொள்முதல் செய்வதில் முன்னுரிமை, வங்கியிலிருந்து நிதி பெறுதல் மற்றும் இதர சலுகைகளை பெறுவதற்கு எளிதாக அமையும். இத்தகைய பயன்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பெறுவதற்கு ஒரு செயல்திட்டம் மேற்கொள்ளப்பட்டு, மேற்கண்ட உரிமம் மற்றும் சான்றிதழ்களை பெறுவதற்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதுவரை சுமார் 9,000 சுய உதவிக் குழு உறுப்பினர்கள்பயனடைந்துள்ளனர்.

**எ. வணிக முத்திரை**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் அனைத்து மகளிர் சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக 'மதி' என்ற பெயரில் மாநில அளவில் வணிக முத்திரை வடிவமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் மாவட்ட அளவிலும் தனித்தனியே அந்தந்த மாவட்டத்திற்கென தனி வணிக முத்திரைகளும் பெறப்பட்டுவருகிறது.

தரஅடிப்படையிலும், விற்பனை அடிப்படையிலும், மேலும் உற்பத்தி முறைமைகளை நிலைத்த முறையில் கடைப்பிடிக்கும் அடிப்படையிலும் மாநில மற்றும் மாவட்ட

அளவிலான வணிக முத்திரை பெற தகுதி பெற்றவை என சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு தேர்வு செய்யப்படும் பொருட்கள் வகைப்படுத்தப்பட்டு அதன் அடிப்படையில் விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 7.8. **சமூக உள்ளாக்கம் மற்றும் சமுதாய வளர்ச்சி**

நலிவுற்றோர் குறிப்பாக ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறுபான்மையினர், மாற்றுத்திறனாளிகள்,மகளிரை தலைவராகக் கொண்ட குடும்பங்கள், நிலமற்றோர், இடம் பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் ஆதிப்பழங்குடியினர், மலைப்பாங்கான பகுதிகளில் உள்ள தொலை தூர மற்றும் தனித்த கிராமப் பகுதிகளில் வாழும் நலிவுற்றோர் குடும்பங்களை மக்கள் நிலை ஆய்வின் மூலம் அடையாளம் கண்டு சமூக உள்ளாக்கத்தின் கீழ் கொண்டுவர தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2020-21 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

**அ. சமூக உள்ளாக்கத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோரை மேம்படுத்துதல்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் சமூக உள்ளாக்க உத்தியின் வாயிலாக மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோரை மேம்படுத்த, 2020-21 ஆம் நிதி ஆண்டில் 9 மாவட்டங்களில் 1,163 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய 29 ஊராட்சி ஒன்றியங்களில் 777.83 இலட்சம்

ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் பல்வேறு செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இதன் ஒரு பகுதியாக சமூக மாற்றுத்திறனாளி ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்களின் தேவையினை அறிந்து அவர்களது நலனைப் பாதுகாக்கும் வகையில் திறன்பெற்ற வட்டார அளவிலான மாற்றுத்திறன் குறைப்பு மற்றும் மறுவாழ்வு வசதி செய்யும் நிறுவனங்களுடன் (BDMRFA – Block Disability Mitigation and Rehabilitation Facilitating Agencies) ஒருங்கிணைந்து செயல்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளைக் கண்டறிதல், அவர்களுக்கான உரிமைகளை பெற்றுத் தருதல், தேவையின் அடிப்படையில் புனர்வாழ்வினை உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும் மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள் மற்றும் இதர நலிவுற்றோரைக் கொண்டு சிறப்புக் குழுக்கள் அமைத்து அதன் மூலம் அவர்களது இடர்களைக் களைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**ஆ. சமுதாயம் சார்ந்த மனநலத் திட்டம் - மனம் இனிது**

தனிமனித முன்னேற்றம் மற்றும் இதர வளர்ச்சிக்கு - குறிப்பாக பெண்களுக்கு - மனநலமும் நலவாழ்வும் மிகவும் இன்றியமையாததாகும். இதற்கென **மனம் இனிது** என்ற பெயருடன் சமுதாயம் சார்ந்த மனநலத் திட்டத்தினை 2019 - 20 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் அறிமுகப்படுத்தி செயல்பாட்டுக்குக் கொண்டு

வந்தது. இதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள ஊராட்சிகளில் மனநல ஆலோசகர்களை நியமித்து நலவாழ்வுத்துறை, தேசிய நலவாழ்வு இயக்கம், தொண்டு நிறுவனங்கள் மற்றும் பிற சார்பு நிறுவனங்களின் உதவியோடு குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் மனநலமும் நலவாழ்வும் பற்றி விளக்கிக் கூறுவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். சமூக வல்லுநர்களை பயிற்றுவிக்க மனம் இனிது திட்ட பயிற்சி புத்தகமானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 31.10.2019 அன்று வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து 7 முதற்கட்ட மாவட்டங்களைச் சேர்ந்த 35 நபர்களுக்கு(மாவட்டத்திற்கு 5 வீதம்) மனநலம் குறித்த பயிற்றுநர்கள் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்ட செயல்பாட்டிற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெறுவதற்கு மனச்சிதைவு ஆராய்ச்சி மையம், சென்னை உடன் (Schizophrenia Research Foundation – SCARF)தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து செயல்பட்டு வருகிறது.இத்திட்டத்திற்கென 2020-21 ஆம் நிதியாண்டில் 802.47 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியின் மூலம் கீழ்க்கண்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

- கிராம ஊராட்சிகளில் உள்ள சமுதாய வளப் பயிற்றுநர்களை பயிற்சிக்கு பின்னர் மனநல ஆலோசகர்களாக உருவாக்குதல்.
- மனநலம் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிவதற்கான முகாம் நடத்துதல்.
- மனநல ஆலோசகர்களுக்கு மதிப்பூதியம் வழங்குதல்.

- கிராம ஊராட்சியில் உள்ள சமுதாயம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், சுய உதவிக் குழுக்கள், மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு போன்றவைகளுக்கு மனநலமும் நலவாழ்வும் பற்றி எடுத்துரைத்தல்.

இத்திட்டமானது 22 மாவட்டங்களில் உள்ள 22 வட்டாரங்களில் 735 ஊராட்சிகளில் செயல்படுத்தப்படவுள்ளது.

**தொடர் செயல்பாடுகள்**

மேற்கண்ட பயிற்சிகள் மற்றும் செயல்பாடுகள் நடைமுறைபடுத்தப்பட்ட பிறகு, அதன் தொடர்ச்சியாக பயிற்சி பெற்ற சமுதாய வளப் பயிற்றுநர்களை மனநல ஆலோசகர்களைக் கொண்டு தேவையானகுடும்ப ஆலோசனை வழங்குதல், பாதிப்பிற்குள்ளானவர்கள் தங்களை தாங்களே நிர்வகித்துக் கொள்ள உதவி செய்தல், மருத்துவ நடவடிக்கையைத் தொடர்தல் மற்றும் சமூகம் சார்ந்த ஆதரவினை ஏற்படுத்துதல் முதலிய திட்ட பயன்பாடுகளை உறுதி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், மனநல பாதிப்பிலிருந்து மீண்டவர்களை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தில் (MGNREGS)இணைப்பதோடு அவர்களுக்கு வாழ்வாதாரம்/தொழில் சார்ந்த பயிற்சிகளும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதன்பொருட்டு, மனநல பாதிப்புக்கு உள்ளானவர்கள் தங்களுக்குள்ள பிரச்சனைகளை உடனடியாக தெரிவிப்பதற்கும் அதனடிப்படையில் அவர்களை சம்பந்தப்பட்ட துறைக்கு பரிந்துரை செய்து தீர்வு

காண்பதற்கும் சமுதாயம் சார்ந்த அமைப்புகள் உறுதுணையாக இருக்கும்.

**இ. உணவு, ஊட்டச்சத்து, உடல்நலம் தன்சுத்தம் மற்றும் சுகாதாரம் பேணும் திட்டம்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் உணவு, ஊட்டச்சத்து, உடல்நலம், தன்சுத்தம் மற்றும் சுகாதாரம் தொடர்பான செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கி அதில் உள்ள பிரச்சினைகளை அறிந்து அதற்கான தீர்வுகளைக் கண்டறிய இத்திட்டத்தின் மூலம் வழிவகை செய்துள்ளது. பெரும்பாலான நலவாழ்வு மற்றும் அதனைச் சார்ந்த திட்டங்கள் சமுதாய மக்களின் மூலமாகவே செயல்படுத்தப்பட்டு வருவதால் சமுதாய அமைப்புகளுக்கு உதவிசெய்ய தீர்மானித்துள்ளது. மேலும், இத்திட்டத்தினை நலவாழ்வுத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்துறை, கல்வித்துறை மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், துவக்கத்தில் ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டவர்கள் பயன்பெறும் வகையில் முன் மாதிரி (Model) ஊட்டச்சத்து மையம் உருவாக்கப்பட உள்ளது. அதன் மூலம் தனிக்கவனம் செலுத்தி குழந்தைகளுக்கு ஏற்படும் வளர்ச்சியின்மை, உடல் மெலிவு மற்றும் உடல் எடைக் குறைவு போன்ற குறைபாடுகளுடன் பிறப்பதை குறைக்க முடியும். மேலும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ள

5 ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள அனைத்து மகளிர் குழுக்களுக்கும் இதைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

இத்திட்டமானது நடப்பாண்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும் கோயம்புத்தூர், விருதுநகர், மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் 104 ஊராட்சிகளிலும் தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம் செயல்படுத்தப்படும் சேலம் மற்றும் கடலூர் மாவட்டங்களின் 83 ஊராட்சிகளிலும் 356.35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

**ஈ. பாலின வேறுபாடுகளைக் களைதல்**

பொருளாதார வளர்ச்சி மேம்பட்டு வரும் இக்காலகட்டத்தில் சமூகத்தில் நிலவும் பாலின அடிப்படையிலான வேறுபாடுகளைக் களைவது அவசியமாகும். மேலும் குழந்தைத் திருமணம், குடும்ப வன்முறை மற்றும் பாலியல் அடிப்படையிலான இடர்பாடுகளிலிருந்து பெண்கள் மற்றும் குழந்தைகளைக் காக்க வேண்டியது அவசியமாகும். இவற்றை கவனத்தில் கொண்டு 2020-21 ஆம் ஆண்டு முதல் சமூக பாலின வேறுபாடுகளை களைவதற்கான பல்வேறு செயல்பாடுகள் நடைமுறைப்படுத்தி தேசிய ஊரக வாழ்வாதார இயக்க செயல்பாடுகளுடன் ஒருங்கிணைக்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும் தர்மபுரி, இராமநாதபுரம் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 6 ஊராட்சிகளிலும் தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத்

திட்டம் செயல்படுத்தப்படும் கடலூர் மாவட்டத்தில் 2 ஊராட்சிகளிலும் 82.02 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2020-21 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

**உ. கிராம ஊராட்சிகள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு**

ஒரு கிராமத்தின் வளர்ச்சிக்கு, அக்கிராம ஊராட்சிக்கும் சுய உதவிக் குழுக்களை உள்ளடக்கிய சமுதாயம் சார்ந்தஅமைப்புகளுக்கும் இடையேயான ஒருங்கிணைப்பு மிகவும் அவசியமாகும். இதனை கருத்தில் கொண்டு கீழ்க்கண்ட ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் கிராம ஊராட்சி அளவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

- கிராம ஊராட்சிகள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு திட்டங்களை விரிவுபடுத்துதல்.
- நலிவுத்தன்மை குறைப்புத் திட்டம் (Vulnerability Reduction Plan) தயார் செய்து அதனை கிராம ஊராட்சியின் வறுமை குறைப்புத் திட்டத்துடன் ஒருங்கிணைத்தல்.
- கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்ட உருவாக்கத்தில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை பங்கேற்கச் செய்தல்.
- கிராமசபைக் கூட்டங்களில் சுய உதவிக்குழுக்களை அதிக அளவில் பங்கேற்கச் செய்தல்.
- அரசின் முன்னோடித் திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல்.

இத்திட்டமானது 2020-21 ஆம் ஆண்டில் 13 மாவட்டங்களில் (கோயம்புத்தூர், கடலூர், தர்மபுரி,

திண்டுக்கல், நாகப்பட்டினம், இராமநாதபுரம்,நீலகிரி, சேலம், திருவாரூர், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர்) 1,356 கிராம ஊராட்சிகளில் 89.64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

## 7.9. **மேலாண்மை தகவல் அமைப்பு** (MIS)

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் சமூக, பொருளாதார தகவல்கள் குறிப்பாக அவர்களின் நிதிப் பரிவர்த்தனை மற்றும் நிர்வாகம் தொடர்பான விபரங்கள் திட்ட செயல்பாட்டிற்கும், முடிவுகள் எடுப்பதற்கும் உதவியாக மிகப்பெரிய அளவில் மேலாண்மை செய்கிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் திட்டம் சார்ந்த செயல்பாடுகள், செயலாக்க யுக்திகள் மற்றும் துல்லியமான முடிவுகள் அதன் நிகழ்நேர (real time) மேலாண்மை தகவல் அமைப்பை சார்ந்தே உள்ளது.

இ-மதியானது (eMathi) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஓர் அங்கமாக உள்ளது. இது சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் நடைமுறை மின்னணு பரிவர்த்தனை மற்றும் நிர்வாகம் ஆகியவற்றை செயல்படுத்துவதற்கான இணையதளமாகும். மகளிரை உறுப்பினர்களாகக் கொண்ட இச்சமுதாயம் சார்ந்த அமைப்புகள் தங்களையும் திட்டத்தையும் சிறப்பாக நிர்வகிக்கவும் அதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு உரிய முடிவெடுப்பதற்கான ஆதரவு அமைப்பாகவும் இ-மதி செயல்படுகிறது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இ-மதி

இணையதளம் மற்றும் தகவல் தளம் மேம்படுத்தப்பட்டு சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் கூட்டங்கள், சேமிப்பு, கடன், கடனை திரும்ப செலுத்துதல் மற்றும் கணக்கு புத்தகங்கள் பராமரிப்பு போன்ற நடைமுறை விவரங்களைச் சேகரித்து நிகழ்நேர தகவல்கள் வழங்கி வருகிறது.

இ-மதி மட்டுமின்றி 2019-20 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகள்:

- *tnatws.org* – அம்மா இரு சக்கர வாகனத் திட்டத்திற்கான மேலாண்மை தகவல் அமைப்பு.
- *eCRP.in* – சமுதாய வள பயிற்றுநர்களுக்கான விவரங்கள் அடங்கிய இணையதளம்.
- சுகாதார நாப்கின் கூட்டமைப்பு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கான கைபேசி செயலி.
- இ-மதி செயலி – சமுதாய மின்வானொலி மற்றும் மின்வழி கற்றல் தளத்திற்கான கைபேசி செயலி.

### 7.10. **தேசிய ஊரக பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம்**

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு இணையாக ஏழைகளின் வாழ்வு மேம்படும் வகையில்தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்பட்டு 2018-19 ஆம் ஆண்டுடன் முடிவுற்றது. அதனை தொடர்ந்து தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம் என்ற புதிய திட்டம் மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் 2019-20 ஆம் ஆண்டு

முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு நிதியானது மத்திய மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் பங்களிப்பு செய்யப்படுகிறது.

இத்திட்டமானது பகுதி/வட்டார கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல், மதிப்பு கூட்டு வளர்ச்சியினை ஊக்குவித்தல், பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாரா துறையில் தனி நபர் மற்றும் கூட்டுத் தொழில் செய்தல், ஊரக தொழில் நிறுவனங்களை வலுப்படுத்துதல், திறன் மேம்பாடு மற்றும் நிதிசார்பு சேவைகளை மேம்படுத்துதல் போன்ற உயர்மட்ட செயல்பாடுகளை உள்ளடக்கியதாகும். மேலும் பண்ணை சார்ந்த வாழ்வாதாரமானது உற்பத்திக் குழுக்கள் மற்றும் உற்பத்தி சார்ந்த நிறுவனங்களை வலுப்படுத்துதல், இயற்கை வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டு தொகுப்பு கிராமங்களை உருவாக்குதல், மதிப்புக் கூட்டுதலுக்கான செயல்பாடுகள் முதலியவற்றை உள்ளடக்கியதாக அமையும். மேற்கண்ட வாழ்வாதார செயல்பாடுகளோடு முன்மாதிரி பகுதி அளவிலான கூட்டமைப்புகளால் மேற்கொள்ளப்படும் உணவு, ஊட்டச்சத்து, உடல் நலம் மற்றும் சமூகப் பாலினம் போன்ற சமூக வளர்ச்சி சார்ந்த செயல்பாடுகள் ஒருங்கிணைப்பு செய்யப்படவுள்ளது.

முன் மாதிரி வட்டார/பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கும் நிதி உள்ளாக்க உத்திகள், காப்பீடு மற்றும் ஓய்வூதியத் திட்டங்கள், உற்பத்திக் குழுக்கள் மற்றும் நிறுவனங்கள், உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துதல் மற்றும் நிறுவனங்களை நிறுவுதல் போன்றவற்றிற்கும் இடையே

நெருங்கிய உறவினை ஏற்படுத்துதல் இத்திட்டத்தின் அடிப்படையாக அமைகிறது.

இத்திட்டமானது முன்னோட்டமாக, மாநிலத்தில் கடலூர், ஈரோடு, சேலம், தஞ்சாவூர் மற்றும் திருச்சி ஆகிய 5 மாவட்டங்களில் தலா 4 வட்டாரங்கள் என மொத்தம் 20 வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது. மேற்கண்ட வட்டாரங்கள் கீழ்க்கண்ட தகுதிகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- இரண்டு வருடங்களுக்கும் மேலாக சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பு செயல்பாட்டில் இருத்தல்.
- 50 சதவீதத்திற்கும் மேலான குழுக்கள் கூட்டமைப்பில் அங்கம் வகிப்பதோடு அக்கூட்டமைப்பின் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி வழங்கியிருத்தல்.
- பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாராத வாழ்வாதார நடவடிக்கைகள் செயல்பாட்டில் இருத்தல்.
- பலதரப்பட்ட துறைகளில் சிறந்து விளங்கும் சமுதாய வளப் பயிற்றுநர்கள் தேவையான அளவில் ஈடுபட்டிருத்தல்.

2020-21 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கென மத்திய அரசின் பங்குத் தொகையாக (60%) 18.07 கோடி ரூபாயும், மாநில அரசின் பங்குத் தொகையான (40%) 12.05 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 30.12 கோடி ரூபாய்நிதியாண்டு செயல் திட்டத்தில் கோரப்பட்டுள்ளது.

### 7.10.1. **முன்மாதிரி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு**

தேசிய ஊரக வாழ்வாதார பொருளாதார புத்தாக்கத் திட்டத்தின் கீழ், ஐந்து மாவட்டங்களின் இருபது வட்டாரங்களில் உள்ள 729 ஊராட்சிகளில் இருந்து 50 சதவீதம் ஊராட்சிகளான 365 ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு, முன்மாதிரி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் / பகுதி அளவிலான கூட்டமைப்புகள் 3 கட்டங்களில் கீழ்க்கண்டவாறு உருவாக்கப்படும்.

**அட்டவணை 7.8**

| **கட்டங்கள்** | **வட்டாரங்கள்** | **ஊராட்சிகள்** | **உத்தேச காலம்** |
|---|---|---|---|
| I | 5 | 80 | ஏப்ரல் 2019 – மார்ச் 2020 |
| II | 7 | 122 | ஏப்ரல் 2020 – மார்ச் 2021 |
| III | 8 | 163 | ஏப்ரல் 2021 – மார்ச் 2022 |

### 7.10.2. **மின்னணு நிதி சேவை** (Digital Finance)

மகளிர் சுய உதவிக் குழுக்கள் வங்கிகளில் கடன்பெற்று திரும்ப செலுத்திய விவரங்களை பரிவர்த்தனை அடிப்படையிலான மேலாண்மை தகவல் அமைப்பு (MIS) மூலம் தொகுத்து அவற்றை வங்கிக் கணக்குகளுடன் இணைக்கச் செய்வது இந்த திட்டத்தின் நோக்கமாகும். இவ்வாறு தொகுக்கப்பட்ட கடன் தகவல்கள், அடுத்தகட்ட அதிக அளவிலான கடன் இணைப்பு பெறுவதற்கு இந்திய கடன் தகவல் மையம் (CIBIL) மற்றும் ஹைமார்க் நிறுவனங்களின் (Hi-Mark) மதிப்பீட்டை உடனே அறிந்து கொள்ள உறுதுணையாக இருக்கும்.

## 7.11. **தீன் தயாள் அந்தியோதய யோஜனா – தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்** (DAY – NULM)

மத்திய அரசின் கீழ் உள்ள வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற திட்டங்களுக்கான அமைச்சகம்,ஏற்கனவே செயல்படுத்தி வந்த **சுவர்ண ஜெயந்தி சகரி ரோஜ்கர் யோஜனா** (SJSRY)திட்டத்தினை 2014-2015 ஆம் ஆண்டு முதல் 60:40 என்ற விகிதத்தில் மத்திய, மாநில அரசுகளின் நிதியுடன் தீன் தயாள் அந்தியோதயா யோஜனா – தேசிய நகர்ப்புற வாழ்வதார இயக்கம் (DAY – NULM)என்ற புதிய திட்டமாக மாற்றியமைத்தது. இத்திட்டத்தின் குறிக்கோள், நகர்ப்புற ஏழைகளிடையே சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி அவர்களின் வறுமையையும், நலிவு நிலையையும் குறைத்து சுய வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுடன் கூடிய வேலைவாய்ப்புகளுக்கு வழிவகுத்து, அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தினை குறிப்பிடத்தக்க அளவில் மேம்படுத்துவதும், நிலைத்த தன்மை அடையச் செய்வதும் ஆகும்.

மேலும் நகர்ப்புற உறைவிடமற்றோர்க்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய உறைவிடத்தை ஏற்படுத்தித் தருதல், நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு அவர்களின் வியாபாரத்தினை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் பொருத்தமான இடம் ஒதுக்கீடு செய்தல், நிதி அமைப்புகள் மூலம் கடன் வசதி ஏற்படுத்துதல், சமூக பாதுகாப்பு அளித்தல் மற்றும் திறன் வளர்ப்பு மூலம் வளர்ந்து வரும் சந்தைவாய்ப்புகளை பயன்படுத்திக்கொண்டு அவர்களின்

வாழ்வாதாரம் மேம்பட உதவுதல் போன்றவற்றை இந்த இயக்கம் முக்கிய இலக்காகக் கொண்டுள்ளது.

**இத்திட்டத்தின் கூறுகள்**

1. சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு(SM&ID)
2. சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SEP)
3. வேலை வாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி மற்றும் பணியமர்வு (EST&P)
4. திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி (CB&T)
5. நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரம்(SUSV)
6. நகர்ப்புற வீடற்றோருக்கு உறைவிடம் (SUH)
7. புதுமை மற்றும் சிறப்புத் திட்டங்கள் (I&SP)

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வதார இயக்கம் 2014 முதல் 2016 வரை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் செயல்படுத்தப்பட்டது. முதற்கட்டமாக மாவட்ட தலைநகரங்கள் மற்றும் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட நகரங்கள் உட்பட 40 நகரங்களைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தப்பட்டது.

அரசு ஆணை எண்: 62 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (M.A.2) நாள் 04.03.2016-ன் படி நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் கீழ் இயங்கி வந்த மேற்படி திட்டம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும்படி உத்தரவிடப்பட்டது. மேற்கண்ட அரசு ஆணையின் படி நான்கு முக்கிய கூறுகளான, சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு(SM&ID),திறன் மேம்பாடு

மற்றும் பயிற்சி (CB&T),வேலை வாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் பணியமர்வு (EST&P), சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SEP)ஆகியன 2016-2017ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், அரசாணை எண்:114 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (M.A.2)நாள் 27.10.2017-ன் படி புதுமை மற்றும் சிறப்புத்திட்டங்கள் (I&SP)என்ற திட்டக்கூறு மாற்றம் செய்யப்பட்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மீதமுள்ள இரண்டு கூறுகளான நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரம் (SUSV),நகர்ப்புற வீடற்றோருக்கு உறைவிடம் (SUH)ஆகியன நகராட்சி நிர்வாக ஆணையரகத்தாலேயே தொடர்ந்து நகர்ப்புற உள்ளாட்சிகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இதன் தொடர்பான வியாபார குழுக்கள் உருவாக்குதல், அதனைக் கண்காணித்தல் உட்பட வழக்கமான நடைமுறைகள் மற்றும் தெருவோர வியாபார திட்டங்களைத் தயாரித்தல் ஆகியனவும் நகர்ப்புற உள்ளாட்சிகளின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் நகர்ப்புற தெருவோர வியாபாரிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவிடும் திறன் மேம்பாட்டு பயிற்சியளித்தல், நிதி ஆதாரங்களுக்கு வழி காட்டும் வகையில் வங்கி சேவையைப் பெற உதவுதல், பொருளாதார வளர்ச்சிக்கு உதவுதல் ஆகியவை தொடர்ந்து தமிழ்நாடு

மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

7.11.1 **சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு**(SM&ID)

**அ. சுய உதவிக்குழுக்கள் அமைத்தல்மற்றும் ஆதார நிதி வழங்குதல்**

2016-17 முதல் 2018-19 வரை 34,461 சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டு,34.46 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 2019-20 ஆம் ஆண்டில் 10,635 சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டு, அதில் 10,000 சுய உதவிக்குழுக்களுக்குஆதார நிதியாக 10 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**ஆ. பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் ஆதார நிதி வழங்குதல்**

2016-17 முதல் 2018-19 வரை 644 பகுதி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. 2019-20 ஆம் ஆண்டில் 443 பகுதி அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டு 304 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஆதார நிதியாக 1.52 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**இ. நகர அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்துதல்**

2016-17 முதல் 2018-19 வரை 42 நகர அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. 2019-20 ஆம் ஆண்டில் 5 நகர அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளது.

**ஈ. நகர்ப்புற வாழ்வாதார மையங்கள்**

2016-17 முதல் 2018-19 வரை 12 நகர்ப்புற வாழ்வாதார மையங்கள் உருவாக்கப்பட்டு 1.20 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. 2019-20 ஆம் ஆண்டில் 10 முன்மாதிரி நகர்ப்புற வாழ்வாதார மையங்கள் உட்பட 39 நகர்ப்புற வாழ்வாதார மையங்கள் 3.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**உ. வேலை வாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி மற்றும் பணியமர்வுத் திட்டம்** (EST&P)

2016-17 முதல் 2017-18 வரை பல்வேறு பிரிவுகளின் கீழ் 22,083 இளைஞர்கள் 33.12 கோடி ரூபாய் நிதி உதவியுடன் திறன் வளர்ப்பு பயிற்சி முடித்துள்ளார்கள். 2018-19 ஆம் ஆண்டிற்கு 18.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12,000 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2019-20 ஆம் ஆண்டில் 5,939 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**ஊ. தனி நபர் சுய வேலை வாய்ப்புத் திட்டம்** (SEP - I)

2016-17 முதல் 2018-19 வரை 145.43 கோடி ரூபாய் வங்கிக்கடன் மூலமாக 24,284 தனிநபர் சுய வேலைவாய்ப்பு பயனீட்டாளர்கள் பயனடைந்துள்ளார்கள். 2019-20 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 2,247 தெருவோர வியாபாரிகள் உட்பட 7,460 தனி நபர்களுக்கு 38.94 கோடி ரூபாய் வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**எ. குழு சுய வேலை வாய்ப்புத் திட்டம்** (SEP - G)

2016-17 முதல் 2018-19 வரை வங்கிக்கடன் மூலமாக இதுவரை 440.18 கோடி ரூபாய் நிதி உதவியின் மூலம் 15,953 குழுக்கள் பயனடைந்துள்ளார்கள். 2019-20 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 200 தெருவோர வியாபாரிகளுக்கான ஒத்த தொழிலார்வ குழுக்கள் உட்பட 4,759 குழுக்களுக்கு வங்கிக் கடனாக 175.04 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**ஏ. சுய வேலை வாய்ப்புத் திட்டம் (வங்கி இணைப்பு) (SEP - BL)**

2016-17 முதல் 2018-19 வரை 828.79 கோடி ரூபாய் வங்கிக்கடன் நிதி உதவி பெற்று 21,420 சுய உதவிக் குழுக்கள் பயனடைந்துள்ளார்கள். 2019-20 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 7,880 சுய உதவிக் குழுக்களுக்கு 293.26 கோடி ரூபாய் வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

7.11.2. **தேவைக்கேற்ற கடன் மற்றும் வட்டி மானியம் பெறுவதற்கான வலைதளம்** (PAiSA Portal)

2016-17 முதல் 2018-19 வரை 3.01 கோடி ரூபாய் வட்டி மானியமாக இவ்வலைத் தளம் மூலமாக வழங்கப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் பயனாளிகளுக்கு 7.41 கோடி ரூபாய் வட்டி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**7.11.3. நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரம்** (SUSV)

664 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் இதுவரை 1,21,098 தெருவோர வியாபாரிகள் கணக்கெடுக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 2,247 தெருவோர வியாபாரிகள் தனிநபர் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 12.20 கோடி ரூபாய் வங்கிக் கடன் மூலமாக பயனடைந்துள்ளார்கள். தெருவோர வியாபாரிகளின் ஒத்த தொழிலார்வக் குழுக்களுக்கு 2.19 கோடி ரூபாய் வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் சென்னை மற்றும் மதுரை மாநகாராட்சிகளுக்கு மொத்தம் இரண்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு 31.73 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,595 தெருவோர வியாபாரிகள் பயன்பெறும் வகையில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**7.11.4. நகர்ப்புற வீடற்றோர்க்கு உறைவிடம்** (SUH)

இந்த உட்கூறின் கீழ் இதுவரை 242 உறைவிட அலகுகள் (153 வழக்கமான உறைவிடங்கள் மற்றும் 89 சிறப்பு உறைவிடங்கள், இதில் மனநிலை பாதிக்கப்பட்டோருக்கும், மன நோயாளிகளுக்கும் திருநங்கையர்களுக்கும் மற்றும் மருத்துவமனை உறைவிடங்கள் ஆகியவை உள்ளடக்கியதாகும்) 5 திட்ட அனுமதிக் குழு கூட்டங்கள் மூலம் அனுமதிக்கப்பட்டது. இதன் மதிப்பீட்டு தொகை 101.33 கோடி ரூபாய் ஆகும். இதில் 161 உறைவிடங்கள் முடிக்கப்பட்டு அதில் 12,073 பயனாளிகள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். மீதமுள்ள பணிகள் பல்வேறு கட்டங்களாக நடைபெற்று வருகிறது. 2019-20 ஆம் ஆண்டில்

12 புதிய உறைவிடங்கள் 4.08 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 108 உறைவிடங்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்புக்காக 5.37 கோடி ரூபாய்அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## 7.12. **சிறந்த சமுதாயம் சார்ந்த அமைப்புகள் (சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்) மற்றும் வங்கிகளுக்கான விருதுகள்**

சுய உதவிக் குழுக்களுக்கிடையே சிறந்த நிர்வாகம் மற்றும் சமூக விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காக மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் சிறப்பாக செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

இந்த விருதுகள் சிறப்பாக செயல்படுபவர்களை பெருமைப்படுத்துவதுடன், மற்றவர்களுக்கு ஊக்கத்தை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு வழங்கப்படுகின்றன. மாநில அளவில் சிறப்பாக செயல்படும் 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், 10 சுய உதவிக் குழுக்களுக்கும், மாவட்ட அளவில் சிறப்பாக செயல்படும் ஒரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் 3 சுய உதவிக் குழுக்களுக்கும், வட்டார அளவில் சிறப்பாக செயல்படும் ஒரு சுய உதவிக் குழுவிற்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன.

மேலும், சுய உதவிக் குழு இயக்கத்திற்கு முழு ஆதரவு நல்கி அவைகளின் வெற்றிக்கு உறுதுணையாக இருக்கும்

வங்கிகளின் சேவையினைப் பாராட்டி கௌரவிக்கும் விதமாக விருதுகள் வழங்கப்படுகின்றன.

### 7.13. **தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம்** (TNVRC)

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) 2001 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் ஓர் அங்கமாகச் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள டி.என்.வி.ஆர்.சி-யின் முக்கிய நோக்கங்களாவன:

(அ) திட்டப் பணியாளர்கள், சமுதாயம் சார்ந்த அமைப்புகள் மற்றும் மாநில / மாவட்ட / வட்டார அளவிலான முதன்மைப் பயிற்றுநர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி வழங்குதல்,(ஆ) திட்டத்திற்கான பயிற்சி உபகரணங்கள் / கையேடுகள், விளக்க அட்டைகள் மற்றும் பயிற்சி சார்ந்த பிற புத்தகங்கள் உருவாக்குதல், (இ) பல்வேறு சமூக, பொருளாதார மேம்பாட்டு திட்டங்களுக்கான தொழில் நுட்ப சேவைகளை வழங்குதல், (ஈ) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கிராமப்புறங்களில் வறுமை ஒழிப்பு எனும் பெரும்பணியில் செயல்படுத்திய பல்வேறு உத்திகள், முன் முயற்சிகள், பெற்ற படிப்பினைகள் மற்றும் திட்டத்தின் நன்கு சிறந்த விளைவுகள் ஆகியவற்றைத் தொகுத்து ஒரு அறிவுசார் களஞ்சியமாக விளங்குதல் மற்றும் (உ) அரசு சாரா அமைப்புகளுடன் வளர்ச்சி தொடர்பான நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல்.

தேசிய நலவாழ்வு குழுமம் (NHM)மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்துடன் மக்கள் தொகை அடிப்படையிலான தொற்றா நோய்கள் (NCD)கண்டறியும் திட்டத்திற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு, டி.என்.வி.ஆர்.சி மூலமாக செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் 30 மாவட்டங்களில் உள்ள 85 வட்டாரங்கள் மற்றும் 2 மாநகராட்சிகளில் (கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி) 1,902 சமுதாய வளப்பயிற்றுநர்களைக் (சுகாதாரம்) கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மூலம் உருவாக்கிய சமூக மூலதனம் என்னும் பெரும் சக்தியின் விளைவாகவும் மற்றும் சமுதாய வளப்பயிற்றுநர்களை இந்நிறுவனம் தொடர்ந்து வலுப்படுத்தி வந்ததுமே இத்திட்டத்தை திறம்பட நிறைவேற்றி வருவதற்கு முக்கிய காரணிகளாக அமைந்துள்ளன.

டி.என்.வி.ஆர்.சி-யின் மற்றொரு முன்முயற்சியாக, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் / தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் பயன்களை, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் நாவலூர், பெரும்பாக்கம், கூடப்பாக்கம் மற்றும் அகில இந்திய வானொலி நிலப் (AIR Land)பகுதிகளில் மறுகுடியமர்த்தப்பட்ட மக்கள் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் சென்றடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் நோக்கமானது, அவர்கள் இயல்பு நிலையினை அடைந்திடவும், மறுகுடியமர்த்தப்பட்டதன் மூலம் ஏற்பட்ட சிரமங்களிலிருந்து

மீளும் திறனைப்பெற்றிடவும் இக்குடியிருப்புவாசிகளை நல்வழிப்படுத்துவது ஆகும்.

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம், 2018-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2-ம் நாள் டி.என்.வி.ஆர்.சி-யினை தேசிய வள மையமாக(NRO)அங்கீகரித்தது. இம்மையமானது, பிற மாநில ஊரக வாழ்வாதார இயக்கங்களுக்கு, மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்களுக்கான செயல்பாடுகள், முதியோர் பாதுகாப்பு, பண்ணை மற்றும் பண்ணைசாரா வாழ்வாதாரம், நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் உயர்நிலைக் கூட்டமைப்புகளின் செயல்பாடுகள் போன்ற பணிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கி வருகிறது.

## 7.14. **தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் மாத இதழ்**

பெண்களுக்கான மிகவும் தேவையான பயனுள்ள செய்திகள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த விபரங்களைத் தெரிவிக்கும் தகவல், கல்வி மற்றும் தொடர்பு சாதனமாக செயல்பட ஓர் மாத இதழ் தேவைப்பட்டது. அதன் விளைவாக, முற்றம் சங்கம், தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம், 1975-ன் 27வது பிரிவின் கீழ் தோற்றுவிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் கீழ் முற்றம் மாத இதழ் மாதந்தோறும் நன்முறையில் வெளியிடப்பட்டு வருகிறது. முதலில் முற்றம் மாத இதழ் 10,000 பிரதிகளுடன் வெளியிடப்பட்டது. தற்போது, முற்றம் மாத இதழ், நவீனப்படுத்தப்பட்டு தமிழகம் முழுவதும் சந்தா செலுத்திய

77,000 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அனுப்பப்பட்டு, அதன் மூலம் 17 இலட்சம் உறுப்பினர்களைச் சென்றடைகிறது. முற்றம் மாத இதழ், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தொடர்பான பல்வேறு செய்திகளை வெளியிட்டு வருகிறது.

மகளிர் முன்னேற்றம் குறித்த செயல்பாடுகள் மற்றும் மகளிருக்கான அனைத்து திட்டங்கள் தொடர்பான விபரங்களை சேகரித்து, அதை அனைத்துத் தரப்பினருக்கும் தொடர்ச்சியாக சென்றடையும் விதமாக முற்றம் இதழில் பதிவிட்டு வெளியிடச் செய்வதே இதன் முக்கிய குறிக்கோள் ஆகும். முற்றம் மாத இதழில், மகளிர் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்,தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்கள் அறிந்து கொள்ள தேவையான மகளிர் சுய உதவிக் குழுக்களின் உன்னத வெற்றிக் கதைகள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் போன்றவற்றின் சாதனைகள் மற்றும் மகளிர் முன்னேற்றத்திற்காக, நன்மைக்காக தமிழக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு துறைகளின் திட்டங்கள், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் பெண்களுக்கான உரிமைகள், பெண் கல்வி, பெண்கள் பாதுகாப்பு சட்டங்கள், வறுமை ஒழிப்பு செயல்பாடுகள், சேமிப்பின் முக்கியத்துவம், பெண் தொழில் முனைவோர்முன்னேற்ற செயல்பாடுகள், கூட்டுத்

தொழில் நடவடிக்கைகள், இயற்கை வேளாண்மை, உடல் நலம் மற்றும் கைதேர்ந்த மருத்துவக் குறிப்புகள் குறித்த விழிப்புணர்வு, உணவு, ஊட்டச்சத்து, சுகாதாரம், பாலின சமத்துவம், தன்சுத்தம் குறித்த ஆலோசனைகள், மாற்றுத்திறனாளிகளின் செயல்பாடுகள் மற்றும் மனநலம் சார்ந்த பயிற்சிகள் போன்ற தகவல்கள் இடம் பெற்று மிளிர்கின்றது.

## 7.15. **உழைக்கும் மகளிருக்கான அம்மா இருசக்கர வாகனத் திட்டம்**

இத்திட்டம் மாநில அரசின் நிதியில் 2017-18 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் ஒரு சிறப்புத் திட்டமாகும். உழைக்கும் மகளிரின் அன்றாட செயல்பாட்டை எளிதாக்கும் நோக்கத்துடன் அவர்கள் தங்களின் தொழிலை மேற்கொள்வதற்கும், பணியிடங்கள், வங்கிகள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளில் பணிகளை மேற்கொள்வதற்கும் எளிதில் சென்று வர ஏதுவாக இரு சக்கர வாகனங்களை மானியத்துடன் வாங்குவதற்காக இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மகளிரால் எளிதில் பயன்படுத்தும் வகையில் இவ்வாகனங்கள் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தின்படி கியர் இல்லாத அல்லது ஆட்டோ கியர் உடைய இரு சக்கர வாகனங்கள் மட்டுமே இத்திட்டத்தின் மூலம் வாங்க முடியும்.

**இத்திட்டத்தின் கீழ் தகுதி பெறும் பயனாளிகள்**

தன்னுடைய ஊதியமே குடும்பத்தின் பிரதான வருமானம் என்ற நிலையில் வாழ்வாதார செயல்பாட்டிற்காக / ஊதிய வேலை வாய்ப்புக்காக தனியாகவோ அல்லது

கூட்டாகவோ தொலை தூரத்திற்குச் சென்று பணிபுரியும் பெண்களே திட்டத்தின் முக்கியப் பயனாளிகள் ஆவர். மேலும், கீழ்க்காணும் பிரிவுகளைச் சார்ந்தவர்களும் தகுதியுடையவராவர்.

1. அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்புச் சாரா பிரிவுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள பெண் தொழிலாளர்கள்.
2. கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் மகளிர்.
3. சுய தொழில் மற்றும் சிறு தொழில் செய்யும் பெண்கள்.
4. அரசாங்க நிதி உதவி பெறும் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், அரசு திட்டங்கள்/சமூகம் சார்ந்த நிறுவனங்கள் - ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், மாவட்ட மக்கள் கற்றல் மையம் (மகமை) - ஆகியவற்றில் பணிபுரியும் மகளிர், தொகுப்பூதியம், தினக்கூலி மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஊதியம் பெறும் மகளிர்.
5. வங்கி தொடர்பாளர்கள் / வங்கி வழி நடத்துநர்கள் மற்றும் சுகாதார (ASHA)பணியாளர்கள்.

மேற்கண்ட பிரிவுகளின் கீழ் பணியாற்றும் பெண்கள் மட்டுமல்லாது இத்திட்டப் பயனானது அதிக அளவிலான உழைக்கும் பெண்கள் பயனடையும் வகையில் அரசாணை எண்:179, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள்: 29.11.2019 -ன் படி கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

1. அதிகபட்ச வயது 40ல் இருந்து 45 ஆக உயர்வு.
2. கல்வித் தகுதி தேவையில்லை.
3. அரசு துறைகள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணியாற்றும் பெண்களும் தகுதி உடையவர்கள் ஆவர்.

இத்திட்டத்திற்காக 2017-18 ஆம் ஆண்டு முதல் கடந்த மூன்று ஆண்டுகளில் தலா 252.50 கோடி ரூபாய் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயனாளிகள் 125 cc-க்கு மிகாமல் தரமான புதிய இருசக்கர வாகனம் வாங்கிக் கொள்ள அதிகபட்ச மானியமாக, வாகன விலையில் 50 சதவீதமோ அல்லது ரூ.25,000/- இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு மேற்கண்ட மானியத் தொகைக்கு கூடுதலாக ரூ.6,250 சேர்த்து மொத்தம் ரூ.31,250 மானியமாக வழங்கப்படுகிறது.

2020-21 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 252.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சம் பயனாளிகள் பயனடைய உள்ளனர். நாளது வரை 2,07,823 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். அதற்காக 468.75 கோடி ரூபாய் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 7.16. **இணையவழிக் கற்றல் மற்றும் சமுதாய மின் வானொலி**

தமிழ்நாட்டில் சுமார் ஒரு கோடி உறுப்பினர்களைக் கொண்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான

வெற்றிக்கதைகள், வழிகாட்டு ஆலோசனைகள், அறிவுரைச் செய்திகள், எண்ணங்கள் பரிமாற்றம், முக்கிய தகவல்கள் போன்ற விவரங்கள் அடங்கிய மின்கற்றல் தளம் (e–Learning platform) ஒன்று உருவாக்கப்பட்டு, அவைகளை மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கைபேசி வாயிலாக அறிந்து கொள்ளவும், கற்றுக்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. துவக்கத்தில், இந்த இணையவழிக் கற்றல் நடைமுறையில் உள்ள மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த விபரங்களை மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அறிந்து கொள்ள உறுதுணையாக இருக்கும். பிறகு இதுவே எதிர்காலத்தில் தகுதியான வளப்பயிற்றுநர்களை இணையதளம் வாயிலாக உரிய தேர்வுகள் நடத்தி தேர்ந்தெடுக்க, மின் சான்றிதழ் திட்டத்துடன் இணைக்கப்படும். அதன் மூலம் இக்கற்றல் முறை முக்கியமான பயிற்சி வழிமுறையாக மாறி பிற சமூக ஊடகங்களுடன் இணைந்து மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அதிக நேரத்தையும், நிதியையும் சேமிக்கும் தளமாக விளங்கும், சமுதாய மின் வானொலி மற்றும் இணையவழிக் கற்றல் பாடங்கள் உருவாக்கும் பணி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 06.03.2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

சுய உதவிக் குழுக்களின் ஆளுமை, நிதி உள்ளாக்கம், வாழ்வாதாரம், திறன் வளர்ப்பு பயிற்சி, தொழில் மேம்பாடு, சந்தைப்படுத்துதல், தூய்மை இந்தியா இயக்கம், ஊராட்சி அமைப்புகள் – சமுதாயம் சார்ந்த அமைப்புகள் கூட்டாண்மை, ஊட்டச்சத்து இயக்கம் போன்றவைகளுக்காக இணையவழிக்

கற்றல் பாடங்கள் உருவாக்கப்பட்டு வருகிறது. இணையவழிக் கற்றலுக்கான இப்பாடங்களுடன் எதிர்காலத்தில் சுய உதவிக் குழு மகளிரின் முழுமையான வளர்ச்சியினை இலக்காக கொண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த செய்திகளுடன் சமுதாய வானொலியும் விரைவில் செயல்படவுள்ளது.

65 முக்கிய தலைப்புகள் கொண்ட காட்சிப்படங்கள் (Videos)மற்றும் 40 முக்கிய நிகழ்வுகள் அடங்கிய கேட்புரைகள் (Audio) ஆகியவற்றை உருவாக்கத் திட்டமிட்டு, இதுவரை 28 காட்சிப்படங்கள், 27 கேட்புரைகள் இணையவழிக் கற்றல் பாடங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இவை கைபேசி செயலி வாயிலாக மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு சென்றடைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# 8. தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

## 8. தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

### 8.1. முன்னுரை

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் (TNRTP) ஊரகப் பகுதிகளில் தொழில் மேம்பாடு, நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் போன்றவற்றின் மூலம் ஊரக சமுதாயத்தில் நிலையான வளர்ச்சி மற்றும் வளத்தினை உருவாக்கி பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் ஒரு தனித்துவம் மிக்க இத்திட்டமானது, புதுமையான உத்திகளின் வாயிலாக வறுமை ஒழிப்பு எனும் நிலையினையும் தாண்டி ஒரு வளமான ஊரக சமுதாயத்தை உருவாக்கும் உயர் நிலை நோக்கங்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

நிறைவு பெற்ற தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டம் (2005 - 17), தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் (2012-13 முதல் 2018-19 வரை) மற்றும்நடைபெற்று வரும்தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (2012-13 முதல்) ஆகிய திட்டங்களின் வாயிலாக ஏற்படுத்தப்பட்ட பல்வேறு முதலீடுகள் மற்றும் சமுதாய அமைப்புகளின் மூலதனங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

### 8.2. திட்டத்தின்நோக்கங்கள்

தமிழ்நாட்டிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்டவட்டாரங்களில் ஊரகத்தொழில் முனைவுகளை உருவாக்குதல், நிதி

சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்குதல் இத்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும்.

## 8.3. **திட்ட செயலாக்கப் பகுதி**

இத்திட்டமானது முதலில் 26 மாவட்டங்களில் (தற்போது மாவட்டங்கள் பிரிக்கப்பட்ட பின்பு 30 மாவட்டங்களில்) 120 வட்டாரங்களில் 3,994 ஊராட்சிகளில் இரண்டு கட்டங்களாக 6 வருடங்களில் செயல்படுத்தப்படுகிறது.

## 8.4. **நிதிப் பங்கீடு**

இத்திட்டத்திற்கான மதிப்பீடு நிதி ரூ.918.20 கோடி (142.8 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) ஆகும். இத்திட்ட நிதியானது உலக வங்கிக்கும் தமிழக அரசிற்கும் இடையே 70:30 என்ற நிதி விகிதத்தில் அமைந்துள்ளது. இதில் உலக வங்கி கடனுதவி ரூ.642.74 கோடி(100 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) மற்றும் தமிழக அரசின் பங்களிப்பு ரூ.275.46 கோடி (42.8 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) ஆகும்.

## 8.5. **திட்டப் பயனாளிகள்**

முந்தைய திட்டங்களால் உருவாக்கப்பட்ட சொத்துக்கள், வளங்கள் மற்றும் திறன்களை கொண்ட சுய உதவிக்குழு உறுப்பினர்களின் குடும்பங்கள் – குறிப்பாக பெண்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினர், மாற்றுத்திறனாளிகள், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர்களே இத்திட்டத்தின் முக்கியமான இலக்கு ஆவர். இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட வட்டாரங்களில் உள்ள வேளாண் சார்ந்த மற்றும்

வேளாண் சாரா துறைகளை சேர்ந்த உற்பத்தியாளர்கள் குழு/கூட்டமைப்புகள் மற்றும் தொழில் முனைவோர் ஆகியோர் பயனாளிகள் ஆவர்.

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் ஊரகத் தொழில்களை வளர்க்கவும் மேம்படுத்தவும் நுண், குறு, சிறு தொழில் முனைவோர்கள் (தனி நபர் மற்றும் குழுக்கள்), உற்பத்தியாளர் குழுக்கள், தொழில் குழுக்கள் மற்றும் உற்பத்தியாளர் கூட்டமைப்புகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் சமுதாய திறன் பள்ளிகள் மற்றும் பண்ணைப் பள்ளிகள் மூலம் திறன் வளர்ப்புக்கும் ஆதரவு தரும்.

### 8.6. **திட்டத்தின் முதன்மைக் கூறுகள்**

இத்திட்டம் கீழ்க்கண்ட நான்கு முதன்மைக் கூறுகளை உள்ளடக்கியதாகும்

1. ஊரகத் தொழில் முனைவுக்கு (Rural Enterprise) ஏற்ற சூழல் மேம்பாடு
2. தொழில்முனைவுக்கான திட்ட நிதி வழங்கல்
3. திறன் வளர்ப்பு மற்றும் வேலைவாய்ப்புகள்
4. திட்ட மேலாண்மை, விளைவுகள் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு ஆய்வு

சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மைக் கட்டமைப்பு, பெண்கள் (பாலின சமத்துவம்), தகவல், தொடர்பு மற்றும் தொழில்நுட்பம், கூடுகை மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவை இத்திட்டத்தில் அனைத்து கூறுகளுடனும் முழுமையாக இணைந்து செயல்படும்.

### 8.6.1.**ஊரகத் தொழில் முனைவுக்கு ஏற்ற சூழல் மேம்பாடு**

இத்திட்டக்கூறின் முக்கிய நோக்கம் ஊரகப் பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற ஏதுவான சூழல்களை உருவாக்குதல் ஆகும். மாவட்ட பகுப்பாய்வு , மதிப்பு தொடர் ஆய்வு, மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சி திட்டம் மற்றும் ஓரிட வசதி ஆகியவை இதில் அடங்கும்.

மக்கள் பங்கேற்புடன் கூடிய சாத்திய கூறுகள் மிக்க தொழில்வகைகளைக் கண்டறிதல், ஊரக தொழில்களை மேம்படுத்துதல் (குழு மற்றும் தனிநபர்), ஏற்கனவே உள்ள ஊரக தொழில்களை வலுப்படுத்துதல், சந்தை வாய்ப்புகள் மற்றும் மதிப்பு தொடர் வளர்ச்சி வாய்ப்புகளைக் கண்டறிதல், தொழில் வளர்ச்சிக்கான அடிப்படை சேவைகளை வழங்குதல் மற்றும் தொழில்களின் நிலைத்த தன்மையை உருவாக்குவதற்காக சிறந்த வழிமுறைகளை தெரிவித்தல் ஆகியவற்றை இக்கூறு கொண்டுள்ளது.

இத்திட்டக்கூறின் கீழ் மகளிரால் நடத்தப்படும் நிறுவனங்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற பசுமை சார்ந்த நிறுவனங்கள் வளர்ச்சி பெறுவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

**அ. மாவட்ட பகுப்பாய்வு**

உள்ளூர் சூழலில் தொழில் மேம்பாட்டிற்கான முக்கிய துறைகள்/பிரிவுகள், துணைப் பிரிவுகள் மற்றும் உற்பத்தி பொருட்களை கண்டறிந்து முன்னுரிமைப்படுத்துவதே மாவட்ட பகுப்பாய்வின் முக்கிய நோக்கமாகும். மாவட்ட பகுப்பாய்வு அறிக்கை என்பது பங்குதாரர்களின் ஆலோசனைகள் மற்றும்

இரண்டாம் நிலை தகவல்கள் அடங்கிய ஆய்வு அறிக்கை ஆகும். இவ்வறிக்கை ஒரு மாவட்டத்தில் குறிப்பிட்ட துறைகளில், துணை பிரிவுகளில் மற்றும் உற்பத்தி பொருட்களில் உள்ள வாய்ப்புகள் மற்றும் சவால்கள் ஆகியவற்றை கண்டறிந்து ஆழமான மதிப்பீடு செய்து அதற்கு அடுத்த நிலையான மதிப்புத் தொடர் அணுகுமுறைக்கு ஆய்வு செய்ய உதவிகரமாக உள்ளது.

தொழில் வளர்ச்சிக்காக தயார் செய்யப்பட்டுள்ள மாவட்ட பகுப்பாய்வு அறிக்கைகளுக்கு திட்டம் செயல்படுத்தப்படும் 26 துவக்க மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான குழுவினால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**ஆ. மதிப்புத் தொடர் ஆய்வு**

ஏற்கனவே மாவட்ட பகுப்பாய்வு மூலம் கண்டறியப்பட்டு, முன்னுரிமைபடுத்தப்பட்ட உற்பத்தி பொருட்கள், பல்வேறு துறைகளின் துணை பிரிவுகள் ஆகியவற்றை ஆராய்ந்து அலசி, அதில் உள்ள வாய்ப்புகள், சவால்கள் மற்றும் ஆபத்துகள் ஆகியவற்றை ஆழமாக புரிந்துகொண்டு பெண்கள், மலைவாழ் மக்கள், மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்டோர்க்கு முக்கியத்துவம் தந்து, தொழில் மேம்பாட்டிற்கான உத்திகளை உருவாக்க இந்த மதிப்புத் தொடர் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இந்த ஆய்வு, சந்தை வாய்ப்புகளையும் அதில் ஏற்படும் தடைகளையும் அறிந்து கொள்ளவும் தொழில் மேம்பாட்டிற்காக தமிழ்நாடு ஊரகப் புத்தாக்க திட்டத்தின் உதவிகள் மற்றும்

முதலீடுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தவும் உதவிகரமாக இருக்கும்.

இத்திட்டத்தின் கீழ் சிறு தானிய உற்பத்தி, ஊரக தொழில் மற்றும் பணிகளுக்கான வாய்ப்புகள் குறித்த மதிப்புத் தொடர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**இ. மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம்**

மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் என்பது உள்ளூர் மக்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் ஆகியோருடன் கலந்து ஆலோசனை செய்து ஊரக சமுதாயத்தின் நிலைத்த வளர்ச்சிக்காவும், தொழில் மேம்பாட்டிற்காகவும் கிராம ஊராட்சி, வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் தொழில் வளர்ச்சியினை உள்ளடக்கிய முதலீட்டுத் திட்டங்களை தயார் செய்யும் ஒரு வழிமுறையாகும்.

இந்த நோக்கத்திற்காக வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, தோட்டக் கலை, மீன் வளம், சிறு தொழில்கள், பாரம்பரிய கைத்தொழில்கள், சுற்றுலா போன்ற துறைகளில் உள்ள ஊரக வள விபரங்களின் படிவங்கள் அடங்கிய ஒரு கைபேசி செயலி இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது. இக்கைபேசி செயலியின் மூலம் முதற்கட்டமாக 38 வட்டாரங்களில் உள்ள 1393 ஊராட்சிகளில் 3 சமுதாய வல்லுநர்கள், சுய உதவிக்குழு, கிராம வறுமை ஒழிப்பு சங்கம், வட்டார அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றில் இருந்து தலா ஒரு பிராதிநிதி மற்றும் 1 கிராம தொழில் முனைவோர் ஆகிய 7 உறுப்பினர்கள் கொண்ட

ஒரு குழுவின் மூலம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த பணி 2020 ஏப்ரல் மாதத்திற்குள் நிறைவு பெறும். மாநில திட்ட மேலாண்மை அலகு இப்பணிகளை மாவட்ட மற்றும் வட்டார அலகுகளின் மூலம் கண்காணித்து வருகிறது.

எஞ்சிய 82 வட்டாரங்களில் உள்ள 2601 கிராம ஊராட்சிகளில் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட ஆய்வு ஜூலை மாதம் 2020 க்குள் நிறைவு பெறும்.

**ஈ. ஓரிட வசதி**

ஓரிட வசதி என்பது தொழில் வளர்ச்சிக்காகவும், பல்வேறு வசதிகளுக்காகவும் இரண்டு வட்டாரங்களுக்கு ஒரு மையம் என எற்படுத்தப்பட்டு, அதன் மூலம் ஊரக தொழில் முனைவோர் தங்கள் வளர்ச்சிக்கான தொழில் துவங்கும் சிந்தனை, நோக்கங்கள், தொழில் திட்டம் தயார் செய்தல் மற்றும் அதனை ஆய்வு செய்தல், தொழில் துவங்க ஆரம்ப நிலை ஆதரவு, தேவையான நிதியினை பெறுதல், தொழில் நுட்பம், திறன் வளர்ப்பு, சட்டம் மற்றும் விதிமுறைகள், சந்தை குறித்த தகவல்கள், கடன் இணைப்புகள் போன்றவற்றை அறிந்து கொள்வதற்கு உதவுகின்ற ஒரு தொழில் வசதி மையம் ஆகும்.

### 8.6.2.**தொழில்முனைவுக்கான திட்ட நிதி வழங்கல்**

இக்கூறின் கீழ் ஊரகப் பகுதிகளில் உருவாக்கப்படும் தனிநபர் மற்றும் குழு தொழில்களுக்கு தேவையான நிதியினை பெற்றுத்தர இணை மானிய நிதி திட்டத்தின் (Matching Grant Program) மூலமும் பிற நிதி

நிறுவனங்களின் நிதி சேவை மூலமும் வழிவகை செய்யப்படும்.

**அ . இணைமானிய நிதி திட்டம்**

புதிதாக துவங்கப்படும் தனிநபர் மற்றும் குழு தொழில்களுக்காக, நிதி நிறுவனங்களில் இருந்து தேவைக்கேற்ப நிதி பெறுவதில் உள்ள வழங்கல் மற்றும் தேவையின் இடைவெளியை போக்கி போதிய நிதி பெற வழிவகை செய்வதே இக்கூறின் நோக்கமாகும். இணை மானிய திட்டத்தின் கீழ் முதல் தலைமுறை தொழில் முனைவுகள், மகளிரால் நடத்தப்படும் தொழில்கள், தொழில் குழுக்கள், உற்பத்தியாளர் கூட்டமைப்புகள், மாற்றுத் திறனாளிகளால் மேற்கொள்ளப்படும் தொழில்கள் மற்றும் நிதி பெறுவதில் இடர்பாடுள்ள தொழில்கள் ஆகியவற்றிக்கு நிதி ஆதாரத்தை ஏற்படுத்துதல் முக்கிய நோக்கமாகும்.

இணை மானிய நிதி திட்டமானது, கடன் பெற்றவர்கள் கடன் தொகையை முறையாக திருப்பிச் செலுத்துவதை ஊக்கப்படுத்திடவும், நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் தொழில்களுக்கான கடன் தொகையினை விரைவாக வழங்குவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இணை மானிய நிதி திட்டத்தில், தொழில்களுக்கு கடன் வழங்கும் வங்கிக்கு (Participating Financial Institution) கடன் தொகையில் 30% நிதி இத்திட்டத்தின் மூலம் விடுவிக்கப்பட்டு வங்கி இருப்பில் வைக்கப்படும். கடன் பெற்ற தனிநபர் மற்றும் குழுக்கள் முறையாக 70% கடனை திருப்பிச் செலுத்திய பின்பு மீதமுள்ள 30% திட்ட நிதியினை வங்கிக் கடனுக்கு ஈடாக செலுத்தி எஞ்சிய கடன் தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்கு பெறலாம்.

இதன் மூலம் தொழில் மேம்பாட்டிற்காக கடன் பெற்றவர்கள் தொழிலில் முழு கவனம் செலுத்தி லாபகரமாக நடத்தவும் கடனை முழுமையாக திருப்பி செலுத்தவும் வழிவகை செய்யப்படுகிறது. இணை மானிய திட்டத்தைச் செயல்படுத்தவும் கண்காணிக்கவும் மாநில திட்ட மேலாண்மை அலகிற்கு உதவிகரமாக ஒரு செயலாக்க அமைப்பு (Transaction Manager) இருக்கும்.

**ஆ. புதுமை சார்ந்த முன்னோடி திட்டங்கள்**

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் புதுமை சார்ந்த சில முன்னோடி திட்டங்களை குறிப்பாக (அ) ஊரக கைவினைஞர்களுக்கு ஆதரவு அளிப்பதற்காக நெசவுத் தொழில், மண்பாண்டங்கள், உலோகத் தொழில்கள், சிற்பத் தொழில்கள், நுண் கலைகள் போன்றவற்றிலும் (ஆ) உணவுத் துறையை மேம்படுத்தும் நோக்கில் குறிப்பாக - உள்ளூர் மற்றும் பாரம்பரிய உணவுகளை பிரபலபடுத்துவதற்காக ஒரு வேளாண் உணவு தொகுப்பு மையம்அமைப்பதிலும் (இ) சூரிய சக்தி சார்ந்த தொழில்கள் மற்றும் பெண்களுடைய மாதவிடாய் சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் எளிதில் மக்குகின்ற சானிட்டரி நாப்கின்கள் தயார் செய்யும் தொழில்கள் போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த பசுமைத் தொழில்களிலும் புதுமையான முறைகளைப் புகுத்தி செயல்படும்.

6.8.3. **திறன் வளர்ப்பு மற்றும் வேலைவாய்ப்புகள்**

இக்கூறின் நோக்கங்கள்

1. நிலையான ஊதியம் மற்றும் சுய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.

2. அதிக மதிப்புள்ள விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு பொருத்தமான திறன்களை ஊக்குவித்தல்.

3. சந்தை வாய்ப்புகளுக்கு உகந்த திறன் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு மூலம் தொழில் முனைவோர்களை உருவாக்குதல்.

இந்த துணைக் கூறு சமுதாயத் திறன் பள்ளிகள் மற்றும் சமுதாய பண்ணைப் பள்ளிகள் மூலம் கிராமப்புற இளைஞர்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு திறன் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்புகளை உறுதி செய்யும்.

**அ. சமுதாயத் திறன் பள்ளிகள்**

ஊரகப் பகுதிகளில் நெசவுத்தொழில், உலோகப் பணிகள், ஓவியம் தீட்டுதல், மண்பாண்டங்கள், கூடை மற்றும் பாய் முடைதல் போன்ற சில பாரம்பரிய திறன்களுக்கு அதிகத் தேவை உள்ளதால் அதில் கிராம அளவில் பல ஆண்டுகளாக சிறந்த அனுபவமுள்ள கைதேர்ந்த நபர்கள் இருப்பர். இத்திட்டத்தின் வாயிலாக அத்தகையை அனுபவமுள்ள உள்ள நபர்களைக் கண்டறிந்து அவர்களைப் பயிற்றுநர்களாகப் பயன்படுத்தி ஆர்வமுள்ள உள்ளூர் மக்களுக்கு பயிற்சியளிப்பதற்கும் பண்டைய கலைகளை புதுப்பிக்கவும் தொழில் மேம்பாட்டை உறுதிப்படுத்தவும் தேவையான குறைந்தபட்ச உள்கட்டமைப்புகளை உருவாக்கி சமுதாயத் திறன் பள்ளிகள் ஏற்படுத்தப்படும்.

இதைப் போன்று இரண்டு/நான்கு சக்கர வாகனப் பராமரிப்பு, வீட்டு உபயோக பொருட்கள் பராமரிப்பு, கட்டுமானப் பணி, குழாய் சரிசெய்தல், வெல்டிங், மின் பணி,

கைபேசி பழுது நீக்கம், கணினி தொடர்பான பணிகள் போன்ற தொழில்களுக்கு சமுதாயத் திறன் பள்ளிகள் மூலம் உரிய பயிற்றுநர்கள் கண்டறியப்பட்டு சமுதாய உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு ஊரகத் தொழில் வளர்ச்சி ஏற்படுத்தப்படும். பொதுவாக சமுதாயத் திறன் பள்ளி மூலம் பயிற்சி வழங்கும் அனுபவ நபர்கள் பயிற்றுநர்கள் என்று அழைக்கப்படுவர்.

**ஆ. சமுதாய பண்ணைப் பள்ளிகள்**

சமுதாய பண்ணைப் பள்ளிகள் என்பது வேளாண்மை மற்றும் அதன் தொடர்புடைய துணைத் துறைகளில் சுயதொழிலுக்கான தொழில்நுட்ப சேவை வழங்கும் நிபுணர்களை (Sparks) உருவாக்கி, அவர்கள் மூலம் கிராம அளவில் சமுதாய உறுப்பினர்களிடையே திறன் வளர்ப்பு பயிற்சி அளித்தல் ஆகும்.

சமுதாய பண்ணைப் பள்ளிகள் விவசாயம் சார்ந்த தொழிலில் உள்ள திறன் இடைவெளிகளை கண்டறிந்து, அதன் தீர்வுகளுக்கு தேவையான தொழில்நுட்ப அனுபவ அறிவை வழங்க உரிய நிபுணர்கள்/பயிற்றுநர்கள் மூலம் தொழில் நுட்பப் பயிற்சியினை சமுதாய உறுப்பினர்களுக்கு வழங்கும். இந்த சமுதாய பண்ணைப் பள்ளிகள் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் ஊக்குவிக்கப்படும் தனிநபர் மற்றும் குழு தொழில் முனைவோர்களுடன் இணைந்து செயல்படும்.

**இ. தொழில் நிபுணர்கள்** (Sparks)

தொழில் நிபுணர்என்பவர் ஊரகப் பகுதிகளில் வேளாண் சார்ந்த ஒரு குறிப்பிட்ட தொழிலில் அறிவு, திறன்,

ஈடுபாடு மற்றும் சிறந்த அனுபவம் கொண்ட ஒரு பயிற்சியாளர் ஆவார். அவர் தனது சமுதாய உறுப்பினர்கள் இடையே குறிப்பிட்ட அத்தொழிலில் நிபுணத்துவம் மிக்கவராக மதிக்கப்படுவார். தொழில் நிபுணர்கள் தங்களுடைய தொழில் சார்ந்த அறிவுத் திறனை சமுதாய உறுப்பினர்களுடன் கிராம அல்லது வட்டார அளவில் பகிர்ந்து கொள்வதிலும் பயிற்சி அளிப்பதிலும் அதிக ஈடுபாட்டுடன் இருப்பர்.

இத்திட்டம் அத்தகைய தொழில் நிபுணர்களை அடையாளம் கண்டு சமுதாய பண்ணைப் பள்ளிகள் மூலம் மற்ற சமுதாய உறுப்பினர்களுக்கு வழிகாட்டி, கற்பித்து, பயிற்சி அளித்து, ஆதரவு அளித்து தொடர் சேவைகள் வழங்க வழிவகை செய்யும்.

### 8.6.4. **திட்ட மேலாண்மை, விளைவுகள் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு ஆய்வு**

இக்கூறின் நோக்கமானது இந்தத் திட்டத்திற்கு தேவையான சேவைகளை வழங்குதல், மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறையை மேம்படுத்துதல், நிதி மேலாண்மையினைவிரைவாக நிறைவேற்றும் செயல்முறையினை உருவாக்குதல், கொள்முதல் மேலாண்மை, மனிதவள மேலாண்மை, சமூக, சுற்றுசூழல், பழங்குடியினரின் சமூகப் பாதுகாப்பு மற்றும் தகவல், தொடர்பு, தொழில் நுட்பத்தை ஏற்படுத்தி சிறப்பான முறையில் திட்டத்தை செயல்படுத்துதல் ஆகும்.

#### **அ. கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு ஆய்வு**

கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு ஆய்வு என்பது திட்டத்தில் ஏதேனும் குறைபாடுகளோ அல்லது திட்ட

இலக்கில் இருந்து விலகலோ இருப்பின் அதனை கண்டறிந்து குறிப்பிட்ட காலத்திற்குள் சரி செய்ய திட்ட மேலாளர்களுக்கு உதவி செய்யவும் திட்ட செயல்பாடுகளின் முன்னேற்றம் குறித்த விபரங்களை தயார் செய்வதற்கும் தொடர்ந்து இயங்கும் ஒரு செயல் முறையாகும். கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு ஆய்வு திட்ட செயலாக்கத்தின் பல்வேறு பரிமாணங்கள் குறித்து உண்மையான, எளிதில் புரிந்துகொள்ளத்தக்க தகவல்களை உடனுக்குடன் வழங்கும்.

கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு ஆய்வின் நோக்கங்கள்

1. தகவல் தொகுப்பு மற்றும் விபரங்களை கொண்டு அடிப்படை புள்ளி விவரம், இடைநிலை மதிப்பீட்டு ஆய்வு ஆகியவற்றின் மூலம் திட்டத்தின் தாக்கங்களை மதிப்பீட்டு ஆய்வு செய்தல்.
2. இலக்கிற்கு எதிரான செயல்திறன் மற்றும் நிதித் திறன் சாதனைகள் மூலம் திட்டக் கண்காணிப்பு மேற்கொள்ளுதல்.
3. கருப்பொருள் சார்ந்த ஆய்வுகள் மற்றும் தனிநபர் ஆய்வுகள் மேற்கொள்ளுதல்.
4. மேலாண்மை மற்றும் கண்காணிப்பிற்கான மேலாண்மைத் தகவல் சேவையினை திட்டத்திற்காக வடிவமைப்பதில் முழு உதவி புரிதல்.

**ஆ. மின்னணு தகவல் மேடை உருவாக்குதல்**

தகவல், தொடர்பு மற்றும் தொழில் நுட்பம் என்பது திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து உடனடிக் கண்காணிப்பு மேற்கொள்ளவும் திட்டம் செவ்வனே செயல்படவும் ஒரு

மின்னணு தகவல் மேடையை உருவாக்குவதில் திட்டத்தின் தவிர்க்க இயலாத ஒரு பகுதியாக அமைந்துள்ளது. தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் இதற்கான ஒரு மென்பொருள் செயலியை உருவாக்குவதிலும், வடிவமைப்பதிலும் செயல்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ளது.

இந்த செயலி, திட்டத்தின் தகவல் மேலாண்மை முறையினை நிலைப்படுத்தவும், வலுப்படுத்தவும் மேலும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் குறித்த அனைத்து தகவல்களுக்கான களஞ்சியமாக இருக்கவும் உதவும்.

## 8.7. **நிறுவன அமைப்பு**

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்க சங்கம்தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டம் 1975 ன் கீழ் 07.07.2017 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இச்சங்கம்திட்ட மேலாண்மை மற்றும் செயல்பாடுகளை நிர்வகிக்கிறது. மாநில திட்ட செயலாக்க அலகிற்கு வழிகாட்டவும், கொள்கை முடிவெடுக்கவும் மற்றும் ஒத்துழைப்பு நல்கவும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கச் சங்கத்தின் பொதுக்குழு மற்றும் செயற்குழு முக்கிய அமைப்புகளாகத் திகழும். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் மாவட்ட ஊரகப் புத்தாக்க சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு திட்டத்தின் செயல்பட்டிற்கு வழிகாட்டவும் துணை நிற்கவும் உதவிபுரிகின்றன. மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவிலான திட்ட மேலாண்மை அலகுகள் மூலம் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் செயர்படுத்தப்பட்டு வருகிறது.

### 8.7.1. **மாநில திட்ட மேலாண்மை அலகு**

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தை செயல்படுத்தும் மாநில திட்ட மேலாண்மைஅலகின் தலைமைச் செயல் அலுவலராக இந்திய ஆட்சிப் பணியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறார். மாநிலக் குழுவில் உள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் துணையுடன்திட்ட செயல்பாடுகளை செயல்படுத்துதல், மேற்பார்வையிடுதல் மற்றும் கண்காணித்தல் போன்ற பணிகள் தலைமைச் செயல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 8.7.2 **மாவட்ட திட்ட மேலாண்மை அலகு**

இத்திட்டம் 30 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்ட போதிலும், தற்போது 24 மாவட்ட திட்ட மேலாண்மைஅலகுகளைக் கொண்டு (தேனி மற்றும் கரூர் மாவட்டங்கள் முறையே மதுரை, திருச்சி மாவட்டங்களுடன் இணைந்து செயல்படுகின்றன) செயல்பட்டு வருகின்றது. மாவட்ட செயல் அலுவலர் தலைமையில் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் பணி முன்னேற்றம் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்ட செயல் அலுவலருக்கு திட்ட செயலாக்கத்தில் உறுதுணையாக நான்கு செயல் அலுவலர்கள் உள்ளனர்.

### 8.7.3. **வட்டார அலகு**

இந்த செயலாக்க அலகானது 30 மாவட்டங்களில் 120 வட்டாரங்களில் வட்டார அணித் தலைவர் தலைமையில் ஏற்படுத்தப்பட்டு உள்ளது. திட்ட செயல்பாட்டில் வட்டார

அணித்தலைவருக்கு உறுதுணையாக மூன்று திட்ட செயலர்கள் உள்ளனர்.

## 8.8. **திட்டப் பணியாளர்கள் தேர்வு மற்றும் பயிற்சி**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 31.10.2019 அன்று 525 ஒப்பந்த பணியாளர்களுக்கு தமிழ்நாடு ஊரகப் புத்தாக்க திட்டத்தின் பல்வேறு நிலை பணிகளுக்கான பணி ஆணை வழங்கப்பட்டது.

இப்பணியாளர்களுக்கு திட்டத்தின் நோக்கங்கள், கூறுகள், நிர்வாகம், பணியாளரின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் போன்றவற்றை புரிந்து கொள்வதற்காக மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி மையத்திலும் அண்ணா மேலாண்மை நிறுவனத்திலும் 7 முதல் 15 நாட்களுக்கு ஆழ்நிலை பயிற்சி வழங்கப்பட்டது.

## 8.9. **செலவினம்**

இத்திட்டத்தின் கீழ் ஜனவரி 31, 2020 வரை ரூ.17.33 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 8.10. 2020-21 **வரவு செலவு திட்ட மதிப்பீடு**

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக 2020-21 ஆம் ஆண்டு வரவு செலவுஅறிக்கையில் ரூ.163.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 9. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

## 9. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

கடந்த டிசம்பர் 2004-ஆம் ஆண்டு சுனாமியால் ஏற்பட்ட பேரழிவிற்குப்பின், நிவாரணம் மற்றும் மறு வாழ்வுப் பணிகள் உடனடியாக தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீண்டகாலத் தீர்வாக, மாற்று மற்றும் நிலைத்த வாழ்வாதாரங்கள் ஏற்படுத்தித் தர முடிவு செய்யப்பட்டது. இதற்காக, பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயலாக்கம் பெற்றது. இத்திட்டத்தின் மூலம், பாதிக்கப்பட்ட கடலோரச் சமுதாய மக்களின் இன்றியமையாத தேவைகளைப் பூர்த்தி செய்ய பன்முக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சமுதாயம் சார்ந்த நிறுவனங்களான கூட்டு வள மையங்கள் மூலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் மாவட்ட அளவிலான மீனவ கூட்டமைப்புகள் வலுப்படுத்தப்படுகின்றன. சமுதாய மக்களின் திறனை வளர்ப்பதும் மற்றும் அவர்களின் திறன் மற்றும் வருமானத்தை மேம்படுத்தி வாழ்வாதாரத்தை நிலைப்படுத்துவதும் ஆகும்.

சுயவேலைவாய்ப்பு, பேரிடர் மேலாண்மை ஆகியவற்றில் சமுதாய மக்களின் திறனை மேம்படுத்துதல் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, நிலைத்த வாழ்வாதாரத்தை ஏற்படுத்துவதில் இத்திட்டம் பெரும் பங்காற்றுகிறது.

1. **குறிக்கோள் :-**

- தற்சார்புடைய கடலோர சமுதாயத்தை கட்டமைத்து அவர்களின் வாழ்வாதாரத்தை நிலைத்த தன்மையுடையதாக்குதல் மற்றும் அதிர்ச்சிகளை தாக்குப்பிடித்தல்

2. **நோக்கம் :-**

- சமுதாய மக்கள் மற்றும் பிற பொருத்தமான நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நுண் தொழில்கள் மற்றும் கடலோர வள மேலாண்மை அமைப்புகளை நிர்வகிக்க, ஏதுவான நிறுவனங்களை ஏற்படுத்தல்.

3. **திட்டம் - ஒரு பார்வை :-**

| | **பகுதி - 1** | **பகுதி - 2** |
|---|---|---|
| **திட்ட காலம்** | 11 ஆண்டுகள் (2008 – 2019) | 4 ஆண்டுகள் (2016 – 2020) |
| **திட்ட மதிப்பீடு** | ரூ.283.69 கோடி | ரூ.279.49 கோடி |
| **செயல்படும் மாவட்டங்கள்** | 1. திருவள்ளூர்<br>2. காஞ்சிபுரம்<br>3. விழுப்புரம்<br>4. கடலூர்<br>5. நாகப்பட்டினம்<br>6. கன்னியாகுமரி | 1. தஞ்சாவூர்<br>2. திருவாரூர்<br>3. புதுக்கோட்டை<br>4. இராமநாதபுரம்<br>5. திருநெல்வேலி<br>6. தூத்துக்குடி |
| **திட்டப்பகுதி** | 24 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 109 ஊராட்சிகள் | 36 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 129 ஊராட்சிகள் |
| **பயனடைவோர்** | 1.55 இலட்சம் குடும்பங்கள் சார்ந்த சுமார் 6 இலட்சம் பேர் | 1.20 இலட்சம் குடும்பங்கள் சார்ந்த சுமார் 6.12 இலட்சம் பேர் |

4. **திட்டப் பயனாளிகள்** :-

சுனாமியால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கப்பட்ட கீழ்க்கண்ட கடலோரப் பகுதியில் வசிக்கும் மக்கள், அதாவது :-

- கடலோரப் பகுதிகளில் மீன்பிடி தொழில் மற்றும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள கூலித் தொழிலாளர்கள்
- வள்ளம், சிறு படகு போன்றவற்றை பயன்படுத்தி கரையோரங்களில் மீன்பிடிக்கும் மீனவர்கள்
- சிறிய அளவில் வியாபாரம் செய்யும் பெண் மீன் வியாபாரிகள் மற்றும் பதப்படுத்துவோர்
- பிற சிறு தொழில் செய்வோர் (உ.ம் :- சங்கு, சிப்பி சேகரிப்போர்)
- சிறு மற்றும் குறு விவசாயிகள்
- சமுதாய பங்கேற்புடன் கண்டறியப்பட்ட மிகவும் ஏழைகள் மற்றும் ஏழைகள் இதர,
- இத்திட்டத்தில் மொத்தம் 2,21,587 குடும்பங்களை உள்ளடக்கியுள்ளது

5. **உத்தி**

வாழ்வாதார மேம்பாட்டுக்கான உத்தி கீழ்க்கண்ட நான்கு உந்து தளங்களைக் கொண்டது.

1) சமுதாய நிறுவனங்களை கட்டியெழுப்பி, அவற்றை ஆதரித்தல்
2) நுண் நிதி மற்றும் இதர நிதிச் சேவைகள் மக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்தல்

3) இலக்கு குடும்பங்களின் அறிவு மற்றும் திறனை மேம்படுத்தல்

4) நிலைத்த, பெரிய அளவிலான நிறுவனங்களை வளர்த்தெடுத்தல் மற்றும் தொலைதூர சந்தைகளை அணுகுதல், சமுதாய அளவிலான திட்டமிடல், வள மேலாண்மை, பாதுகாப்பான கல்வி மற்றும் விழிப்புணர்வு, சமுதாய கட்டமைப்புகளை மேம்படுத்த வழிவகுத்தல் மற்றும் பேரழிவுகளின் தாக்கத்தைக் குறைத்தல் ஆகியவை ஆகும்.

இத்திட்டம் பெண்களை முக்கிய இலக்காக கொண்டு, தற்போதைய மீன் சார்ந்த வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், புது வாழ்வாதாரத் திட்டங்கள் குறிப்பாக கால்நடை வளர்ப்பு, வேளாண்மை மற்றும் வேளாண் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் உதவுகிறது. பெரும்பான்மையான சுய உதவிக் குழுக்கள் / கூட்டுப் பொறுப்புக் குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் பெண்கள் ஆவர். அவர்கள் திட்டத்தின் உதவியுடன் குறுந்தொழில் அதிபர்களாக மாற்றப்பட்டுள்ளனர். அதாவது வேலை தேடுபவர்கள் தேவை வழங்குபவர்களாக மாறுகிறார்கள்.

## 6. **திட்ட செயல்பாடு**

திட்ட செயல்பாடுகளை மேற்பார்வையிட மூன்று குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

1. மாநில அளவில், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை கூடுதல் தலைமை செயலாளர் அவர்கள் தலைமையில், இத்திட்ட கூடுதல் தலைமை செயலாளர் / திட்ட இயக்குநர் ஆகியோரை உறுப்பினர் / செயலராகக் கொண்ட திட்ட வழிகாட்டுக் குழு.


2. மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான திட்ட செயல்பாடு ஆலோசனைக் குழு.

3. கிராம அளவில், ஊராட்சித் துறை நிறுவனங்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் மரபு சார்ந்த இதர நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய கிராம கூட்டு வள ஆலோசனைக் குழு.

## திட்ட வழிகாட்டுக் குழு

| | |
|---|---|
| **தலைவர்** | அரசு கூடுதல் தலைமை செயலாளர்,<br>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை |
| **உறுப்பினர் செயலர்** | கூடுதல் தலைமை செயலாளர் / திட்ட இயக்குநர்<br>சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் |
| **உறுப்பினர்கள் :** | |
| அரசு முதன்மை செயலாளர், நிதித் துறை | |
| முதன்மை செயலாளர் / ஆணையர், வருவாய் நிர்வாகம் | |
| இயக்குநர், மீன்வளத் துறை | |
| இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை | |
| திட்ட இயக்குநர், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் | |
| மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் | |
| மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம் | |

## மாவட்ட செயலாக்க அலகு - பகுதி -2




## 7. திட்டக் கூறுகள் :-

இத்திட்டத்தின் மூன்று உட்கூறுகளின் கீழ் பல திட்டச் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

1) கடலோர வள ஆதார மேலாண்மை

2) தொழில் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்குதல்

3) திட்ட மேலாண்மை போன்றவைகள் ஆகும்.

## 9.1 திட்டக் கூறு-1 : கடலோர வள ஆதார மேலாண்மை

### 1. சமுதாய ஆதரவு

அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் துணையுடன் திட்டப்பகுதிகளில் 64 கூட்டு வள மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒரு கூட்டு வள மையம் தோராயமாக 1 முதல் 8 கடலோர ஊராட்சிகளைக் கொண்டது. இத்திட்டச் செயல்பாட்டிற்கு அடித்தளத்தில் கூட்டு வள மையங்கள் துணையாக உள்ளன. ஒவ்வொரு கூட்டு வள மையத்திலும், ஒரு குழு ஒருங்கிணைப்பாளர் (Cluster Coordinator), ஒரு திட்ட செயலாக்குநர் (Cluster Facilitator), ஒரு வியாபார ஊக்குநர் (Business Promoter) மற்றும் ஒரு கூடுதல் வியாபார ஊக்குநர் (Addtiional Business Promoter) ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். சமுதாயம் சார்ந்த நிறுவனங்களான ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் மீனவர்களின் மாவட்ட அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டு சமுதாயம் வலுப்படுத்தப்படுகின்றது. 120 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் 2 மீனவர்களின் கூட்டமைப்புகளுக்கு அலுவலகக் கட்டிடங்கள் ரூ.10.15 கோடி மதிப்பில் கட்டித் தரப்பட்டுள்ளன.

மேலும், ரூ.1.32 கோடி மதிப்பீட்டில் 1 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு கட்டிடம் மற்றும் 2 மீனவர் சங்கக் கூட்டமைப்பு கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றது. இப்பணிகள்மார்ச் 2020 - க்குள் முடிவடைந்து விடும்.

## 2. சமுதாய வள ஆதாரங்களுக்கான திட்டமிடுதல்

திட்டப் பகுதிகளில் தொடர்பிடைய மற்றும் பயனுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதலே இதன் நோக்கமாகும். திட்டமிடல், சொத்துக்களை ஏற்படுத்த அவற்றுக்கு பங்களித்தல், அமைத்தல், பராமரித்தல் ஆகியவற்றில் முழுச் சமுதாய ஈடுபாடு இதன் தனித்துவமான அம்சமாகும். வள ஆதார வரைபட முறை மூலம், சமுதாய மக்களின் கட்டமைப்பு தேவைகள், நுண்திட்டங்கள் மூலம் முன்னுரிமைப்படுத்தப் படுகின்றன. வாழ்வாதாரம் தொடர்பான கட்டமைப்புகளான 140 மீன் வலை பின்னும் தளங்கள், 76 மீன் உலர் கலங்கள், 7 குடிநீர் சுத்திகரிக்கும் நிலையங்கள் மற்றும் 633 இதர பணிகளான இணைப்பு சாலைகள், தெரு விளக்குகள் மற்றும் குழாய்கள் நீட்டிப்பு போன்ற 856 பணிகள் ரூ. 44.05 கோடி செலவில் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ரூ.8.33 கோடி மதிப்பீட்டில் 54 மீன் வலை பின்னும் கூடங்கள், 18 மீன் உலர் தளங்கள் மற்றும் 3 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இப்பணிகள்மார்ச் 2020-க்குள் முடிவடைந்து விடும்.

சுற்றுப்புற சூழல் தொடர்பான பிரச்சினைகள், பாலின வேறுபாடு மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகளை தீர்வு செய்யும் நோக்கில் நுண்திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

## 3. மீன் வள மேலாண்மை

மீன்பிடி நடவடிக்கைகளில் இயந்திரமயமாக்கல் மற்றும் மீன் இனப்பெருக்கப் பகுதிகளில் உள்ள தொந்தரவுகள் காரணமாக மீன் வளம் குறைந்து வருவது அடையாளம் காணப்பட்ட முக்கிய பிரச்சனைகள் சில. குறைந்து வரும் மீன் வள ஆதாரங்களை அதிகரிக்க, 12 திட்ட மாவட்டங்களில் கடலுக்கடியில் செயற்கை பவளப் பாறைகள் அமைக்க திட்டமிடப்பட்டது. மத்திய கடல்சார் மீன் வள ஆராய்ச்சி நிலையத்தின் (CMFRI) உதவியுடன் ரூ.3.08 கோடி செலவில் 18 செயற்கை பவளப் பாறைகள் பகுதி – 1, ஆறு மாவட்டங்களில் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.மீனவர்களுக்கு பல வகையான மீன்கள் அதிக எண்ணிக்கையில் கிடைப்பதனால், செயற்கை பவளப் பாறைகளின் தாக்கம் மிகவும் சாதகமாக உள்ளது. நண்டு கொழுப்பேற்றுதல், கடற்பாசி உற்பத்தி மற்றும் சேகரித்தல் போன்ற பிற செயல்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்து கடலோர ஊராட்சிகளிலும், அறிவியல் கண்ணோட்டத்துடன் கூடிய நிலைத்த மீன் வள ஆதார மேலாண்மை குறித்த விழிப்புணர்வு கால்நடை வளர்ப்புத் துறை, பால் பண்ணை மற்றும் மீன் வளத்துறை உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2019 – 20 ஆம் ஆண்டில், பகுதி – 2 உள்ள ஆறு மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ரூ.19.00 கோடி மதிப்பீட்டில் 48 இடங்களில் செயற்கை பவளப்பாறைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இப்பணிகள் தேசிய பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவனம் ஒத்துழைப்புடன் மார்ச் 2020-க்குள் நிறுவப்பட்டு விடும்.

## 9.2 **திட்டக் கூறு - 2 : தொழில் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்குதல்**

### 1. **சுய உதவிக் குழுக்களுக்கு கடன் உதவி**

திட்டப் பகுதிகளில் உள்ள சுய உதவிக் குழுக்கள் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட்டு, அவற்றின் செயல்பாட்டுத் தரம் அறியப்படுகின்றது. மேம்படுத்தப்பட்ட சுய உதவிக் குழுக்களைக் கொண்டு குடியிருப்பு அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிலைத்த தன்மையை உறுதி செய்யும் வகையில், அவை பல்வேறு வங்கிகளின் வியாபார மேம்பாட்டு முகவர்களாக உயர்நிலைப்படுத்தப்பட்டுள்ளன. சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டுப் பொறுப்பு குழுக்களுக்கு வழங்கப்படும் கடன்களை கண்காணித்து கடன் திரும்பச் செலுத்த உதவும் பணிக்கு கடன் தொகையில் 2 சதவீதம் கமிஷன் பெற்று வருகின்றனர். அதில், 1% கடன் தொகை விடுவிக்கும் போதும், 1% சதவீதம் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் கடன் தொகை மீள செலுத்தப்பட்ட பின்பும் வழங்கப்படுகிறது. இந்த முயற்சி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் நீடித்த தன்மையுடன் தொடர்ந்து செயல்பட வழிவகுக்கிறது.

2018-19 ஆம் ஆண்டு வரை 5215 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.354.94 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

2019–20 ஆம் ஆண்டில், 2000 சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் ரூ.60.00 கோடி கடனுதவி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. 31.12.2019 வரை, 358 சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகளின் மூலம் ரூ.21.38 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் திறமைகளை வங்கியாளர்கள் நேரடியாக அறிந்து கொள்வதால், உரிய நேரத்தில் குழுக்களுக்கு கடன் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது, நமது திட்டத்தில் நிதி பங்குதாரர்களாக கீழ்க்கண்ட வங்கிகள் உள்ளன

1. நாபின்ஸ்
2. தமிழ்நாடு கிராம வங்கி (இந்தியன் வங்கியின் ஆதரவுடன் செயல்படும் மண்டல ஊரக வங்கி)
3. இந்தியன் வங்கி
4. ஐசிஐசிஐ வங்கி (இரண்டு மாவட்டங்களில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு வழங்கி வருகின்றன).

   **பகுதி – 1 :**ஏற்கனவே செயல்பட்டு வரும் ஆறு மாவட்டங்களில் உள்ள 109 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் 107 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வியாபார மேம்பாட்டு முகவர்களாக செயல்பட்டு, 31.12.2019 வரை, ரூ.2.46 கோடி கமிஷன் ஈட்டியுள்ளனர்.

   **பகுதி – 2 :** கூடுதல் மாவட்டங்களில் 127 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில், 124 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் இந்தியன் வங்கி,

நாபின்ஸ் மற்றும் தமிழ்நாடு கிராம வங்கிகளில் வியாபார மேம்பாட்டு முகவர்களாக செயல்பட்டு வருகின்றனர். மீதமுள்ள 3 கூட்டமைப்புகள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. 31.12.2019 வரை ரூ.68.87 இலட்சம் கமிஷன் ஈட்டியுள்ளனர்.

## 2. இடர் மேலாண்மை மற்றும் காப்பீடு

துயர் குறைப்பு நிதியினை ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் பராமரிக்கின்றன. இயற்கை பேரழிவால் பாதிக்கப்படும் ஏழை மக்களுக்கு துயர் குறைப்பு நிதியிலிருந்து குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படுகின்றது. இந்நிதிக்கு 4/5 பங்கு திட்டப் பங்களிப்பாகவும், 1/5 பங்கு பயனாளிகளின் பங்களிப்பாகவும் உள்ளது. தனிநபர் கடனாக ரூ.1000/- முதல் 7500/- வரையும், மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.10,000/- வரையும் 6 சதவீத வட்டி விகிதத்தில் வழங்கப்படுகிறது.

**துயர் குறைப்பு நிதியின் பயன்பாட்டு விவரம்**

| வருடம் | பயன் பெற்றோரின் எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 2010 - 11 | 1875 | 62.86 |
| 2011 - 12 | 1667 | 68.46 |
| 2012 - 13 | 3391 | 151.48 |
| 2013 - 14 | 3870 | 205.92 |
| 2014 - 15 | 6582 | 324.28 |
| 2015 - 16 | 6731 | 343.51 |
| 2016 - 17 | 4376 | 276.58 |
| 2017 - 18 | 3437 | 219.93 |
| 2018 - 19 | 2940 | 205.15 |
| 2019 - 20 | 5467 | 441.52 |
| **மொத்தம்** | **40336** | **2299.69** |

சுய உதவிக் குழுக்கள், கூட்டுப் பொறுப்பு குழுக்கள் மற்றும் மீன் விற்பனை சங்க உறுப்பினர்கள் ஆகியோருக்கு உயிர், தனிநபர் விபத்து, கால்நடை மற்றும் சொத்துக்கள் ஆகிய காப்பீடு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.மீன்பிடி உடைமைகளுக்கான காப்பீடு வழங்கும் பொருட்டு சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்ட மீன்பிடி உடைமைகளின் இடர்பாட்டிற்கான பரஸ்பர சகாய சங்கம் தொடங்கப்பட்டுள்ளது.

**சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்ட மீன்பிடி உடைமைகளின் இடர்பாட்டிற்கான பரஸ்பர சகாய சங்கம்**

கடற்கரையை இறங்கு தளமாகக் கொண்ட தோணி, வள்ளம், சிறு படகுகள் மற்றும் வெளி பொருத்து இயந்திரத்துடன் கூடிய (அ) அல்லாத கட்டுமரம், இழை வலுவூட்டும் நெகிழி படகுகள் போன்றவைகளை பயன்படுத்தும் சிறு / குறு மீனவர்களுக்கு பொதுவாக, பாதுகாப்பு மற்றும் தொலைதொடர்பு உபகரண வசதிகள் கிடையாது. இயற்கைப் பேரழிவுகள் மற்றும் தனி விபத்துக்களால், சிறு / குறு படகுகளின் சேதம் (ம) இழப்பு, உபகரணங்கள் மற்றும் மீன்பிடித் துணைக் கருவிகளுக்கு ஏற்படும் சேதம் ஆகியவை மீன்பிடி தொழிலில் உள்ள முக்கிய இடர்பாடுகள் ஆகும்.

காப்பீட்டு நிறுவனங்கள், சிறு / குறு மீன்பிடி உடைமைகளுக்கான காப்பீட்டினை மீன்பிடி கப்பல்களுக்கான காப்பீட்டுடன் ஒப்பிட்டு ஆண்டு பிரீமியமாக 4 சதவீத தொகையை நிர்ணயித்துள்ளனர். இந்த அதிகப்படியான பிரீமியத் தொகையை செலுத்தி காப்பீடு செய்ய ஏழை மீனவர்களால் இயலாது. இதனை கருத்தில் கொண்டு,

சமுதாயம் சார்ந்த நிறுவனமாக சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்ட மீன்பிடி உடைமைகளின் இடர்பாட்டிற்கான பரஸ்பர சகாய சங்கம் உருவாக்கப்பட்டு, சிறு/குறு அளவிலான மீனவர்கள் எளிதில் அணுகி குறைந்த செலவில் பயன்பெறும் வகையில் சிறு/குறு மீன்பிடி உடைமைகளுக்கான காப்பீடு செயலாக்கத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதில் மாவட்ட அளவிலான மீன் விற்பனை சங்கங்களின் சம்மேளனங்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த மீன்பிடி உடைமைகளுக்கான காப்பீடு திட்டத்தை செயல்படுத்திட, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்ட மீன்பிடி உடைமைகளின் இடர்பாட்டிற்கான பரஸ்பர சகாய சங்கம் நிறுவனம், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் ஆகியோருடன் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

**இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

- பேரழிவுகளால் ஏற்படும் இழப்புகளுக்கு யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனமும் தனிவிபத்துகளுக்கு சுனாமிக்கு பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட மீன்பிடி உடமைகளின் இடர்பாட்டிற்கான பரஸ்பர சகாய சங்கமும் இழப்பீடு வழங்கும்.

- 1 சதவீத பிரீமிய தொகை மட்டுமே பெறப்படுகின்றது,

- அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 7 நாட்களுக்குள் இழப்பீடு தொகை வழங்கப்படுகின்றது.

**வருடாந்திட வாரியாக சிறு/குறு மீன்பிடி உடைமைகளுக்கான காப்பீட்டில் இணைந்துள்ள விவரங்கள்**

| வ.எண் | வருடம் | மீன் பிடி உடைமைக் காப்பீடு மேற்கொள்ளப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 2017 - 18 | 5914 |
| 2 | 2018 – 19 | 7538 |
| 3 | 2019 – 20 | 7798 |
| **மொத்தம்** | | **21250** |

இதுவரை 15 நபர்களுக்கு தனி நபர் விபத்துக்களுக்கான இழப்பீடு தொகை ரூ.5.08 இலட்சம் சுனாமிக்கு பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட மீன்பிடி உடமைகளின் இடர்பாட்டிற்கான பரஸ்பர சகாய சங்கம் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கஜா புயலில் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட 189 நபர்களுக்கு ரூ.27.59 இலட்சம் இழப்பீடு தொகை யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

3. **நுண் தொழில் மேம்பாடு மற்றும் புதிய உத்திகளுக்கான நிதி**

திட்டப் பகுதிகளில் சமையலறைக் கழிவுகளிலிருந்து சமையல் எரிவாயு உற்பத்தி செய்யும் கலன்கள் புதுமையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் அப்பகுதிகளில் உள்ள கழிவுகள் திறம்பட உபயோகப்படுத்தப்படுவதால், சுற்றுப்புற சுகாதாரம் பாதுகாக்கப்படுவதோடு எரிவாயு உற்பத்திக்கும் வழிவகுக்கின்றது.

- **ஒரு கலனின் மதிப்பீடு தொகை . . . ரூ.23,400**
  - o திட்ட மானியம் . . . ரூ.12,500
  - o பயனாளி பங்களிப்பு . . . ரூ.8000
  - o கடன் தொகை . . . ரூ.2900

  மொத்தம் . . . ரூ.23,400

2019 - 20 ஆம் ஆண்டில் ரூ.32.00 இலட்சம் மதிப்பீட்டில் 137 சமையலறைக் கழிவுகளிலிருந்து எரிவாயு தயாரிக்கும் கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் ஊரக வளர்ச்சித் துறையின் பயிற்சி நிறுவனங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

## 4. **சுய உதவிக் குழுக்களுக்கான ஆதரவு**

சுய உதவிக் குழுக்கள் தரமதிப்பீடு செய்யப்பட்டு, வலுவற்ற சுய உதவிக் குழுக்கள் கண்டறியப்பட்டு, அவற்றிற்கு திறன் வளர் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளும் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, அவற்றின் நிர்வாகிகளுக்கு சிறப்பு பயிற்சிகள் நடத்தப்படுகிறது. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பட்டறிவு பயணம் அழைத்து செல்லப்படுகின்றனர். இந்நடவடிக்கை களுடன், கருத்தரங்குகள் மற்றும் பட்டறைகள் போன்ற அறிவு சார் புதுப்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் அன்றாட கணக்குகளை மேலாண்மை செய்ய டேலி மென்பொருள் வடிவமைக்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளது. அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிலும் புத்தக பராமரிப்பாளர்கள்

பணியமர்த்தப்பட்டுள்ளனர். சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு குழுக்கடன் தவிர வருமானத்தை பெருக்கும் நடவடிக்கைகளுக்கான கடன் வழங்கப்படுகிறது.

5. **மீன் விற்பனை சங்கங்கள்**

தென்னிந்திய மீன் விற்பனை சங்கங்களின் கூட்டமைப்பின் (SIFFS) உதவியுடன் 118 மீன் விற்பனை சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கந்து வட்டிக்காரர்கள் மற்றும் வியாபாரிகளின் கடன் தொல்லையிலிருந்து மீன் விற்பனை சங்க உறுப்பினர்களை மீட்பதற்கும், மீனவர்களின் வறுமையை ஒழிக்கவும், மீன் விற்பனை சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒவ்வொரு மீனவருக்கும் தலா ரூ.15,000/- முதல் ரூ.70,000/- வரை கடன் மீட்பு நிதி வழங்கப்படுகின்றது. அனைத்து மீன் விற்பனை சங்கங்களுக்கும் தேவையான அத்தியாவசிய கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய அலுவலகக் கட்டிடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. திருவள்ளூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் மாவட்ட அளவிலான கூட்டமைப்புகளும், விழுப்புரம், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களை ஒருங்கிணைத்து விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு மண்டல அளவிலான கூட்டமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளன. படகு பழுது பார்த்தலை எளிதாக்கிட வெளி பொருத்து மோட்டார் என்ஜின் பழுது நீக்கும் நிலையங்கள் மூன்றும், மூன்று படகு கட்டும் தளங்களும் ரூ.105 இலட்சம் மதிப்பீட்டில் கட்டித் தரப்பட்டுள்ளன. மேலும், மீன்களை சுகாதார முறையில் கையாளுவதற்காக நான்கு மீன் ஏலக் கூடங்கள் மற்றும் நான்கு மீன் கொள்முதல் நிலையங்கள் ரூ.282 இலட்சம்

மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், 75 மீன் விற்பனை சங்க அலுவலகக் கட்டிடங்கள் ரூ.4.49 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இது தவிர, மீனவ மகளிருக்கு வலை பின்னுதல், மகளிர் மீன் வியாபாரிகளுக்கு கூட்டுப் பொறுப்புக் குழு உருவாக்குதல் ஆகிய வாழ்வாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீன் விற்பனை செய்யும் மகளிரை இணைத்து 1858 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, 9018 உறுப்பினர்களை கந்துவட்டிகாரர்களின் கடன் நெருக்கடியில் இருந்து மீட்க ரூ.11.61 கோடி சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது. இவர்களின் கடன் திருப்பம் 99 % ற்கு மேல் இருப்பது பாராட்டத்தக்க வகையில் உள்ளது. எனவே, இத்திட்டத்திற்கு தேசிய அளவிலான ஸ்கோச் தங்க விருது ஏழை மீன் விற்பனை செய்யும் மகளிர் கூட்டுப் பொறுப்புக் குழுக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தப்பட்ட வகையில் நடவடிக்கை மேற்கொண்டதற்காக சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2019 – 20 ஆம் ஆண்டில், 22 மீன் விற்பனை சங்கக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மார்ச் 2020-க்குள் கட்டிடப் பணிகள் முடிக்கப்படும்.

6. **வருமானத்தை பெருக்கும் நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி**

தற்போதுள்ள வாழ்வாதாரத்தை மேலும் நிலைப்படுத்த விருப்பமுள்ள மகளிருக்கும் மாற்று வாழ்வாதாரம் ஏற்படுத்துவதற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்

படுகின்றது. இந்நோக்கத்தை எய்திட வாழ்வாதாரத் திறன் அளித்தல் மிகவும் முக்கியமானது ஆகும். இத்திட்டத்தின் மூலமாக தேவைக்கேற்ப 19,000 மகளிருக்கு வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கைகளுக்காக பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்தி கொள்ளுதல், விற்பனை மேம்பாடு மற்றும் பொருள் மதிப்பு கூட்டுதல் ஆகியவற்றை இப்பயிற்சிகள் மகளிருக்கு கற்றுக் கொடுத்துள்ளன. மகளிருக்கு சுகாதாரமான முறையில் மீன் உருவாக்குதல், முயல் வளர்ப்பு பனை ஒலை பொருட்கள் தயாரித்தல், தையல், ஸ்கிரின் பிரிண்டிங் மற்றும் பல்வேறு வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கைகளுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

2019 – 20ஆம் ஆண்டில், சுமார் 1647 மகளிருக்கு ரூ.183 இலட்சம் மதிப்பீட்டில் கோழி வளர்ப்பு, கடல் சிப்பியிலான கைவினைப் பொருட்கள் தயாரித்தல், பனை ஓலை பொருட்கள் தயாரித்தல், தையல் போன்றவற்றிற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

### 7. **நுண் தொழில் மேம்பாடு** (Micro Enteprise)

நுண் தொழில் மேம்பாட்டில் அனுபவம் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களுடன் திட்ட மேலாண்மை அலகு உடன்பாடு ஏற்படுத்தி, பால் விற்பனை, முருங்கைக்காய், மல்லிகை மற்றும் மாம்பழம் சாகுபடி போன்ற உட்பிரிவுத் தொழில்கள், தொழில் தொகுப்புகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், கோழி வளர்ப்பு, காய்கறி,

காளாண் வளர்ப்பு, கருவாடு உற்பத்தி, கயிறு தயாரித்தல், மலர்த் தோட்டம், பொம்மை செய்தல், முந்திரி பருப்பு பதனிடுதல், அழகுக் கலை நிலையம், புடவை வண்ணம் தீட்டுதல் மற்றும் இதர தொழில்களை ஊக்குவிக்க திறன் பயிற்சியுடன் கடன் உதவி வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

31.12.2019 வரை, ரூ.87.01 கோடி செலவில், 4280 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் பல்வேறு நுண்தொழில்கள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2019 – 20 ஆம் ஆண்டில், புதிதாக 2000 கூட்டுப் பொறுப்புக் குழுக்களை உருவாக்கி, ரூ.50 கோடி வாழ்வாதாரக் கடன் வழங்க திட்டமிடப்பட்டு. தற்போது, 668 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் ரூ.12.84 கோடி கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

8. **வாழ்க்கை கல்வி பயிற்சி**

திட்டப் பகுதிகளில் உள்ள வேலையில்லா இளைஞர்களுக்கு ஒரு மாதம் முதல் ஒரு வருடம் வரை பல பிரிவுகளில் வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற் பயிற்சி 5216 இளைஞர்களுக்கு ரூ.473.11 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

## 9.3 சிறப்பு முயற்சிகள்

திட்டப் பகுதிக்கு பொருத்தமான பண்ணை சார்ந்த திட்ட உதவிகள், தகுந்த வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு வழங்கப்படுகின்றன. அனுபவமுள்ள தொண்டு நிறுவனங்கள்

மூலம் பயனாளிகளின் தேவையை கருத்தில் கொண்டு இவை ஒருங்கிணைக்கப்படுகின்றன.

பண்ணை சார்ந்த தொழில்களின் அம்சங்கள்:

- குழு உருவாக்கம் மற்றும் அவற்றின் பயிற்சி, நகர்வு மற்றும் நடவடிக்கைகள்
- தொழில் நுட்ப உதவி வழங்குதல்
- தற்போதுள்ள அரசு திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல்
- வங்கி இணைப்பு மூலம் கடன் உதவி வழங்குதல்
- சந்தைப்படுத்த உதவி புரிதல்
- உற்பத்தித்திறன் மற்றும் வருமானத்தை உறுதிப்படுத்துதல்
- திட்ட நடவடிக்கைகளில் நிலைத்த தன்மைக்கு வகை செய்தல்

**பகுதி – 1 : மாவட்டங்களிலுள்ள திட்டங்கள்**

**1. நாகப்பட்டினம் மாவட்டத்தில் மா, காய்கறிகள் மற்றும் மூலிகை சாகுபடி போன்ற பண்ணை சார்ந்த திட்டங்களை மேம்படுத்துதல்**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கடலோர பகுதியிலுள்ள 12 ஊராட்சிகளிலுள்ள 3 ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கும் 2850 விவசாயிகளுக்கு பயன்படும் வகையில் மா / காய்கறி / மூலிகை சாகுபடி போன்ற பண்ணை சார்ந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ 190 துவக்க நிலை உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு அவைகள் திருமறைக்காடு விவசாயிகள் கூட்டமைப்பாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் சாகுபடி

மற்றும் குழு நடவடிக்கைகள் தவிர கொள்முதல் மையங்கள் மற்றும் விற்பனை மையத்திற்காக சுழல் நிதியாக ரூ.73 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு விற்பனை மூலம் நல்ல வருமானம் பெறுவதற்கு இம்மையங்கள் உதவுகின்றன. தொண்டு நிறுவனமான கோவனன்ட் மேம்பாட்டு மையத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**மா திட்டத்தை மேம்படுத்துதல்**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மா செயற்திட்டங்கள் நடைமுறைபடுத்தப்பட்டபோது, மாக்கூழ் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றை நிறுவ திருமறைக்காடு கடலோர விவசாயிகள் கூட்டமைப்பு, நாகை ஆர்கானிக் விவசாயிகள் தயாரிப்பாளர்கள் நிறுவனம் (NOFPCL) என்ற பெயரில் தயாரிப்பாளர்கள் நிறுவனமாக மேம்படுத்தி அதன் மூலம் மாக்கூழ் உற்பத்தி நிறுவனத்தை செயல்படுத்த முன்மொழிந்தது.

அதனடிப்படையில் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூ.1044.14 இலட்சம் (திட்டப் பங்கீடு - ரூ.866.74 இலட்சம் மற்றும் பயனாளிகள் பங்கீடு - ரூ.177.40 இலட்சம்) மதிப்பீட்டில் மாக்கூழ் தயாரிக்கும் நிறுவனம் நிறுவப்பட்டு, மாக்கூழ் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மா விவசாயிகளின் உற்பத்தியின் மதிப்பை அதிகரிக்கச் செய்வதற்கும், அதிக விலையை பெற வாய்ப்பளிப்பதற்கும் மாக்கூழ் உற்பத்தி நிறுவனம் உதவுகிறது.

இதன் மூலம் மா விவசாயிகள் நீண்டகாலத்திற்கு ஒரு நிலைத்த வாழ்வாதாரத்தினை பெற்றிடும் வகையில் அமைந்துள்ளது.

**2. கை கொடுக்கும் கை** (Hand in Hand) **நிறுவனத்தின் உதவியுடன் கடலூர் மாவட்டத்தில் பால் உற்பத்தியை மேம்படுத்துதல்**

கடலூர் மாவட்டத்தில் 9 கடலோர கிராமங்களில் வசிக்கும் 400 மகளிரைக் கொண்ட தொகுப்பின் கீழ் பால் உற்பத்தியாளர் கூட்டு பொறுப்புக் குழுக்களுக்கு தமிழ்நாடு கிராம வங்கி மூலம் கடன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. அனைத்து உறுப்பினர்கள் உள்ளடக்கிய பால் உற்பத்தியாளர் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு இதன் மூலம் பால் விற்பனை மற்றும் தீவனம் கொள்முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாட்டுத் தீவனம் மற்றும் கறவை மாடுகள் வாங்குவதற்காக கூட்டமைப்பிற்கு சுழல் நிதியாக ரூ.15.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் கை கொடுக்கும் கை (Hand in Hand) நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டது.

**பகுதி – 2 மாவட்டங்களிலுள்ள திட்டங்கள்**

**1. இராமநாதபுரம் மாவட்டத்தில் நெல் மற்றும் திணை போன்ற சிறு தானியங்களின் மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல்**

இராமநாதபுரம் மாவட்ட கடலோரப் பகுதிகளில் உள்ள நெல் மற்றும் சிறு தானியங்களை பயிரிடும் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும், நெல் மற்றும் சிறு தானியங்களின் மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் மூலம்

இத்திட்டம் கடலோரப் பகுதிகளிலுள்ள 12 ஊராட்சிகளை உள்ளடக்கிய 1000 விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், உற்பத்தியாளர் நிறுவனமாக ஒருங்கிணைத்து விவசாயத்தில் நிலைத்த தன்மையை அடைவதற்கு கோவனன்ட் மேம்பாட்டு மையத்தின் மூலம் ரூ.60.04 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2. **இராமநாதபுரம் மாவட்டத்தில் மல்லிகை சாகுபடி மற்றும் மலர் விற்பனை செய்தல்**

இராமநாதபுரம் மாவட்டத்தில் 2 கடலோரப் ஊராட்சிகளிலுள்ள மல்லிகை சாகுபடி செய்யும் 400 விவசாயிகள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. சாகுபடி திறன் மற்றும் விற்பனை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு மல்லிகை அடுக்கு நாற்றங்காலை அதிகரிப்பது, தாய் தாவர சாகுபடி மற்றும் மல்லிகை சாகுபடியை அதிகரித்து மல்லிகை பூ மற்றும் பதியன்கள் விற்பனை மூலம் நல்ல இலாபம் பெற வழிவகை செய்யும் நோக்கில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. தொண்டு நிறுவனமான சிவகங்கை பல்நோக்கு சமூக சேவை சங்கத்தின் மூலம் செயல்முறை ஆதரவு வழங்கி இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

2019–20 ஆம் ஆண்டில், கூடுதலாக 100 பயனாளிகள் இணைக்கப்பட்டு ரூ.12.00 இலட்சம் ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டது.

3. **ஆடு வளர்ப்புத் திட்டம்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆடு வளர்ப்பு வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்பட்டு ஆடு வளர்ப்பில் குறைந்த பட்ச இறப்பு விகிதம், மேம்பட்ட ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் மூலம் எளிய முறையிலான தொழில் நுட்பங்கள் உதவியுடன் பெண்கள், ஆடு வளர்ப்பதற்கு வழிவகை செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 14 கடலோர ஊராட்சிகளிலிருந்து சுமார் 500 மகளிர் பயன்பெறும் வகையில் 42 சமூக கால்நடை தொண்டர்கள் மேற்கண்ட நோக்கங்கள் நிறைவேற்ற உதவுவதற்காக பணி புரிகின்றனர். இத்திட்டம் நிலையான விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் நடவடிக்கை (SEVA) தொண்டு நிறுவனத்தின் மூலம் 2019–20 ஆம் ஆண்டில், கூடுதலாக 1000 மகளிர் பயன்பெறும் வகையில், ரூ.12.80 இலட்சம் ஒதுக்கீடு செய்து மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், தஞ்சாவூர், திருவாரூர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலும், ஆடு வளர்ப்பு பணி மேற்கொள்வதற்கு 2000 மகளிர் பயன்பெறும் வகையில், ரூ.50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. **திருநெல்வேலி மாவட்டத்தில் முருங்கை சாகுபடி மற்றும் சந்தைப்படுத்துதல்**

முருங்கை சாகுபடி மற்றும் மதிப்பு கூட்டுதலுக்காக திருநெல்வேலி மாவட்டத்தில் 11 கடலோர ஊராட்சிகளில் முருங்கை சாகுபடி, முருங்கக்கீரை மற்றும் ஏற்றுமதி செய்வதற்காக முருங்கை எண்ணெய் உற்பத்தி போன்றவற்றில் ஈடுபடுத்த 800 மகளிரை தேர்வு செய்து முருங்கை சாகுபடி

மற்றும் மதிப்பு கூட்டுதலுக்காக வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் ஸ்டெல்லா மேரிஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெவலப்மெண்ட் ஸ்டடிஸ் (SMIDS) தொண்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் 2019–20 ஆம் ஆண்டில் விரிவுபடுத்தப் பட்டு, ரூ.38.59 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதலாக 200 மகளிரை இணைத்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அனைத்து பண்ணை சார்ந்த திட்டங்களும் வங்கிக் மூலம் கடன் உதவி செய்ய திட்டமிடப்பட்டு குழு ஒருங்கிணைப்புடன் செயல்படுவதற்கு முறையான பயிற்சி மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வழிவகை செய்யப்படுகிறது.

5. **பனை மரம் ஏறும் கருவி அறிமுகப்படுத்துதல்**

- பெண்களுக்கான பனை ஏறும் பயிற்சி மற்றும் திறன் வளர்ப்பு மேலும் விபத்துக்களை தவிர்ப்பதற்காக பனை மரம் ஏறும் கருவி சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- 25 பெண்களுக்கு பனை மரம் ஏறுவதற்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

6. **தொகுப்பு நடவடிக்கைகள் உருவாக்குதல்**

கூட்டுப் பொறுப்பு குழுக்கள் வெற்றிகரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் அவற்றை மேலும் வலுவடையச் செய்யவும், அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கவும் ஒவ்வொரு கூட்டு வள

மையத்திலும் ஒன்று அல்லது இரண்டு தொழில் தொகுப்புகள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஒரே தொழில் செய்யக்கூடிய பல கூட்டுப் பொறுப்பு குழுக்களை கூட்டு வள மையத்தின் மூலம் தங்களுக்கு தேவையான இடுபொருளிலிருந்து சந்தைப்படுத்துதல் வரை கிடைக்கும் வள ஆதாரங்களின் அடிப்படையில் ஒருங்கிணைத்து செயல்படுத்துதல் இதன் முக்கிய அம்சமாகும்.

இதை முன்னிறுத்தி, பின்வரும் வழிகளில் செயல்படுவது கூட்டு வள மைய தொழில் தொகுப்புகளின் நோக்கமாகும்

1. கூட்டு வள மையத்தில் செயல்படும் கூட்டுப் பொறுப்பு குழுக்களின் தொழில்களை பற்றி அறிந்து கொள்ளுதல்
2. கூட்டுப் பொறுப்பு குழுக்களின் வலிமையை ஆய்ந்து அதனுடைய செயல்பாட்டைக் கண்டறிதல்
3. கூட்டுப் பொறுப்பு குழுக்களின் செயல்பாட்டில் இருக்கும் குறைபாடுகளை கண்டறிந்து அதனை நீக்கி வலுவடைய செய்தல்
4. கூட்டுப் பொறுப்பு குழுக்களை முன்னேறுவதற்கான அனைத்து உதவிகளையும் ஒருங்கிணைப்பதன் மூலம் பெற வழி வகுத்தல்

## 9.4 **கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு**

திட்ட செயல்பாடுகளை உன்னிப்பாக கண்காணிக்கும் வகையில் எளிய வகையிலான டேலி மென்பொருள் (Tally

Software) அனைத்து நிலைகளிலும் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இணையதளம் வாயிலாக திட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றது. மாதாந்திர ஆய்வுக் கூட்டம் மூலம் மாவட்டம் மற்றும் கள அளவில் அனைத்து செயல்பாடுகளின் இலக்கு மற்றும் தொடர் நடவடிக்கைகளின் முன்னேற்றம் கண்காணிக்கப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் ஆண்டு திட்ட பலன் (outcome) குறித்து மூன்றாம் தரப்பினர் மூலம் மதிப்பீடு செய்யப்படுகின்றது. திட்ட செயல்பாடுகளை கண்காணிப்பதற்கு மாநில அளவில் திட்ட வழிகாட்டு குழுவும், தேசிய அளவில் முத்தரப்பு நிதி செலவு குறித்த ஆய்வுக் கூட்டமும் நடத்தப்படுகின்றன.

## 9.5 **முடிவுரை**

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் கடலோர சமுதாய வாழ்வாதாரத்தின் மீது மிகப்பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இலக்கு குடும்பங்களின் வருமான வரம்பு கணிசமாக உயர்ந்துள்ளது. மக்களின் விழிப்புணர்வு நிலை புதிய உச்சத்தை எட்டியுள்ளது. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் ஆய்வுக் குழுவினர் இத்திட்ட செயல்பாடுகள் திருப்திகரமாக உள்ளது என சான்றளித்துள்ளனர்.

திட்ட செயலாக்கத்தில் அனைத்து நிலைகளிலும் சமுதாயப் பங்களிப்பை நிலை நிறுத்தியது இத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றாகும். வியாபார

மேம்பாட்டு முகவர்கள் மற்றும் பண்ணை சாரா நடவடிக்கைகள் மூலம் சமுதாயம் சார்ந்த அமைப்பான ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிலைத்த தன்மைகள் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. ஏழை மற்றும் மிகவும் ஏழை மக்கள் நிதி சேவைகளை இலகுவாகப் பெறும் நிலைக்கு ஏற்றம் பெற்றுள்ளனர். வெற்றிகரமான மாற்று சுய வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மீனவர்கள் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டதால், அவர்களுடைய உற்பத்திக்கு உகந்த விலை உறுதி செய்யப்பட்டுள்ளது. தடை செய்யப்பட்ட மீன்பிடி நடைமுறைகளை தொடர்தல், ஏழை மற்றும் மிகவும் ஏழை மக்களின் வாழ்வாதாரத் திட்டங்களில் நிதி நிறுவனங்களில் ஆர்வமின்மை போன்ற சாவல்களை இத்திட்டம் சிறப்பான முறையில் கடந்துள்ளது.

## 9.6 **திட்ட நிதிஒதுக்கீடு**

**நிறுவன வாரியாக**

| வ. எண். | நிறுவனம் | தொகை (ரூ.கோடியில்) | |
|---|---|---|---|
| | | பகுதி - I | பகுதி - II |
| 1 | பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியம் | 132.32 | 142.15 |
| 2 | தமிழக அரசு | 12.00 | 16.08 |
| 3 | வங்கி மற்றும் நுண்கடன் நிறுவனங்கள் | 100.61 | 94.32 |
| 4 | பயனாளிகளின் பங்களிப்பு | 38.76 | 26.94 |
| **மொத்த தொகை** | | **283.69** | **279.49** |

## 9.7 மொத்த செலவினப் பட்டியல்

### அ. ஏற்கனவே செயல்படுத்தப்படும் மாவட்டங்கள் (திட்டம் முடிவு 30.09.2019)

(ரூபாய் இலட்சத்தில்)

| திட்டக் கூறு எண் | திட்டக் கூறு | திட்ட மதிப்பீடு தொகை | திட்ட இடைநிலை அறிக்கை | 2007 முதல் 31.03.2019 வரை மேற்கொள் ளப்பட்ட செலவினம் | 2019-20 (01.04.19 முதல் 30.09.2019 வரை) | | 30.09.2019 வரை உள்ள மொத்த செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | வருடாந்திர பணித் திட்டம் மற்றும் நிதி ஒதுக்கீடு | மேற்கொள் ளப்பட்ட செலவினம் | |
| I. | கடலோர வள ஆதார மேலாண்மை | 3851 | 5632 | 6154.78 | **76.00** | 91.02 | 6245.80 |
| II. | ஊரக நிதி மற்றும் இடர்ப்பாடு தவிர்க்கும் வழிமுறைகள | 983 | 1398 | 1527.10 | **0** | 0 | 1527.10 |
| III. | வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் திறன் வளர்ப்புப் பயிற்சி | 6631 | 9399 | 6476.51 | **261.82** | 196.76 | 6673.27 |
| IV. | சமுதாயம் சார்ந்த கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை | 180 | 242 | 235.51 | **0** | 0 | 235.51 |
| V. | திட்ட மேலாண்மை | 1592 | 2256 | 4058.16 | 186.00 | 125.65 | 4183.81 |
| **மொத்தம்** | | **13237** | **18927** | **18452.06** | **523.82** | **413.43** | **18865.49** |

### ஆ. விரிவுப்படுத்தப்பட்டுள்ள மாவட்டங்கள்

#### 1. திட்டக் கூறு வாரியாக

(ரூபாய் இலட்சத்தில்)

| திட்டக் கூறு எண் | திட்டக் கூறு | திட்ட மதிப்பீடு தொகை | 2017 முதல் 2019வரை | | 2019-20 (01.04.2019 – 31.12.2019) | | 31.12.2019 வரை மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | நிதி விடுவிப்பு | 31.03.2019 வரை மேற்கொள்ளப் பட்ட செலவினம் | வருடாந்திர பணித் திட்டம் மற்றும் நிதி ஒதுக்கீடு | மேற்கொள் ளப்பட்ட செலவினம் | |
| I. | கடலோர வள ஆதார மேலாண்மை | 6104.46 | 3768.67 | 2170.81 | 4433.71 | 1143.31 | 3314.12 |
| II. | தொழில் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் | 7455.15 | 3709.00 | 1550.39 | 3118.83 | 701.37 | 2251.76 |
| V. | திட்ட மேலாண்மை | 2262.90 | 927.10 | 914.81 | 1086.52 | 468.04 | 1382.85 |
| **மொத்தம்** | | **15822.51** | **8404.77** | **4636.01** | **8639.06** | **2312.72** | **6948.73** |

2. **பிரிவு வாரியாக**

**(ரூபாய் இலட்சத்தில்)**

| வ. எண். | வகை | திட்ட மதிப்பீடு தொகை | 2017 - 19 | | 2019 - 20 (01.04.2019 – 31.12.2019) | | 31.12.2019 வரை மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | நிதி விடுவிப்பு | 31.03.2019 வரை மேற்கொள்ளப் பட்ட செலவினம் | வருடாந்திர பணி திட்டம் மற்றும் நிதி ஒதுக்கீடு | மேற்கொள்ள ப்பட்ட செலவினம் | |
| I. | பணிகள் | 4421.09 | 3040.90 | 961.09 | 2045.00 | 615.80 | 1576.89 |
| II. | மானியம் | 3592.00 | 2790.05 | 1245.37 | 3724.00 | 416.04 | 1661.41 |
| III. | உபகரணங்கள் மற்றும் பொருட்கள் | 312.02 | 174.57 | 238.64 | 102.24 | 75.03 | 313.67 |
| IV. | ஆலோசனை கட்டணம் | 2024.70 | 841.75 | 523.29 | 1179.59 | 535.04 | 1058.33 |
| V. | சரக்கு, சேவை மற்றும் உள்ளீடு | 3656.07 | 794.94 | 909.95 | 837.79 | 258.01 | 1167.96 |
| VI. | சம்பளம் மற்றும் படிகள் | 1816.63 | 762.56 | 757.67 | 750.44 | 412.80 | 1170.47 |
| **மொத்தம்** | | **15822.51** | **8404.77** | **4636.01** | **8639.06** | **2312.72** | **6948.73** |

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் கடலோரப் பகுதிகளில் உள்ள பாதிக்கப்படக்கூடிய தன்மையைக் கருத்தில் கொண்டு, எதிர்த்தெறிதல் மற்றும் தகவமைப்புடன் கூடிய சுய அமைப்புக்களை இணைத்தல் வழியே தற்சார்புடன் கூடிய சுய உதவிக் குழுக்கள், கூட்டுப் பொறுப்புக் குழுக்கள், மீன் விற்பனை சங்கங்கள் மற்றும் இதர மக்கள் அமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. வாழ்வாதார நடவடிக்கைகள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அல்லது அவற்றுக்கு புறம்பே ஏற்படுத்தப்படுகின்றன. கடலோரப் பகுதிகளின் யதார்த்த நிலை மற்றும் வெற்றிக்கு உகந்த பார்வையுடன் இப்பகுதி சமூக, சுற்றுச்சூழல் அமைப்புகளின் திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தில் ஒரு பெரும் வளர்ச்சியை சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் ஏற்படுத்தியுள்ளது மற்றும் சமுதாய மக்களின் வருமானத்தை

பெருக்கும் பொருட்டு, வலை பின்னும் தளம், மீன் ஏலக் கூடம், மீன் கொள்முதல் நிலையம் போன்ற கட்டமைப்புகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன. திட்டப் பகுதிகளிலுள்ள குடும்பங்களின் வருமானம் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. மக்களின் விழிப்புணர்வு ஒரு புதிய அளவுகோலை எட்டியுள்ளது. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் ஆய்வுக் குழுவினர், இத்திட்டம் திருப்திகரமாகச் செயல்படுவதாகவும், ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் சிறப்பாகச் செயல்படும் திட்டங்களில் இது முதன்மையானத் திட்டமாக இருப்பதாகவும் பாராட்டியுள்ளனர்.

வருமான உயர்வு, வாழ்க்கைத் தரம், ஊட்டச்சத்து நிலை, ஏழை மீனவர்களின் பொருளாதாரம் உள்பட குறிப்பாக மீன் விற்பனை செய்யும் ஏழை மகளிர், கடற்சிப்பி மூலம் கைவினை பொருட்கள் தயாரிக்கும் பணியாளர்கள், சிறு மற்றும் குறு விவசாயிகள் போன்றவர்கள் வெற்றிகரமாக செயல்படும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால் கடலோர மக்களின் தரம் உயத்தப்பட்டு, அவர்களது வாழ்வில் பேரிடர் மற்றும் இயற்கை பேரழிவுகளை எதிர்கொள்ளும் வகையில் நம்பிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

# 10. வரவு செலவுத் திட்டம்

## 10. **வரவு செலவுத் திட்டம்** 2020-21

2020-21 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.21,585.633 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வருவாய் செலவினங்களுக்காக ரூ.19,679.255 கோடியும், மூலதனச் செலவினங்களுக்காக ரூ.1,906.227 கோடியும் மற்றும் அரசு ஊழியர்களுக்கான கடன் தொகைக்காக ரூ.0.150 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 11. முடிவுரை

**முடிவுரை**

ஊரகப் பகுதிகளில் உள்ள ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மத்திய மாநில அரசுகளின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை திறம்படவும் சிறப்பாகவும் விரைவாகவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயல்படுத்தி வருகின்றது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் உதவி மற்றும் பங்கேற்பின்றி ஊரக வளர்ச்சித் திட்டங்களின் பலன்களை அடைய இயலாது. எனவே, உள்ளாட்சி அமைப்புகளை சிறப்பாக செயல்படுத்திட ஏதுவாக மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு போதுமான அதிகாரங்களும் மற்றும் பொறுப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஊரக பகுதிகளில் உள்ள வீடற்ற மக்களின் குடியிருப்புத் தேவைகளை பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) மற்றும் முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டங்களின் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. 25 வருடங்களுக்கு முன் பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட பழுதடைந்த ஏழை மக்களின் வீடுகளை பழுது நீக்கம் செய்வதற்கான வீடுகள் பழுது நீக்கம் திட்டம் ஒரு சிறப்பான முயற்சியாகும். இதன் மூலம் ஏழை எளிய மக்களுக்கு கன மழை, புயல் மற்றும் இதர இயற்கை இடர்பாடுகளிலிருந்து பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

கிராமப்புற ஏழை எளிய மக்களின் வருமானத்தை உயர்த்தும் வகையிலும், ஆதி திராவிடர்/பழங்குடி மக்கள், சிறு

மற்றும் குறு விவசாயிகள் ஆகியோர் நேரடியாக பயன்பெறும் வகையிலும், நில மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல் உட்பட பணிகளின் வகைகளை விரிவுபடுத்தி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட செயலாக்கத்திற்கு புதிய உத்வேகம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டம், இயற்கை வள மேம்பாடு மற்றும் குடிமராமத்து பணிகளான மழைநீர் சேகரிப்பு மற்றும் நிலத்தடி நீர் மீள்நிரப்பும் பணிகளை புதிய உத்வேகத்துடன் செயல்படுத்தப்பட்டு வருவதன் மூலம் விவசாய உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இந்த அரசு, ஊரகச் சாலை இணைப்பு வசதியினை மேம்படுத்துவதற்காக, விரிவான ஊரகச் சாலைகள் உட்கட்டமைப்பினை ஏற்படுத்தியுள்ளது. ஊரகச் சாலைகளின் இணைப்பு, ஊரக மக்களின் வளர்ச்சியில் நேர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பது நன்கு அறியப்பட்ட ஒன்றாகும். இதன் காரணமாக, இந்த அரசு, தமிழ்நாட்டிலுள்ள ஊரகச் சாலைத் தொகுப்பின் மேம்பாட்டிற்காக தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. தமிழ்நாடு ஊரகச் சாலை மேம்பாட்டுத் திட்டம், பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், நபார்டு - ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி, ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டம் மற்றும் இதர மாநில மற்றும் மத்திய திட்டங்களின் கீழ் ஊரகச் சாலை மேம்பாட்டிற்காக அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதுபோன்ற விரிவான திட்டங்களின் மூலம்,

ஊரக பகுதிகளின் நீடித்த நிலையான வளர்ச்சி உறுதி செய்யப்படுகிறது.

இந்த அரசானது, ஊரக பகுதிகளில் மேம்பட்ட சுகாதார வசதிகளை உறுதி செய்து அதன் மூலம் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கி "முழு சுகாதார தமிழகம்" என்ற முழுமையான நிலையை அடைவதில் தொடர்ந்து முழுகவனம் செலுத்தி வருகிறது. தன் சுத்தம், பாதுகாப்பான சுகாதாரம், மாதவிடாய் கால மேலாண்மை, திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை குறித்த முக்கிய தகவல்களை நேரடி தகவல் பரிமாற்றத்தின் மூலம் கிராமப்புற மக்களிடையே திறம்பட தொடர்ச்சியாக கொண்டுசெல்வதற்கான நடவடிக்கைகளில் அனைத்து களப்பணியாளர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த நோக்கத்திற்காக தொடர் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் பல்வேறு பங்கேற்பாளர்களுக்கு அவ்வப்போது அளிக்கப்பட்டு வருகிறது. மாநிலத்தின் சுகாதார கொள்கையில் உள்ள வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் அனைத்தும் திறம்பட மேற்கொள்ளப்படும்.

முந்தைய தமிழ்நாடு புது வாழ்வுத் திட்டம் மற்றும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் செயல்பாடுகள் ஊரக ஏழைகளுக்கும் ஊரக மகளிருக்கும் எண்ணற்ற வாய்ப்புகளை வழங்கியுள்ளது. இதைப்போலவே, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார திட்டமானது நகர்ப்புறப் பகுதிகளில் மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுத்த வழிவகை செய்கிறது. ஆற்றல் மேம்பாடு, திறன் வளர்ப்பு

மற்றும் நிதியுதவி ஆகியவற்றின் மூலம் பெண்களை சுய சார்பு உள்ளவர்களாக ஆக்குதலே அரசின் நோக்கமாகும். இனி வரும் ஆண்டுகளில் நிலைத்த நீடித்த ஊரக தொழில்களையும் ஊரக வேலைவாய்ப்பினையும் உருவாக்கி மேம்படுத்தும் நோக்கமே ஊரக வளர்ச்சியின் முதன்மைச் செயல்பாடாக இருக்கும். தமிழ்நாட்டில் ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் அனைவரும் காணும் வண்ணம் பெரும் முன்னேற்றங்களை ஏற்படுத்தும் அரசின் முயற்சியில் மகளிர் சுய உதவிக்குழுக்களை அதிக அளவில் ஈடுபடுத்தி அரசு அவர்களை வழிநடத்தும்.

அனைத்து நிலைகளிலும் நாட்டிலேயே சிறப்பாக செயல்படும் மாநிலமாக தமிழகம் தொடர்ந்து விளங்கிட **மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் வகுத்த கொள்கைகள் மற்றும் திட்டங்களை உறுதியுடன் இந்த அரசு தொடர்ந்து நிறைவேற்றும்.

**எஸ்.பி.வேலுமணி**

**நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்**



முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு



அம்மா – ஆதி திராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டப் பணி



தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம் – குடிமராமத்து



**தார்ச் சாலை அமைத்தல்**



புதிய பாலம் அமைத்தல்









மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பணிகள்










மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி  திட்டப் பணிகள்



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பணிகள்



அனைத்து மாநிலங்களிலும் நடத்தப்பட்ட “ஊரக தூய்மை கணக்கெடுப்பு – 2019-ன்” அடிப்படையில், தமிழகத்திற்கு “ஒட்டுமொத்த சிறந்த மாநிலம்” என்ற விருது வழங்கப்பட்டது




தமிழ் நாடு – மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் தேசிய அளவில்
சிறந்த பயிற்சி நிறுவனமாக தேர்வு செய்யப்பட்டு இந்திய அரசால் விருது வழங்கப்பட்டது



சென்னையில் 19.09.2019 அன்று ரூ. 9.18 கோடி மதிப்பீட்டில்
சுகாதார நாப்கின்கள் கொள்முதல் செய்வதற்கான பணி ஆணை வழங்குதல்




**சென்னையில் 31.10.2019 அன்று நடைபெற்ற**
**மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாபெரும் கடனுதவி வழங்கும் விழா**




**மனநலத் திட்டம் குறித்த "மனம் இனிது பயிற்சிப் புத்தகம்"**
**31.10.2019 அன்று சென்னையில் வெளியிடுதல்**




**சென்னையில்  தமிழ் நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் கீழ்**
**525 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள்  வழங்கப்பட்டது**



தென்காசி மாவட்டத்தில் 22.11.2019 அன்று நடைபெற்ற
அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா



**DDU - GKY திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது**



**சென்னையில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழுவினரால்
தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனைக் கண்காட்சி**



**சென்னையில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழுவினரால்
தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனைக் கண்காட்சிகள்**



திண்டுக்கல் மாவட்டத்தில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு சார்பில்
செயல்பட்டு வரும் பிளாஸ்டிக் மறு சுழற்சி மையம்



பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய
சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட செயல்பாடுகள்